வரு.76 இல. 24 ★

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.vaaramanjari.lk

24 பக்கங்கள் 100/-




தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
තිනකරන් වාරමන්ජරී

2024 ஜூன் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

June 23 Sunday, 2024





/ Thinakaran.lk / ThinakaranLK













# மட்டக்களப்பில் 27,595 பேருக்கு 'உறுமய' காணி உறுதிகள்

## ஆங்கில டிப்ளோமாதாரிகள் 252 பேருக்கு ஆசிரியர் நியமனம்

## திருமலை பிரதான ஏற்றுமதி மையமாக அபிவிருத்தி

### மக்களுக்கு "உரிமை" வழங்கப்பட வேண்டும் என்பதே தனது குறிக்கோள் என்றும் ஜனாதிபதி மட்டு. திராய்மடுவில் தெரிவிப்பு



நாட்டு மக்களுக்கு உரிமைகளை வழங்குவதே தனது பிரதான நோக்கமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அத்துடன் திருகோணமலையை பிரதான பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்ய தீர்மானித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசாங்கம் முன்னெடுத்து வரும் 'உறுமய தேசிய வேலைத் திட்டத்தின்'' கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

06

## தரம் ஒன்றுக்கு மாணவரை சேர்க்கும் புதிய சுற்றறிக்கை நாளை வெளியீடு



### பிறப்புச் சான்றிதழ் இல்லாத பிள்ளைகளுக்கும் வாய்ப்பு வழங்க ஏற்பாடு

அரசாங்க பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை சேர்த்தல் தொடர்பான சுற்றறிக்கையிலுள்ள குறைபாடுகளை நீக்கி, கல்வியில் சம வாய்ப்புகளை உறுதிப்படுத்தும் புதிய வெளிப்படையான சுற்றறிக்கை நாளை திங்கட்கிழமை 24ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜயந்த, சமர்ப்பித்த புதிய சுற்றறிக்கைக்கு

06

### பைசல், ரிஷாத், வேலு குமார், இஷாக் உள்ளிட்ட

## ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களுக்கு அரசினால் ரூ. 1,200 மில். ஒதுக்கீடு



2024ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் 1,200 மில்லியன் ரூபா ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசிம், இஷாக் ரஹ்மான்

06

## மட்டு. சியோன் தேவாலயத்தின் புனரமைப்பு பணிகளை துரிதப்படுத்த ஜனாதிபதி பணிப்பு



மட்டக்களப்பில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குள்ளான சியோன் தேவாலயத்தின் புனரமைப்புப் பணிகளை ஆராய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (22) அங்கு விஜயம் செய்தார். தேவாலயத்துக்குச் சென்ற ஜனாதிபதி, தேவாலயத்தின் பிரதான போதகர் ரொஷான் மகேசனுடன் கலந்துரையாடினார்.

06



### சட்ட மாஅதிபரின் பதவிக்காலம் நீடிப்பு

## ஜனாதிபதியின் பரிந்துரை மீண்டும் அரசியலமைப்பு சபைக்கு

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய சட்ட மாஅதிபர் சஞ்சய் இராஜரத்தினத்தின் சேவையை மேலும் 06 மாத காலத்துக்கு நீடிப்பதற்கான பரிந்துரையை மீண்டும் அரசியலமைப்புச் சபைக்கு அனுப்ப ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சஞ்சய் இராஜரத்தினத்தின் 06 மாத கால சேவை நீடிப்புக்கான பரிந்துரையை அரசியலமைப்புச் சபைக்கு ஜனாதிபதி அனுப்பி வைப்பாரென இந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவரது சேவை நீடிப்புக்கு, அரசியலமைப்புச் சபையிலுள்ள மூன்று சிவில் செயற்பாட்டாளர்கள், ஒரே கடிதத்தின் மூலம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள். இவர்கள் எதிர்க்கும் தீர்மானத்தின்

06

## ஹோமாகம 'தர்ம ரஷ்மி' பொசன் வலயம்



ஹோமாகம நகரை மையமாகக் கொண்ட 'தர்ம ரஷ்மி' பொசன் வலயம் வெள்ளிக்கிழமை மாலை பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மற்றும் பாடசாலை மாணவர் ஒருவரின் பங்களிப்பு

06

## இன்றைய வாரமஞ்சரியுடன் அரசாங்க வர்த்தமானி



சுகாதார அமைச்சின் கீழுள்ள கற்கைநெறிகளுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின்

06

### பிறப்புச் சான்றிதழ் இன்றி

## NIC பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் 31ஆம் திகதி வரை கால அவகாசம்

### ஆட்பதிவு திணைக்களத்தின் அறிவிப்பு



பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்கள் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் இன்னும் உள்ளதாக ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

06

## க.்.பதுல்லாஹ் திறப்பாளர் இறையழைப்பை ஏற்றார்



புனித மக்காவிலுள்ள கஃப துல்லாஹ்வின் திறப்பாளர், அஷ் ஷைஃக் ஸாலிஹ் அல் ஷைபா, நேற்று இறையழைப்பை ஏற்றார். நேற்று (22) சுப்ஹு தொழுகைக்கு பின்னர் மஸ்ஜிதுல் ஹராமில் அன்னாரின் ஜனாஸா தொழுகை நடத்தப்பட்டு ஜன்னத்துல் முஅல்லா

06

## இந்தியாவில் பறவைக் காய்ச்சல் இலங்கையிலும் பரவும் அபாயம்

### WHO எச்சரிக்கை விடுப்பு



நாட்டில் பறவைக் காய்ச்சல் பரவுக்கூடிய அபாயம் இருப்பதாகவும் அது குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு உலக சுகாதார நிறுவனம் இலங்கைக்கு அறிவுறுத்தியுள்ளது. இந்தியா போன்ற அயல் நாடுகளில் பறவைக் காய்ச்சல் பாதிப்புகள் பதிவாகியுள்ளதால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

06

### எங்கள் கருத்து...

## எழுத்தாளர்களுக்கு களம் அமைக்கும் பெருமுயற்சி

கொழும்பு, வெள்ளவத்தையில் அமைந்துள்ள சைவமங்கையர் கழக மண்டபத்தில் கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் இன்று ஞாயிற்றுக்கிழமை வரையான மூன்று தினங்களும் புத்தகக் கண்காட்சி, ஆய்வரங்கு, தமிழிலக்கிய ஆர்வலர்கள் சந்திப்பு ஆகிய நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

தமிழ்மொழி பேசுகின்ற சமூகங்களின் மத்தியில் வாசிப்பு மற்றும் இலக்கியம் மீதான நாட்டம் குன்றி வருகின்ற இக்காலத்தில், வெள்ளவத்தை உருத்திரா மாவத்தை 23 ஆம் இலக்கத்திலுள்ள சைவமங்கையர் கழக மண்டபத்தில் இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இது பாராட்டப்பட வேண்டியதாகும்.

இந்நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ள இலக்கியவாதி எம். பௌசர் மற்றும் தமிழ் ஆர்வலரும், சமூக செயற்பாட்டாளருமான எச்.எச். விக்கிரமசிங்க ஆகியோரைப் பாராட்டுவது மிகவும் அவசியம்.

தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் தாய்மொழி மீதான ஆர்வம் வேகமாகக் குன்றி வருகின்றது. அக்காலத்தில் இவ்விரு சமூகத்தினரும் தமிழ்மொழியிலும், இலக்கியத்திலும் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தனர்.

06

## வெளிநாட்டு மாணவர்களுக்கு உடனடி அமெரிக்க Green Card

### டொனால்ட் ட்ரம்ப் அதிரடி அறிவிப்பு




அமெரிக்க கல்லூரிகளில் பட்டம் பெறும் வெளிநாட்டு மாணவர்களுக்கு உடனடியாக கிரீன் கார்ட் (Green Card) வழங்குவதாக அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உறுதியளித்துள்ளார். இந்த நடவடிக்கை இந்தியா மற்றும் சீனா போன்ற

06

### மலையகம் இங்கிருந்து எங்கே?

## கொழும்பில் இன்று நூல் வெளியீட்டு விழா






அறுபதுகளில் எழுந்த சினம் கொண்ட பரம்பரையினர் என்று இரா.சிவலிங்கம் வரையறுத்த மலையகத்தின் முன்னோடி கல்விமானும் ஆய்வு எழுத்தாளருமான பீ.மரியதாஸ் எழுதி

06

## கொழும்பு கசினோகாரர்களிடம் பணம் பெற்று நான் அரசியல் செய்யவில்லை

### யார் அவ்வாறு செய்தார் என்பது முழுநாட்டுக்கும் தெரியும்

### தந்தை ஜனாதிபதியாக இருந்தார் என்பதற்காக மகனிடம் நாட்டை ஒப்படைத்தால் நாடு அழியும்



கொழும்பில் உள்ள கசினோ உரிமையாளர்களிடம் பணம் சேகரித்து பாடசாலைகள் மற்றும் வைத்திய சாலைகளுக்கு பொருட்களை நான் விநியோகிக்கவில்லை. தந்தை ஜனாதிபதியாக இருந்ததால் நாட்டை மகனிடம் ஒப்படைத்தால் நாடு அழிந்து விடும்.

06



06

## வட இந்தியாவில் வெப்ப அலை தாக்கத்தால் 130 பேர் உயிரிழப்பு

குஜராத்தில் மட்டும் 53 பேர் பலி




06

### யாழ். பொலிஸாரின் சுற்றிவளைப்பு

## ஐந்து வாள்களுடன் நபரொருவர் கைது

# சஜித்துக்கு எதிரான யுத்தம் ஆரம்பம்



ஜனாதிபதி ரணில் கடந்த வார இறுதியில் மன்னார் மாவட்டத்தில் இருந்தார். ஜனாதிபதி ரணில், மன்னார் ஆயர் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோவைச்சந்தித்து முதலில் ஆசிர்வாதத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் உறுமய காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொள்ளச் சென்றார். பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனும் அதில் கலந்துகொண்டமை விசேட அம்சமாகும்.

மதிய உணவின் போது இருவரும் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்ததைக் காண முடிந்தது. உறுமய காணி உறுதி வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தை பாராட்டி பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் உரையாற்றினார். திங்கட்கிழமை விடுமுறையாக இருந்த போதிலும், மகாவலி வளவ பிரதேசத்தில் உள்ள விவசாயிகளுக்கு காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் எம்பிலிப்பிட்டியவிற்கு சென்றிருந்தார்.

"நீங்கள் காணி உறுதிப் பத்திரங்கள், அஸ்வெசும மற்றும் புலமைப்பரிசில்களை மக்களுக்கு வழங்குகிறீர்கள். இரண்டு வருடங்களில் மக்களுக்கு இவ்வளவு நன்மைகளை வழங்கிய ஒரே ஜனாதிபதி நீங்கள் தானே?" என வந்தவர்கள் உற்சாகமாகக் கேட்டார்கள்.

செவ்வாய்கிழமை காலை ஜனாதிபதி ரணில் விசேட அறிக்கையொன்றை வெளியிடுவதற்காக பாராளுமன்றத்திற்கு சென்றார். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு பெண்களின் சமூக உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தடையாக இருப்பதைச் சுட்டிக் காட்டவே சென்றார்.

சட்டவிதிகள் குறித்த கேள்வியை எழுப்பி ஜனாதிபதி ரணில் இது குறித்து நீண்ட விளக்கமளித்தார்.

இதேவேளை, வீட்டு வாடகை வரி தொடர்பான கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி, நாட்டில் வாடகைக்கு வீடுகளை வைத்திருப்பவர்களில் 90% பேருக்கு பாதிப்பு ஏற்படாது என தெரிவித்தார். இது 10% முதலாளிகளை பாதிக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ரணில் தனது உரையை முடித்துக் கொண்டு எதிர்க்கட்சி லாபிக்குச் சென்றார். அப்போதும் ஏராளமான எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இருக்கையில் அமர்ந்து மகிழ்ச்சியுடன் அளவளாவிக் கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் தற்செயலாக அங்கு வந்த ஜனாதிபதியை பார்த்தவுடன் அவர்கள் இருக்கையில் இருந்து எழுந்து ஜனாதிபதி அமருவதற்கு ஆசனம் வழங்கினார்கள்.

"எல்லோரும் என்ன பேசுகிறீர்கள்?" எனக் கூறியபடி ஜனாதிபதி அமர்ந்தார்.

"நல்ல நேரம், எனது பதவிக் காலத்தை 5 ஆண்டுகளாக குறைத்தீர்கள்..." என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியதும், அனைவரும் ஆச்சரியத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"எனது பதவிக்காலத்தை அப்போது 5 ஆண்டுகளாகக் குறைக்கவில்லை என்றால், நான் கொவிட் பிரச்சினையில் சிக்கி இருப்பேன். மறுபுறம், கொவிட் மூலம் வரும் பொருளாதார நெருக்கடியையும் நான் எதிர்கொள்ள வேண்டியிருந்திருக்கும்." என சர்வ சாதாரணமாகக் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்தார்.

"அதாவது உங்களுக்கு ஏற்படவிருந்த சிக்கலுக்கு ஜனாதிபதி கோத்தபாய முகம் கொடுத்தார் என்று இது அர்த்தப்படுத்துகிறதா?" என்று அங்கிருந்த எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கேட்டார்.

இதற்கிடையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவற்றைப் பார்த்துக் கொண்டு அவ்விடத்தை விட்டு வெளியேறியதை அங்கிருந்த அனைவரும் காணக் கூடியதாக இருந்தது.

அங்கு வந்திருந்த பேராசிரியர் ஆசு மாரசிங்க, அதோ உங்கள் தலைவர் செல்கிறார் என்று அனைவரும் கேட்குமாறு கூறினார்.

"அரசு அதிகாரிகளுக்கு வாகன அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் எம்.பி.க்களுக்கு வழங்கப்படவில்லை. எம்.பி.க்கள் என்ற முறையில் எங்களுக்கு பல பிரச்சினைகள் உள்ளன என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் ஜனாதிபதியிடம் முறையிட்டனர்.

"தயவு செய்து எதிர்க்கட்சித் தலைவர் ஊடாக இந்தக் கோரிக்கையை விடுங்கள். அப்போது ஆளுங்கட்சியுடன் பேசி இந்த விவகாரத்தில் தீர்வு காண முடியும்'' என்றார், ஜனாதிபதி. அவர் பேசும் போது எதிர்க்கட்சி தலைவர் சஜித் மீண்டும் அவ்வழியே வந்தார்.

"இதோ எதிர்க்கட்சித் தலைவர். இப்போது அவரிடம் சொல்லுங்கள்." ஜனாதிபதி ரணில் மீண்டும் கூறியபோது எதிர்க்கட்சித் தலைவர் சஜித், "எனக்கு எதுவும் கேட்கவில்லை. எனது வாய்க்கு பூட்டுப் போடப்பட்டுள்ளது." என்று கூறியவாறு அங்கிருந்து சென்றார்.

"வழக்கில் கூட, மௌனம் சம்மதம் என்று அர்த்தம். எதிர்க்கட்சித் தலைவரின் மௌனம், எம்.பி.க்களின் கோரிக்கையை அவர் ஆமோதிப்பதையே காட்டுகிறது" என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியதும் அனைவரும் பலமாக சிரித்தார்கள்.

அரசாங்கக் கட்சிக் குழுக் கூட்டத்திலும் அமைச்சரவைக் கூட்டத்திலும் கலந்து கொண்ட பின்னர் ஜனாதிபதி வெளியேறினார்.

நீதித்துறையின் செயல்பாடுகள் குறித்து ஜனாதிபதி கூறியதையடுத்து, நிறைவேற்றுத் துறை, சட்டமன்றம் மற்றும் நீதித்துறைக்கு இடையே உள்ள பிரச்சினை குறித்து பல எம்.பி.க்கள் கலந்துரையாடினர்.

அமைச்சரவையின் ஊடாக நிறைவேற்று அதிகாரம் சட்டமியற்றும் சபைக்கு பொறுப்புக்கூற வேண்டியதாக இருந்தாலும், பாராளுமன்றத்தின் மீது நீதித்துறை அதிகாரம் செலுத்துவது குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துகளை தெரிவிக்க ஆரம்பித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமையை பலாத்காரமாக நீதிமன்றம் எடுப்பது குறித்து நடவடிக்கை எடுக்க செயற் குழுவை நியமிக்குமாறு ஜனாதிபதியின் கோரிக்கையை முன்னெடுக்க பல எம்.பிக்கள் சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

பாராளுமன்றத்தில் இருந்து ஜனாதிபதி ரணில் நேரடியாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவிற்கு வந்தார். கட்சியின் வலய அமைப்பாளர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் இரண்டாம் கட்டப் பணியில் இணைவதற்காகவே வருகை தந்தார்.

அன்று காலை பொதுச் செயலாளர் ரங்கே பண்டார ஐ.தே.க செயற்பாட்டாளர்களுக்கு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் ஆற்றிய பணிகள் குறித்த விரிவுரையொன்றை ஏற்பாடு செய்திருந்ததுடன் அதனை முடித்துக் கொண்டு ஜனாதிபதியின் வைபவத்தில் கலந்து கொள்வதற்காக அவர்கள் சிறிகொத்தவிற்கு வந்தனர்.

பேச்சாளர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் அறிவித்திருந்ததால் மூன்று சிறு உரைகளுக்கே சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. பொதுச் செயலாளர் ரங்க, தவிசாளர் வஜிர, துணைத் தலைவர் அகிலவிராஜ் ஆகியோர் பேசினர், அதன்பின்னர் ஜனாதிபதி உரையாற்றினார்.

அவர் பாராளுமன்ற உரையை சில நிமிடங்கள் நீடித்து, தன் உரையை முடித்துவிட்டு, நியமனக் கடிதங்களை விநியோகிக்க பொதுச்செயலாளர் ரங்கேவுக்கு அழைப்பு விடுத்தார். நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டதன் பின்னர் கட்சி நிர்வாகக் குழுவின் வாராந்தக் கூட்டம் ஜனாதிபதி ரணில் தலைமையில் நடைபெற்றது.

இங்கு, கட்சி அமைப்பு நடவடிக்கைகள் மற்றும் வேலை செய்யாதவர்களை நீக்குவது குறித்து பொதுச் செயலாளர் ரங்கேவுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

அதன்பின், கட்சியின் தேர்தல் பிரசாரம் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. லசந்த குணவர்தன, ஷமல் செனரத் மற்றும் ரொனால்ட் பெரேரா ஆகியோருக்கு பொறுப்புகளை வழங்கிய ஜனாதிபதி ரணில், எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள கூட்டங்கள் தொடர்பிலும் முகாமைத்துவ குழுவிற்கு யோசனையொன்றை முன்வைத்திருந்தார்.

புதன்கிழமை காலை ஜனாதிபதி ரணில், பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்துக்கு கைத்தொழில் கண்காட்சியை திறந்து வைப்பதற்காக சென்றார்.

இண்டஸ்ரியல் எக்ஸ்போ கைத்தொழில் கண்காட்சியின் பின்னர், மீண்டும் பாராளுமன்றத்திற்கு வந்த அவருடன் எம்.பிக்களும் அமைச்சர்களும் நீதிமன்ற நடவடிக்கைகளின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினார்கள்.

ஜனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படும் முதலாவது புலமைப்பரிசில் திட்டத்தில் இணைந்து கொள்வதற்காக மாலையில் அலரி மாளிகைக்குச் சென்றார் ஜனாதிபதி. குழந்தைகளிடம் வந்த ஜனாதிபதிக்கு குழந்தைகளிடமிருந்து உயர்ந்த அங்கீகாரம் கிடைத்தது/ அங்குள்ள ஆசிரியர்களும் ஜனாதிபதியின் புலமைப்பரிசில் திட்டத்தைப் பாராட்டி பேசினர்.

மறுநாள், நிதியமைச்சில் நடைபெறவிருந்த பல கூட்டங்கள் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெறவிருந்ததால் அவர் ஜனாதிபதி அலுவலகத்திற்கு வந்தார். அதற்கு முன், அங்கு வந்த பல அமைச்சர்களையும் சந்தித்தார்.

"பாராளுமன்றத்தின் அதிகாரத்தை நீதிமன்றம் எடுத்துக்கொள்ள அனுமதிக்க முடியாது. ஆசிரியர் நியமனத்தை நீதிமன்றம் நிறுத்தியதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறியது மிகவும் உணர்வுபூர்வமானது என்று அமைச்சர் மனுஷ வருத்தத்துடன் தெரிவித்தார்.

"எம்.பி.க்களின் உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி பேசிய பிறகு, அனைவரும் அதைப் பற்றி பேசத் தொடங்கினர். பாராளுமன்ற அதிகாரத்தை வேறு தரப்பினர் எடுக்க முடியாது. பாராளுமன்ற உறுப்பினர் வஜிரவும் உரையில் கலந்துகொண்டார். செயற்குழுவை நியமித்து, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்." பாராளுமன்ற உறுப்பினர் தொலவத்த கூறினார்.

பாலின சமத்துவச் சட்டத்தால் ஒருமத குழு இப்போது வருத்தமடைந்துள்ளது. அந்த மத சம்மேளனமும் செய்தியாளர் மாநாட்டை நடத்தியிருந்தது.

ஆனால் இதன் பின்னணியில் ஒரு சிலர் இருப்பதை மறந்துவிட்டார்கள். இந்த குழுக்கள் இப்போது அவர்கள் விரும்பியபடி செயல்படுகின்றனவா?" பாராளுமன்ற உறுப்பினர் தொலவத்த மற்றுமொரு குண்டை வெடிக்கச் செய்தார்.

பா.ஜ.க கூட்டணி ஆட்சிக்கு வந்ததையடுத்து பா.ஜ.க.வின் வெளிவிவகார அமைச்சராக பதவியேற்ற எஸ்.ஜெய்சங்கர், தனது முதல் வெளிநாட்டு பயணமாக வியாழனன்று கொழும்பு வந்தார்.

மூன்றாவது தடவையாக பிரதமரான மோடியின் செய்தியை எடுத்துக்கொண்டு ஜனாதிபதி மற்றும் அவரது குழுவினரை சந்தித்ததோடு ஜனாதிபதிக்கும் அமைச்சருக்கும் இடையில் தனியான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

பகல் உணவுக்குப் பிறகு, அவர் இருதரப்பு பேச்சுவார்த்தையை நடத்தினார்.

ஜனாதிபதி ரணில் மாலையில் தந்திரிமலை ரஜமகா விகாரையில் பொசன் பௌர்ணமி பூஜையில் கலந்து கொண்ட பின்னர் மட்டக்களப்பு மற்றும் அம்பாறைக்கு 'உறுமய' உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்காகப் புறப்பட்டார்.

## மதுவை வெறுத்திட மனம் கொள்வதேனோ?

மதுவை வெறுத்து
ஒதுக்கிப் போக
எண்ணல் நலமன்று.
நடந்தால் அது புரியும்.

விடியும் வரை
இருளும் இருக்கும்.
மின் விளக்கு
விரட்டிய போதும்.

இருளாது விட்டால்
இருளின் பயனும்
புரிய விரையும்
மின் விளக்கு மனமும்.

மதுவை வெறுத்து
மது தரும் வெறியை
நினைத்து வாழும்
மனிதர் நாமன்றோ?

அளவுக்கு மீறிய
அமுதமும் நஞ்சு.
இருந்தும் அது புரிந்து
மறந்து பேசலாமோ?

மதுவை அளந்து
அளவோடு பருகி
தேறிய உடலோடு
நாளை நடக்கலாம்.

ஆக்கத்துக்கு ஆக
ஆற்றலை பயனாக்கு.
மிஞ்சிய பயனங்கே
அணு குண்டாகிட.

விளைவில் இருந்து
முடிவினை எடுத்து
நடந்திட வேண்டும்.
வெறிக்கு மதுவல்ல.

மிதமிஞ்சிய குடி
தேவை இல்லை.
பொறுப்பு விடுத்து
வெறுக்க நடப்பாரை வெறு.

தவறெங்கே அறி.
அறிதலில் தவறி
ஆற்றல் இழந்தால்
குடி முழுதும் குடியால்.

அன்புடன் நதுநசி





ஹோமாகம நகரை மையமாகக் கொண்ட 'தர்ம ரஷ்மி' பொசன் வலயம் வெள்ளிக்கிழமை மாலை பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன மற்றும் பாடசாலை மாணவர் ஒருவரின் பங்களிப்புடன் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் யாதாமினி குணவர்த்தனவும் கலந்துகொண்டார்.

அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனவின் எண்ணக்கருவின்படி நடைபெறும் 'தர்ம ரஷ்மி' பொசன் வலயம், ஹோமாகம நகரை மையப்படுத்தி இப் பிரதேச செயலகப் பிரிவுக்குள் சுமார் 13 கிலோமீற்றர் சுற்றளவை கொண்டதாக நடத்தப்படுகிறது. இந்நகழ்வுகள் இன்று 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.






தமிழ் மாமணி வா.மு.சே.திருவள்ளுவர், தான் கனடா உதயன் விருது 2024, பெற்றதையும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க ஆசியத் தலைவராக கனடாவில் பொறுப்பேற்றமையையும் கூறி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஸ்தாபகச் தவிசாளரும். முன்னாள் ஊடக பிரதியமைச்சருமான எம்.எம். ஷேகு இஸ்ஸதீன் (வேதாந்தி) எழுதிய சிறுகதை நூலின் விஷேட பிரதியொன்று சேகு இஸ்ஸதீனின் விஷேட அழைப்பின் பேரில் கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை அதிகார சபையின் பணிப்பாளர் சர்ஜுன் அபுபக்கருக்கு வழங்கப்படுவதை படத்தில் காணலாம். இந் நிகழ்வு வெள்ளிக்கிழமை (21) அக்கரைப்பற்றில் இடம்பெற்றது.

# களைகட்டிய 101 ஆவது வகவ கவியரங்கம்



நூறாவது கவியரங்கை விழாவாக நடாத்திய வலம்புரி கவிதா வட்டம் தனது 101ஆவது கவியரங்கை போயா தினமன்று நடத்தியது. கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெற்ற கவியரங்கிற்கு கவிஞர் திலகம் எம். பிரேம்ராஜ் தலைமை வகித்தார்.

வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் நெறிப்படுத்திய நிகழ்வில் செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் வரவேற்புரையும், பொருளாளர் ஈழகணேஷ் நன்றியுரையும் வழங்கினர்.

வகவ சிரேஷ்ட ஸ்தாபகர், சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி முன்னிலை வகித்தார். தேசிய அமைப்பாளர் எஸ். தனபாலனும் பிரசன்னமாகியிருந்தார்.

மறைந்த வகவக் கவிஞர் மினுவங்கொட ஏ. சிவகுமாரினது சகோதரர் செல்லையா தங்கவேலுவுக்கும், பிரபல எழுத்தாளர் சுலைமா ஏ. சமிக்காகவும் மௌனப் பிரார்த்தனை நடத்தப்பட்டது.

கவிஞர் திலகம் பிரேம்ராஜ் மிகவும் கலகலப்பாக நடத்திய கவியரங்கில் கவிஞர்கள் எம். ஏ. ரஹீமா, ஆர். தங்கமணி, அருந்தவம் அருணா, நியாஸ் ஏ. சமத், கே. லோகநாதன், கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ், வெளிமடை ஜஹாங்கீர், பி. எம். எம். ரமீஸ், இ. கலைநிலா, எம். எஸ். அப்துல் லதீப், நேகம பௌஸுல் சிபானியா, பிறைக்கவி முஸம்மில், ரிஸ்மினா ரபீக், மினுவங்கொட ஏ. சிவகுமார், கிண்ணியா அமீர் அலி, இளநெஞ்சன் முர்ஷிதீன், ந. தாமரைச்செல்வி, தமிழ்த் தென்றல் அலி அக்பர் ஆகியோர் கவிதை பாடினர்.



IMFஇன் மூன்றாவது கடன் தவணை

# இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் திருப்புமுனை

## கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் துறைப் பேராசிரியர் பிரியங்க துனுசிங்க



சர்வதேச நாணய நிதியம் எனும் IMF இனால் இலங்கைக்கு அங்கீகரிக்கப்பட்ட நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் மூன்றாவது தவணையை விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் கடன் திட்டத்தின் இரண்டாவது மீளாய்வை IMF நிறைவேற்று சபை அங்கீகரித்துள்ளது.

இதனடிப்படையில் மூன்றாவது கடன் தவணையாக 336 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இந்த நாட்டுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. IMF உதவித்திட்டத்தின் சமூக செலவுகள் தொடர்பான குறிகாட்டி இலக்கின் விளிம்புநிலைப் பற்றாக்குறையைத் தவிர அனைத்து இலக்குகளையும் இலங்கை அடைந்துள்ளதாக IMF குறிப்பிட்டுள்ளது. பொருளாதாரம் வழமைக்குத் திரும்பும் நிலை ஆரம்பித்துள்ளதோடு, பணவீக்கம் குறைந்த மட்டத்தில் இருப்பதாகவும், வருமானம் முன்னேற்றமடைந்து வருவதாகவும் நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் Kenji Okamura குறிப்பிட்டுள்ளார்.

கடன் நிலைத்தன்மையை ஏற்படுத்திக் கொள்வது தாமதமடைந்ததன் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் இன்னமும் ஆபத்து வலயத்திலேயே இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கடன் மறுசீரமைப்பைத் துரிதமாக முடிவுக்குக் கொண்டுவருவது மற்றும் சமூக மற்றும் மூலதனச் செலவினங்களைப் பாதுகாப்பது மிகவும் முக்கியமானது என்றும், அரச நிதி முகாமைத்துவத்தை மேம்படுத்துவது நிதி ஒழுக்கத்தை மேம்படுத்துவதற்கு உதவுவதோடு, கடன் முகாமைத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்துவதும் அவசியம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்வதற்கும், இலங்கையர்களுக்கு சுபீட்சமான எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கும் நாம் மேற்கொண்ட அர்ப்பணிப்புக்கான சாட்சியமாகவும் இந்த வெற்றியை அடையாளம் காண முடியும் என்றும் பேராசிரியர் பிரியங்க துனுசிங்க தெரிவித்துள்ளார்.

இம்முறை IMF இன் இரண்டாவது மதிப்பாய்வு நிறைவடைந்ததன் பின்னர், மூன்றாவது தவணை கிடைப்பது பொருளாதாரத்தை எதிர்வருங்காலங்களில் வழமைக்குக் கொண்டு வருவதற்கான சிறந்த நிலையாக இனங்காண முடியும். ஏனெனில், அதனூடாக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள முதலீட்டாளர்கள் மற்றும் உதவி வழங்கும் தரப்பினரின் நம்பிக்கை நிலைநாட்டப்பட்டுள்ளது. இது நாட்டின் சிறப்பான முன்னேற்றத்திற்கு இன்றியமையாத காரணியாகும். அதேபோன்று வரும் காலங்களில் பொருளாதாரத்தில் அத்தியவசியமான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என்ற விடயம் தொடர்பில் IMF இன் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு மூன்றாவது தவணை கிடைத்துள்ளமை எமக்கு கிடைத்துள்ள சான்றிதழாகும். இவ்வாறான சான்றிதழ் இந்த நாட்டிற்கு இன்றியமையாததாகும். ஏனெனில் இந்நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தவுடன், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும், எங்களுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்ட பல்வேறு தரப்பினருக்கும் சில சந்தேகங்கள் ஏற்பட்டன. அதாவது, பொருளாதாரத்தை மீட்பதற்குத் தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு இலங்கைக்கு வாய்ப்பு கிடைக்குமா என்ற விடயம் உள்ளிட்ட பல காரணிகளால் அந்த சந்தேகம் ஏற்பட்டது. குறிப்பாக அதற்கான காரணம் அப்போது நிலவிய அரசியல், பொருளாதார ஸ்திரமின்மையேயாகும். பின்னைய காலத்தில், IMF உடன் செயற்படுவதற்கு விரும்பாத அரசியல் தரப்பினர் மற்றும் அரசாங்கமும் அதிகாரத்தில் இருந்தன.

அதேபோன்று, பொதுமக்களின் பாரிய அரசியல் போராட்டம் உருவாகியிருந்த காலம் அது. அப்போதைய அரசுக்கு பல அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன. இந்த சீர்திருத்தங்களை இலங்கை தொடருமா என உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் சில சந்தேகங்கள் எழுந்தன. எவ்வாறாயினும், ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் இடம்பெற்ற இந்த புதிய சீர்திருத்தங்கள் அனைத்தும் அரசியல் ரீதியாக ஆர்ப்பாட்டமேதுமின்றி கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களாகின. அதேபோன்று, மக்களுக்குப் பெரும் கஷ்டங்களைக் கொடுக்கும் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் நிலையும் அப்போது ஏற்பட்டது. அவ்வாறான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கான சாத்தியங்கள் உள்ளனவா என்பது தொடர்பிலான கருத்துக்கள் தோன்றியிருந்தாலும், அந்த கருத்துக்கள் அனைத்தையும் முறியடித்து அந்த மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளும் திறன் அரசாங்கத்திற்கு இருந்தது. அதற்குத் தேவையான ஓரளவு விழிப்புணர்வை ஏற்படுத்தத் தேவையான தலைமைத்துவத்தை வழங்கவும் முடிந்தது. அதற்குத் தேவையான உந்து சக்தியை வழங்கும் அதிகாரிகளும் அரசியல் தலைமைகளும் உருவாகினர்.

இதனால்தான் இந்த IMFஇன் மூன்றாவது தவணை மிகவும் முக்கியமாகின்றது. அதாவது வணிக முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வளர்ப்பதற்கு இது மிகவும் முக்கியமானது. முன்னைய பொருளாதாரம் மீண்டு வருமா, நாடு தேவையான சீர்திருத்தங்களைச் செய்யத் தயாரா என கடன் வழங்கிய தரப்பினர் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். இதற்கான சில சாதகமான செய்திகள் IMF மூலம் வெளியிடப்பட்டுள்ளது. இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கைக்கு வந்த காலத்திலிருந்து இன்று வரைக்கும் நம்பகத்தன்மையைப் பாதுகாத்து இலங்கையினால் வழங்கப்படும் உறதிமொழி அவர்களுக்குள் நம்பிக்கையை ஏற்படுத்தியதால், இந்தக் கடன் தவணை சரியான நேரத்தில் வழங்கப்பட்டது. ஒரு நாட்டின் பொருளாதாரத் திட்டத்திற்குத் தேவையான சீர்திருத்தங்களுக்கு IMF தொடர்ந்து ஆதரவு அளித்து வருவது பெரும் பலமாகும்.

இதன்மூலம், சர்வதேச அளவில் தேவைப்படும் பல்வேறு உதவிகள் மற்றும் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கான நம்பிக்கை சாதாரண மக்களுக்கும் ஏற்படும். பொருளாதாரம் மீண்டு வருவதும், இந்த நேரத்தில் அவர்கள் எம்முடன் இருக்கிறார்கள் என்பதும், IMF இந்த நாட்டிற்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் என்ற விடயமும் முக்கியமானதாகும். அதேபோன்று, இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு அவசியமான பல பொருளாதார சீர்திருத்தங்களுக்கு இது அவசியமானதாகும். சர்வதேச நாணய நிதியத்தால் திணிக்கப்பட்டாலும் இல்லாவிட்டாலும், இந்த மறுசீரமைப்புகள் ஒரு நாடாக செய்யப்பட வேண்டிய மறுசீரமைப்புக்களாகும். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெறுவது நாடு என்ற வகையில் நாம் அடைந்துள்ள சிறப்பான வெற்றியாகும்.

அதேபோன்று, இலங்கையின் பொருளாதாரத்தை சரியான திசையில் திருப்புவதற்கு IMF வழங்கிய அழுத்தங்கள் மிகவும் முக்கியமானவை. இந்த நிபந்தனைகளை நாம் நாடு என்ற வகையில் நிறைவேற்றுவது முக்கியமானது. அவை நிறைவேற்றப்பட்டிருந்தால் குறிப்பிட்ட காலத்திற்குள் இந்தக் கடன் தவணைகள் விடுவிக்கப்படும்.

அதேபோன்று சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்தும் வகையில் இணக்கம் காணப்பட்ட பல பொருளாதார சீர்திருத்தங்களை இலங்கை மேற்கொண்டு வருகின்றது. எனினும் குறிப்பாக இன்னும் நாம் கடன் நிலைத்தன்மையை அடைவதற்கான கடன் மறுசீரமைப்பு செயல்முறையை நிறைவேற்றத் தவறியுள்ளோம். அதனால் பொருளாதாரம் இன்னும் ஆபத்தான நிலையில் உள்ளது. பொருளாதாரம் எதிர்கொள்ளும் பல்வேறு உலகளாவிய நிலைமைகள் உள்ளன. இது தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

அவ்வாறான ஒரு அதிர்ச்சி சில வேளைகளில் ஏற்பட்டால், நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ளன. நாம் இன்னமும் கடன் நிலைத்தன்மையை ஏற்படுத்திக் கொள்வதற்கான கடன் மறுசீரமைப்பு செயல்முறையை முடிக்க தவறியிருக்கின்றோம். அதுவரை எங்களால் வெளிநாட்டு கடன் ஆதாரங்களை அணுக முடியாது. எனவே, எங்களால் இன்னும் பலதரப்பு அல்லது இருதரப்பு மூலங்கள் அல்லது சர்வதேச நிதிச் சந்தையிலிருந்து தேவையான கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. இங்கு நாம் முக்கியமாகக் கவனத்தைச் செலுத்த வேண்டிய விடயம் என்னவென்றால், நாம் இருப்பது வங்குரோத்து நிலையில் என்பது தான்.

அவ்வாறான சூழ்நிலையில் ஏதேனும் வெளிப்புற அதிர்ச்சிகள் ஏற்பட்டால், பொருளாதாரம் மீண்டும் ஆபத்தான கட்டத்துக்கு செல்வதற்கான வாய்ப்புக்கள் மிக அதிகமாகும். எனவே, IMF அடிப்படையில் கூறும் விடயம் என்னவென்றால், நாம் இன்னமும் பொருளாதார ஆபத்திற்குள் இருக்கிறோம் என்பதாகும். பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு, பல அதிர்ச்சிகளை சந்திக்க வேண்டியிருக்கிறது.

நாம் நமது அந்நிய செலாவணிக் கையிருப்பை ஓரளவிற்கு கட்டியெழுப்பியிருந்தாலும், கடன் நிலைத்தன்மையை அடைந்து கொள்ள நாம் கடன் மறுசீரமைப்பு செயல்முறையை பூரணப்படுத்த வேண்டும். அதனடிப்படையில், அந்த சூழ்நிலையினுள் இருக்கும் ஆபத்தைக் குறைத்துக் கொள்வதற்கான வாய்ப்பு இருக்கும்.

அதேபோன்று, இலங்கை தொடர்ந்தும் பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற விடயத்தில் குறிப்பாக ஒட்டுமொத்த பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திக் கொள்ளல், விலை மட்ட ஸ்திரத்தன்மை, நல்லாட்சி தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. குறிப்பாக அந்நிய செலாவணி கையிருப்பை வலுப்படுத்திக் கொள்வதற்காக நாம் தொடர்ந்தும் பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதேபோன்று IMF மதிப்பீட்டை மேற்கொள்ளும்போது, சில வர்த்தமானிகளை வெளியி ட்டு சில விடயங்களை அவசரமாகச் செய்வது ஏற்புடையதல்ல, அதற்கான முன் ஆயத்தங்களும் இருக்க வேண்டும்.

அதேபோன்று, எதிர்காலத்தில் நாம் வெற்றி கொள்ள வேண்டிய பல சவால்கள் உள்ளன. IMF நிபந்தனை க ளில் காணப்படும் பல சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதற்குரிய சட்ட கட்டமைப்பை அறிமுகப்படுத்துவது, நிறுவன கட்டமைப்பு கண்டறிந்து அவர்களின் அந்த இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்கு உறுதியளிக்க வேண்டும். இரண்டாவது தவணைக்கான தகுதியை நிறைவு செய்வதால் நாம் எதிர்பார்க்கும் பொருளாதார சீர்திருத்தங்களை அடைய முடியாது. இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்புச் சட்டத்தை கொண்டு வருவது சர்வதேச நாணய நிதியத்தின் ஒரு நிபந்தனையாகும். சட்டம் கொண்டு வரப்பட்டாலும் அது முறையாக அமுல்படுத்தப்படுவது உறுதி செய்யப்படாவிட்டால் ஊழல்கள் நின்று போய்விடாது.

ஒரு நிறுவனம் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், அந்த நிறுவனத்தை முறையாக செயல்படுத்துவது மிகவும் முக்கியமானது. நாம் நடுத்தர மற்றும் நீண்ட கால ரீதியில் பெற்றுக் கொண்ட பொருளாதார ஸ்திரத்தன்மையை முறையாக செயல்படுத்தினால் மட்டுமே தற்போதைய நிலையை வெற்றிகரமான வளர்ச்சியாக மாற்ற முடியும். பொதுவான இலக்குகளை வெற்றிகொள்வதால் மாத்திரம் நடுத்தர மற்றும் நீண்ட கால பொருளாதார வெற்றியை அடைய முடியாது.

இந்த பயணம் மிகவும் கவனமாக முன்னெடுக்கப்பட வேண்டும், இது ஆபத்தானது என்பதைப் புரிந்து கொண்டு பயணிக்க வேண்டும். பொருளாதாரத்தில் பணவீக்கம் குறைந்துள்ளதால் மாத்திரம் அல்லது ரூபாயின் பெறுமதி வலுப்பெற்றுள்ளதால் மாத்திரம், பொருளாதாரர ஸ்திரத்தன்மை ஏற்பட்டுவிடாது. ஆபத்து தொடர்பான கவனம் வேண்டும். பொருளாதார வளர்ச்சியடைய ஆரம்பித்துள்ளது. எனவே, ஆபத்து குறைவடைந்துவிட்டது என்று கூற முடியாது.

சுபத்ரா தேசப்ரிய
தமிழில் – எம். எஸ். முஸப்பிர்

# நினைவுகளில் வாழும் வரலாற்று நாயகர்

## இன்று அவருக்கு 100ஆவது அகவை



"மரணம் மனிதனுக்குத் தரும் வரம் அவனைப்பற்றிய எதிர்மறை விமர்சனங்களை மறக்கச்செய்து, நல்ல நினைவுகளை மட்டுமே பேசவைப்பது"

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவினது நூற்றாண்டை கொண்டாடும் நாள். இன்று வாழ்ந்திருந்தால் அவருக்கு இன்று 100ஆவது அகவை. அவரைப்பற்றிய சில, நல்ல நினைவுகளைப் பகிர்வது, இன்றைய நாளுக்குப் பொருத்தமானது என்று எண்ணுகிறேன்.

வானொலியில் பணியாற்றிய காலத்தில், சிரேஷ்ட அறிவிப்பாளர் என்ற வகையில் அரச விழாக்களின் போது உத்தியோகபூர்வமாக பணியாற்ற அழைக்கப்படும் வேளைகளில் அவரை சந்திப்பதுண்டு. அவர் பிரதமராக இருந்த காலத்தில் அவரை முதன்முதலாக நேருக்கு நேர் சந்தித்த நாளை, மறக்கவியலாது. அம்பாறையில் "கிராம மறுமலர்ச்சி" (கம்உதாவ) ஆண்டு விழா. மும்மொழிகளிலும் அறிவிப்புப் பணிகளுக்காக, கே.டி.கே.தர்மவர்தன, விஜய கொரேயா, அடியேன் என மூவரும் மூன்று தினங்களுக்கு முன்னதாகவே அழைக்கப்பட்டிருந்தோம். ஏன் மூன்று தினங்கள் முன்னதாக? ஒத்திகை பார்க்கவேண்டுமாம். அறிவிப்புப் பணிக்கு ஒத்திகையா? என வியந்தவாறே சென்றோம். எந்த விடயத்தையும் செய் நேர்த்தியுடன் செய்யும் அவர், இரண்டாம் நாள் இரவு எட்டுமணியளவில் தான் வந்தார். வந்ததுமே மேடைக்குச் சென்றவர், தன் பாதணிகளைக் கழற்றி ஒருபுறம் வைத்துவிட்டு அங்கு விரிக்கப்பட்டிருந்த வெல்வெட் தரைவிரிப்பில் வெறுங் கால்களால் தடவிக்கொண்டே சென்று, ஒரு இடத்தில் ஏதோ தட்டுப்படவே, சட்டென்று நின்று, 'யாராவது ஒரு சுத்தியல் கொண்டு வாங்கோ! என்றார். பார்த்தால் அங்கே ஒரு ஆணி தலை நீட்டிக் கொண்டிருந்தது. மேடையை நிர்மாணித்த இலங்கைப் பொறியியல் கூட்டுத்தாபன ஊழியர்கள் பதறிப்போய் 'நாங்கள் செய்கிறோம் சேர்' என்று சொல்லியும் கேளாமல், அவர்களிடம் சுத்தியலை வாங்கித் தன் கையாலேயே தட்டிச் சரி செய்த அவரைப் பார்த்து வியந்து நின்றோம். தலைமைத்துவப் பண்புகளில், 'குறிப்பால் உணர்த்துவது' என்பது இதைத்தானோ? அடுத்தமுறை மேடையை நிர்மாணிப்பவர்கள் கால்களால் அல்ல, கைகளாலேயே கூடத் தடவிப்பார்த்து இத்தகைய குறைகளைத் தவிர்ப்பார்கள் அல்லவா?



தயங்கியபோது, மேடைக்குப் போகும் முன் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெறும். நீ எப்படியாவது அவருக்குப் பின்னால் போய் நின்றுகொள். சரியான தருணம் வரும்போது நான் சைகை செய்வேன் நீ அவரது காதருகே நெருங்கிப் பேசு, என்றார். அவ்வாறே நானும் பிரதமரின் முதுகுக்குப் பின்னல் சென்று நின்று, சைகை கிடைத்ததும் மெதுவாக பிரதமரின் காதருகே நெருங்கி." சேர் எனக்கு எந்த வித அனுபவமும் இல்லை, சிங்கள மொழியிலும் அவ்வளவு புலமை இல்லை, இதற்காகவே பாராளுமன்ற மொழிபெயர்ப்பாளர்கள் ஐவர் வந்திருக்கிறார்கள்" என்று சொன்னதும்அவரோ திரும்பி என்னைத் தீர்க்கமாகப் பார்த்து ' நே..நே.. ஒயாட்ட புளுவங் (இல்லை யில்லை .. உன்னால் முடியும்) என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்.

இனி எதிர்வாதம் செய்யமுடியாது என்று உணர்ந்து மேடையின் பக்கம் வந்தபோது, அங்கு பிரதமரின் பத்திரிகைச் செயலாளர் இவன்ஸ் குரே, என்ன தயாரா? கேட்க அவரிடமும் முறையிட்டேன். இப்பணியைச் செய்ய அனுபவம் வாய்ந்தவர்கள் பாராளுமன்றத்தில் வந்திருக்கும் போது, என்னை எதற்காக? என்று கேட்டு முடிக்கு முன்பு அவர் சொன்னார். "கடந்த நான்கு நாட்களாக நீங்கள் பணிபுரிந்த தகவல் கூடத்தின் மேல் தளத்தில் பிரதம மந்திரி கண்காட்சித் திடலைப் பார்வையிட்டுக் கொண்டிருந்ததை நீங்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அவர் அவ்வாறு பாரக்கும் போது ஒவ்வொரு நாளும் அந்தத் தகவல் கூடத்தின் முன்னால் மட்டும் பெருங்கூட்டம் கூடியிருப்பதைப் பார்த்து என்னை அழைத்து, இவர்கள் கண்காட்சிக் கூடங்களுக்குப் போகாமல், இங்கு வந்து கூடுகிறார்களே! அப்படியென்ன விசேஷம் இங்கிருக்கிறது எனக் கேட்டார். நான் சொன்னேன் இந்த அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நம் அப்துல் ஹமீத் பெரும் புகழ் பெற்றவர் என்பதால் அவரைப் பார்க்கவும், அவரிடம் கையெழுத்து வாங்கவும் வந்து கூடுகிறார்கள் என்று சொன்னேன், அதனைக் கேட்டறிந்த பின்னர்தான், தன்னுடைய உரையை மொழிபெயர்க்க உன்னைத் தெரிவு செய்திருக்கிறார் என்று நினைக்கிறேன்" என்றார். அதனைக் கேட்டதும் எங்கிருந்தோ ஒரு அசட்டுத் தைரியம் வந்தது.

அதனைத் தொடர்ந்து, அறிவிப்பாளர்களுக்கான ஒத்திகை அவருக்கு முழுத் திருப்தியைத் தரவும், மனமாரப்பாராட்டினார்.

நாம் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அம்பாறை ஹார்டி கல்லூரியிலோ கொசுக்கடி தாங்கமுடியாது என்பதால், என்மீது அன்புகொண்ட முன்னாள் அமைச்சர், மர்ஹூம் ஏ.ஆர். எம்.மன்சூர் தனது இல்லத்தில் என்னைத் தங்கவைப்பதற்காக, கல்முனைக்கே அழைத்துச் சென்றார். நான்கு தினங்களும் கண்காட்சித் திடலில் அறிவிப்புப் பணிகளுக்காக அமைக்கப்பட்டிருந்த தகவல் கூடத்தில் பணி செய்தபின் இரவு கல்முனைக்குச் செல்வேன்.

ஐந்தாம் நாள்தான் எங்களுக்கு மேடையில் பணி. 'ஜனஹமுவ' எனும் மக்களைச் சந்திக்கும் கூட்டத்திற்கு அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன வருகிறார். முதல் நாள் பணிமுடிந்து கல்முனைக்குத் திரும்பி, ஆழ்ந்த நித்திரையில் இருக்கும்போது, யாரோ பேசும் குரல் கேட்டு வெளியில் வந்தால், பிரதம மந்திரியின் பிரத்தியேகச் செயலாளர் கே.எச்.ஜே. விஜயதாச, மன்சூரிடம் என்னைப் பற்றி விசாரித்துக் கொண்டிருக்கிறார். என்னைக் கண்டவுடன் ஒரு கடிதத்தைத் தந்து, 'நாளை மேடையில் பிரதம மந்திரியின் உரையை, வரிக்கு வரி தமிழில் மொழிபெயர்த்துச் சொல்வது உன் பொறுப்பு என்றார். எனக்கோ வியர்த்துக் கொட்ட ஆரம்பித்துவிட்டது. வரிக்கு வரி மொழிபெயர்த்துச் சொல்வதில் எனக்கு எந்த அனுபவமும் இல்லை.

அந்தப் பணிக்காகவே பாராளுமன்றத்தில் இருந்த அனுபவம் வாய்ந்த ஐந்து பேர், ஏற்கனவே வந்திருக்கிறார்களே? ஏன் நான்? என்று நான் கேட்க, அவரோ, எனக்கொன்றும் தெரியாது இது பிரதம மந்திரியின் கட்டளை என்று சொல்லிவிட்டு ஜீப்பில் ஏறிய கே.எச்.ஜே. விஜேதாசவிடம் கெஞ்சினேன். அவர் கொஞ்சம் மனமிரங்கி, இது பிரதமரின் முடிவு, நீ அவரிடமே போய் உனது இயலாமையைக் கூறு என்று ஆலோசனை சொன்னார். நான் எவ்வாறு? என்று

மேடையில் பிரதமரது பேச்சின் ஒவ்வொரு பந்தியிலும் ஆரம்பத்தில் சில சொற்களும் நடுவில் சில சொற்களும் கடைசியில் சில சொற்களும், கேள்வி ஞானத்தின் மூலம் புரிந்ததால், அதன் சாராம்சத்தை என்னுடைய தமிழ்ப் புலமையோடு மொழிபெயர்த்துச் சொன்னேன். ஒவ்வொரு தடவையும் நான் மொழிபெயர்த்துச் சொன்னதன் பின்னரே மக்கள் கரகோசம் செய்வதை அவதானித்த அவரோ (அவருக்கு தமிழ் நன்றாகப் புரியும், கொஞ்சம் மழலைத் தமிழ் பேசக்கூடியவரும் கூட என்பதால்) "இதிங்.. என்னா.. நாங் பேசக்கொல்ல நீங்க கை தட்டுறதிங் இல்ல ஹமீட் தொர பேசக்கொல்ல மட்டும் கை தட்டுற திங்?" என்று சபையோரைப் பார்த்துக் கேட்டுவிட்டு.. "பொஹொம ஹொந்தட்ட வெடே கரனவா நே?" என்று பாராட்டினார்.

மற்றும் ஒரு நிகழ்வு, வாழ்வில் மறக்க முடியா நிகழ்வு. அவர் ஜனாதிபதியானதன் பின்னர் ஒரு நாள், இரவு ஜீப் வண்டி ஒன்று எனது வீட்டிற்கு வந்தது. ஜனாதிபதி அழைத்து வரச்சொன்னார் என்றார்கள். அதுவரை கலந்து கொண்ட அரச விழாக்கள் அனைத்தும் வானொலி நிலைய பணிப்பாளர் நாயகத்தால், கடமையாக எனக்குப் பணிக்கப்பட்டவை. இது என்ன? நேரடியாக அழைக்கப்படுகிறேனே? என்றொரு தயக்கம் வந்தாலும், ஜனாதிபதியின் உத்தரவை மறுக்க முடியாதே என்ற குழப்ப மன நிலையுடன் சென்றேன்.

வாழைத்தோட்ட பகுதியில் அவரது சொந்த இல்லமான 'சுச்சரித்த'வின் முன்னால் வாகனம் போய் நின்றது. ஜனாதிபதியின் பிரத்தியேக அறைக்குள் அழைக்கப்பட்டேன். அவர் மட்டும் அங்கு இல்லை ஆனால் ஏற்கனவே அழைக்கப்பட்ட இசை அமைப்பாளர் சரத் தஸநாயக்க, இசைக்கலைஞர் ஷொஹான் வீரசிங்ஹ, பாடகியும், அறிவிப்பாளருமான நொய்லின் ஹொண்டெர், சிங்கள கவிஞர் சமன் சந்திரநாத் வீரசிங்ஹ ஆகியோர் அமர்ந்து ஒரு பாடலை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். நான் ஏன் அழைக்கப்பட்டுள்ளேன் என்பதும் விளக்கப்பட்டது.

அதாவது, தேசிய கீதம், பாடசாலைக் கீதம் போல் தன்னுடைய கட்சிக்கும் ஒரு கீதம் உருவாக்க வேண்டும் அது மும்மொழிகளிலும் அமையவேண்டும் என்றொரு புதிய யோசனை ஜனாதிபதிக்குத் தோன்றியுள்ளது. எனவே தமிழில் வரிகளை எழுத என்னை அழைத்திருக்கிறார். நான் பாடல் இயற்றக்கூடியவன் என்பதை ஜனாதிபதி எப்படி அறிந்து கொண்டார்? என்பது புதிராக இருந்தது. ஏனெனில் அதுவரை நான் இயற்றிய மெல்லிசைப் பாடல்களையும், இஸ்லாமிய கீதங்களையும் 'இறைதாசன்' எனும் புனை பெயரில்தான் எழுதிவந்திருக்கிறேன். எதுவும் புரியாத நிலையில், ஏற்கனவே சிங்களக் கவிஞர் எழுதியிருந்த வரிகளை மெட்டுக்கும், தாளக் கட்டுக்கும் ஏற்ப மொழிமாற்றம் செய்து எழுதி முடித்துவிட்டேன். இரவு ஒரு மணி. ஜனாதிபதி வந்தார். 'பாடல் தயாராகிவிட்டதா? கேட்போமே' என்றார்.

சிங்களத்தில் பாடிமுடித்ததும் என்பக்கம் திரும்பியவரைப் பார்த்து, 'சேர்.. எனக்குப் பாடவராது..வாசித்துக் காட்டுகிறேன்' என்று வாசித்தேன். அவரோ ஏமாற்றத்துடன் 'உம்மிடம் நான் எதிர் பார்த்தது இதனை அல்லவே' என்றார். புரியாமல் 'நீங்கள் எதனை எதிர்பார்த்தீர்கள்?' என்று கேட்டபோது, அவர் சொன்னார் 'சிங்களத்தில் உள்ளதை வரிக்கு வரி அப்படியே மொழிபெயர்க்காமல், ஒற்றுமையின் அவசியம், அதன் பலம் என்ன என்று உம்முடைய சொந்தக் கற்பனையில் வரிகள் எழுத வேண்டும்' என்றார். உடனே வந்த தைரியத்தில், மளமளவென்று எழுதி முடித்து விட்டேன்.

அவருக்குத் தமிழ் நன்றாகப் புரியும் என்பதால் நான் எழுதி முடித்த வரிகளைக் கேட்டு விட்டு 'மிக மிக அருமை அற்புதம்' என மனமாரப் பாராட்டினார். தொடர்ந்து எல்லோரைம் பார்த்துச் சொன்னார் 'இந்தப் பாடல் வரிகள் மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட வேண்டும் அதாவது சிங்கள எழுத்துகளில் தமிழ் வரிகளும், மற்றிரு மொழிகளிலும் அவ்வாறே அச்சிட்ட பிரதிகளை அனைவருக்கும் கொடுக்கவேண்டும்.

கட்சிக் கீதத்தைப் பாடும்போது அதில் தமிழ் வரிகளைப் பாடும்போது, சிங்களவர் மௌனமாயிருக்கக் கூடாது மூன்று மொழிகளையும் அனைவரும் உச்சரித்துப் பாடுவது தான் ஒற்றுமைக்கு உதாரணம்' என்று கூறியபின் அவர் சொன்ன விடயம் மெய் சிலிர்க்க வைத்தது. "இவ்வாறு நமது தேசிய கீதமும் ஒரே பாடாலாக மூன்று மொழிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இருந்திருந்தால் இனப்பிரச்சினையே வந்திருக்காது அல்லவா?"

இந்தக் கருத்தை ஒரு மேடையில் அவர் சொல்லியிருந்தால் வெறும் அரசியல் நோக்கத்துக்காக, மக்களைக் கவர்வதற்காக உதட்டளவில் பேசும் பேச்சாக இருந்திருக்கும். ஆனால் அங்கு இருந்தவர்களோ நான்கைந்து பேரே. எனவே அந்தக் கருத்து நிச்சயம் அவரது உள்ளத்திலிருந்து வந்த உண்மையான கருத்தாகவே இருந்திருக்க வேண்டும்.

அவரது இறப்பின் பின்னர் சுதந்திர சதுக்கத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்றபோது நேர்முக வர்ணனை செய்வதற்கு, இ.ஒ.கூ.தாபனத்தால் பணிக்கப்பட்டேன். அவரது பூவுடல் அக்கினிக்கு இரையாகும் சிதைக்கு முன்னால் இருந்து அந்தப் பணியைச் செய்யும் போது, இந்த நிகழ்வை இரைமீட்டி, எனது நேர்முக வர்ணனையை இப்படி முடித்தேன்...

அவர் காண விரும்பியிருந்தது..இனவேறுபாடு அற்ற அந்த ஒன்று பட்ட இலங்கையைத் தானோ..!



பி.எச்.அப்துல் ஹமீத்




# பொருளாதாரப் பரிமாற்றச் சட்டமூலத்திலுள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்னவுடன் சந்திப்பு

**'பொருளாதாரப் பரிமாற்றச் சட்டமூலத்தில் காணப்படும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். இதுபற்றிக் கலந்துரையாடுவதற்கு எமது கட்சி தயாராக உள்ளது' என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார். எமக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.**



**கே: எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் இரண்டாவது மதிப்பீட்டுக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ள பொருளாதாரப் பரிமாற்றச் சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் கருத்து என்ன?**

பதில்: முதலாவது மதிப்பீட்டுக்காகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தச் சட்டமூலத்துக்கு எதிராக நீதிமன்றம் சென்றுள்ளனர். இது அரசியலமைப்பு சட்டத்திற்கு உட்பட்டதா, இல்லையா என்பதை உயர்நீதிமன்றம் விசாரித்து வருகிறது. பொருளாதாரக் கொள்கைகளை ஆராய்வதற்காக இதன் ஊடாக ஒரு ஆணைக்குழு அமைக்கப்பட்டாலும், முதல் பகுதியில் சில வீதம் காணப்படுகின்றது. அதாவது சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட சதவீதம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த விடயங்களை இச்சட்டமூலத்தில் சேர்ப்பது பொருத்தமற்றது என்பதே எனது நிலைப்பாடாகும். ஏனெனில் இந்த விடயங்கள் அவ்வப்போது மாறிக்கொண்டே இருக்கும். தேசியக் கொள்கைகள் மற்றும் அது போன்ற இலக்குகளை அடைவதற்காக இவற்றை முன்வைப்பது எத்தனை தூரம் பொருத்தமானது?

நமக்கு இருக்கும் இக்கட்டான சூழ்நிலைகளில் இதுவும் ஒன்று. மேலும், இதன் ஊடாக ஆணைக்குழுவொன்று அமைக்கப்படவுள்ளது. இது தொடர்பாக ஏற்கனவே பன்னிரண்டு சட்டங்கள் உள்ளன. நாட்டு மக்களுக்குப் போதுமான வாழ்க்கைத் தரத்தை வழங்குதல், பொருளாதார நெருக்கடிகளைத் தடுப்பது போன்றவையே இவற்றின் நோக்கமாகும். ஆனால் இந்த ஆணைக்குழுவில் 6 பேர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றனர். இதில் கூட்ட நடப்பெண் 5 ஆகும். ஆணைக்குழுவாக இருந்தாலும் ஜனாதிபதியின் கருத்து மாத்திரமே அங்கு பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படுவதாயின் அதன் உறுப்பினர்களின் பெயர்களை முன்மொழிவதை மாத்திரமே நிறைவேற்று ஜனாதிபதியால் மேற்கொள்ள முடியும்.

ஆனால் அவர் தகுதியானவரா, இல்லையா என்பது சுயாதீனமாகவே தீர்மானிக்கப்பட வேண்டும். அதற்கு சில அளவுகோல்கள் இருக்கலாம். இதில் உள்ள மற்றுமொரு விடயம் சபைகள் பல உருவாக்கப்படவுள்ளமையாகும். ஈசி போர்ட் ஊடாகவே நிர்வாகம் முகாமைத்துவம் செய்யப்படவுள்ளது. தற்பொழுது முதலீட்டு ஊக்குவிப்புச் சபை இது தொடர்பான விடயங்களை நிறைவேற்றும் அமைப்பாக உள்ளது. இன்வெஸ்ட் ஸ்ரீலங்காவின் ஊடாக முதலீடுகளை ஈர்ப்பது நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் தற்போதுள்ள சபைகள் பற்றி இதில் எந்த விளக்கமும் கொடுக்கப்படவில்லை. இதனால் அங்கு ஸ்திரமின்மை நிலவுகிறது. மேலும், முதலீட்டு ஊக்குவிப்புச் சபைக்கு என்ன நடக்கும் என்பது குறித்து தெளிவாக குறிப்பிடப்படவில்லை. இவை அரசால் நடத்தப்படுகிறதா? தனியாரால் செய்யப்படுமா என்பது தெரியவில்லை. இவற்றைக் கொண்டு வருவதால் நாட்டில் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்காது. இவை வெறும் நிறுவனப் பிரச்சினைகள் அல்ல.

**கே: இதற்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவு எவ்வாறானதாக இருக்கும்?**

பதில்: வெவ்வேறு திருத்தங்களை நாங்கள் முன்மொழிய எதிர்பார்க்கின்றோம். பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன்னர் இது குறித்து விவாதிக்கப்பட வேண்டும். நாம் அவ்வாறு செய்யாவிட்டால் இது பாரியதொரு பிரச்சினையாகத் தோன்றிவிடும்.

**'கலந்துரையாடல் நடத்த எமது கட்சி தயாராக உள்ளது'**



**கே: அதாவது, இச்சட்டமூலத்தில் நல்ல விடயங்கள் பல இருக்கின்றபோதும், சிலவற்றைத் திருத்த வேண்டியிருப்பதாக நீங்கள் கூறுகின்றீர்களா?**

பதில்: ஆம், பல குறைபாடுகள் திருத்தப்பட வேண்டியுள்ளன. இவை பெரிய நோக்கங்களைக் கொண்டுள்ளன. சர்வதேச வர்த்தகத்திற்கான தூதர்களின் நியமனங்கள் இங்கு சேர்க்கப்பட்டுள்ளன. தேசிய உற்பத்தி ஆணைக்குழுவை அமைப்பது பற்றியும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பொருளாதாரம் மற்றும் சர்வதேச வர்த்தகம் தொடர்பான நிறுவனம் ஒன்றை நிறுவுவது குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. சுங்க கட்டளைச் சட்டம், கம்பனிச் சட்டம், உள்நாட்டு வருமானம் மற்றும் நாணயச் சட்டம், அந்நியச் செலாவணிச் சட்டம், தேசிய நீர்வழங்கல் மற்றும் நீர் போக்குவரத்துச் சட்டம் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டம் இவற்றில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. பொருளாதாரம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைப்புகளின் தேசிய உற்பத்தி ஆணைக்குழு யாரிடம் பொறுப்புக் கூறுவது என்பதில் சிக்கல் எழுந்துள்ளது. இதை நாம் ஆராய வேண்டும். முதலீட்டு ஊக்குவிப்புச் சபையின் தற்போதைய விதிகள் இரத்து செய்யப்படுமா என்பது தெளிவாக இருக்க வேண்டும்.

**கே: இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்தால் எதிர்க்கட்சிகள் இச்சட்டமூலத்தை ஆதரிக்குமா?**

பதில்: ஆம், குறைபாடுகள் விவாதிக்கப்பட வேண்டும். ஆனால் இதுவரை அதற்கான எந்தவித கலந்துரையாடல்களும் ஆரம்பிக்கப்படவில்லை.

**கே: எதிர்க்கட்சிகள் விவாதத்திற்கு தயாரா?**

பதில்: எந்த நேரத்திலும் நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் குழுநிலை விவாதங்கள் நடத்தப்பட வேண்டும்.

**கே: சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் ஏற்படுத்திய ஒப்பந்தத்தின் விதிமுறைகளை ஒரு கட்சிக்கு சாதகமாக இல்லாத முறையில் தலைகீழாக மாற்ற முடியுமா?**

பதில்: சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டு நிபந்தனைகள் உள்ளன. இது மிகவும் பரந்த கொள்கை ரீதியான இணக்கப்பாடாகும். நாங்கள் பரந்த கொள்கை உடன்பாட்டில் இருக்கிறோம். சர்வதேச நாணய நிதியம் வரவுசெலவுத்திட்ட இடைவெளியைக் குறைத்தல், தொகையைக் குறைத்தல் போன்ற விடயங்களையே எதிர்பார்க்கின்றது. வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையை சரிசெய்வதற்கு அரசாங்கத்தினால் பணத்தைச் சேர்க்க முடியாது என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். எனினும், எமது முன்மொழிவுகள் என்ன என்பதைக் கூறுவதற்கு சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துக்கு இடமளிக்கின்றது. இங்குதான் அரசுக்கும் நமக்கும் பெரிய வித்தியாசம் உள்ளது.

**கே: பணத்தை அச்சிடவோ அல்லது வெளிநாட்டுப் பணத்தைக் கடன் வாங்கவோ முடியாத அரசாங்கத்தின் கீழ் அத்தியாவசியச் செலவுகளை எப்படிச் சந்திப்பது?**

பதில்: இந்த அரசு வருமானத்தை அடிப்படையாக கொண்டு செயல்பட்டது, செலவு அடிப்படையில் அல்ல. செலவைக் குறைக்க வேண்டும். செலவினங்களைக் குறைக்க, அரசாங்கத் துறையில் காணப்படும் வீண்விரயம் மற்றும் ஊழலைக் குறைக்க வேண்டும். அவை ஒவ்வொன்றுக்கும் எங்களிடம் வேலைத்திட்டம் உள்ளது.

**கே: ஏற்பட்டுள்ள பொருளாதார மந்தநிலையைக் கருத்தில் கொண்டு, யார் ஆட்சிக்கு வந்தாலும் மக்கள் விரும்பும் ஆட்சியைத் தொடர முடியுமா?**

பதில்: அதை விருப்பப்படி செய்ய முடியாது. இது ஒரு பொய்யான கதை. நாங்கள் ஒரு விரிவான பணி ஒழுங்கு மற்றும் சரியான கொள்கையில் இருக்கிறோம். அவற்றைச் செயற்படுத்தும் போது பெரிய மாற்றங்களைச் செய்யலாம்.

**கே: ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால், எதிர்கால கடன் செலுத்துதல் எவ்வாறு மேற்கொள்ளப்படும்?**

பதில்: இந்தக் கடனை செலுத்துவது குறித்து அரசு இப்போது ஆலோசித்து வருகிறது. ஒரு அரசைப் பொறுத்தவரை உடன்பாடு ஏற்பட்டால், அதை ஒதுக்கி வைக்க முடியாது. அந்த உடன்படிக்கைக்குள் நாம் இருக்க வேண்டும். இல்லையெனில் பேசி ஒப்பந்தத்தை மாற்ற வேண்டும். அது இல்லாமல், நம்பிக்கை முற்றிலும் உடைந்துவிடும். சில அரசியல் கட்சிகள் இந்த முட்டாள்தனமான கதைகளைக் கூறுகின்றன, அப்போது இந்த நாட்டிற்கு கடன் கிடைக்காது. முதலீடு இல்லை. நாடு முன்னேற, ஏற்றுமதி செய்ய வேண்டும். அதற்கான சர்வதேச நம்பிக்கை இருக்க வேண்டும். சர்வதேச தரம் இருக்க வேண்டும். ஆனால் சிலருக்கு இது புரியவில்லை.

# நிலைகுலைந்து நிற்கிறது கள்ளக்குறிச்சி மாவட்டம்!



**சட்டவிரோத மதுபானம் அருந்தியவர்களில் நேற்றுப் பிற்பகல் வரை 52 பேர் உயிரிழப்பு! மரணங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!**

**தமிழ்நாடு கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சட்டவிரோத மதுபானம் அருந்திய 50 இற்கும் மேற்பட்டோர் பலியான சம்பவத்தையடுத்து ஒட்டுமொத்த தமிழகமே அதிர்ச்சியில் உறைந்துள்ளது.**

நேற்று வரை 52 பேர் மரணமடைந்துள்ளனர். நச்சுமதுபானம் அருந்தியவர்களில் மேலும் பலர் சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமென்று அஞ்சப்படுகின்றது.

நேற்றுவரை 52 பேர் வரை பலியாகி உள்ளனர். மேலும் 100 இற்கும் அதிகமானவர்கள் மருத்துவ சிகிச்சையில் உள்ளனர். இவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சிலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. அவர்களை காப்பாற்ற தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கள்ளக்குறிச்சி சட்டவிரோத மதுபான பலி தொடர்பாக எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளன. நேற்று தமிழகத்தின் பல இடங்களில் பா.ஜ.க சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் தி.மு.க அமோக வெற்றி பெற்றுள்ள போதிலும், விஷமதுபான மரணங்களையடுத்து தி.மு.க மீது கடுமையான கண்டனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. சட்டவிரோத மதுபானத்துக்கு தி.மு.க அரசே பொறுப்பேற்க வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

கள்ளக்குறிச்சியில் சட்டவிரோத சாராயம் குடித்து 52 பேர் உயிரிழந்த விவகாரம் தமிழகம் முழுவதும் அதிர்வலைகளை உண்டாக்கியுள்ளது. இவ்வழக்கை சி.பி.சி.ஐ.டி பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

விசாரணையில் தெலுங்கானா மாநிலம், ஹைதராபாத்திலிருந்து ரயில் மூலம் சென்னைக்கு கொண்டுவரப்பட்ட மெதனோல், அங்கிருந்து ரயில் மூலம் புதுச்சேரிக்கு எடுத்து வரப்பட்டு, அவை விழுப்புரம், கள்ளகுறிச்சி, கடலூர் மாவட்டங்களுக்கு பிரித்து அனுப்பப்பட்டது தெரியவந்துள்ளது.

கள்ளக்குறிச்சி அருகே கல்வராயன் மலையில் இருந்து மூலிகைச் சாராயம் எனப்படும் கடுக்காய் சாராயம் கள்ளக்குறிச்சிக்கு கொண்டு வரப்பட்டு போதை கூடுதலாக கிடைக்க மெதனோல் அளவுக்கு அதிகமாக கலக்கப்பட்டதால்தான் இம்மரணங்கள் இடம்பெற்றன என்று தெரியவந்துள்ளது.



**மக்களவைத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய தி.மு.கவுக்கு வந்துள்ள சோதனை!**

இச்சம்பவத்தை வைத்து எதிரணிகள் அரசியல் ஆதாயம் தேடுவதாக முதலமைச்சர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். “துயரம் மிகுந்த இந்தச் சம்பவத்தை வைத்து அரசியல் ஆதாயம் தேட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரை, சமூகவிரோத சக்திகளிடம் இருந்து மக்களைக் காக்க எந்தவிதமான கடுமையான நடவடிக்கைகளையும் எடுப்பேன் என உறுதி அளிக்கிறேன்" என்று கள்ளக்குறிச்சி சம்பவம் தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் சட்டப்பேரவையில் விளக்கம் அளித்துள்ளார்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 164 நபர்களில் சுமார் 100 பேர் உள்ளக நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் தொடர்பாக கோவிந்த ராஜ் என்ற கன்னுக்குட்டி என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 200 லீட்டர் மெதனோல் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும் மூவரும் இதில் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களில் பெண்களும் உள்ளனர்.

தமிழகத்தில் கள்ளச்சாராயத்தை ஒழிக்க மதுவிலக்கு பிரிவு செயல்பட்டு வருகிறது. இருப்பினும் பொலித்தீன் பக்கெட்டில் சாராய விற்பனை தமிழகத்தின் பல பகுதிகளில் அமோகமாக நடைபெற்று வருகிறது என தொடர் குற்றச்சாட்டுகள் வந்த வண்ணம் இருக்கின்றன. இப்படி இருக்கையில்தான் கள்ளக்குறிச்சியில் பக்கெட் மதுபானம் குடித்த 50 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் அதிகாரிகள் உட்பட பலர் பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.10 இலட்சம் இழப்பீடு வழங்கப்படும் என்றும், மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோர்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் நிவாரணம் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்திருக்கிறார்.

(19ஆம் பக்கம் பார்க்க)





எஸ்.சாரங்கன்...

### இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகள்

# சவூதி அரேபியா – இலங்கை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்



சவுதி அரேபியாவுக்கும் இலங்கைக்குமிடையே முதலீட்டு நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்துக்கமைய நேரடி முதலீட்டை ஈர்க்கவும், முதலீட்டு சூழலை மேம்படுத்தவும் முடியுமென எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் சவூதி அரேபியாவின் ரியாத்தில் நடைபெற்ற உலக பொருளாதார மன்றத்தின் விசேட கூட்டத்தின் போது, புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பில் உறுதியான தீர்மானம் எட்டப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் போது, முதலீடு குறித்து முக்கிய கொள்கை மற்றும் சட்ட சீர்திருத்தங்களை செயற்படுத்துதல், உட்கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் முதலீட்டை திறமையான செயல்முறைகளுக்கமைய முன்னெடுக்க முடியுமென நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இது தவிர இரு நாடுகளுக்கும் இடையேயான பொருளாதார ஒத்துழைப்புக்கான புதிய வழிகள் ஏற்படுமென கூறப்படுகின்றது.

இதேவேளை இந்த ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கான அனுமதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய வாரமஞ்சரியுடன்...

வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை உள்ளிட்ட விபரங்கள் அடங்கிய வர்த்தமானி இன்றைய தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையுடன் வெளியிடப்பட்டுள்ளது.

## தரம் ஒன்றுக்கு...

கடந்த 20ஆம் திகதி அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பிறப்புச் சான்றிதழ் இல்லாத குழந்தையாக இருந்தாலும், ஏற்றுக்கொள்ளக்கூடிய வயதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இருந்தால், அந்தக் குழந்தைகளுக்கு அநீதி இழைக்காத வகையில் பாடசாலையில் சேர்க்கப்பட வேண்டுமென்று புதிய சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதன் பிரிவு 2.1, சில ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகளின்படி, பிறப்புச் சான்றிதழ் இல்லாத மற்றும் 05 வயதுக்குட்பட்ட மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அனுமான வயதுச் சான்றிதழைத் தயாரிக்கும் குழந்தைகளுக்கு நியாயமற்ற அல்லது பாரபட்சமாக நடத்தப்படக்கூடாதென்றும் வழங்குகிறது.

சுற்றறிக்கையின் 6.2.5 பிரிவின்படி செய்யப்பட்ட திருத்தத்தில், "ஒருவரின் சொந்தக் குழந்தை அல்லது பேரக்குழந்தை /பேத்திகள் அல்லது ஒருவரின்/மனைவியின் சகோதர சகோதரிகளின் குழந்தைகள்", "ஒருவரின் /மனைவியின் சகோதர சகோதரிகளின் குழந்தைகள்" என்று திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

## NIC பெற்றுக்கொள்ள...

பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தினால் இதுவரை 40 வயதுக்கு மேற்பட்ட தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ள முடியாதவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 30ஆம் திகதி வரை அதற்கான கால அவகாசம் உள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி குறிப்பிட்டார்.

## வெளிநாட்டு மாணவர்களுக்கு...

நாடுகளைச் சேர்ந்த திறமையான மாணவர்களை அமெரிக்காவில் தங்க அனுமதிக்குமென்றும் அவர் கூறியுள்ளார். நேர்காணல் ஒன்றில் கலந்துகொண்டு கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நான் இதை செய்ய விரும்புகிறேன், செய்வேன். அமெரிக்க கல்லூரிகளில் பட்டம் பெறும் மாணவர்களுக்கு உடனடியாக கிரீன் கார்ட் வழங்கப்பட வேண்டும் என்று நினைக்கிறேன்.

இதன் மூலம் அவர்கள் அமெரிக்காவில் வாழவும், இங்குள்ள வளர்ச்சிக்கு உதவவும் முடியும். திறமையான மாணவர்களை இங்கு நிறுத்த அமெரிக்கா முயற்சிக்க வேண்டும்.

அமெரிக்காவில் பட்டம் பெற்ற பலரைத் தனக்குத் தெரியும், ஆனால் கிரீன் கார்ட் இல்லாததால் இங்கு தங்க முடியவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

# காரை இந்து கொழும்பு பழைய மாணவர் பொதுக்கூட்டம்

காரைநகர் இந்துக் கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் 2024 இற்கான ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று (23.06.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு சங்க தலைவர் சி. நேசேந்திரம் தலைமையில் வெள்ளவத்தை உருத்திரா மாவத்தையில் உள்ள கொழும்பு தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்விற்கு தவறாது வருகை தருமாறு பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் ஆறுமுகம் சிவசோதி கொழும்பில் உள்ள பழைய மாணவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

### யாழ். பொலிஸாரின் சுற்றிவளைப்பு

# ஐந்து வாள்களுடன் நபரொருவர் கைது



மோட்டார் வாகன திணைக்களத்தின் பதிவில்லாத மோட்டார் வாகனம் ஒன்றினையும் ஐந்து வாள்களையும் யாழ். பொலிசார் நேற்று (22) அதிகாலை கைப்பற்றியுள்ளனர்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் விசேட ரோந்து பணிகளில் ஈடுபட்டிருந்த யாழ்ப்பாணம் பொலிசார் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த மோட்டார் வாகனத்தை வழிமறித்து சோதனையிட்ட போது, வாகனத்தின் பதிவின்றி வாகனம் பயணித்தமை தெரியவந்தது.

இதனையடுத்து இளைஞரை கைது செய்து விசாரணைசெய்த போது, சந்தேக நபரது வீட்டிலிருந்து ஐந்து வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஐக்கிய மக்கள் சக்தி...

மற்றும் அலி சாஹிர் மௌலானா ஆகியோருக்கு தலா 100 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களான ரிசாத் பதுதீனுக்கு 85 மில்லியன் ரூபா, கலாநிதி காவிந்த ஜயவர்தனவுக்கு 69 மில்லியன் ரூபா, ரோஹிணி கவிரத்னவுக்கு 62 மில்லியன் ரூபா, ஜே.சி. அலவத்துவலவுக்கு 61 மில்லியன் ரூபா, வேலுகுமாருக்கு 60 மில்லியன் ரூபா, வைத்திய கலாநிதி ராஜித சேனாரத்ன மற்றும் கயந்த கருணாதிலக்க ஆகியோருக்கு 51 மில்லியன் ரூபா, ஹர்ஷ டி சில்வா, சுஜித் சஞ்சய் பெரேரா, கிங்ஸ் நெல்சன், மற்றும் டபிள்யூ. எச். எம். தர்மசேன ஆகியோருக்கு 50 மில்லியன் ரூபா வீதமும், அஜித் மான்னப்பெரும மற்றும் பாட்டலி சம்பிக்கவுக்கு 49 மில்லியன் ரூபா வீதமும், திலீப் வெதஆராச்சிக்கு 48 மில்லியன் ரூபாவும், ஹெக்டர் அப்புஹாமிக்கு 18 மில்லியன் ரூபாவும் விடுவிக்கப்பட்டுள்ளன.

## ஹோமாகம 'தர்ம ரஷ்மி'...

டன் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் யாதாமினி குணவர்தனவும் கலந்து கொண்டார்.

அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் எண்ணக்கருவின்படி நடைபெறும் 'தர்ம ரஷ்மி' பொசன் வலயம், ஹோமாகம நகரை மையப்படுத்தி இப் பிரதேச செயலகப் பிரிவுக்குள் சுமார் 13 கிலோமீற்றர் சுற்றளவை கொண்டதாக நடத்தப்படுகிறது. இந்நகழ்வுகள் இன்று 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

## இந்தியாவில் பறவைக் காய்ச்சல்...

பறவைக் காய்ச்சல் இன்ப்ளூயன்ஸா வைரஸால் ஏற்படுகிறது. இது முதலில் பறவைகளை பாதிக்கிறது, பின்னர் வைரஸ் மற்ற விலங்குகளையும் மனிதர்களையும் பாதிக்கிறது.

இன்ப்ளூயன்ஸா வைரஸின் பல திரிபுகள் மற்றும் துணை திரிபுகள் உள்ளன. சமீபத்தில், இன்ப்ளூயன்ஸா ஏ வைரஸால் பாதிக்கப்பட்ட சிறுமி இந்தியாவில் அடையாளம் காணப்பட்டார்.

# வட இந்தியாவில் வெப்ப அலை தாக்கத்தால் 130 பேர் உயிரிழப்பு

### குஜராத்தில் மட்டும் 56 பேர் பலி

வட இந்தியாவில் வெப்ப அலையின் தாக்கத்தினால் 130 பேர் உயிரிழந்துள்ளதாக இந்திய செய்திகள் தெரிவித்துள்ளன.

வட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் அண்மைக்காலமாக கடும் வெப்ப அலை வீசி வருகின்றது. குறிப்பாக கடந்த மார்ச் 01ஆம் திகதி முதல் ஜுன் 18 ஆம் திகதி வரையிலான காலகட்டத்தில், இந்தியாவில் வெப்ப அலையின் தாக்கத்தால் உடலில் நீர்ச்சத்து குறைபாடு உள்ளிட்ட பாதிப்புகள் காரணமாக 130 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் அதிகபட்சமாக உத்தர பிரதேசத்தில் 56 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கொழும்பில் இன்று...

தினகரன் மற்றும் வீரகேசரி பத்திரிகைகளில் வெளி வந்த மலையகம் இங்கிருந்து எங்கே? என்ற தொகுதியின் வெளியீட்டு விழா இன்று 23ம் திகதி மாலை 3 மணிக்கு வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தில் நடைபெறும் புத்தகக் கண்காட்சியில் வெளியிடப்பட உள்ளது. பேராசிரியர் தை. தனராஜ் தலைமையில் நடைபெறும் இவ்வெளியீட்டு விழாவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் நூலின் முதலாவது பிரதியை பெற்றுக் கொள்வார். சிறப்பறிஞர் பி.பி.தேவராஜ், வீரகேசரி பத்திரிகையின் பிரதம நிறைவேற்று அதிகாரி எம். செந்தில்நாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கும் இந்த நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் மற்றும் வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீ கஜன், சு.முரளிதரன், வீரபாகு ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றனர்.

## ஜனாதிபதியின் பரிந்துரை...

சட்ட நிலையை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்புச் சபையின் தலைவரும் சபாநாயகருமாகிய மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு அனுப்பும் கடிதத்தில் குறிப்பிடுவாரென்றும் ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பரிந்துரையின் பேரில் பிரதம நீதியரசர் மற்றும் சட்ட மாஅதிபர் பதவிகளுக்கு தனி நபர்களின் பெயர்களை ஜனாதிபதி அரசியலமைப்புச் சபைக்கு பரிந்துரை செய்ய வேண்டுமென அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் ஒரு ஷரத்தை நிறைவேற்றிய போதிலும், அது 20 ஆவது திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்டது. மீண்டும், 21ஆவது திருத்தத்தின் கீழ், 19ஆவது திருத்தத்தில் அதே ஷரத்து சேர்க்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்ட பெயரை அரசியலமைப்புச் சபை நிராகரித்தால், அந்தப் பெயரை மீண்டும் குறிப்பிட முடியும் என்றும் அந்தப் பேச்சாளர் மேலும் கூறினார்.

## கஃபதுல்லாஹ் திறப்பாளர்...

கப்ருஸ்தானில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஹஜ்ரத் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவுரைப்படி புனித கஃபதுல்லாஹ்வின் சாவி ஹஜ்ரத் தல்ஹா இப்னு உபைதுல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹுவிடம் ஒப்படைக்கப்பட்டு இன்று வரை அவர்களின் குடும்பத்தினர் பொறுப்பிலேயே அந்த சாவி இருக்கிறது. சவூதி மன்னர், புனித கஃபதுல்லாஹ்வில் நுழைய வேண்டும் என்றாலும், இந்த குடும்பத்தினர் தான் திறந்து விட வேண்டும். தற்போது ஹஜ்ரத் தல்ஹா இப்னு உபைதுல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் 109 ஆவது தலைமுறையினரான கண்ணியமான அஷ்ஷைஃக் ஸாலிஹ் அல் ஷைபா அவர்களிடம் தான் புனித கஃபதுல்லாஹ்வின் சாவி இருக்கிறது. அந்த மாண்பாளர் நேற்றைய தினம் இறையழைப்பை ஏற்றுள்ளார்.

## மட்டு. சியோன் தேவாலயத்தின்...

தேவாலயத்தின் புனரமைப்புப் பணிகள் இதுவரை ஏன் நிறைவடையவில்லையென்பது தொடர்பில் கேட்டறிந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அது குறித்து உடனடியாக ஆராய்ந்து அறிக்கை வழங்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், தேவாலயத்தின் திருத்தப் பணிகளை ஜனாதிபதி அலுவலகத்தின் நிதி ஒதுக்கீட்டில் துரிதமாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார். அந்த நடவடிக்கைகளுக்கு இலங்கை இராணுவத்தின் ஆதரவை வழங்குமாறும் ஜனாதிபதி இராணுவத் தளபதிக்கு பணிப்புரை விடுத்தார். கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனும் இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியுடன் இணைந்து கொண்டனர்.

## கொழும்பு கசினோகாரர்களிடம்...

இப்படிப்பட்ட அரசியல்வாதிகள் தான் நாட்டின் தலைவர்களாக வரக் காத்திருக்கிறார்கள்

கசினோ பணத்தில் பாடசாலைகள், வைத்தியசாலைகளுக்கு பொருட்களை விநியோகிக்கும் தலைவர்கள் ஆட்சிக்கு வந்தால் நாடு அழிந்துவிடும் எனவும் அவ்வாறானவர்களுக்கு வாக்களித்தால் நாடு அழிந்துவிடும் எனவும் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா கடந்த 20ம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இவ்வாறு செய்தால் வருங்கால சந்ததியினருக்கும் நாம் செய்யும் துரோகம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியாவதற்கு கனவு காண்பவர்கள் எல்லோரும் வட மாகாணத்துக்குச் சென்று 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப் போவதாக இஷ்டப்படி வாக்குறுதி வழங்குகின்றனர். 13 ஆவது திருத்தம் என்பது அவர்களின் தந்தை வழி சொத்தல்ல என்றும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவே தேர்தல் காலத்தில் வடக்கிலும், தெற்கிலும் 13 ஆவது திருத்தம் பற்றி பேசப்படுகிறது. அவ்வாறானவர்களுக்கு வடக்கு மட்டுமன்றி தெற்கு மக்களும் வாக்களிக்கக் கூடாது என்றும் 13 ஆவது திருத்தத்தை குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்துபவர்கள் அனைவரும் தேசதுரோகிகளே என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க நாம் இரத்தம் சிந்தியுள்ளோமென சபையில் தெரிவித்த அவர், வடக்கு மற்றும் தெற்கு இனவாதிகளுக்கு மக்கள் வாக்களிக்கக் கூடாது என்றும் தந்தை ஜனாதிபதி என்பதற்காக அவ்வாறு நாட்டின் தலைவர்களை தெரிவு செய்தால் நாடு உருப்படாமல் போகும் எனவும் அவர் தெரிவித்தார்.

சபையில் உரையாற்றுவதற்கு நான் எதிர்க்கட்சி பிரதம கொரடாவிடம் அனுமதி கோரினேன். ஆனால் அவர் ' உங்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டாம் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது' என குறிப்பிட்டார்.

சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்காத காரணத்தினாலா உரிமை மறுக்கப்படுகிறது என்று நான் கேட்டேன். அதற்கு அவர் பதில் கூறவில்லை.

மக்கள் பிரதிநிதிகள் சபையில் உரையாற்றுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். நான் 01 இலட்சத்து 13 ஆயிரம் வாக்குகளை பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவானேன். ஆனால் எனக்கு அனுமதி வழங்க மறுத்த நபர் 70 ஆயிரம் வாக்குகளையே பெற்றுள்ளார் என்பதை குறிப்பிட வேண்டும்.

எனினும் எனது முயற்சியை நான் கைவிடவில்லை. அரச அனுசரணையுடன் உரையாற்றுவதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் தினமும் சுமார் 40 நிமிடங்கள் வரை சபையில் உரையாற்றுகிறார். இதனால் ஏனைய உறுப்பினர்களுக்கு உரையாற்றுவதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

அது அநீதி. இவ்விடயம் தொடர்பில் சபாநாயகர் உரிய கவனம் செலுத்த வேண்டும். கட்சித் தலைவர்களுக்கு சாதகமாக செயற்படாத போது எமது உரிமை மறுக்கப்படுவது முறையற்றது.

என்று மக்களிடம் கேட்டுக் கொள்கிறேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் 27,595...

மட்டக்களப்பு மாவட்டத்தில் 27,595 குடும்பங்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு, திராய்மடு மாவட்ட செயலக வளாகத்தில் ஜனாதிபதி தலைமையில் நேற்று (22) நடைபெற்றது.

இதற்கு முன்னதாக மட்டக்களப்பு திராய்மடு பிரதேசத்தில் 1,055 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மாவட்ட செயலகத்துக்கான புதிய கட்டடத்தை ஜனாதிபதி திறந்துவைத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது, 2016 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி அப்போதைய உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன இந்த புதிய மாவட்ட செயலகத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கான சேவைகளை விஸ்தரித்து வினைத் திறனாக்கும் நோக்கில் இந்த புதிய மாவட்ட செயலகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பெயர் பலகையை திரைநீக்கம் செய்து மாவட்ட செயலகத்தை திறந்து வைத்த ஜனாதிபதி, அங்கு கண்காணிப்பு விஜயத்தையும் மேற்கொண்டார்.

இதன்பின்னர் மட்டக்களப்பு மக்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணி உரிமையற்ற 27,595 குடும்பங்களுக்கு உறுமய வேலைத்திட்டத்தின் கீழ் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. அதில் இதுவரை 2610 பேருக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுதவிர உயர்தர தேசிய பொறியியல் டிப்ளோமா நிறுவனத்தில் ஆங்கில டிப்ளோமா பெற்ற 252 பேருக்கும் இன்று ஜனாதிபதி தலைமையில் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

''திருகோணமலையை பிரதான பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்ய தீர்மானித்துள்ளோம். அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வந்த போது அதற்கு இந்தியாவின் ஆதரவைப் பெறுவது குறித்து விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் இந்தப் பகுதிகளில் பாரியளவிலான விவசாய செயற்பாடுகளைத் தொடங்க திட்டமிட்டுள்ளோம். மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் அபிவிருத்தி செய்யப்படாத மகாவலி காணிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டமும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வெருகலாறு முதல் அறுகம்பே வரையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு கோட்டையை தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் சுற்றுலாத் துறைக்காக அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர் இந்தப் பிரதேசத்திற்கு ஒரு சிறந்த ஹோட்டல் கிடைக்கும்.

மேலும் இப்பகுதியில் பால் உற்பத்தித் துறையை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு பொருளாதார மாற்றச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், பாரிய பணிகள் இங்கு செயல்படுத்தப்பட உள்ளன. இதன்படி திருகோணமலையை பிரதான ஏற்றுமதி பொருளாதா மையமாக மாற்ற முடியும்.

கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஆகிய இரண்டும் இங்கு அமைந்துள்ளன. இப் பிரதேசத்தில் கல்வியை மேலும் மேம்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

தொழிற்கல்வித்துறையின் சீர்திருத்தத்தின் மூலம் அதிகளவான இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வாய்ப்புகளை வழங்க முடியும். மூன்று, நான்கு ஆண்டுகளாக ஆசிரியர்களை நியமிக்க முடியாததால், பாடசாலைக் கல்வி மேம்பாட்டிற்காக, இன்று ஆசிரியர் நியமனமும் வழங்கப்பட்டது.

இந்நாட்டின் சாதாரண மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். நாடு மீண்டும் அபிவிருத்தி அடையும் போது அந்த மக்களை ஒருபோதும் மறக்க மாட்டோம். அதன்படி மக்களுக்கு முழு உரிமையுள்ள காணி உரிமை வழங்கும் உறுமய திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம். இப்போது உங்களுக்கு ஒரு நிலத்தின் சட்டபூர்வ உரிமை உள்ளது. யாரும் அடிபணிந்து வாழத் தேவையில்லை. குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு “அஸ்வெசும” நிவாரணத் திட்டத்தை செயல்படுத்தினோம். தற்போது விவசாயிகளுக்கு காணி உரிமை வழங்கப்பட்டுள்ளது. இப்பகுதிக்கு 27 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட உள்ளன. இந்தக் காணி உறுதிப் பத்திரங்களை வினைத்திறனாக வழங்க சம்பந்தப்பட்ட அனைத்து அரசாங்க அதிகாரிகளையும் கிராமங்களுக்கு அனுப்புவதற்கான வேலைத்திட்டத்தையும் நாங்கள் தயாரித்துள்ளோம்.

அப்போது, இந்த காணி உறுதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் மாவட்ட செயலகத்திற்கோ பிரதேச செயலகத்திற்கோ செல்லத் தேவையில்லை. மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர், காணி உத்தியோகத்தர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆளுநர் ஆகியோர் கிராமத்திற்குச் சென்று காணி உறுதிகளை மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்வார்கள். எதிர்வரும் திங்கட்கிழமை அந்த வேலைத்திட்டத்தை தொடங்கி விரைவில் நிறைவு செய்ய அறிவுறுத்தியுள்ளேன். எனக்கு ஒரே ஒரு குறிக்கோள் தான் உள்ளது. அந்த உரிமையை மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். காணி உரிமையை பாதுகாக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.'' என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## வாரமஞ்சரி எங்கள் கருத்து...

# எழுத்தாளர்களுக்கு களம் அமைக்கும் பெருமுயற்சி

இன்று சமூக ஊடகங்களின் ஆக்கிரமிப்பினால் வாசிப்புப் பழக்கம் பெருமளவு குன்றிப் போயுள்ளது.

இவ்வாறான நிலையில், தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழ்கின்ற வெள்ளவத்தையில் அமைந்துள்ள சைவமங்கையர் கழக மண்டபத்தில் இந்நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ள எம். பௌசர் அவர்களின் தமிழ்ப்பற்றுதல் பாராட்டுக்குரியதாகும். அதேவேளை பௌசர் அவர்களுக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் நல்கி ஊடகங்களில் இந்நிகழ்வுகளுக்கான பிரசாரங்களை வழங்கியுள்ள எச்.எச். விக்கிரமசிங்கவும் பாராட்டுக்குரியவர் ஆவார்.

மூன்று தினங்களாக நடைபெற்று வருகின்ற இந்நிகழ்வுகள் இன்றுடன் நிறைவடைகின்றன. இலங்கை, இந்திய மற்றும் புலம்பெயர் நாடுகளிலுள்ள எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், கல்வியலாளர்கள், கலைஞர்கள் சமூக செயற்பாட்டாளர்களின் ஒன்றுகூடுகையும் கலந்துரையாடல்களும் கலை இலக்கிய நிகழ்வுகளும் நடைபெற்றிருக்கின்றன.

புத்தகக் கண்காட்சி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. இன்று ஞாயிறு காலை 10 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை புத்தகக் கண்காட்சி நடைபெறுகின்றது. அங்கு நடைபெறுகின்ற நிகழ்வுகளில் பங்கேற்பது தமிழ்மொழி ஆர்வலர்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகின்றது.

இப்புத்தகக் கண்காட்சி அரங்கில் இலங்கை, இந்திய , புகலிடப் பதிப்பகங்கள், புத்தகசாலைகளின் நூல்களைப் பார்வையிட முடியும். ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களுக்கான தனி அரங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஈழத்து எழுத்தாளர்கள் தங்களது நூல்களை அங்கு கொண்டு வந்து காட்சிப்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி தமிழ்மொழி ஆளுமைகள், ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள், கல்வியலாளர்கள், பதிப்பாளர்கள், கலை இலக்கியவாதிகளை நேரில் சந்திக்கும் வாய்ப்பும் கிடைக்கின்றது.

இந்நிகழ்வுகள் தொடர்பாக எஸ். காண்டீபன் (0767427596 ) , எம். பௌசர்(0044 7817262980 Whatsapp) ஆகியோருடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த அரிய நிகழ்வுகளை Maanudam Foundation UK அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. தமிழ்மொழியையும், வாசிப்புப் பழக்கத்தையும் வளர்க்கும் பணியும் ஈடுபட்டுள்ள இவ்வாறான ஆர்வலர்களை வாழ்த்துவதும் பாராட்டுவதும் எமது கடமையாகும்.

# கல்வி அமைச்சு

# இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் (இ.உ.தொ.க.நி.)

## 2024/2025 கல்வியாண்டிற்கான உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்

### வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு

2023 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முந்தைய ஆண்டுகளில் க.பொ.த (உ/த) பரீட்சையை வெற்றிகரமாக முடித்தவர்களிடமிருந்து இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் (SLIATE) நடத்தும் உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் (இ.உ.தெ.க.நி) கீழ் காணப்படும் உயர் தொழில்நுட்ப நிறுவனங்களால் நடத்தப்படும் மூன்று வருட அல்லது அதற்கு மேற்பட்ட கால முழுநேர உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறியைத் தொடருவதற்குப் பதிவு செய்திருந்த/பதிவு செய்த மாணவர்கள், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அரச பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவகமொன்றில் அனுமதி பெறுவதற்குத் தகுதிபெற மாட்டார்கள். (குறிப்பு எண் 02ஐப் பார்க்கவும்)

**விண்ணப்பிப்பது எவ்வாறு?**

விண்ணப்பம் apply.sliate.ac.lk எனும் இணையதளத்தினூடாக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் வேறு எந்த விதமான விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகப் (SLIATE) பாடநெறிகளுக்கு நிகழ்நிலையில் விண்ணப்பிக்கும் போதும் தெரிவுசெய்த பாடநெறிக்கு நிகழ்நிலையில் பதிவுசெய்து கொள்ளும் போதும் விண்ணப்பதாரிகள் அனுமதிக்குரிய வழிகாட்டல்களை வாசித்து விளங்கிக்கொண்டு அதிலுள்ள விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் பின்பற்ற வேண்டும். அனுமதிக்குரிய வழிகாட்டல்கள் நிகழ்நிலை (ஒன்லைன்) விண்ணப்பப்படிவத்துடன் கிடைக்கின்றது.

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகமானது (SLIATE) பின்வரும் அட்டவணையிலுள்ள இரண்டு வகை உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறிகளையும் நடத்துகின்றது.

| | |
|---|---|
| **வகை - 01**<br>இஸெட் மதிப்பெண்களின் (Z-score) அடிப்படையிலான உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகக் (SLIATE) கல்விசார் பாடநெறிகள் | **கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா** (HNDA), வியாபார நிருவாகம் பற்றிய **உயர் தேசிய டிப்ளோமா** (HNDBA), வியாபார நிதி பற்றிய **உயர் தேசிய டிப்ளோமா** (HNDBF), பொறியியல் பற்றிய **உயர் தேசிய டிப்ளோமா** (சிவில்) (HNDE) (CIVIL), பொறியியல் பற்றிய **உயர் தேசிய டிப்ளோமா** (இயந்திரவியல்) (HNDE) (MECHANICAL), பொறியியல் பற்றிய **உயர் தேசிய டிப்ளோமா** (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) (HNDE) (ELECTRICAL & ELECTRONICS)/ **உயர் தேசிய டிப்ளோமா** (தொகைக் கணக்கெடுப்பு) (HNDQS), **உயர் தேசிய டிப்ளோமா** (நிருமாண சேவைகள் பொறியியல்) (HNDBSE), தொழில்நுட்பம் பற்றிய **உயர் தேசிய டிப்ளோமா** (விவசாயம்) (HNDT)(Agri.) உணவுத் தொழில்நுட்பம் பற்றிய **உயர் தேசிய டிப்ளோமா** (HNDFT) |
| **வகை - 01**<br>வரையறுக்கப்பட்ட புள்ளிவழங்கல் திட்டத்தின் அடிப்படையிலான உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகக் (SLIATE) கல்விசார் பாடநெறிகள் | **ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா** (HND in English), தகவல் தொழில்நுட்பம் பற்றிய **உயர் தேசிய டிப்ளோமா** (HNDIT), முகாமைத்துவம் பற்றிய **உயர் தேசிய டிப்ளோமா** (HNDM), செயற்றிட்ட முகாமைத்துவம் பற்றிய **உயர் தேசிய டிப்ளோமா** (HNDPM), சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் பற்றிய **உயர் தேசிய டிப்ளோமா** (HNDTHM) |

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் இஸெட் மதிப்பெண்களின் (Z-score) அடிப்படையில் மற்றும் வரையறுக்கப்பட்ட புள்ளிவழங்கல் திட்டத்தின் அடிப்படையில் தமது முன்னுரிமையின் கீழ் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் (ATIs) மற்றும் உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறிகளில் 25 வரையிலான வாய்ப்புக்களைத் தெரிவு செய்யலாம்.

தயவுசெய்து உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிகளின் நுழைவுத் தகுதிகளுக்கு பிரிவு அ மற்றும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் (ATIs) பற்றிய விவரங்களுக்கு பிரிவு ஆ வையும் பார்க்கவும்.

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் ரூபா.1,000/= கட்டணம் செலுத்துவதன் மூலம் 25 பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பக் கட்டணம் நேரடியாக வங்கிக்கு செலுத்தப்பட வேண்டும். நிகழ்நிலையில் (ஒன்லைன்) பணம் செலுத்துவது அனுமதிக்கப்பட மாட்டாது.

வங்கிக் கட்டண பற்றுச்சீட்டு பரிவர்த்தனை இலக்கம் (TRN) ஒன்லைன் விண்ணப்பத்தில் உள்ளிடப்பட வேண்டும்.

கொடுப்பனவுகள் மக்கள் வங்கி, ஹைட் பார்க் கிளை, கொழும்பு 02 SLIATE கணக்கு 025-2-001-1-3397613 இற்கு 2024. 07. 19 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வரவு வைக்கப்பட வேண்டும்.

ஒன்லைன் விண்ணப்பம் உறுதிசெய்யப்பட்ட பிறகு உருவாக்கப்பட்ட விண்ணப்பத்தின் வன்பிரதியைப் பெற்றுக்கொள்ளவும். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் (ATI) பதிவினை மேற்கொள்ளும் போது மேற்படி விண்ணப்பத்தின் கையொப்பமிடப்பட்ட பிரதியுடன், பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பத்தின் நிலையானது, செயற்படுத்தப்படும் போதும் செயற்படுத்தப்பட்ட பின்னரும், வழங்கப்பட்ட மின்னஞ்சல் முகவரி, கையடக்கத் தொலைபேசி இலக்கம் அல்லது தபால் மூலம் தெரிவிக்கப்படும்.

இறுதித் திகதிக்குப் பின்பு, தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முறைமை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட HND கற்கைநெறிக்கான அவர்களுடைய பதிவை இரண்டு வாரங்களுக்குள் உறுதிப்படுத்த மின்னஞ்சல் அல்லது குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படும். குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பதிவினை முறைமை மூலம் உறுதிப்படுத்தவில்லை எனின் SLIATE இல் அவர்கள் எந்தவொரு HND கற்கைநெறிக்கும் மீண்டும் பரிசீலிக்கப்படமாட்டார்கள் மற்றும் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**பாடநெறிகளை நடத்தும் முறை**

முழு நேர பாடநெறிகள் (வார நாட்களில்)
பகுதி நேர பாடநெறிகள் (வார இறுதி நாட்களில்)
போதனா மொழி: - ஆங்கிலம்

சம்பந்தப்பட்ட துறைகளில் பணிபுரிபவர்களுக்கு பகுதி நேர பாடநெறிகள் நடத்தப்படுகின்றன.

**பாடநெறி கட்டணம்**

முழு நேர பாடநெறிக் கட்டணம் - இலவசம்
ஒரு அரையாண்டிற்கு பகுதி நேர பாடநெறிக் கட்டணம் பின்வருமாறு.

| | |
|---|---|
| கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – HNDA | - ரூபா. 17, 000/= |
| ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா –(HND in English) | - ரூபா. 17, 000/= |
| தகவல் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா– (HNDIT) | - ரூபா.30, 000/= |
| செயற்றிட்ட முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா-(HNDPM) | - ரூபா.20, 000/= |
| பகுதி நேர பாடநெறிக்கான மீளச்செலுத்தப்படும் வைப்பு | - ரூபா.10, 000/= |

**பதிவு**

கல்வி மற்றும் பிற தேவையான ஆவணங்களின் அசல் மற்றும் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை பதிவு செய்யும் போது சமர்ப்பிக்க வேண்டும்.

**பிரிவு 'அ'**

உயர் தேசிய டிப்ளோமாக்களுக்கான நுழைவுத் தகுதிகள்

1. கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDA)

1.1 முழு நேரம் - 4 ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:

க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் வணிகப் பிரிவில் கணக்கீட்டை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

1.2 பகுதி நேரம் - 4 ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்:

(i) க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் வணிகப் பிரிவில் கணக்கீட்டை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மற்றும்**

விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட துறையில் அரச நிறுவனம்/பொது நிறுவனம்/அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் பணியாளராக அல்லது சுயதொழில் செய்பவராக (தொழில்முனைவோர்) இருக்க வேண்டும். நேர்முகப்பரீட்சையின் போது சட்டரீதியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**அல்லது**

(ii) க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி

**மற்றும்**

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி (DTET) திணைக்களத்தினால் நடத்தப்படும் கீழே கொடுக்கப்பட்டுள்ள சான்றிதழ் பாடநெறிகளில் ஏதேனும் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

அ. கணக்கீட்டுத் துறையில் உயர் தேசிய டிப்ளோமா
ஆ. கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ்
இ. வணிகக் கல்வியில் தேசிய சான்றிதழ்
ஈ. கணக்கீட்டில் தேசிய சான்றிதழ்

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

**மற்றும்**

விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட துறையில் அரச நிறுவனம்/பொது நிறுவனம்/அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் பணியாளராக அல்லது சுயதொழில் செய்பவராக (தொழில்முனைவோர்) இருக்க வேண்டும். நேர்முகப்பரீட்சையின் போது சட்டரீதியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**குறிப்பு 1:** வணிகப் பிரிவில் கல்விகற்ற கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா பகுதி நேர விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளில் ஏதேனும் ஒன்றை அல்லது அதிகமானவற்றைப் பெற்றிருந்தால், அவர்களுக்கு 1ஆம் ஆண்டிலிருந்து விலக்களிக்கப்படும், மேலும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களில் (ATI) கிடைப்பனவுத் திறனுடன் பிற நுழைவுத் தேவைகளைப் பூர்த்தி செய்திருந்தால் இரண்டாம் ஆண்டுக்குப் பதிவு செய்யப்படுவார்கள்.

(i) இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தினால் (SLIATE) நடத்தப்படும் வியாபார நிர்வாகம்/ வியாபார நிதி மற்றும் வியாபாரக் கல்வியில் தேசிய டிப்ளோமா உயர் தேசிய டிப்ளோமாவினைப் பூர்த்தி செய்திருத்தல்.
(ii) முகாமைத்துவத் துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.
(iii) இலங்கையின் பட்டயக் கணக்காளர்களால் நடத்தப்படும் வணிக மட்டம் I மற்றும் II (அல்லது நிர்வாக நிலை அல்லது CAB I மற்றும் CAB II அல்லது அடிப்படை (Foundation) மற்றும் இடைநிலை (Intermediate) மட்டம் அல்லது உரிமம் (Licentiate) I மற்றும் II) பூர்த்தி செய்திருத்தல்.
(iv) பட்டய முகாமைத்துவக் கணக்காளர்களின் (CIMA - UK) பகுதி I மற்றும் பகுதி II இனைப் பூர்த்தி செய்திருத்தல்.
(v) பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கத்தின் (ACCA-UK) பகுதி I மற்றும் பகுதி II பூர்த்தி செய்திருத்தல்.
(vi) கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் (AAT) பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.
(vii) சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம் (CMA-Sri Lanka) நடத்தும் ACMA பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

**குறிப்பு 2:** பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 46/90ன் படி, ஆட்சேர்ப்பு நோக்கங்களுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் கணக்கீடு பற்றிய உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, பொது வணிகமாணி (சாதாரண தேர்ச்சி) பட்டத்திற்கு மாற்றுத் தகுதியாக கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா **அங்கீகரிக்கப்பட்டுள்ளது.**

**2.** வியாபார நிர்வாகம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா - (HNDBA) முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்

3. வியாபார நிதி பற்றிய உயர் தேசிய டிப்ளோமா - (HNDBF) முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்:

(i) க.பொ.த (உ/த) பரீட்சையில் வணிகப் பிரிவில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

4. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDE – சிவில்) முழுநேரம் – 3 ½ ஆண்டுகள்

5. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDE - (மின்னியல் மற்றும் இலத்திரனியல்): முழுநேரம்-3½ ஆண்டுகள்

6. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDE - இயந்திரவியல்): முழுநேரம் – 3 ½ ஆண்டுகள்

7. தொகைக் கணக்கெடுப்பு உயர் தேசிய டிப்ளோமா (HNDQS) முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்

8. நிருமாண சேவைகள் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDBSE): முழுநேரம் - 3 ½ ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:

க.பொ.த (உ/த) பரீட்சையில் பரீட்சை பௌதீக விஞ்ஞான பிரிவில் (இரசாயனவியல், பௌதீகவியல் மற்றும் இணைந்த கணிதம்) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தியடைந்திருத்தல்

9. ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா (HND in English)

9.1 முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்:

(அ) க.பொ.த (உ/த) பரீட்சையில் எந்தவொரு துறையிலும் ஒரே அமர்வில் (பொது ஆங்கிலம் பிரதான மூன்று பாடங்களில் ஒன்றாகக் கருதப்படாது)

**மற்றும்**

(ஆ) க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் கணிதத்தில் சாதாரண சித்தியும் அடைந்திருத்தல்

**அல்லது**

க.பொ.த (சா/த) ஆங்கில இலக்கிய மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தியடைந்திருத்தல்

9.2 பகுதி நேர - 2 ½ ஆண்டுகள்

9.1 இல் உள்ள மேற்கூறிய தகைமைகளுடன், விண்ணப்பதாரர் அரச துறை / பொது நிறுவனம் / அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது சுயதொழில் (தொழில்முனைவோர்) பணியில் ஈடுபடுபவராக இருக்க வேண்டும். நேர்காணலின் போது சட்டரீதியான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

10. உணவுத் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HNDFT) முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்

**விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:**

(i) க.பொ.த (உ/த) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம் அல்லது பௌதிக விஞ்ஞானப் பாடப் பிரிவில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மற்றும்**

க.பொ.த (சா/த) ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தியடைந்திருத்தல்

11. தகவல் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளமோ (HNDIT)

11.1 முழு நேரம் - 2 ½ ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:

(i) க.பொ.த (உ/த) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

11.2 பகுதி நேரம் - 2 ½ ஆண்டுகள்

11.1 இல் உள்ள தகுதிகளுக்கு கூடுதலாக, விண்ணப்பதாரர் அரசு நிறுவனம் / பொது நிறுவனம் / அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது சுயதொழில் (தொழில்முனைவோர்) ஆகியவற்றில் தொடர்புடைய துறையில் பணியமர்த்தப்பட்டவராக இருக்க வேண்டும். நேர்காணலின் போது சட்டரீதியான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

12. முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDM), முழுநேரம் - 3 ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:

(i) க.பொ.த (உ/த) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

**அல்லது**

(ii) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்ததால் நடத்தப்படும் கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான தேசியச் சான்றிதழ் அல்லது வணிகக் கல்விக்கான தேசியச் சான்றிதழ் (பொது நிர்வாகம் / சந்தைப்படுத்தல்)

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

13. செயற்றிட்ட முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDPM)

13.1 முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:

(i) க.பொ.த (உ/த) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

13.2 பகுதி நேரம் - 2 ½ ஆண்டுகள்

13.1 இல் உள்ள தகுதிகளுக்கு கூடுதலாக, விண்ணப்பதாரர் அரசு நிறுவனம் / பொது நிறுவனம் / அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது சுயதொழில் (தொழில்முனைவோர்) ஆகியவற்றில் தொடர்புடைய துறையில் பணியமர்த்தப்பட்டவராக இருக்க வேண்டும். நேர்காணலின் போது சட்டரீதியான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

14. தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (விவசாயம்) (HNDT)(Agri.) முழுநேரம் - 3 ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:

(i) க.பொ.த (உ/த) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் ஒரே அமர்வில் சித்தி: (இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், உயிரியல் மற்றும் பௌதீகவியல் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக)

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

**அல்லது**

(ii) க.பொ.த (உ/த) பரீட்சையில் உயிரியல் முறைமைத் தொழில்நுட்பப் பிரிவில் உயிரியல் முறைமைத் தொழில்நுட்பம், தொழில்நுட்பத்திற்கான விவசாயம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக ஒரே அமர்வில் சித்தி

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

15. சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDTHM)

முழுநேரம் - 3 ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:

(i) க.பொ.த (உ/த) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

**பிரிவு 'ஆ'**

உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களின் பெயர்கள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிகள் [ (முழு நேரம் (முநே) மற்றும் பகுதி நேரம் (பநே) ]

| | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் பெயர் | முகவரி | தொலைபேசி இலக்ககங்கள் | வழங்கப்படும் பாடநெறிகள் |
|---|---|---|---|---|
| 01 | ஹார்டி உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - அம்பாறை | பேராசிரியர் ஈவன் ஏ ஹார்டி மாவத்தை, அம்பாறை | 063-2222056<br>063-2223035 | HNDT (Agriculture)(FT), HNDA (FT), HNDM(FT), HNDIT (FT), HNDTHM(FT), HND in English (FT), HNDA (PT), HND in English (PT) HNDIT (PT) |
| 02 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - அநுராதபுரம் | ஏக்கர் 111, அனுலா மாவத்தை, பண்டுலகம அநுராதபுரம் | 025-2234417 | HNDIT(FT), HNDA (FT), HND in English (FT), HNDIT(PT), HNDA (PT), HND in English (PT) |
| 03 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - பதுளை | கிரீன்லேன்ட் ட்ரைவ், பதுளை | 055-2230218<br>055-2223818 | HNDIT (FT), HNDA (FT), HNDM(FT), HND in English (FT), HNDTHM(FT), HNDIT (PT), HNDA (PT),HND in English (PT) |
| 04 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - மட்டக்களப்பு | பிரதான வீதி, கோயில்குளம் கிழக்கு, ஆரையம்பதி, மட்டக்களப்பு | 065-2247519<br>065-2247470 | HNDIT (FT), HNDA (FT), HND in English,(FT) HNDA (PT), HND in English (PT), HNDIT(PT). |
| 05 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கொழும்பு | இல. 42, ரொட்ரிகோ பிளேஸ், கொழும்பு 15 | 011-2521152<br>011-2521282 | HNDE (Civil)(FT), HNDE(Mechanical)(FT), HNDE (Electrical & Electronics) (FT) HNDQS(FT), HNDBSE(FT) |
| 06 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - தெஹிவளை | இல. 51, வைத்திய வீதி தெஹிவளை | 011-2738349 | HNDIT (FT), HNDA (FT), HNDM (F/T), HNDBA (FT), HND in English (FT), HNDBF(FT), HNDTHM(FT), HNDA (PT), HND in English (PT). |
| 07 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - காலி | சிறிதம்ம மாவத்தை, லபுதூவ, அக்மீமன, காலி | 091-2246179 | HNDE (Civil)(FT), HNDE(Mechanical)(FT), HNDE (Electrical & Electronics) (FT) HNDQS(FT), HNDIT (FT), HNDT(Agriculture) (FT), HNDA (FT), HNDM(FT), HNDTHM(FT), HNDBA(FT), HND in English (FT), HNDA (PT), HNDIT (PT) |
| 08 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கம்பஹா | நய்வல, எஸ்ஸால, வெயாங்கொடை | 033-2287519<br>033-2292544 | HNDT (Agriculture) (FT), HNDIT (FT), HNDFT(FT),HNDA (FT), HNDA (PT), HNDIT (PT), HND in English (PT) |
| 09 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - யாழ்ப்பாணம் | இல. 665/2, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் | 021-2222595<br>021-2229803 | HNDE (Civil)(FT), HNDE (Electrical & Electronics) (FT), HNDQS(FT), HNDA (FT), HND in English(FT), HNDM(FT), HNDIT (FT) HNDIT (PT), HNDA (PT), HND in English (PT) |
| 10 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கண்டி | இல. 16, கெப்படிபொல வீதி, கண்டி | 081-2232097<br>081-2226644 | HNDIT (FT), HNDA (FT), HNDM(FT), HNDBA(FT), HND in English (FT), HNDTHM (FT) HNDA (PT),HND in English (PT), HNDIT (PT) |
| 11 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கேகாலை | பண்டாரநாயக்க மாவத்தை, கேகாலை. | 035-2221297<br>035-2221713 | HNDIT(FT), HNDA(FT), HND in English (FT), HNDPM(FT), HNDPM (PT) HNDA (PT), HND in English (PT) |
| 12 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - குருணாகல் | இல. 22/1, வில்கொடை வீதி, குருணாகல் | 037-2229583<br>037-2224911 | HNDIT(FT), HNDA(FT), HNDM(FT), HND in English (FT), HNDTHM(FT), HNDIT (PT), HNDA (PT), HND in English(PT) |
| 13 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - மன்னார் | உயிலங்குளம் மன்னார் | 023-2223045<br>076-7966111 | HND in English (FT), HNDIT (FT) |
| 14 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - நாவலப்பிட்டிய | ஹெயின்.'.போர்ட் தோட்டம், நாவலப்பிட்டிய | 077-6594248 | HNDTHM (FT), HNDM (FT), HND in English (FT), HND in English (PT), HNDIT (FT), HNDIT (PT), HNDBF (FT). |
| 15 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - இரத்தினபுரி | புதிய நகரம், இரத்தினபுரி. | 045-2231492<br>045-2231493 | HNDIT (FT),HNDA (FT), HND in English (FT), HND in English (PT) HNDA (PT). |
| 16 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - சம்மாந்துறை | ஏடீஜ ஒழுங்கை, சம்மாந்துறை | 067-2261304 | HNDIT (FT),HNDA (FT), HND in English (FT), HNDM (FT) HNDIT (PT),HNDA (PT), HND in English (PT) |
| 17 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - தங்காலை | யாவத்தை, நெதோல்பிடிய, தங்காலை | 047-2241845<br>047-2241846 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT) HNDA (PT), HND in English (PT), HNDIT (PT) |
| 18 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - திருகோணமலை | கன்னியா வீதி, வரோதய நகர், திருகோணமலை | 026-2223232 | HNDA (FT), HND in English (FT), HNDA (PT), HNDIT (FT), HNDIT (PT), HND in English (PT), |
| 19 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - வவுனியா | ஓப் A 9 வீதி, வேப்பங்குளம், ஓமந்தை வவுனியா. | 024-2052733 | HNDA (FT), HND in English(FT) HNDA (PT), HND in English (PT), HNDIT (FT), HNDIT (PT) |

**குறிப்பு:**

1. விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவுத் தேதிக்கு முன் தேவையான நுழைவுத் தகுதிகளை பூர்த்தி செய்ய வேண்டும்.
2. இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் (இ.உ.தெ.க.நி) கீழ் காணப்படும் உயர் தொழில்நுட்ப நிறுவனங்களால் நடத்தப்படும் மூன்று வருட அல்லது அதற்கு மேற்பட்ட கால முழுநேர உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறியைத் தொடருவதற்குப் பதிவு செய்திருந்த/பதிவு செய்த மாணவர்கள், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் (அவ்வப்போது திருத்தப்பட்ட) கீழ் நிறுவப்பட்ட அரச பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவகமொன்றில் அனுமதி பெறுவதற்குத் தகுதிபெற மாட்டார்கள்.
   i. கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDA)
   ii. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (சிவில்) (HNDE (CIVIL)
   iii. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (இயந்திரவியல்) (HNDE (MECHANICAL)
   iv. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) (HNDE (ELECTRICAL & ELECTRONICS)
   v. உயர் தேசிய டிப்ளோமா (நிருமாண சேவைகள் பொறியியல்) (HNDBSE)
   vi. தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (விவசாயம்) (HNDT(Agri.)
   vii. முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDM)
   viii. சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDTHM)
3. முழுநேர கற்கைநெறிகளுக்கு 23 வயதுக்கு குறைவான விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் 2023 இல் G.C.E.(A/L) தேர்வை வெற்றிகரமாக முடித்த விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. ஒரு குறிப்பிட்ட ATI இல் பாடநெறியைத் தொடங்க குறைந்தபட்சம் 50 மாணவர்கள் குறிப்பிட்ட பாடநெறியில் பதிவு செய்திருக்க வேண்டும். திட்டத்தைத் தொடங்க போதுமான எண்ணிக்கையில் மாணவர்கள் இல்லை என்றால், அத்தகைய மாணவர்கள் அதே திட்டம் நடத்தப்படும் அருகிலுள்ள ATI க்கு மாற்றப்படுவார்கள். இறுதி முடிவு பணிப்பாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்.
5. அனைத்து பாடப்பிரிவுகளின் முழுநேர மாணவர்கள் வாரநாட்களிலும் தேவைப்பட்டால் வார இறுதி நாட்களிலும் விரிவுரைகளில் கலந்துகொள்ள வேண்டும்.
6. பகுதி நேர பாடநெறிகள் வார இறுதி நாட்களில் நடத்தப்படும்.
7. முழுநேர மற்றும் பகுதிநேர பாடநெறிகளுக்கான பயிற்றுவிக்கும் முறை பௌதீகரீதியானதாக (வகுப்பில்) இருக்கும். எனினும், தேவையைப் பொறுத்து இருவழிக் கற்பித்தலும் பிரயோகிக்கப்படும்.
8. கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDA) (முழுநேர) திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாம் வருடங்கள் வார நாட்களில் மட்டுமே நடத்தப்படுகிறது. மூன்றாவது மற்றும் நான்காவது வருடங்கள் வார இறுதி நாட்களில் நடத்தப்படுகின்றன.
9. முழு நேரத் திட்டங்களின் மாணவர்கள் சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் உள்ளகப் பயிற்சி பெற வேண்டும். பகுதி நேர மாணவர்கள் சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு ஒரு திட்டம்/தொழில்துறை பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.
10. பகுதிநேர விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட துறையில் பணியமர்த்தப்பட்டிருக்க வேண்டும்.
11. ஒரு மாணவர் முழுநேர பாடநெறியில் சேர்ந்தவுடன், வேறு எந்த ATI க்கும் மாற்றுவது எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படாது.
12. எந்தவொரு HND பாடத்திற்கும் பதிவு செய்த மாணவர்கள், சம்பந்தப்பட்ட நிறுவனம் வழங்கிய பதிவு முடிவடையும் தேதியில் இருந்து 60 நாட்களுக்கு முன் எந்தவித கட்டணமும் இன்றி தங்கள் பதிவை இரத்துச் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.
13. (i) 60 நாட்களுக்குப் பிறகு தங்கள் பதிவை இரத்துச் செய்யும் மாணவர்களிடமிருந்து பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து மாதம் ரூபா 5,000.00 வசூலிக்கப்படும். ஆறு மாத காலம் அல்லது அதற்கு அதிகமான காலத்தில் தமது பதிவை இரத்துச் செய்யும் மாணவர்களிடமிருந்து அதிகபட்சம் ரூபா. 30,000 அறவிடப்படும்.
    (ii) திரும்பப்பெறக்கூடிய ஆரம்ப வைப்புத்தொகை ரூபா. 10,000.00/- பகுதி நேர மாணவர்களின் பதிவின் போது அறவிடப்படுவதுடன் அது பாடநெறியின் முடிவில் திருப்பி செலுத்தப்படும். மாணவர் பாடநெறியிலிருந்து முன்னதாக வெளியேறினால், இந்த வைப்புத்தொகை மீளச் செலுத்தப்படமாட்டாது. பகுதி நேர விண்ணப்பதாரர்களில் பதிவின்போது, மொத்தப் பாடநெறிக் கட்டணத்தையும் முழுமையாகச் செலுத்தும் விண்ணப்பதாரர்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.
14. முழுநேர மற்றும் பகுதிநேர மாணவர்களுக்கு அரையாண்டு இறுதித் தேர்வுகள் வார நாட்கள் மற்றும் வார இறுதி நாட்களில் நடைபெறும்.
15. க.பொ.த (உ/த) மற்றும் க.பொ.த (சா/த) பரீட்சைகள் இலங்கையின் பரீட்சைகள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட வேண்டும்.
16. தவறான தகவலை வழங்கிய விண்ணப்பதாரர்கள் நிராகரிக்கப்படுவார்கள்.
17. இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் (SLIATE) பணிப்பாளர் நாயகத்தின் முடிவே உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு 2023/2024 கல்வியாண்டுக்கான மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான இறுதி முடிவாக இருக்கும்.
18. உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களின் இருக்கை திறன் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.
19. மேலதிக விபரங்களுக்கு www.sliate.ac.lk என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 2024.07.19**

**பணிப்பாளர் நாயகம், இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் (SLIATE)**




# பிரதான இரு கட்சிகளுக்குள் தீவிரமடையும் உள்முரண்பாடு!

- ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பலர் வெளியேறும் அறிகுறிகள்!
- உட்கட்சிக் குளறுபடிகளை பகிரங்கப்படுத்துகிறார் சரத் பொன்சேகா எம்.பி!




**ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டுள்ள அரசியல் கட்சிகள் தற்போது அதற்கான காய்நகர்த்தல்களில் ஈடுபட்டுள்ளன. இதனால் நாளுக்கு நாள் அரசியல் களத்தில் பரபரப்பான சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. யார் யாருடன் கூட்டணி அமைப்பது என்ற விடயம் ஒருபுறம் கலந்துரை–யாடப்பட்டுவரும் அதேநேரம், கட்சிகளுக்குள் காணப்படும் உள்ளக முரண்பாடுகளும் வெளிப்பட்டு வருகின்றன.**

இவற்றில் பிரதான கட்சிகளும் விதிவிலக்காக அமையவில்லை. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன போன்றவற்றிலும் உள்ளக முரண்பாடுகள் அதிகரித்திருப்பதைக் காணமுடிகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன போன்ற கட்சிகளைப் பொறுத்தவரையில் நடைபெறக்கூடிய ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளருடன் நிற்பது அல்லது யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பில் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் முரண்பாடான நிலைமையே இன்னும் காணப்படுகின்றது.

எனினும், ஐக்கிய மக்கள் சக்தியைப் பொறுத்தவரையில் பிரதான பதவியில் உள்ளவர்களுக்கிடையில் காணப்படும் கருத்து முரண்பாடு குழப்பத்துக்கு வழிவகுத்துள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரான பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவுக்கும், அக்கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் ஏற்கனவே தோன்றியிருந்த முரண்பாடுகள் தற்பொழுது முற்றியிருப்பது மீண்டும் ஒருமுறை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் தன்னிச்சையாக முடிவுகளை எடுப்பதாகவும், கட்சிக்குப் புதியவர்களை இணைத்துக் கொள்ளும்போது, தவிசாளர் என்ற ரீதியில் தனக்குத் தெரியப்படுத்துவதில்லையென்றும் சரத் பொன்சேகா கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பகிரங்கமாக விமர்சித்திருந்தார்.

குறிப்பாக, முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்னாயக்கவை எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடன் இணைத்துக் கொண்டமைக்கு எதிராக சரத் பொன்சேகா போர்க்கொடி தூக்கியிருந்தார்.

கடந்த காலங்களில் கோட்டாபாய ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்பட்ட நபர்களை இணைத்துக் கொள்வது கட்சியைப் பலவீனப்படுத்தும் என சரத் பொன்சேகா சுட்டிக்காட்டியிருந்தமை நாம் அறிந்த விடயம். இருந்த போதும், கட்சியின் உள்ளக விடயங்களைப் பகிரங்கப்படுத்துவது தவறு என அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார கூறியிருந்தார்.

இவ்வாறான பின்னணியில், ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியிலிருந்து தன்னை நீக்குவதற்கு தலைமைத்துவம் முயற்சிக்கலாம் என்ற அச்சத்தில் சரத் பொன்சேகா நீதிமன்றத்திற்குச் சென்று இடைக்காலத் தடையுத்தரவைப் பெற்றிருந்தார்.

இந்த நிலையில், சரத் பொன்சேகாவுக்கும், சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான முரண்பாடு உச்சத்துக்குச் சென்றிருப்பது மீண்டும் வெளிப்பட்டுள்ளது.

பெண்களின் வலுவூட்டல் சட்டமூலம் தொடர்பான விவாதம் கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்றிருந்தது. இதில் உரையாற்றிய சரத் பொன்சேகா, தமது தலைமைத்துவம் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவருடைய பெயரை அவர் நேரடியாகக் குறிப்பிடாதபோதும், அவரையே விமர்சித்திருந்தமை வெளிப்படையாகத் தெரிந்தது. ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான தனக்குப் பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்கப்படவில்லையென்றும், நேரம் ஒதுக்குமாறு எதிர்க்கட்சியின் பிரதம கொரடாவிடம் பல்வேறு தடவைகள் கோரிக்கை விடுத்தபோதும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவில்லையென்றும் சரத் பொன்சேகா தெரிவித்திருந்தார்.

உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்க வேண்டாம் என்று தனக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாக பிரதம கொரடா பதில் வழங்கியதாகவும், நேரத்தை ஒதுக்காத எதிர்க்கட்சியின் பிரதம கொரடா 70 ஆயிரம் வாக்குகளைப் பெற்றுப் பாராளுமன்றத்துக்கு வந்த ஒருவர் என்றும் சரத் பொன்சேகா கூறினார்.

எனினும், தான் ஒரு இலட்சத்து பதின்மூவாயிரம் வாக்குகளைப் பெற்றுத் தெரிவானவன் என்றும் சரத் பொன்சேகா தனது உரையின் போது குறிப்பிட்டார்.

"எதிர்க்கட்சித் தலைவர் ஒவ்வொரு நாளும் சுமார் 40 நிமிடங்கள் பேசுகிறார். இதனால் ஏனைய உறுப்பினர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. ஆகவே இவ்விடயம் குறித்து சபாநாயகர் உரிய கவனம் செலுத்த வேண்டும். கட்சித் தலைவர்கள் இவ்வாறு செயற்படுகின்ற போது, எமது உரிமை மறுக்கப்படுகிறது என்றும் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டியிருந்தார்.

**தேர்தலும் 13 ஆம் திருத்தமும்:**

மேலும் உரையாற்றிய அவர், "சிறந்த திறமையுடைய நபரை தெரிவு செய்ய வேண்டும் என்று மக்களிடம் கேட்டுக் கொள்கிறேன். 2022 ஆம் ஆண்டை விடவும் நாடு தற்போது முன்னேற்றமடைந்துள்ளது. ஆனால் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படவில்லை என்பதை அரசாங்கம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

2022 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதி தெரிவு இடம்பெற்ற போது, பிறிதொரு நபரின் பெயரை வேட்பாளராக அறிவித்து விட்டு தலைமறைவாக இருந்தவர்களினால் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு போதும் தீர்வு காண முடியாது. ஜனாதிபதியாகும் கனவில் உள்ளவர்கள் வடக்குக்கு சென்று 13 ஆவது திருத்தத்தை வழங்குவதாக வாக்குறுதி வழங்குகிறார்கள்.

13 ஆவது திருத்தம் இவர்களின் தந்தை வழிச் சொத்தல்ல. நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க நாங்கள் இரத்தம் சிந்தியுள்ளோம். 'தெற்கில் எவர் எதிர்த்தாலும் 13 வழங்குவோம்' என்று வாக்குறுதி வழங்குபவர்களின் உண்மை முகத்தை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவே தேர்தல் காலத்தில் வடக்கிலும், தெற்கிலும் 13 ஆவது திருத்தம் பற்றிப் பேசப்படுகிறது. ஆகவே இவர்களுக்கு வடக்கு மக்களும், தெற்கு மக்களும் வாக்களிக்கக் கூடாது. 13 ஆவது திருத்தத்தை குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துபவர்கள் அனைவரும் தேசத் துரோகிகளே" என்றும் சரத் பொன்சேகா குறிப்பிட்டார்.





இது மாத்திரமன்றி, ஐக்கிய மக்கள் சக்தியைப் பலப்படுத்துவதற்குப் பதிலாக அதனைப் பலவீனப்படுத்தும் வகையில் மாவட்ட அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவதாகவும் சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டியிருந்தார்.

"மக்களுக்கு சாராயம் வழங்கி நான் அரசியல் செய்யவில்லை. அத்துடன் அதிவேக நெடுஞ்சாலை அமைச்சுப் பதவியை வகித்து மகளுடன் இணைந்து அரச நிதியை கொள்ளையடிக்கவில்லை. கசினோ வியாபாரிகளின் நிதியைப் பெற்று பாடசாலைகளுக்கு நிவாரணம் வழங்கவில்லை" என்றும் பொன்சேகா குறிப்பிட்டார்.

தனது தேர்தல் தொகுதிக்கு புதிய அமைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும், அவர் தொகுதியில் உள்ளவர்கள் அனைவருக்கும் சாராயம் வழங்குவதாகவும் சுட்டிக்காட்டினார்.

"அப்பா ஜனாதிபதியாக இருந்தார் என்ற காரணத்துக்காக மகனைத் தெரிவு செய்ய வேண்டாம். அவ்வாறு ஜனாதிபதியாக தெரிவு செய்தால் இந்த நாடு ஒருபோதும் உருப்படாது" எனவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாதனது உரையில் தெரிவித்திருந்தார்.

இது ஒருபுறமிருக்க, சரத் பொன்சேகா இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிடப் போவதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகமொன்று சில வாரங்களுக்கு முன்னர் செய்தியொன்றை வெளியிட்டிருந்தது.

இதன் அடிப்படையில் வைத்துப் பார்க்கும் போது கட்சியுடனான முரண்பாட்டை முன்னிலைப்படுத்தி அவர் தனித்து செயற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சரத் பொன்சேகாவின் இந்த உரையின் மூலம் ஐக்கிய மக்கள் சக்திக்குள் முரண்பாடு இருப்பது தெளிவாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் இந்தக் கட்சியிலிருந்து பலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளவிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் இதனைப் பகிரங்கமாகக் கூறியிருந்தனர்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் இந்தக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் வைத்துப் பார்க்கும்போது தலைமைத்துவத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளினால் அக்கட்சியிலிருந்து பலர் வெளியேறிச் செல்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

**முடிவில்லாமல் தொடரும் சு.க முரண்பாடு:**

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு இவ்வாறானதாக இருக்கும் நிலையில், பழம்பெரும் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவ முரண்பாடு இன்னமும் இழுபறியிலேயே உள்ளது.

சுதந்திரக் கட்சியானது மைத்திரி அணி, சந்திரிகா அணி என இரண்டாகப் பிரிந்து ஒருவருக்கு ஒருவர் போட்டியாகச் செயற்பட்டு வருகின்றனர். மாறி மாறி கட்சித் தலைவர் நியமனம் இடம்பெற்று வருகின்றது.

சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்த மைத்திரிபால சிறிசேன அப்பதவிக்கு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவை நியமிப்பதற்குத் தீர்மானித்தார். இதனை எதிர்த்து நீதிமன்றம் சென்ற சந்திரிகா குமாரதுங்க மைத்திரிபால சிறிசேன கட்சித் தலைவராகச் செயற்படத் தடையுத்தரவு பெற்றுக் கொண்டார்.

இந்தத் தடையுத்தரவு நடைமுறையில் இருக்கும்போதே விஜேயதாசவைக் கட்சித் தலைவர் பதவிக்கு அவர்கள் நியமித்தனர். இவர் தலைவராகச் செயற்படுவதற்கு ஒரு நீதிமன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டபோதும், மற்றுமொரு நீதிமன்றத்தில் இடைக்காலத்தடை வழங்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் சந்திரிகா தலைமையிலான அணியினர் சிரேஷ்ட அமைச்சர் நிமல் சிறிபால த சில்வாவை பதில் தலைவராகவும் பின்னர் சு.கவின் தலைவராகவும் நியமித்ததுடன், துமிந்த திசாநாயக்கவைப் பொதுச்செயலாளராகவும் நியமித்தனர். விஜயதாச ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவின் உறுப்பினரான இருப்பதால், அவருக்கு சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை வழங்கியிருப்பது செல்லுபடியற்றது என நிமல் சிறிபால.டி சில்வா தலைமையிலான சு.க உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில், நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் நோக்கிலேயே சு.கவுடன் கைகோர்த்திருப்பதாகவும், சு.கவின் ஜனாதிபதி வேட்பாளராக அவர் போட்டியிடலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது பற்றிய உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் இன்னமும் வெளியிடப்படாத போதும், அதற்கான ஊகங்கள் அதிகமாக முன்வைக்கப்படுகின்றன.

இதனால், நீதி அமைச்சுப் பதவியிலிருந்து இராஜினாமா செய்யுமாறு விஜேயதாசவுக்கு அழுத்தம் கொடுக்கப்படுவதாகவும் ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் வெளியாகியுள்ளன. பல தசாப்தங்களாக இலங்கையின் அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக இருந்த மாபெரும் கட்சி தற்பொழுது தலைவர் யார் என்பதைத் தீர்மானிப்பதில் இழுபறி நிலையைச் சந்தித்துள்ளது.

**பொதுஜன முன்னணியின் வேட்பாளர்:**

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் சுதந்திரக் கட்சி ஆகியவை இவ்வாறு உள்ளக முரண்பாடுகளுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், ஆளும் அரசாங்கத்தின் பிரதான கட்சியாக விளங்கும் பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் மத்தியிலும் முன்னுக்குப்பின் முரணான நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

அடுத்து நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என பொதுஜன பெரமுனவின் ஒரு சாரார் வலியுறுத்தி வரும் நிலையில், பிறிதொரு வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என மற்றுமொரு பிரிவினர் கூறி வருவதால் இந்தக் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவைப் பொறுத்த வரையில் ஏற்கனவே பலர் சுயாதீனமாக இயங்குவதாக அறிவித்துள்ளனர். அது மாத்திரமன்றி ஒரு தரப்பினர் ஏற்கனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகச் செயற்படத் தொடங்கியுள்ளனர்.

இதனால் ஏற்கனவே பிளவினைச் சந்தித்துள்ள பெரமுனவுக்கு ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் யாரை ஆதரிப்பது என்பதில் மேலும் குழப்பம் நீடித்து வருகின்றது. ஜனாதிபதிக்கும் பெரமுனவுக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. அவ்வாறு இணக்கப்பாடு ஏற்படும் பட்சத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் பொதுவானதொரு சின்னத்தில் பொது வேட்பாளராகக் களமிறங்கும் வாய்ப்பு இருப்பதாகவும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கட்சிகள் எவ்வாறான பிரயத்தனங்களை எடுத்தாலும், இம்முறை வாக்காளர்களாகிய மக்களின் செயற்பாடுகள் முன்னைய காலங்களைப் போன்று எதிர்வுகூறக்கூடியதொன்றாகத் தெரியவில்லை. மக்கள் எதிர்கொண்டுள்ள நாளாந்த சவால்கள் என அதற்குப் பல காரணங்கள் உள்ளன. எனவே, தேர்தலை மக்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றனர் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.





ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரு துருவங்களாகப் பிளவுபட்டுள்ளதால் கட்சித் தலைவரைத் தெரிவு செய்வதில் தொடரும் இழுபறி!

---

# பிரச்சினைகளை மௌனத்தால் கடந்து போகும் ஆட்சியாளர்கள்




மழைவிட்ட பின்பும் தூறல் நிற்கவில்லை என்பது போல இந்திய மக்களவை. தேர்தலில் மூன்றாவது முறையாக வெற்றி பெற்ற பின்பும் சபாநாயகர் பொறுப்பு யாருக்கு வழங்குவது என்பதில் இன்னும் குழப்பம் நீடிக்கிறது. முன்பு போல தனிப் பெரும்பான்மையில் பா.ஜ.க. வெற்றி பெற்றிருந்தால் தாங்கள் வைத்ததுதான் சட்டம் என்று எல்லா முடிவுகளையும் தனித்தே எடுத்திருப்பார்கள். இப்போது கூட்டணி ஆட்சி என்பதால். கூட்டணிக் கட்சிகளின் கருத்தையும் கேட்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் சுபாநாயகரை நியமிப்பதில் குழப்பம் நீடிக்கிறது.

நாளை நாடாளுமன்றம் கூட இருக்கும் நிலையில் சபாநாயகர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்தப் பதவிக்கு பலரது பெயர்கள் பரிசீலனையில் இருப்பதாக சொல்லப்படுகிறது. குறிப்பாக ஆந்திரா மற்றும் ஒடிசா மாநிலங்களைச் சேர்ந்த இருவரின் பெயர்கள் பரீசிலனையில் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. நாளை ஜுன் 24 ஆம் திகதி நாடாளுமன்றம் கூட இருக்கிறது. அதற்கு அடுத்து இரண்டு நாட்கள் கழித்து ஜுன் 26 ஆம் திகதி சபாநாயகரை அரசு நியமிக்கலாம் எனவும் அரசியல் மட்டத்தில் பேசப்படுகிறது.

பீஹாருக்கும், ஆந்திரத்திற்கும், சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்பது அம்மாநில மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பு. கட்சி வேறுபாடுகளைக் கடந்து அம்மாநிலங்களில். அரசியல் தலைவர்கள் இதை வலியுறுத்தி வருகின்றனர். கடந்த நவம்பர் மாதம், மாநில சட்டமன்றத்தில் பிஹாருக்கு மாநில சிறப்பு அந்தஸ்து தரப்பட வேண்டும். என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நடந்து முடிந்த ஆந்திர சட்டமன்றத் தேர்தலில் வென்றதன் மூலம் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சந்திரபாபு நாயுடுவும் கடந்த காலங்களில் ஆந்திரத்திற்கு மாநில சிறப்பு அந்தஸ்து தரப்பட



வேண்டும் என்று வலியுறுத்தி வந்துள்ளார். இந்நிலையில் நிதிஷ்குமாரும் சந்திரபாபு நாயுடுவும் அங்கம் வகிக்கின்ற தேசிய ஜனநாயகக் கூட்டணி தற்போது மத்தியில் ஆட்சியில் அமர்ந்துள்ளதால் மாநில அந்தஸ்து கோரிக்கை மீண்டும் கவனம் பெற்றுள்ளது. இதை பிரதமர் நரேந்திர மோடி எவ்வாறு கையாளப் போகிறார் என்பதை எதிர்க்கட்சிகள் காத்திருக்கின்றன.

இந்நிலையில் பிரதமர் மோடி உளவியல் ரீதியாக உடைந்து போயிருக்கிறார். ஆட்சியை நடத்த முடியாமல் தடுமாறுகிறார் என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்தி விமர்சித்துள்ளார். மக்களை அச்சத்தில் வைத்து ஆட்சி செய்து கொண்டிருந்த மோடியால் தற்போது அப்படி செய்ய முடியாமல் இருக்கிறது. அதனால் தான் அவர் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார் என்று ராகுல் விமர்சிக்கிறார்.

கடந்த பத்தாண்டு கால ஆட்சியில் பிரதமர் சொல்வதுதான் நடைமுறைக்கு வந்ததாக இருந்த நிலைமாறி கூட்டணி ஆட்சியில் வார்த்தைகளை கவனமாக வெளியிடவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார். இதனால் தான் நாடு முழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள நீட் தேர்வு பற்றி வாய் திறக்காமல் மௌனமாக இருக்கிறார். கனத்த மௌனத்துடன் பிரதமர் இருப்பதால் செயலற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் என்பது தான் உண்மை என்று ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

ஆட்சியை நடத்தவே தடுமாறிக் கொண்டிருக்கும் ஜனநாயக கூட்டணியினர் இந்தியா கூட்டணியினர் முன்வைக்கப் போகும் வினாக்களுக்கு எவ்வாறு பதில் சொல்லப் போகிறார்கள் என்று அரசியல் நோக்கர்களும். எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். மாணவர்களின் மருத்துவ கனவை சிதைக்கும் வகையில் நீட் தேர்வில் ஏற்பட்டுள்ள குழறுபடிகளைக் கண்டித்து இந்தியா கூட்டணி போராட்டத்திற்குத் தயாராகி வருகிறது. இது நாடு முழுவதும் உள்ள இளைஞர்கள் அனைவரையும் ஈர்க்கக் கூடியபோராட்டமாக மாறினால் பிஹார், ஆந்திர மாநில இளைஞர்களும் இதில் தீவிரமாக பங்கெடுத்தால். அது கூட்டணி ஆட்சியை ஆட்டம் காண வைக்கலாம் என்ற பயமும் ஆளும் கட்சியினரிடம் இருக்கிறது.

நீட் குழறுபடிகள் பற்றி வாய் திறக்காத பிரதமர் நாளந்தா பல்கலைக்கழக புதிய வளாகத்தை திறந்து வைத்து உரையாற்றும் போது. கல்வியை மனித நலனுக்கான கருவியாக கருதும் பாரம்பரியத்தை இந்தியா கொண்டுள்ளது. 2047ஆம் ஆண்டுக்குள் வளர்ந்த நாடாக மாற வேண்டும். என்ற இலக்கை நோக்கி முன்னேறி வரும் இந்தியா, தனது கல்வி முறையையும், அதற்கேற்ப மேம்படுத்தி வருகிறது. உலகின் கல்வி மற்றும் அறிவின் மையமாக இந்தியா உருவாக வேண்டும் என்பதே எனது நோக்கம். உலகின் மிக முக்கியமான அறிவு மையமாக இந்தியா மீண்டும் அங்கீகரிக்கப்படும் நிலையை அடைய வேண்டும்.

இதற்காக மிகத் தரமான ஆய்வு சார்ந்த உயர்கல்வியை உருவாக்குவதில் ஒன்றிய அரசு முனைப்புடன் செயல்படுவதாக பேசியுள்ள பிரதமர், நீட் தேர்வு மோசடிகள் பற்றி கருத்து கூறாமல் இருப்பது, நாட்டு மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் அவதானிக்க வேண்டியுள்ளது, புதிய கல்விக் கொள்கை இந்திய இளைஞர்களின் கனவுகளுக்கு புதிய பரிணாமத்தை அளித்துள்ளது என்று கூறும் பிரதமர், நீட் தேர்வுப் பயத்தால் தற்கொலை செய்து கொள்ளும் மாணவர்கள் பற்றி கவனம் எடுத்துக் கொள்ளாமல் இருப்பது கவலை தருவதாக இருக்கின்றது என்ற பொதுமக்களின் கருத்தும் எதிர்ப்பு அலையை உருவாக்குகிறது.

# வேலைநிறுத்தங்கள், போராட்டங்களின் பின்னணியில் அரசியல் நிகழ்ச்சித் திட்டம்!

**அபரிமிதமான ஆற்றலைக் கொண்ட இலங்கைத் திருநாடு பல தசாப்தங்களாக சமூக பொருளாதார ரீதியான பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது. இதில் குறிப்பாக அண்மைய சில ஆண்டுகளாக எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பின்னடைவு பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது.**



இந்தப் பின்னடைவிலிருந்து நாடு ஓரளவுக்கு மீண்டுவரும் சூழ்நிலையில், தொழிற்சங்கங்கள் மற்றும் மாணவர்களின் செயற்பாடுகள் நாட்டை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுசென்று விடுமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

நிலையான வளர்ச்சியை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கும் நிலையில், வேலைநிறுத்தப் போராட்டங்கள் போன்றவற்றில் ஈடுபடும் இத்தரப்பினரின் ஆக்ரோஷமான செயற்பாடுகள் நாட்டை எந்தளவுக்குப் பாதிக்கும் என்பது ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.

கடந்த வாரத்தில் மாத்திரம் பல்வேறு தொழிற்சங்கங்கள் வெவ்வேறு காரணங்களை முன்வைத்து வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தன. ஒரு காலத்தில் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் மாணவர்களின் நலனுக்காக வாதிட்ட இந்த இயக்கங்கள் தற்பொழுது முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டு மறைந்துள்ள தமது நிகழ்ச்சி நிரல்களை நிறைவேற்றுவதற்கே முன்னுரிமையளித்து வருகின்றன.

தொழிற்சங்கங்களும் மாணவர் செயற்பாடுகளும் இலங்கையின் சமூக அரசியல் நிலப்பரப்பில் ஆழமாக வேரூன்றியுள்ளன. பிரித்தானிய காலனித்துவ காலத்திலேயே தொழிற்சங்கங்களின் தோற்றம் ஏற்பட்டது. முதன்முதலில் சுரண்டல் நிலைமைகளுக்கு ஆளான தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஏ.இ.குணசிங்கவினால் நிறுவப்பட்ட இலங்கை தொழிலாளர் சங்கம், தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முயன்ற முன்னோடி இயக்கங்களில் ஒன்றாகும்.

இதேபோல், 1960 கள் மற்றும் 1970 களில் மாணவர் இயக்கங்களின் செயற்பாடுகள் உத்வேகம் பெற்றிருந்தன. மாணவர் சங்கங்கள் கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் அடக்குமுறை அரசாங்க கொள்கைகளை எதிர்ப்பதில் முக்கிய பங்கு வகித்தன.

இருந்தபோதும், இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் மாணவர் அமைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்திலிருந்து முற்றுமுழுதாக விலகியிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இலங்கையின் அரசியல் நிலப்பரப்பில் தமது ஆதிக்கத்தை வெளிப்படுத்துவதற்கு அல்லது தாம் பலம்பொருந்தியவர்கள் என்பதை வெளிப்படுத்தும் வகையிலேயே அவர்களின் செயற்பாடுகள் மாறியுள்ளன.

இவற்றின் உண்மையான நோக்கம் மறைக்கப்பட்டு தாம் சார்ந்திருக்கும் அரசியல் சக்திகளின் நிகழ்ச்சி நிரல்களை வெளிப்படுத்தும் கருவிகளாகவே இவை மாற்றம் பெற்றுள்ளன. இலங்கையில் உள்ள தொழிற்சங்கங்கள் மற்றும் மாணவர்களின் செயற்பாடுகள் அரசியல் மயப்படுத்தப்பட்டிருப்பது வெளிப்படையான பிரச்சினையாகும்.

பல தொழிற்சங்கங்கள் இப்போது அரசியல் கட்சிகள் சார்ந்தவையாகவே இருக்கின்றன. இதனால் அதன் உறுப்பினர்களின் தேவையைப் பார்க்கிலும் குறித்த அரசியல் தேவைகளை நிறைவேற்றுவதாகவே அமைகின்றன. எதிர்ப்புக்கள் தொழிலாளர்கள் அல்லது மாணவர்களின் முன்னேற்றத்திற்காக அல்ல, மாறாக மேலும் அரசியல் நோக்கங்களுக்காக திட்டமிடப்படும் ஒரு சூழ்நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.



**மாணவர்களின் கல்வியும், மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளும் சீர்குலைக்கப்படுவதால் ஒட்டுமொத்த நாட்டுக்கே பேரிழப்பு!**

பல்கலைக்கழக கல்வி சார் ஊழியர்களின் வேலைநிறுத்தம் இதற்கு சிறந்தொரு உதாரணமாக அமைகின்றது. உயர்கல்வி நிறுவனங்களின் செயற்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கும் கல்விசாரா ஊழியர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். வேலைநிறுத்தத்தின் நீடித்த தன்மை மற்றும் அவர்களின் கோரிக்கைகளின் நேரம் ஆகியவை ஒரு அரசியல் உள்நோக்கத்தைக் காட்டுகின்றன. இந்த வேலைநிறுத்தத்தால் கல்வி நடவடிக்கைகள் கடுமையாக பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டு அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

இதேபோல், உயர்கல்வித்துறையில் மேற்கொள்ள எதிர்பார்த்திருக்கும் சீர்திருத்தங்களை பல்கலைக்கழக மாணவர் சங்கங்கள் கடுமையாக எதிர்த்து வருகின்றன. உயர்கல்வித் துறையை தனியார் பல்கலைக்கழகங்களுக்கு வழங்க இடமளிப்பது கல்வித்துறையை வணிகமயமாக்கலுக்கு வழிவகுக்கும் என்றும், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களை ஒதுக்கித் தள்ளும் என்றும் இந்த சங்கங்கள் வாதிடுகின்றன.

இதில் ஒரு சில விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியிருந்தாலும் எந்தவிதமான சீர்திருத்தத்திற்கும் பிடிவாதமான எதிர்ப்பானது, மாற்றத்தைத் தழுவுவதற்கான தயக்கத்தையும், காலாவதியான சித்தாந்தங்களை கடைப்பிடிப்பதையுமே எடுத்துக்காட்டும். மறுசீரமைப்புக்கு காண்பிக்கப்படும் இந்த எதிர்ப்புக்கள் பெரும்பாலும் அரசியல் பின்னணிகளைக் கொண்டவை என்பது வெளிப்படையானது.

குறிப்பாக தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளால் இலங்கையில் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் அடிக்கடி நடத்தும் வேலைநிறுத்தம் இந்த சேவைகளை வழங்குவதில் பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தியிருப்பதுடன், இது பொதுமக்களிடையே பரவலான அதிருப்தியையும் வேதனையையும் ஏற்படுத்துகிறது.

கல்வித் துறையில், வேலைநிறுத்தங்கள் மற்றும் போராட்டங்கள் காரணமாகப் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மூடப்படுகின்றன, பரீட்சைகள் தாமதமடைகின்றன மற்றும் கல்விச் செயற்பாடுகள் முடங்கிப்போகின்றன. இதனால் நிச்சயமற்ற நிலையிலும், பதற்றத்திலும் உள்ள மாணவர்கள் மத்தியில், பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியான இடையூறுகள் ஆசிரியர்களுக்கு பாடத்திட்டத்தை முடிப்பதில் இருந்தும் மாணவர்களுக்கு போதுமான ஆதரவை வழங்குவதிலிருந்தும் தடுக்கப்படுவதால், கல்வியின் தரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சங்கப் போராட்டங்களில் சுகாதாரத்துறை விதிவிலக்கில்லை. மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் உள்ளிட்ட சுகாதாரப் பணியாளர்களின் வேலைநிறுத்தங்கள், மருத்துவ சேவைகள் இடைநிறுத்தப்படுவதற்கு வழிவகுத்தன. நோயாளிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலையே இதனால் உருவாகின்றது. இவ்வாறான தொழிற்சங்கங்களால் மருத்துவமனைகள் இயங்க முடியாத நிலைக்குச் செல்வதால் நூற்றுக்கணக்கான நோயாளிகள் பாதிக்கப்படுகின்றனர்.

தொழிற்சங்கத் தலைவர்களின் ஊழல் நடவடிக்கைகள் குறித்த குற்றச்சாட்டுகள் நிலைமைகளை மேலும் சிக்கலாக்குகின்றன. தொழிற்சங்கத் தலைவர்கள் ஆடம்பரமான வாழ்க்கை முறையைக் கொண்டுள்ளனர். அவர்கள் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொழிலாளர்களின் போராட்டங்களில் இருந்து வெகுதொலைவில் உள்ளனர். இந்தத் தலைவர்கள் பெரும்பாலும் அதிகப்படியான சலுகைகளை அனுபவிக்கின்றனர். அவர்களின் நிலைப்பாடுகளுக்கும் யதார்த்தத்திற்கும் இடையிலான இந்த வேறுபாடு தலைவர்களின் நேர்மை மற்றும் உந்துதல்கள் குறித்து கடுமையான கேள்விகளை எழுப்புகின்றது.

தொழிற்சங்க நிதியின் தவறான பயன்பாடு, நிதி பரிவர்த்தனைகளில் வெளிப்படைத்தன்மை இல்லாமை மற்றும் சில தொழிற்சங்கத் தலைவர்களின் செழுமையான வாழ்க்கைமுறை ஆகியவை இந்த அமைப்புகளின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை சிதைத்துவிட்டன.

(20ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...

---

# எவ்வேளையிலும் பாரிய யுத்தம் மூளும் அபாயம்!



**இஸ்ரேலுக்கும் லெபனானின் ஹிஸ்புல்லாஹ்வுக்கும் இடையில் எந்த நேரத்திலும் முழு அளவிலான போர் மூளக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.**

இப்போர் பிராந்திய யுத்தத்திற்கு வித்திடக்கூடிய அச்சுறுத்தலைக் கொண்டிருப்பதால், அதனைத் தவிர்ப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

'லெபனான் மீது முழு அளவிலான யுத்தத்திற்கு செல்ல வேண்டாம்' என இஸ்ரேலை வலியுறுத்தி வரும் அமெரிக்கா, இவ்வார முற்பகுதியில் தமது விஷேட பிரதிநிதியை இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் நேரடியாக அனுப்பி பேச்சுவார்த்தைகளையும் நடத்தியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் இஸ்ரேலின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் உள்ளிட்ட உயரதிகாரிகளுடன் கடந்த வியாழனன்று நடத்திய சந்திப்பின் போது ஹிஸ்புல்லாஹ்வுடன் யுத்தத்தை விரிவுபடுத்த வேண்டாம் என்றுள்ளார்.

இஸ்ரேல் ஹிஸ்புல்லாஹ் மோதலைத் தவிர்க்க அமெரிக்கா முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாக இத்தாலி அறிவித்துள்ளது.

இந்நிலையில், பிரித்தானியாவுக்கான சவுதி அரேபியத் தூதுவர் இளவரசர் கலீத் பின் பந்தர் பின் சவுத், 'இஸ்ரேல் லெபனானுடன் போரை முன்னெடுக்குமாயின் அது லெபனானுடனான யுத்தமாக மாத்திரமன்றி பிராந்திய மற்றும் உலகளாவிய போராக மாறும்' என்றுள்ளார்.

இருப்பினும் அமெரிக்காவின் வலியுறுத்தல்கள் மற்றும் சமாதான முயற்சிகளையோ, உலக நாடுகளின் வேண்டுகோள்களையோ கருத்தில் கொள்ளாது ஹிஸ்புல்லாஹ்வுடன் முழு அளவிலான போரை முன்னெடுப்பதற்கான நகர்வுகளை இஸ்ரேல் முன்னெடுத்துள்ளது. அதற்கான திட்டத்திற்கு இஸ்ரேலின் வடபகுதி இராணுவ உயர்தளபதிகளும் அங்கீகாரம் அளித்துள்ளனர்.

இந்நிலையில் ஹிஸ்புல்லாஹ்வும், தாங்களும் இஸ்ரேலுடன் முழு அளவிலான போருக்கு தயார். காஸா மீதான யுத்தம் நிறுத்தப்படும் வரை தமது தாக்குதல்கள் தொடரும் என்று மீண்டும் குறிப்பிட்டுள்ளது. இவ்வாறான சூழலில் இஸ்ரேல் - லெபனான் எல்லையில் நாளுக்கு நாள் மோதல் தீவிரமடைந் துவருவதோடு பதற்றமும் அதிகரித்துள்ளது.

இவ்வாறு தாக்குதல்கள் இடம்பெற்றுவரும் சூழலில் ஹிஸ்புல்லாஹ்வுடன் முழு அளவிலான போரை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை இஸ்ரேல் மேற்கொண்டிருக்கிறது.

லெபனானின் தெற்கு பிராந்தியத்தில் செயற்படும் ஹிஸ்புல்லாஹ், அந்நாட்டின் பாராளுமன்றத்தில் 2005 முதல் ஒரு அங்கமாக இருப்பதோடு, தற்போது 15 ஆசனங்களைக் கொண்ட கட்சியாகவும் உள்ளது. இஸ்ரேலின் லெபனான் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடவென 1982 இல் உருவாக்கப்பட்ட ஹிஸ்புல்லாஹ், 2006 இல் முன்னெடுத்த தாக்குதல்களால் இஸ்ரேல் தெற்கு லெபனானில் இருந்து வெளியேறியது.

**இஸ்ரேல் – லெபனான் எல்லையில் உச்சக்கட்ட பதற்றம்; இஸ்ரேல் – ஹிஸ்புல்லாஹ் போரைத் தவிர்க்க அமெரிக்கா சமாதான முயற்சி**



காஸா மீதான போரைத் தொடர்ந்து இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாஹ்வுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல்களால் இற்றைவரையும் 473 இற்கும் மேற்பட்டவர்கள் லெபனானில் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பகுதியினர் ஹிஸ்புல்லாஹ் உறுப்பினர்களாவர். லெபனானில் 92 சிவிலியன்களும் இறந்துள்ளனர். இஸ்ரேலிய தரப்பில் 15 படையினரும் 11 சிவிலியன்களும் கொல்லப்பட்டுள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த சில வாரங்களாக இஸ்ரேல் இலக்கு வைத்து முன்னெடுக்கும் தாக்குதல்களால் ஹிஸ்புல்லாஹ்வின் முக்கிய தளபதிகள் கொல்லப்படுகின்றனர். அவர்களில் ஹிஸ்புல்லாஹ்வின் மூன்றாவது தளபதியாகக் கருதப்படும் ஹஜ் அபு தாலிப் கடந்த 12 இல் கொல்லப்பட்டார். அதற்கு முன்னரான சில தினங்களில் மற்றும் சில தளபதிகளும் கொல்லப்பட்டனர்.

அதனால் வடக்கு இஸ்ரேல் பிரதேசங்கள் மீது ஹிஸ்புல்லாஹ் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளது. புதிய வகை ஏவுகணைகளையும் ட்ரோன்களையும் ஹிஸ்புல்லாஹ் பயன்படுத்துவதால் இஸ்ரேலுக்கு அதிக பாதிப்புக்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரடார் கட்டமைப்பில் பதிவாகாமல் தாளப்பறக்கக்கூடிய ட்ரோன்களை ஹிஸ்புல்லாஹ் அதிகம் பயன்படுத்துவதால் அதிக பாதிப்புக்கள் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்தோடு இஸ்ரேலிய எல்லைக்குள் நீண்ட தூரம் சென்று தாக்கும் திறன் கொண்ட அதிநவீன ஆயுதங்கள் தன்னிடம் இருப்பதாக ஹிஸ்புல்லா ஏற்கனவே பலமுறை கூறியுள்ளது.

இஸ்ரேலிய அயன் டோம் பாதுகாப்பு கட்டமைப்பையும் ஊடுருவிச் சென்று தாக்கக்கூடிய கொங்குரஸ் தாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளையும் அவர்கள் பயன்படுத்துவதாக ஓய்வு பெற்ற படை அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இஸ்ரேலுக்குள் வரும் ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை துல்லியமாகக் கண்டறிந்து அயர்ன்டோம் உள்ளிட்ட வான் பாதுகாப்பு கட்டமைப்புகளுக்கு தகவல்களை வழங்கக்கூடிய



(20ஆம் பக்கம் பார்க்க)



மர்லின் மரிக்கார்...



## பொசனை முன்னிட்டு

# பயணிகளுக்கு இலவசமாக ரயில் பயணம்




அன்று கைவிடப்பட்டிருந்த புகையிரத பாதை தற்போது 6500 இலட்சம் ரூபா செலவில் இன்று முழுமையாகப் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் அநுராதபுரத்திலிருந்து மிஹிந்தலைக்கு வழிபாட்டிற்காக வரும் பக்தர்களுக்கு இலவச பயண வசதியை வழங்குவதற்கான வாய்ப்பும் இம்முறை முதல் உருவாகவுள்ளது. மிஹிந்தலையிலிருந்து அநுராதபுரம் வரையிலான வடக்கு ரயில் பாதை இரண்டு ஓடும் பாதைகளுடன் புதிய இரயில் பாதையாக நிர்மாணிக்கப்பட்டு அதற்கு இரண்டு பாலங்களும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மிஹிந்தலை புகையிரத நிலையம், மிஹிந்தலை சந்தி உப புகையிரத நிலையம், சமகி புர மற்றும் அசோக புர புகையிரத நிலையங்கள் இந்தப் பயணப் பாதையில் சந்திக்கின்றன.

இந்த ஆண்டு முதல் இந்த ரயில் பயணம் தினசரி இயங்கும் வழக்கமான சேவையை உருவாக்கும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். அதனடிப்படையில், இவ்வருடம் முதல் பொசன் யாத்திரைக்குச் செல்லும் பக்தர்களுக்காக இலவசமாகவே அநுராதபுரத்திலிருந்து மிஹிந்தலைக்குச் செல்லும் வகையில் இந்த புதிய ரயில் பயணம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

**அநுராதபுரம் – மிஹிந்தலைக்கிடையில் இரண்டு ரயில் பாதைகள்.**

பொசன் பண்டிகை காலத்தின் போது பக்தர்கள் அநுராதபுரத்திலிருந்து மிஹிந்தலை வரை கட்டணம் இன்றி பயணிப்பதற்காக விசேட புகையிரதமொன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. அநுராதபுரம் பொசன் பண்டிகக்கு மாத்திரமின்றி நாடு பூராகவும் நடைபெறும் பொசன் பண்டிகைகளுக்கும் அரசாங்கம் மற்றும் அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஊடாக முழுமையான அனுசரணை வழங்குவதாக இதன் போது அமைச்சர் உறுதியளித்தார்.



**ஏனைய பௌர்ணமி தினங்களிலும் பக்தர்களுக்கு இலவசமாக பயண வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை.**

"இது ரஜரட்ட பிராந்தியத்திற்குத் தனித்துவமான வரப்பிரசாதமாகும். பொசன் உற்சவ காலத்தில் மாத்திரம் குறுகிய காலத்திற்கு பாதை திறந்து சுத்தப்படுத்தப்பட்டு பயன்ப்படுத்தப் பட்டது.

நான் வர்த்தக அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில் பாரிய அநுராதபுர நகரத் திட்டம் என்ற பெயரில் விசேட திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து கொழும்புக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களை அநுராதபுரம் வழியாக மிஹிந்தலைவுக்கு கொண்டு செல்லவே நாம் இதன் மூலம் எதிர்பார்த்தோம். இவ்வாறு கொண்டு வரப்படும் பொருட்களை வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள 10 மாவட்டங்களுக்கு விநியோகம் செய்யும் மத்திய நிலையமாக மிஹிந்தலையை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

நாடு முழுவதிலும் இடம்பெறும் பொசன் உற்சவங்களுக்கு அரசு அனுசரணைகள் மற்றும் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ஊடாக முழுமையான அனுசரணை வழங்கப்படுகின்றது.

அதனடிப்படையில் அநுராதபுரம் பொசன் உற்சவத்திற்கு மட்டுமன்றி நாடு பூராகவும் நடைபெறும் பொசன் வைபவங்களுக்கு அரச அனுசரணை வழங்கப்படுகின்றது. போக்குவரத்து அமைச்சு இதனைச் செய்து வருகிறது. அநுராதபுரத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற பொசன் வைபவ ஏற்பாடு தொடர்பான கலந்துரையாடலில் புகையிரத திணைக்களம் மற்றும் தேசிய போக்குவரத்து சபையின் தலைவர்கள் கலந்து கொண்டதுடன் பொசன் வைபவத்திற்காக 400 மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது" என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

**ரயில் பாதையை நவீனமயமாக்குவதற்கான செலவு 6500 இலட்சம் ரூபாய்.**

வடக்கு ரயில் பாதை மிஹிந்தலைச் சந்தியில் இரண்டாகப் பிரிகிறது. அநுராதபுரத்திலிருந்து மிஹிந்தலை வரை 1.8 கிலோ மீற்றர் இரட்டைப் பாதையாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதோடு, தற்போது இந்த ரயில் பாதையின் மொத்த தூரம் 14.8 கிலோமீற்றராகும். இந்த புதிய ரயில் பாதை நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர், அநுராதபுரம் சந்தியிலிருந்து மிஹிந்தலை வரை தடையின்றி புகையிரதத்தை சீராக இயக்க முடியும் என்பதோடு, இதனால் வடக்கிற்கான புகையிரதப் பயணத்திற்கு எந்த இடையூறும் இருக்காது. தற்போது அநுராதபுரத்தில் இருந்து மிஹிந்தலை புகையிரத நிலையம் வரை அதாவது 14.8 கிலோமீற்றர் வரை கொங்கிரீட் சிலிப்பர் கட்டைகள் போடப்பட்டு வடக்கு புகையிரத புனரமைப்புக்கு பயன்படுத்தப்பட்ட சிலிப்பர் கட்டைகளைப் பயன்படுத்தி மீள்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

"இந்தப் புதிய பயணத்தில், மிஹிந்தலை சந்தி, சமகிபுர, அசோகபுர மற்றும் மிஹிந்தலை புகையிரத நிலையங்களோடு புதிய புகையிரத நிலையமாக அநுராதபுரம் புகையிரத நிலையமும் இணைக்கப்பட்டுள்ளது. பொசன் யாத்திரை செல்லும் பக்தர்கள் இந்த பயணத்தில் இலவசமாகப் பயணிப்பதற்கான வாய்ப்பு கிடைக்கிறது.



இந்தப் புதிய ரயில் பாதையை அமைக்கும் பணி கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ரயில் பாதையின் வெளிப்புற புனரமைப்புகள் புகையிரதத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டன.



ரயில் பாதையில் மண் நிரப்பும் பணிகள் இந்திய கடன் உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. கைவிடப்பட்டிருந்த இந்த ரயில் பாதையை புனரமைத்து மீண்டும் புகையிரதத்தைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு 6500 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. ஆண்டுக்கு ஒருமுறை, பொசன் பௌர்ணமி தினம் நெருங்கும் போது,

இந்தப் புகையிரதப் பயணத்திற்காகவே விசேடமாக சிலிப்பர் கட்டைகளைப் ப யன்படுத்தி இந்தப் ரயில் பாதைக ளை புனரமைக்கும் பணி புகையிரதத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

பொசன் பௌர்ணமிக்குப் பிறகு, இந்த ரயில் பாதை மீண்டும் காடுகளால் மூடப்பட்டுவிடும். மீண்டும் பொசன் பௌர்ணமி தினம் நெருங்கியவுடன் இந்த ரயில் பாதையைத் துப்புரவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்படும். இதன் காரணமாக, ஒவ்வொரு ஆண்டும் இந்த குறுகிய தூரப் பயணத்திற்கு பெருமளவு பணம் செலவிடப்பட்டது.

இதன்காரணமாக, இந்த செலவை நிறுத்தி, அன்றாடம் புகையிரம் சேவையில் ஈடுபடும் வகையில் இந்த ரயில் பாதை சீரமைக்கப்பட வேண்டும் என்பதே அமைச்சர் பந்துல குணவர்தனவின் கோரிக்கையாக இருந்தது" என, வீதி மற்றும் கைத்தொழில் அமைச்சின் பிரதம பொறியியலாளர் பிரியந்த நீகல தெரிவித்தார். அன்று பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு சுமார் ஒரு வாரமளவில் சேவையில் ஈடுபட்ட இந்தப் புகையிரதத்தின் பயணத்திற்கு சில சமயங்களில் டிக்கெட் கூட வாங்க வேண்டியிருந்தது.

எனினும் இன்று பொசன் பௌர்ணமிக்குப் பின்னர், இந்தப் புதிய ரயில் பாதையில் காலை மற்றும் மாலை ரயில்கள் அநுராதபுரத்திலிருந்து மிஹிந்தலை வரை சேவையில் ஈடுபடுவது பொசன் வழிபாட்டிற்காகச் செல்லும் பக்தர்களுக்கு இலவசமாகச் செல்லும் வாய்ப்பை வழங்குகிறது. இந்த ரயில் பயணம் பொசன் பௌர்ணமி தினத்துடன் நின்று விடாது.

எதிர்காலத்தில் இதற்கான தனியான பயண நேர அட்டவணை தயாரிக்கப்படும்.

இந்த பயண நேர அட்டவணை தயாரிக்கப்படுவது பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், அலுவலக பணியாளர்கள் ஆகியோர் அந்தந்த நிலையங்களுக்குப் பயணிப்பதற்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், விவசாயப் பொருட்களை அங்குமிங்கும் கொண்டு செல்வதற்கும் வசதியான முறையிலாகும். இந்த முறை வரவு செலவுத் திட்டத்தில் 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள பொருளாதார மையத்தில் கொள்கலன் போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இதன் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது.

"பாடசாலை மாணவர்களுக்காகவே காலை 7 மணிக்குமிஹிந்தலையிலிருந்து அநுராதபுரம் வரையில் புகையிரதம் ஒன்றைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கும், காலை 8.00 மணிக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்காக அநுராதபுரத்திலிருந்து மிஹிந்தலை வரை புகையிரதம் ஒன்றைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கும், பின்னர் பாடசாலை விடும் நேரம் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் போக்குவரத்திற்கும் மேலதிகமாக மாலையில் அலுவலக ஊழியர்களின் போக்குவரத்திற்காகவும் புகையிரதங்களை சேவையில் ஈடுபடுத்த எதிர்பார்க்கின்றோம்.

தற்போது தினமும் சுமார் பத்து தடவைகள் புகையிரதங்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

பொசன் பௌர்ணமி தினத்தில் பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து கால அட்டவணை மாறுபடும்.

**ஏனைய நாட்களில் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் விவசாய உற்பத்தி போக்குவரத்திற்கும் நடவடிக்கை.**

எதிர்காலத்தில், பொசன் உற்சவத்திற்கு மாத்திரமின்றி ஏனைய பௌர்ணமி தினங்களிலும் பக்தர்களுக்காக இந்தப் புகையிரதச் சேவை மேற்கொள்ளப்படும்" என பிரதம பொறியியலாளர் பிரியந்த நீகல மேலும் தெரிவித்தார்.



"ஆரம்பத்தில், இந்த ரயில் பாதையை புனரமைப்பதற்கு பெருமளவு நிதியைச் செலவிட வேண்டியிருந்தது. இந்த புகையிரதப் பயணம் கொவிட் பாதிப்பால் நிறுத்தப்பட்டது. இம்முறை மரத்தாலான சிலிப்பா் கட்டைகளுக்குப் பதிலாக கொங்கிரீட் சிலிப்பர் கட்டைகள் பொருத்தப்பட்டுள்ளன.

இன்றிலிருந்து தினமும் இந்த புகையிரதம் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

எதிர்காலத்தில், தேவைக்கேற்ப புகையிரத பயண அட்டவணை தயாரிக்கப்படும்," என பிரதி பொது முகாமையாளர் என்.ஜே.இந்திபொலகே தெரிவித்தார்.

அமைச்சர் பந்துல குணவர்தனவினால் ஆரம்பிக்கப்பட்ட புதிய புகையிரதப் பயணம் தற்போது ஆயிரக்கணக்கான மிஹிந்தலை யாத்திரிகர்களுக்கு நிவாரணமாக மாறியுள்ளது. இது நாளைய தினம் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் மற்றும் அன்றாட கடமைகளுக்குச் செல்லும் பல பயணிகளுக்கும் பெரும் வசதியை வழங்கும்.

*சுபாஷினி ஜயரத்ன*
*தமிழில் – எம். எஸ். முஸப்பிர்*








அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டெட் நிறுவனத்தினால் 21ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த லேக்ஹவுஸ் ஊழியர்களின் பிள்ளைகளைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் லேக்ஹவுஸ் வளாகத்தில் நடைபெற்றது. 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த லேக்ஹவுஸ் ஊழியர்களின் பிள்ளைகள் 35 பேருக்கு பணப்பரிசில்களுடன், பாடசாலை உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டதோடு, இதற்காக தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி, ஷிரம வாசன நிதியம், எபிக் லங்கா, செலிங்கோ சசெக்ஸ், ஶ்ரீலங்கா இன்சூரன்ஸ், உஸ்வத்தா கன்பெக்சனரிஸ் போன்ற நிறுவனங்கள் அனுசரணை வழங்கியிருந்தன. மேலேயுள்ள இரண்டு குழு புகைப்படங்களில் (இடமிருந்து வலமாக) ஆசிரியர் பீடப் பணிப்பாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் சிசிர பரணதந்திரி, செயற்பாட்டுப் பணிப்பாளர் சட்டத்தரணி மஞ்சுள மாகும்புர, நிதிப் பணிப்பாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன, லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், சட்ட மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் சட்டத்தரணி ஜனக ரணதுங்க, பொது முகாமையாளர் கணக்காளர் சுமித் கொத்தலாவல மற்றும் கம்பனிச் செயலாளர் சட்டத்தரணி சுதர்ஷி ஹேவாவசம் மற்றும் புலமைப் பரிசில் பெற்ற ஊழியர்களின் பிள்ளைகள் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கிற்கு கணினி ஆர்வலர்களுக்கு அழைப்பு





தகவல் தொழில்நுட்ப துறையில் வல்லுனர்களை உருவாக்கும் விதமாக உல கத் தமிழ் வர்த்தக ச ங்கம் ஏற்பாட்டில் 'பன்னாட்டு தமிழ் தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி கருத்தரங்கம்' *(2nd Annual INTERNATIONAL TAMIL INFORMATION T E C H N O L O G Y RESEARCH CONFERENCE (ITITRC))* ஜூன் 28, 29ஆம் திகதிகளில் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற உள்ளது.

அந்நிகழ்வில் VIT வேந்தர் டாக்டர் விசுவநாதன், தமிழ்நாடு மின் ஆளுமை முகாமை தலைவர் பிரவீன் நாயர் IAS, தமிழ்நாடு சைபர் கிரைம் ADGP சஞ்சய் குமார் IPS, டைடல் பார்க் முகாமைத்துவப் பணிப்பாளர் சந்திப் நந்தூரி IAS, அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் வேல்ராஜ், இந்திய தகவல் தொழில்நுட்ப பூங்கா இயக்குனர் சஞ்சய் தியாகி மற்றும் பல்வேறு முன்னணி நிறுவன தலைவர்கள், முதன்மை செயல் அதிகாரிகள், வல்லுனர்கள் கலந்துகொண்டு கருத்துரைக்க உள்ளனர்.

இந்நிகழ்வில் இணையப் பாதுகாப்பு, AI தொழில்நுட்பம், கிளவுட் கம்ப்யூட்டிங், மெஷின் லேர்னிங், பிளாக் செயின் மற்றும் பல்வேறு தலைப்புகளில் தொழில்நுட்ப கருத்தரங்கம் நடைபெற உள்ளது. கல்லூரி மாணவர்கள் மற்றும் கணனி ஆர்வலர்கள் கலந்து கொண்டு பயனடையுமாறு உலகத் தமிழ் வர்த்தக சங்க தலைவர் செல்வகுமார் கேட்டுக்கொண்டார். இந்நிகழ்வானது காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் கல்லூரி மாணவர்களுக்கு பங்கேற்பு சான்றிதழும் வழங்கப்பட உள்ளது. கணனி துறை சார்ந்த ஆர்வலர்கள் பொதுமக்கள் அனைவரும் இலவசமாக கலந்து கொண்டு பயனடையலாம் என நிகழ்ச்சி ஏற்பாட்டு குழு தலைவர் செல்வகுமார் தெரிவித்தார்.



'குர்ஆனிய வெளிச்சமுள்ள சந்ததியினரை உருவாக்குவோம்" என்பதை நோக்காகக் கொண்டு இயங்கிவரும் 'தாருல் ஹக் ஹிபுளுள் குரான் மதரசா' .அக்கரைப்பற்று ஜின்னா வீதியில் சகல வசதிகளையும் கொண்ட கட்டடமொன்றில் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. மதரசா ஆளுநர் சபை தலைவர் ஓய்வு பெற்ற நீர்ப்ப்பாசனத் திணைக்களக்களத்தின் மேலதிக நீர்ப்பாசன பணிப்பாளரான பொறியியலாளர் எஸ்.எல்.முஹமத் அலியார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட அக்கரைப்பற்று அபூபக்கர் சித்தீக் அரபுக்கல்லூரி அதிபர் மௌலவி எம்.எம்.அபுல் கலாம் (ரஸாதி) உரையாற்றுவதையும் இந்நிக்கழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களையும் காண்க. (படங்கள் அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வேலைவாய்ப்பு

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

ஹாட்வெயார் கடையில் வேலை செய்வதற்கான கனரக வாகன சாரதிகள் தேவை. (பாணந்துறை)0756272230 0741865372 041510

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கீழைத்தேய மற்றும் மேலைத்தேய உணவு சமைக்கக் கூடிய மற்றும் சகல வீட்டு வேலைகளையும் செய்யக்கூடிய தங்கியிருக்கக்கூடிய பெண் வீட்டு கண்காணிப்பாளர் ஓர் வெளிநாட்டு குடும்பத்திற்கு தேவை. தயவுசெய்து அழையுங்கள் . நேர்முகத்தேர்விற்கு 0704887754 041016

கொழும்பு மத்தியின் வீடொன்றில் தங்கியிருந்து வேலை செய்யும் உதவியாள் தேவை. பூனைகள் மற்றும் நாய்களிடம் அன்பாகவிருத்தல் வேண்டும். தொலைபேசி 0762061334 நீற்றா. 040639

புத்தளம் மதுரங்குளி தென்னம் தோட்ட பங்களாவில் வசிக்கும் முஸ்லிம் தம்பதியினருக்கு 3 நேரம் சமையல் ருசியாக சமைக்கக் கூடிய வீடு க்லீனிங் வேலை செய்யக்கூடிய வயது 35 55 முஸ்லிம் பெண் தேவை. சம்பளம் 1 நாளைக்கு 1500/ ரூபா077 3832478 041334

புத்தளம் மதுரங்குளி தென்னம் தோட்ட ப ங்களாவில் வசிக்கும் முஸ்லிம் தம்பதியின ரு க்கு 3 நேரம் சமையல் ருசியாக சமைக்கக் கூடிய வீடு க்லீனிங் வேலை செய்யக்கூடிய வயது 35 55 முஸ்லிம் பெண் தேவை. சம்பளம் 1 நாளைக்கு 1500/ ரூபா077 3832478 041204

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

கொழும்பு 02 யூனியன் பிரதேசத்தில் இயங்கி வரும் பிரபல ஹோட்டலுக்கு திறமையான அனுபவமுள்ள பின்வரும் வேலையாட்கள் தேவை.1. கொத்து செய்பவர்2. இந்திய உணவு செய்பவர்3. சீன (Chinese) உணவு செய்பவர்4. பணியாள்5. குளிர்பானம் & பர்கர் செய்பவர்6. ஆப்பம் செய்பவர்தங்குமிடம் & உணவு வழங்கப்படும். சம்பளம் தினசரி வழங்கப்படும். தொடர்புகளுக்கு. 0773365149 041227

ரொட்டி சுடுபவர் தேநீர் ஊற்றுபவர் சமையலறை உதவியாளர், கசியர் 20 வயதிற்கு குறைவாக உள்ளவர்கள் தே வை. தங்குமிடம் மற்றும் உணவு இலவசம்.070613940, 0719001955 041295

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

பன்றி பண்ணைக்கு தொழிலாளர்கள் தேவை. ஹங்வெல்ல. 0727457812 041333

### 325 தொழில்துறை பொது

பிரைம் மூவர் சாரதிகள், RIDERS, கப்பற் சரக்கு மேடை எழுதுவினைஞர்கள், சுங்க அனுமதிச்சீட்டு எழுதுவினைஞர்கள், மெஜெஞ்சர்கள், அலு வலக உதவியாளர்கள் கமத்தொழில் தோட்ட வேலையாட்கள், ரிக்கரிங் வேலை செய்தல் டீசல் மெக்கானிக்குகள் மற்றும் வாகன பெயின்ட் பூசுவோர் தேவை. தங்குமிட வசதியுண்டு, லேர்ல்ட் எக்பிரஸ் CMB (பி ரைவட்) லிமிட்டட், இல. 191/சி, துடல்ல, பமுனுகம பாதை, போபிட்டிய (ஜயராணி மர ஆ லைக்கு அ ருகாமையில், ஜாஎல. தொலைபேசி: 0773 3 4 6768, 011 2342807, 0712724403 041222

## காணி/தோட்டம்

### 613 பலகைக் குற்றிகள்

தெஹிவளை, ஹில் வீதி புதிதாக கட்டப்பட்ட வீடு விற்பனைக்கு. 9.5 பே. 2 மாடி தனியான நுழைவாயில். 7 படுக்கையறைகள், 5 குளியலறைகள், 2 பவுடர் அறைகள், தனியான இரு மின்சாரம்/ நீர் மீட்டர்கள். தரகர் தேவையில்லை. 91.5 மில்லியன். 0713693999. 034945

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

அதுருகிரிய வியாபார/வீட்டுக்கான காணி உடன் விற்பனைக்கு. மிலேனியம் சிட்டி இற்கு ஒன்றரை கிலோமீட்டர். எம். டீ. எச். ஜயவர்தன வீதி, பிரதான வீதிக்கு முகப்பாக அழையுங்கள் 0777 199284. 041579

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

யக்கல கிரிந்திவெல வீதி இருமாடி வீடு விற்பனைக்கு. இரண்டாம் மாடி 75% வேலை பூர்த்தி 20 பேர்ச், 6 அறைகள், 02 குளியலறைகள், யக்க லைக்கு 05 விநாடிகள். கம்பஹா லைசியம் சர்வதேசப் பாடசாலைக்கு 15 நிமிடங்கள். 077 1 021300, 077 5470351. 040085

ராகம போய்ஸ் டவுனில் 20 பே ர்ச் இல் ச கல வசதிகளுட னா ன பெரிய வீடு விற்பனைக்கு, ஊழியர் தங்குமிடம், அநாதையில்லம் அல்லது முதியோர் இல்லத்திற்கு பொருத்த மானது. 0773082032 040872

### 620 வீடு சொத்து புத்தளம் மாவட்டம் விற்பனைக்கு

மாரவில மாவில பிரதான வீதியில் 'சுபீசா" ஏலவிற்பனை காணியின் அருகே 12 பேர்ச் காணித் துண்டுகள் இரண்டு (24 பேர்ச்) விற்பனைக்கு 0773481468 041028

### 626 வீடு சொத்து பதுளை மாவட்டம் விற்பனைக்கு

பதுளை நகரிற்கு அருகில் வசதிகளுடன் இரு மாடி வீடு விற்பனைக்கு. 130 இலட்ச ம் 0773051865 0710330356 041019

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

தினகரன் வாரமஞ்சரி

# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

BARE LAND FOR SALE IN
KOSWATTA ,BATTARAMULLA
Highly Residential Environment, ideal for an exemplary living.
Property Features:-
Land Extent - 10 Perches., Located in a private road., 400m to main road., 600m to Koswatta junction., 1 km to Battaramulla junction., All the Banks, ATMs, Hospitals, Supermarkets, Restaurants, Retail Stores, Jogging tracks and many other Urban facilities are all around within 1km radius.
ALL THE DOCUMENTS ARE CLEAR.
Price : Rs. 2,950,000 per Perch. OFFERS WELCOME !!!
CONTACT - 0777 787 677

LAND FOR SALE NEAR THE HIGHLEVEL ROAD
(WIJERAMA - CAMPUS ROAD)
A HIGHLY RESIDENTIAL AREA IN WIJERAMA, (GANGODAWILA NUGEGODA) EGODAWATTA ROAD, 2ND LANE AND BETWEEN WEERA MAWATHA, FACING PADDY FIELD 7.8 PERCH BARE LAND FOR SALE.
2.2 Million per perch, (Negotiable) only one land available. 15' ft. access road, 10 minutes to highlevel road and Sri Jayawardenapura Campus Close proximity to all convenience, Egodawatta 2nd lane last land. All approved. Can take bank loan as well
Contact Details
0718 712 795, 0774 745 333

POLYCARBONATE SHEDS, ALL OTHER IRON WORKS AND HOUSE PAINTING
TRUSTED SERVICE OF SA CONSTRUCTION
saconstruction@gmail.com
+94 70 24 955 97 +94 70 66 222 88

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
077 7 278 948 / 011 2 429 383 / 011 2 429 347 011 2 429 342

INVESTMENT OPPORTUNITY
Professionally Managed, successfully operating Jewelry Manufacturing Start Up (8 months In Operation). Having achieved breakeven with a tried and tested Business Model requires injection of Working Capital to expand its commercial operation on a full scale.
Forecasted above average Rate of Returns with Minimum risk (products launched and tested in the Market). Innovative Business Model to address Niche Market with very minimal competition.
Located in Colombo - Capacity to Produce Gold Jewelry (service - gold supplied by customer) and Own Production of Silver Jewelry for the local and tourist Markets.
Inhouse facility for Handmade and Casted Jewelry. From CAD Designing to Casting, Micro-setting, Finishing & Plating (Gold/Silver/Rhodium). Skilled Workforce of around 20 Staff
Seeking for an Investor(s) to raise a capital of Rs.15 M to boost its current operations. Minimum Investment 2 M.
Serious, Potential investors could kindly contact.
Ansar - 0779955515 mmansar@outlook.com
RANNCRAFT PVT LTD.
07 Mosque Road, Kirullapone Colombo 05.

REAL JUNGLE EXPERIENCE
INSIDE YALA JUNGLE
www.singletreesyala.com
12 Pax 25,000 per day
Whole property
Pre-Opening Discount 50,000/-
6 Tree House
SINGLE TREES YALA
BOOKING CONTACT - 0775 337 825

අමානෝ වැහිපිලි සහ සෙවිලි
0777 394 679 | 070 663 33 88

Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com

தார் பதித்தல்
அனைத்து மூலப்பொருட்களுடன்
அப்சரா குளோபல் ஹோல்டிங்ஸ்
உங்களது வீட்டில் அல்லது நிறுவனத்தில் அனைத்து நிர்மாணப் பணிகளும் ஒரே இடத்திலிருந்து
දිවයිනේ ඕනෑම ප්‍රදේශයකට පැමිණ සිදුකරදෙනු ලැබේ.
0778 383 834

வடகொரியாவுடனான ரஷ்யாவின் இராணுவ உடன்படிக்கை

# உலகளாவிய அரசியலில் ஏற்படுத்தப்போகும் பாதிப்பு?





பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

உக்ரையின் ரஷ்யப் போர் உலக ஒழுங்கை மாற்றத்திற்கு உள்ளாக்கும் என்ற எதிர்வுகூறல் யதார்த்தமாகிக் கொண்டே நகருகிறது. மேற்குக்கும் கிழக்குக்குமான பிரிநிலையானது வலுவான அரசியல் பொருளாதார இராணுவ ஒழுங்கை கட்டமைப்பதில் முனைப்புக் கொண்டதாக விளங்குகிறது. அமெரிக்கா உக்ரைனுடன் செய்து கொண்ட பாதுகாப்பு உடன்பாடு தொடர்பில் கடந்த கட்டுரையில் உரையாடியிருந்தோம். அதற்கு பதிலீடான அரசியலாக ரஷ்யா வடகொரியாவுடன் பாதுகாப்பு உடன்படிக்கையை மேற்கொண்டுள்ளது. அத்தகைய பாதுகாப்பு உடன்பாடுகள் வேறுபட்டதாக அமைந்தாலும் அடிப்படையில் இரு தரப்பின் நோக்கங்களும் ஒன்றானதாகவே அமைந்துள்ளன. இக்கட்டுரையும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினது வடகொரியா வியட்நாம் விஜயங்களின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்வதாக அமைந்துள்ளது.

இருபத்துநான்கு வருடங்களுக்கு பின்னர் வடகொரியாவுக்கு ரஷ்ய ஜனாதிபதி விஜயம் 18–19 செய்துள்ளார். இந்த விஜயம் இரு நாட்டுக்குமான அரசியல் இராணுவ பரிமாணத்தில் தனித்துவமானதாகவே தெரிகிறது. காரணம் இரு நாட்டுத் தலைவர்களும் இராணுவ உடன்பாடு ஒன்றில் கையெழுத்திட்டுள்ளனர். அதில் மிகப் பிரதானமானது, ஒரு நாட்டின் மீது வேறு நாடு தாக்குதலையோ, ஆக்கிரமிப்பையோ மேற்கொள்ளுமாயின் அந்த நாட்டுக்கு எதிராக கூட்டாக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதென இரு தலைவர்களும் உடன்பாடு செய்துள்ளனர். இதன் கீழ் ஆயுத தளபாடங்கள், தொழில்நுட்ப பரிமாற்றங்களை பரஸ்பரம் கைமாற்றிக் கொள்வதென முடிவாகியுள்ளது. இது தொடர்பில் வடகொரியாவின் ஜனாதிபதி கிம் ஜொங் உன் கருத்துத் தெரிவிக்கும் போது, எதிர்காலத்தில் இரு நாட்டுக்கும் இடையில் மேற்கொள்ள எத்தனிக்கும் எத்தகைய போரையும் கூட்டாக எதிர்கொள்ள தயாராக உள்ளதை உடன்பாடு காட்டுகிறது என்றார். அது மட்டுமன்றி புட்டின் வடகொரியர்களின் நண்பன் என்றும், உடன்படிக்கை முற்றிலும் அமைதியான மற்றும் தற்காப்புத் தன்மை கொண்டது என்றும் குறிப்பிட்டார். கிம், ரஷ்யா நேர்மையான நண்பன் மற்றும் நெருக்கமான கூட்டாளி எனவும் தெரிவித்தார். இந்த ஒப்பந்தம் பல்முனை உலகத்தை உருவாக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பதிலுக்கு புட்டின் குறிப்பிடும் போது, இராணுவ உடன்படிக்கைக்கு அப்பால், பொருளாதார மற்றும் ஆயுத விநியோகம் முதன்மையானது எனவும், வடகொரியா மீது மேற்குலகம் திணித்துள்ள காலவரையறையற்ற பொருளாதாரத் தடைகளை மீளாய்வு செய்ய வேண்டும் எனவும், வெளிப்படுத்தியிருந்தார். மேலும் ரஷ்யாவின் மண்ணின் மீது தாக்குதல் நடத்தக் கூடிய துல்லியமான நீண்டதூர ஆயுதங்கள், எப்16 ரக விமானங்கள் உயர் தொழில்நுட்ப ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை உக்ரைனுக்கு வழங்குவது பற்றி அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகளது நடவடிக்கைகளை சுட்டிக்காட்டிய புட்டின், வடகொரியாவின் இராணுவ தொழில்நுட்பத்தை வலுப்படுத்துவது அவசியமானதெனவும் தெரிவித்திருந்தார்.

இதே நேரம் ரஷ்ய ஜனாதிபதி வியட்நாமுக்கு விஜயம் (20.06.2024) செய்த போது, வியட்நாம் ஜனாதிபதி ரூ லாம் உடன் பரஸ்பரம் பொருளாதார, தொழில்நுட்ப உடன்பாடுகளை மேற்கொண்டிருந்தார். இரு தலைவர்களும் பிராந்திய பாதுகாப்புச் சார்ந்து விரிவான கட்டமைப்பை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் பன்முனை உலகத்தை கட்டமைப்பதே தமது விஜயத்தின் பிரதான நோக்கம் எனவும் தெரிவித்தார். அத்தகைய உடன்பாட்டுக்கான உரையாடலை ஏற்றுக் கொண்ட வியட்நாம் ஜனாதிபதி, பிராந்திய அமைதிக்கும் பாதுகாப்புக்கமான விரிவான செயல்திட்டம் வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

ரஷ்ய ஜனாதிபதியின் இரு நாட்டுக்குமான விஜயங்களின் முக்கியத்துவத்தை விரிவாக விளங்கிக் கொள்வது அவசியமானது.

ஒன்று, அமெரிக்காவுக்கும் உக்ரைனுக்கு கடந்த வாரம் இத்தாலியில் நிகழ்ந்த ஜி7 மகாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட உடன்பாட்டுக்கு பதிலளிப்பதாக இது அதிகம் உணரப்படுகிறது. உக்ரைன் மற்றும் அமெரிக்கா உடன்பாடும், இராணுவ உடன்பாடாகவே அமைந்திருந்தது. அத்தகைய அடிப்படைக்குள்ளேயே வடகொரியாவுடனான உடன்பாடும் அமைந்துள்ளது. அதனால் இது ஒரு பதில் நடவடிக்கையாக அமைந்துள்ளது என்பது முதல்கட்டமான புரிதலாகவுள்ளது. அது மட்டுமல்லாது, ஈரான் ஜனாதிபதியின் படுகொலைக்குப் பின்னர் ரஷ்யாவின் நகர்வுகள் அதிக எச்சரிக்கையுடையதாகவே தெரிகிறது. தனது நட்பு நாடுகளையும் அதன் தலைவர்களையும் பாதுகாக்க வேண்டிய நிலைக்குள் புட்டின் காணப்படுகின்றார். அதனால் இத்தகைய உடன்பாடுகளும் கூட்டுவலுவும் அவசியமானதாக தெரிகிறது.

இரண்டு, பாதுகாப்பு உடன்பாட்டின் வாயிலாக இரு நாடுகளும் பரஸ்பரம் ஆயுத தளபாடங்களை பரிமாற்றுவதென்பது முக்கியமானதாக அமைந்தாலும் இரு நாடுகளுமே அணுவாயுதங்களை கொண்ட நாடுகள் என்ற அடிப்படையில் அதிக முக்கியத்துவம் கொண்டதாக தெரிகிறது. காரணம் பல்முனை உலகம் பற்றிய உரையாடலை புட்டின் வியட்நாமிலும் வடகொரியாவிலும் வெளிப்படுதியுள்ளார். அதனால் உலகளாவிய அமைதி மற்றும் பாதுகாப்புச் சார்ந்த விடயங்களை இத்தகைய உடன்பாட்டினால் ஏற்படுத்த வாய்ப்புள்ளதாக புட்டின் புரிந்து வைத்துள்ளதாகவே தெரிகிறது. அதாவது அணுவாயுதமே உலக அமைதிக்கான அடிப்படை என்ற யதார்த்தவாதக் கோட்பாட்டாளர்களின் எண்ணத்தை புட்டின் பிரதிபலிப்பது போலவே தெரிகிறது. உலகத்தின் அமைதியானது ஆயுத தளபாடங்களாலும் இராணுவ பலத்தினாலும் கட்டமைக்கப்பட்டதென்ற நியாயத்தை நவ யாதார்த்தவாதத்தை முதன்மைப்படுத்தும் கோட்பாட்டுவாதிகள் குறிப்பிடுகின்றனர். அதனையே வடகொரிய ரஷ்ய இராணுவ உடன்பாட்டில் காண முடிகிறது.

மூன்று, வடகொரியாவுடனான ரஷ்யாவின் இராணுவ உடன்படிக்கை, உக்ரைன் போரில் வடகொரியாவின் ஆயுத தளபாடங்களை பயன்படுத்துவது தொடர்பிலானதாகவே அதிகம் உள்ளது. ஈரானிய ஜனாதிபதி ரைசியின் படுகொலை உக்ரைனின் ரஷ்யப் போரில் நெருக்கடியான சூழலையே ஏற்படுத்தியுள்ளது. அதனை எதிர்கொள்வதும் நகர்த்துவதும் புட்டினது சவாலனான அம்சமாக அமைந்திருந்தது. அதனை கையாளும் விதத்திலேயே வடகொரியாவுடனான உடன்பாட்டை ரஷ்யா முதன்மைப்படுத்தியள்ளது. இவ்வுடன்பாடு அதிகளவில் உக்ரைன் போரை ரஷ்யா எவ்வாறு நகர்த்த திட்டமிடுகிறது என்பதை வெளிப்படுத்தவதாக அமைந்துள்ளது.

நான்கு, ரஷ்யா மீதான மேற்குலகத்தின் பொருளாதாரத் தடை மற்றும் தனிமைப்படுத்தல் உத்தியை உடைப்பதே புட்டினது வடகொரியா, வியட்நாம் விஜயங்களின் தனித்துவமாகும். மேற்கு வகுத்துள்ள அனைத்து உத்திகளையும் உடைத்து வரும் புட்டின் தனது நட்பு நாடுகளின் எண்ணிக்கையையும் பலத்தையும் கூட்டுவதுடன் அதனை பாதுகாப்பு சார்ந்தும் கட்டமைக்க முயலுகிறது. பொருளாதர இயங்குதிறனை இராணுவ உத்திகளுக்குள்ளால் கையாளும் திறனை அதிகம் இராணுவ உடன்பாடுகள் கொண்டுள்ளன. அதனையே மேற்கு நாடுகளும், கிழக்கு சக்திகளும் மேற்கொள்வதில் முனைப்புக் காட்டுகின்றன. அதாவது பொருளாதாரத்தை இராணுவ நெருக்கடிக்குள்ளால் வெற்றி கொள்வதே புட்டினது விஜயங்களது உத்தியாக உள்ளது. அதனையே அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் மேற்கொள்கின்றன.

ஐந்து, ரஷ்ய ஜனாதிபதியின் வியட்நாம் மற்றும் வடகொரியாவுடனான இராணுவ உடன்பாடு தொடர்பில் அமெரிக்கா மற்றும் தென் கொரிய நாடுகளது எதிர்வினைகள், நலன்களை மட்டுமே வெளிப்படுத்தியிருந்தது. அதிலும் வியட்நாம் விஜயத்தை அமெரிக்கா அதிகம் விமர்சனம் செய்துள்ளது. காரணம் பனிப்போரின் போது சோஷலிஸ அணியுடன் பயணித்த வியட்நாம் பின்னர் அமெரிக்க நட்பு நாடுகளுடன் செயல்படத் தொடங்கியது. அதனை மீளவும் ரஷ்யா பலவீனப்படுத்துவதாக அமெரிக்கா கருதுகிறது. ஆனால் வியட்நாம் ரஷ்யாவின் நட்பு நாடு என்பது மட்டுமல்லாது நீண்டகாலம் அரசியல் சித்தாந்தத்தின் உறவுள்ள சக்திகள் என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டும். வியட்நாமியர்களது இருப்பின் மூலம், ஹோசிமினது சிந்தனை விதைக்கப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்வது அவசியமானது. ஆனால் ரஷ்யாவின் இருப்பும் வியட்நாமின் இருப்பும் தற்போதைய உலகத்தில் எத்தகையது என்பது அளவீடு செய்யப்பட வேண்டும். பொருளாதாரமாக ஓரே தரிசனத்தை உலகம் கொண்டிருந்தாலும், அரசியலில் இருதுருவத்தை கொண்டியங்க முனைகிறது.

எனவே ரஷ்ய ஜனாதிபதி புட்டினது வடகொரிய மற்றும் வியட்நாம் பயணங்கள் உலக இராணுவ அரசியல் பரிமாணத்தில் முதன்மையானவை. ஒரு நாட்டின் வெளியுறவு என்பது அந்த நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினைகளை கையாளும் உத்திகளாகவே உள்ளன. அதனையே புட்டின் முதன்மைப்படுத்தி வருகிறார். மேற்கு நாடுகள் போடும் அனைத்து உத்திகளுக்கும் பதிலளிப்பதில் முனைப்புடன் ரஷ்யா, சீனா, வடகொரியா, ஈரான், சிரியா நாடுகளின் அணி செயல்படுகின்றது.

---

**காலிமுகத்திடல் போராட்டத்தின் போது இருந்த நாட்டின் நிலைமையை தற்போதைய நிலையுடன் ஒப்பிடும் போது இன்று பல விடயங்கள் மாறியுள்ளன. 2019இல் ஈஸ்டர் தாக்குதலால் ஏற்பட்ட சமூக பொருளாதார நெருக்கடியில் தொடங்கி, கொவிட், அதையடுத்து காலிமுகத்திடல் போராட்டம் வரை, நாட்டில் நிறைய விடயங்கள் நடந்தேறின. பெரும்பாலும் மோசமான விடயங்களே நடந்தன. அன்புக்குரியவர்கள் மற்றும் தெரிந்தவர்கள் இறந்தபோது அவர்களுக்கு இறுதி மரியாதை செலுத்துவது நம் சமூகத்தில் ஒரு கட்டாய நடைமுறையாக இருந்தது, ஆனால் கொவிட்டுக்குப் பிறகு, அது வெகுவாகக் குறைந்தது. இறுதிச் சடங்கிலோ, திருமணத்திலோ கலந்துகொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டது. ஆனால், அந்த நிலை தற்போது மாறியுள்ளது. மீண்டும் கல்யாணம், இறுதிச் சடங்குகளுக்கு போகக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.**

வார இறுதி கேள்வி

# பொருட்களின் விலைகள் மட்டும் குறையாததன் பின்னணி என்ன?

அந்த வகையில் மேற்சொன்ன காலங்களில் நாம் அனுபவித்த நிலைமைகள் தற்போது மாறியுள்ளன. வரிசையில் நிற்கும் காலம் முடிந்து, அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை தடையின்றி பெற்றுக்கொள்ள முடிகிறது. பொருட்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு தற்போது நீங்கியிருந்தாலும், வாகனங்களுக்கு மட்டும் அவ்வாறு எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

அவ்வாறு அப்போது இந்த நாட்டில் பொருட்களின் விலை எவ்வளவு வேகமாக உயர்ந்தது என்பது பலருக்கும் நினைவிருக்கும் என்று நினைக்கிறேன். உலகிலேயே அதிக பணவீக்க விகிதம் கொண்ட ஐந்து நாடுகளில் இலங்கையும் ஒன்றாக இருந்தது. அத்துடன், டொலரின் பெறுமதி மிக வேகமாக மாறும் நிலையை நாடு எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆரம்பத்தில் டொலர் இருநூற்று இருபத்தைந்து ரூபாய் என்ற அளவில் இருந்தது. பொருளாதார நெருக்கடியால், ரூபாயின் மதிப்பு சரிந்து, டொலரின் மதிப்பு உயர்ந்தது. கறுப்புப் பண விலை மேலும் உயர்ந்தது. டொலரின் விலை அண்ணளவாக நானூற்று எழுபது ரூபாய் ஆனது. அதேநேரத்தில், எரிபொருள் விலையும் அதிகரித்தது, மற்றும் வங்கி கடன் வட்டியும் அதிகரித்தது. இவை அனைத்தின் விளைவாகவும் பொருட்களின் விலையிலும் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டது.

பொருட்களின் விலை உயர்வு மற்றும் பணவீக்கம் அதிகரிப்பதற்கான காரணங்கள் விளக்கப்பட்டுள்ளன. தேவை அதிகரிப்பதே விலை உயர்வுக்குக் காரணம். இருப்பினும், அது தவிர, பல்வேறு காரணங்களால் பணவீக்கம் அதிகரிக்கலாம். கடந்த காலங்களில் இலங்கையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரித்ததற்கு பொருளாதார காரணங்களும், பொருளாதாரமற்ற காரணங்களும் செல்வாக்கு செலுத்தியதாக தெரிகிறது. பொருட்களின் விலை அதிரடியாக உயர்ந்தது. அந்த உயர்வைக் காரணம் காட்டி, உற்பத்தியாளர்களும், வியாபாரிகளும் போட்டி போட்டுக் கொண்டு பொருட்களின் விலையை உயர்த்தும் வேலையில் ஈடுபட்டனர். ரூபாய் மதிப்பு குறையும் போது, டொலர் மதிப்பு உயரும் போது, பால் மாவின் விலை உயர்வது சகஜம். பால் மாவின் விலை அசாதாரணமாக உயர்ந்தது. ஆரம்பத்தில், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பால் மா 400 கிராம் பைக்கெற் ரூ.290 ஆகவும், இறக்குமதி செய்யப்பட்ட பால் மா 400 கிராம் பைக்கெற் ரூ.370 ஆகவும் விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதன் பின்னர் உள்ளாட்டு பால் மா பைக்கெற் ஒன்றின் விலை 1150 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்பட்ட பால் மா பைக்கெற்றின் விலை 1050 ரூபாகவும் ஆகவும் உயர்ந்தது.

டொலரின் பெறுமதி அதிகரிப்பால் இறக்குமதி செய்யப்படும் பைக்கெற்றின் விலை அதிகரித்துள்ளது. இருப்பினும், உள்ளூர் தயாரிப்பின் விலை உயர்வுக்கு என்ன காரணம் என்பது தெளிவாகத் தெரியவில்லை. இதன் மூலம், நாட்டில் கிட்டத்தட்ட அனைத்து வகையான பொருட்களின் விலைகளும் இருமடங்காக, மூன்று மடங்காக உயர்ந்தது. சில வியாபாரிகள் அல்லது உற்பத்தியாளர்கள் நாட்டில் பொருட்களின் விலையை உயர்த்துவது தங்கள் பொறுப்பு என விலையை உயர்த்தினார்கள்.

நான் ஒரு குறிப்பிட்ட பல்பொருள் அங்காடிக்குள் நுழைந்தபோது, ஏராளமான ஊழியர்கள் பொருட்களின் விலையை மாற்றுவதைக் கண்டேன். அவர்கள் செய்தது அதுவரை இருந்த விலை பட்டியலை அகற்றி அதிக விலை கொண்ட பட்டியலை மாற்றியது தான். பல பல்பொருள் அங்காடிகள் இதைப் பின்பற்றின என்று நினைக்கிறேன். நாட்டில் பொருட்களின் உற்பத்தி குறைவு, வெளிநாடுகளின் விநியோக சேவையில் தடை, அந்நிய செலாவணி தட்டுப்பாடு, ரூபாய் மதிப்பு சரிவு போன்ற காரணங்களால் பொருட்களின் விலைகள் உயரத் தொடங்கி, நாட்டின் விலைவரம்பு உச்சத்தை எட்டியதாக தெரிகிறது. 2022 ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் பொருட்களின் விலைகள் உச்சத்தைத் தொட்டன.



சுதந்திரத்திற்குப் பின்னரான காலத்தில், நாட்டில் விலை மட்டங்களை ஆய்வு செய்யும் போது, விலைகள் கணிசமாகக் குறைந்த தற்கான எந்த அடையாளமும் இல்லை, மாறாக அவற்றின் அதிகரிப்பே காணப்பட்டது. இதற்குக் காரணம் பணவீக்கம் குறையாமல் தொடர்ந்து அதிகரித்து வருவதுதான்.

மறுபுறம், பெரும்பாலும் வெளிநாட்டுப் பொருட்களைச் சார்ந்து இருக்கும் நாடாக இருப்பதாலும், ரூபாய் மதிப்பு தொடர்ந்து சரிந்ததாலும், பொருட்களின் விலையும் தொடர்ந்து உயர்ந்து வந்தது. உலகின் மற்ற நாடுகளின் நிலையைப் பார்க்கும்போது, பொருட்களின் விலை குறையவில்லை, அதிகரித்தே இருக்கிறது என்று தோன்றுகிறது.

இலங்கையில் கொவிட் தொற்றுக்குப் பின்னர் பொருட்களின் விலைகள் அதிகரித்தமை ஒரு அசாதாரண சூழ்நிலையாகும். மேற்கூறிய சிறப்புக் காரணங்களால் பாதிப்படைந்தவை, அந்த சிறப்புக் காரணங்களை நீக்கியவுடன் மீண்டும் பழைய நிலைக்கு வரும் என எதிர்பார்க்க வேண்டும். ரூபாய் மதிப்பு வீழ்ச்சியால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை உதாரணம் காட்டலாம். டொலரின் மதிப்பு 470 ரூபாயை எட்டிய போதிலும், தற்போது முந்நூறு ரூபாயாக குறைந்துள்ளது.

பணவீக்கம் குறைந்துள்ளது. எரிபொருள் விலை, மின் கட்டணம், வங்கி வட்டி விகிதங்கள் போன்றவை குறைந்துள்ளன.

அப்படியிருந்தும் மேற்கூறிய காரணங்களைக் கருத்தில் கொண்டு, நாட்டின் பொருட்களின் விலை கணிசமான அளவில் குறைந்திருக்க வேண்டும், ஆனால் அத்தகைய குறைப்பு இதுவரை தெரிவிக்கப்படவில்லை. இலங்கையில் பல தொழில்முனைவோர் மற்றும் வர்த்தகர்கள் பொருட்களின் விலைகளை உயர் மட்டத்தில் வைத்து அதிக இலாபம் ஈட்ட முயற்சிப்பதே இதற்குக் காரணம்.

இதன்மூலம், சந்தையில் உற்பத்திச் செலவில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப, இறக்குமதியாளர்களும், உள்ளூர் உற்பத்தியாளர்களும் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையை குறைக்காததால், பொது மக்களுக்கு உரிய பலன் கிடைப்பதில்லை. ஆனால் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் வியாபாரிகள் உணராத உண்மை என்னவென்றால், விரைவில் விருப்பத்துடனோ விருப்பமின்றியோ விலையை குறைக்க வேண்டி நேரிடும்.

விலை அதிகமாக இருக்கும் போது, மக்கள் பொருட்களை வாங்காமல் விடுவதால், விற்பனையாளர்களும் நஷ்டம் அடைகின்றனர். உதாரணமாக, நாட்டில் கட்டுமானப் பொருட்களின் விலை வெகுவாக அதிகரித்திருந்தாலும், டொலரின் குறைவுடன் ஒப்பிடும்போது அந்த விலைகளில் எந்த மாற்றமும் இல்லை.

இதன் விளைவாக, நாட்டின் கட்டுமானத் தொழில் வீழ்ச்சியடைந்து, பொருட்கள் விற்கப்படாமல் உள்ளன. அத்தகைய சூழ்நிலையில், பொருட்களை விற்போருக்குத்தான் அதிக சேதம் ஏற்படுகிறது. இதனால் சில கட்டுமானப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதோடு, எதிர்காலத்தில் எனைய பொருட்களின் விலையும் குறைய வாய்ப்புள்ளது. விலை குறையும் போது, கட்டுமானம் அதிகரித்து, அனைவரும் வளமாக இருப்பார்கள். இந்த நேரத்தில், பொருட்களின் விலைகள் குறைந்தால், அது பொருளாதாரத்தில் உற்பத்தி அளவை அதிகரிக்க உதவுகிறது. விலை குறையும் போது தேவை அதிகரிக்கிறது. தனிநபர்களிடையே புழக்கத்தில் இருக்கும் பணத்தின் வாங்கும் சக்தி அதிகரிப்பதால் நாட்டில் தேவை அதிகரிக்கிறது. இது அனைத்துப் பொருளாதாரத் துறைகளிலும் பொருட்களின் தேவையை அதிகரிக்கும். அப்போது அனைத்து துறைகளின் உற்பத்தியும் பெருகும், நாட்டின் உற்பத்தியும் அதிகரிக்கும். பொருளாதார வளர்ச்சியும் அதிகரிக்கும். பொருட்களின் விலையை குறைக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளதாக தெரிகிறது. ரூபாயின் மதிப்பு வலுப்பெற்றுள்ளது. டொலரின் மதிப்பு சரிந்துள்ளது. எரிபொருள், மின்சாரம், வங்கிக் கடன் வட்டி போன்றவை குறைக்கப்பட்டதால், நாட்டின் உற்பத்திச் செலவு குறைகிறது. ஆனால் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் மிகக் குறைந்த அளவிலேயே குறைந்துள்ளன.

பாணின் விலை எல்லையில்லாமல் உயர்ந்தாலும், இன்று வெவ்வேறு உற்பத்தியாளர்களிடையே விலைப் போட்டி இருப்பது போல் தெரிகிறது. பாணின் விலையை தக்கவைக்க முயற்சிக்கும் போது, சில பேக்கரி உரிமையாளர்கள் பாணின் விலையை குறைக்கத் தயாராக உள்ளனர்.

விலைப் போட்டி ஏற்பட்டு பாணின் விலை படிப்படியாகக் குறையும் என்பது இறுதி முடிவு. எல்லாப் பொருட்கள் மற்றும் சேவைகளினதும் நிலை இதுதான். செலவு குறையும் போது, உற்பத்தி செலவு குறையும் போது, அதனுடன் ஒப்பிடும் போது விலை மட்டங்கள் குறையாமல் இருக்கும் போது, விலைப் போட்டி ஏற்பட்டு, பொருட்களின் விலை குறைய ஆரம்பிக்கிறது.

பல்வேறு சவால்கள் மற்றும் சிரமங்களுக்கு மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிறந்த பொருளாதார முகாமைத்துவத்தினால் நாட்டில் விலை மட்டங்கள் குறைவதற்கான பின்னணி உருவாக்கப்பட்டுள்ளது. உற்பத்தித் துறையினர் அதைப் புரிந்துகொண்டு விலையைக் குறைத்தால், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதற்கான வாய்ப்பை உருவாக்க முடியும்.



களனி பல்கலைக்கழக பொருளியல் முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்
சுனந்த மத்துமபண்டார.
தமிழில் வீ.ஆர்.வயலட்

# "2024 ஹஜ் நிறைவு விழாவில்" இலங்கை ஹஜ் தூதுக் குழு

சவூதி அரேபியாவின் ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சு ஏற்பாடு செய்திருந்த "கிதாமுஹு மிஸ்க்" 2024 ஹஜ் நிறைவு விழாவில் சவூதி அரேபியாவிற்கான இலங்கை தூதுவர்அமீர் அஜ்வத், இலங்கை ஹஜ் கமிட்டியின் தலைவர் இப்ராஹிம் சாஹிப் அன்சார் மற்றும் ஹஜ் கமிட்டி உறுப்பினர்களான இபாஸ் நபுஹான், நிப்ராஸ் நசீர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஜூன் 18ஆம் திகதியன்று மக்காவில் நடைபெற்ற இவ் விழா 2024 ஹஜ் வெற்றிகரமாக நிறைவுற்றதைக் கொண்டாடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஹஜ் யாத்திரிகர்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்கிய தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு "லப்பை பட்டம் மற்றும் விருதுகள்" வழங்கப்பட்டன.

இவ் விழாவில், 2025 ஹஜ் சீசனுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மற்றும் கால அட்டவணையை ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சர் தவ்ஃபிக் அல்ரபியா அறிவித்தார். உம்ரா மற்றும் ஹஜ் செய்யும் வழிபாட்டாளர்களுக்கான சேவைகளை மேம்படுத்த "நுசுக் மசார்" என்ற புதிய தளத்தையும் அவர் அறிமுகப்படுத்தினார். இத்தளம் ஹஜ் யாத்திரிகர்களுக்கு சேவை செய்யும் அனைத்து பங்குதாரர்களையும் ஒருங்கிணைத்து திறமையானஅனுபவத்தை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. சிறந்த திட்டமிடல் மற்றும் வள ஒதுக்கீட்டிற்கு உதவும் வகையில்



முன்கூட்டியே யாத்திரை ஒதுக்கீடுகளை வழங்கும் பூர்வாங்க ஏற்பாடுகள் பற்றிய ஆவணமும் இங்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின் போது சவுதிஅரேபியாவிற்கான இலங்கை தூதுவர் அமீர் அஜ்வத், ஹஜ் யாத்திரிகர்களுக்கு சிறந்தசேவைகளை வழங்கியமைக்காக, இரண்டு புனித தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸிஸ் மற்றும் சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசரும் பிரதமருமான முகம்மது பின் சல்மான் ஆகியோருக்கு இலங்கை சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார். ஹஜ் சேவைகளை வழங்குவதில் சவூதி அரேபியாவின் புதிய டிஜிட்டல் உட்கட்டமைப்பை அவர் பாராட்டி பேசியதுடன், உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் ஹஜ் யாத்திரிகர்களுக்கு "நுசுக்" எனும் இனணயதளம் இலகுவான மிகச் சிறந்த சேவையை வழங்குகிறது எனவும் சுட்டிக் காட்டினார்.

இது சவூதி அரேபியாவின் 2030 இலக்குகளுடன் இணைந்து செல்லும் ஒரு புரட்சிகர டிஜிட்டல் பரிமாற்றம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை ஆண்டுதோறும் 3500 ஹஜ்யாத்திரிகர்களை ஹஜ் கடமையை நிறைவேற்ற அனுப்புகிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**இலங்கை தூதரகம்**
**ரியாத்**

# இரண்டு வருடங்களுக்கு முன்னர் இவர்கள் சொன்னது என்ன?

**பொருளாதார நெருக்கடியால் நாடு அதல பாதாளத்தில் வீழ்ந்திருந்த போது அந்நாட்களில் சில அரசியல்வாதிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்களை இன்று இவ்வாறு நினைவுபடுத்துகிறோம்.**

## IMF செல்ல இலங்கை தாமதித்துள்ளது

**பொருளாதார நிபுணர்கள்**

கடும் அந்நியச் செலாவணி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்திடம் (IMF) செல்வதற்கு தற்போது மிகவும் தாமதமாகியுள்ளது என பொருளாதார நிபுணர்கள் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.


சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்ல வேண்டியதன் அவசியம் சில மாதங்களுக்கு முன்னர் வலியுறுத்தப்பட்ட போதிலும், இலங்கை தனது உள்நாட்டு கொள்கைகளுடன் பயணித்து சர்வதேச நாணய நிதியத்துடன் கூட தனது நிதிப்பிரச்சினையை தீர்த்துக் கொள்ள முடியாத இக்கட்டான நிலையை அடைந்துள்ளதாகவும் பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை அடுத்த வருடத்தில் கடுமையான நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் கலாநிதி டப்ளிவ். ஏ. விஜேவர்தன எச்சரித்துள்ளார்.

2021 டிசம்பர் 28

## தற்போது செல்லும் வழி மிகவும் ஆபத்தானது

**முன்னணி நடிகரும், மேடை நாடக இயக்குனருமான ஸ்ரீயந்த மெண்டிஸ்**



நல்ல விஷயமல்லவா நடந்திருக்கிறது? என மக்கள் எங்களை திட்டக் கூடும். எம்மைத் திட்டுவதில் அர்த்தமில்லை. நாமும் அவர்களைப் போன்று இன்று வரிசைகளில்தான் நிற்கின்றோம். நாம் இவ்வாறான ஒன்றை எதிர்பார்த்திருக்கவில்லையே. அந்தச் சந்தர்ப்பத்தில் இருந்த ஒரே ஒரு மாற்று வழியைத்தான் நாம் தெரிவு செய்தோம். மக்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். தற்போது செல்லும் வழி மிகவும் ஆபத்தானது. எல்லா பக்கத்திலிருந்தும் ஒவ்வொரு பிரச்சினை சேர்ந்து கொண்டுள்ளது. நாம் ஒன்று சேர்ந்து என்ன செய்ய வேண்டும்? இன்று எமது பிள்ளைகளுக்கு உணவு வழங்க வழியில்லை என்பது உண்மைதான். நாம் ஒரு துரதிர்ஷ்டவசமான யுகத்தை கடந்து சென்று கொண்டிருக்கின்றோம். இன்று வரிசைகளில் நிற்பதால் இரத்த அழுத்தம் அதிகமாக உள்ளது. உணவு இல்லாமல் வெயிலில் மணிக்கணக்கில் காத்திருப்பதால் அவர்கள் கோபமடைகின்றனர். உண்மையில் மக்களை நினைத்து மிகவும் வருந்துகிறேன். அந்த நிலை தற்போது எமக்கும் ஏற்பட்டுள்ளது.

## அரச வங்கிகள் வங்குரோத்து அடைந்துள்ளன

**வைப்பாளர்களின் பணம் அவர்களுக்கு கிடைக்காது சுனில் ஹந்துனெத்தி**

2023 ஜூன் 07

தற்போது இலங்கை வங்குரோத்து அடைந்த நாடாக இந்திய சமுத்திரத்தில் முடிசூடிக் கொண்டுள்ளது. எந்தவித பொருளாதார நோக்கும் இல்லாத ராஜபக்ஷ கூட்டத்திடம் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் சிக்கிக் கொண்டனர்.



2019ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்தின் போது, ராஜபக்ஷ கூட்டத்திடம் நாட்டை முன்னே ற்றும் திட்டம் இல்லை என்று தோன்றியது.

எனினும் ஈஸ்டர் தாக்குதலின் ஊடாக மக்கள் மத்தியில் மனோரீதியான அச்சத்தை ஏற்படுத்தி, மக்கள் பொறுப்பற்ற வகையில் வாக்களிக்கும் நிலைக்கு உள்ளானார்கள்.

ஒரு மாதத்திற்கு இலங்கைக்கு பணம் அனுப்ப வேண்டாம் என நாம் வெளிநாட்டில் தொழில் புரிபவர்களிடம் கூறுகின்றோம்.

அவர்கள் இந்த தீர்மானத்தை எடுப்பார்களாயின், ஒரு மாதத்திற்கு இலங்கைக்கு வெளிநாட்டுச் செலாவணியை அனுப்பாமல் விடுவார்களாயின், மூன்று மாதங்கள் வெளிநாட்டுச் செலாவணியை அனுப்ப மாட்டோம் என தீர்மானம் ஒன்றை மேற்கொள்வார்களாயின் அவர்களால் அரசாங்கத்தை ஆட்டம் காண வைக்க முடியும்.

இந்நாட்டு அரச வங்கிகள் தற்போது வங்குரோத்து அடைந்து விட்டன என்றும், வரும் காலங்களில் வைப்பாளர்களின் வட்டியினை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.

சிலவேளை வரும் காலத்தில் வைப்பீட்டாளர்களின் வைப்புக்களையும் கூட திரும்ப பெற முடியாத நிலை காணப்படுவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இணையத்தள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

**இலங்கைக்கு ஒரு சதமேனும் அனுப்ப வேண்டாம்!**

## இலங்கையில் அரச பயங்கரவாதம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.



அரச பயங்கரவாதம் செயற்படும் ஒரு நாடு என்ற வகையில் இலங்கைக்கு பணம் அனுப்புவதிலிருந்து விலகி இருக்குமாறு வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களிடம் கேட்டுக் கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினா் சரத் பொன்சேகா வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

“இந்த அரச பயங்கரவாதம் நிறுத்தப்படும் வரையில் இலங்கைக்கு ஒரு சதத்தையும் கூட அனுப்ப வேண்டாம் என வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களிடம் கௌரவமாகக் கேட்டுக்கொள்கிறேன். நாம் பசியால் மரணிப்பதற்கும் ஆயத்தமாக இருக்கிறோம்.

இந்த நாட்டிற்கு ஐந்து சதத்தைக் கூட அனுப்ப வேண்டாம். இந்த அரசுக்கு உதவ வேண்டாம்.

IMF இடமிருந்து கிடைப்பவை கிடைக்கும் என்றார். நாங்கள் பெருமைப்படுகிறோம்.

இது சரியாக ஒரு பிச்சைக்காரனுக்கு ஸ்வீப் டிக்கெட் பரிசு கிடைத்ததைப் போன்றதாகும். எனினும் இந்த அரச பயங்கரவாதம் இருக்குமாக இருந்தால், இவை கிடைப்பதற்கு நாம் தகுதியானவர்களா இல்லையா என்பதில் எனக்குள் ஒரு கேள்வி எழுகின்றது.

## வீட்டிலேயே நோயைக் குணமாக்க முடிந்தால் வைத்தியசாலைகளுக்குச் செல்ல வேண்டியதில்லை

**IMF செல்லாததற்கான காரணத்தை கூறும் கப்ரால்**



2021 செப்டெம்பர் 27

இலங்கையின் தற்போதைய நிதி நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இந்த நேரத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) ஆதரவு தேவையற்றது என்றும், சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தில் இணைந்து கொண்டால் அதிலிருந்து வெளியேறுவதற்கு சுமார் 10 வருட காலம் எடுக்கும் என்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரவித்தார். அண்மையில் எட்வோகாடா நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மெய்நிகர் (ஒன்லைன்) இணையத்தள கலந்துரையாடலின் போதே மத்திய வங்கி ஆளுநர் இதனைக் கூறனார். "தற்போதைய சூழ்நிலைக்கு முகங்கொடுக்க எம்மால் முடியும் என்று நான் நினைக்கிறேன். எமக்கு எமக்கேயுரிய வேலைத்திட்டத்தை உருவாக்கிக் கொள்ள முடியும். அதனால்தான் நாங்கள் அதைச் செய்கிறோம். அதன் ஊடாக முன்னேறிச் செல்லக் கூடிய பயணத்தைத்தான் நாம் மேற்கொள்கிறோம்” என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் மேலும் தெரிவித்தார். .

“IMF எமது போட்டியாளர் அல்ல. IMF உடன் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. நாம் ஒரு சந்தர்ப்பத்தில் தொழில்நுட்ப உதவியை அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டோம். அதற்காக நாம் அவர்களின் நிகழ்ச்சிக்குள் செல்ல வேண்டியதில்லை. அதைத்தான் நாம் கூறுகின்றோம். நம் நாட்டில் எழுத்தறிவில் நிறைய முன்னேற்றம் கண்டுள்ளோம். எங்களிடம் தகவல்கள் உள்ளன. எம்மால் எமக்குத் தேவையான வேலைத்திட்டத்தை உருவாக்கிக் கொள்ள முடியும். அதனால்தான் நாம் அதனைச் செய்கிறோம். இதன் ஊடாக நாங்கள் ஒரு பயணத்தை மேற்கொள்ளப் போகிறோம், அதன் மூலம் நாம் முன்னேற முடியும்"

“வாஷிங்டனில் இருந்து ஒருவர் வந்து இரண்டு வாரங்கள் நம் நாடு தொடர்பில் ஆராய்ந்து பார்த்து, அது தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுப்பதா எமக்கு மிகவும் பொருத்தமானது, அல்லது இந்த நாட்டிலேயே, இந்நாட்டிற்குப் பொறுப்புக் கூறக்கூடியவர்கள் செய்வது பொருத்தமானதா என்பதை நாங்கள் முதலில் தீர்மானிக்க வேண்டும். நான் இதற்கு முன்னர் IMF மற்றும் உலக வங்கியுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்ட போது கூறியிருக்கின்றேன், உங்களுக்கு இலங்கை என்பது நீங்கள் எழுதும் அறிக்கையாகும். அந்த அறிக்கை வெற்றியளித்தாலும், தோல்வியடைந்தாலும் அதே நிலைதான். நீங்கள் அந்த அறிக்கையை எழுதிவிவிட்டு பின்னைய காலத்தில் உங்களது சுயவிபரக் கோவையை எழுதும்போது இந்த அறிக்கையை நீங்கள் எழுதியதாகக் கூறுவீர்கள். எமக்கு அவ்வாறில்லை. இது எங்கள் நாடு. இது எங்களது பொருளாதாரம், இது எமது மக்கள். யாரிடம் அதிக அக்கறை இருக்கும்? மத்திய வங்கியில் பொருளாதார நிபுணர்கள் பலர் பணியாற்றுகின்றார்கள். அவர்கள் துறை தொடர்பில் சிறந்த அறிவினைக் கொண்டவர்கள். இந்த நாட்டைப் பற்றி நன்கு புரிந்து கொண்டவர்களால் திட்டம் உருவாக்கப்படுவது சிறந்ததா? அல்லது எமது நாட்டைப் பற்றித் தெரியாதவர் உருவாக்கும் திட்டம் சிறந்ததா என்பதுதான் முக்கியமானது”

## நெருக்கடிக்கான காரணம் மோசமான பொருளாதார முகாமைத்துவமா?

**ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன**



**தவறான முகாமைத்துவத்தின் காரணமாகவே நாட்டிற்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.**

“எந்த ஒரு நாட்டிலும் பணவீக்கம் இலங்கையைப் போன்று உயர்வடையவில்லை. 2019ஆம் ஆண்டிலிருந்து தற்போது 2021ஆம் ஆண்டு வரைக்கும் பணவீக்கம் 10.5இனால் அதிகரித்துள்ளது. கடந்த சில மாதங்களில் மட்டும் 600 கிலோவுக்கும் அதிகமான தங்கத்தை மக்கள் விற்பனை செய்துள்ளனர்”

இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற வேண்டுமா இல்லையா?


"பொருளாதார மந்தநிலை" என்றால் என்ன?

"இலங்கையை விட கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்ட நாடுகள் உள்ளன. எனினும் அந்த நாடுகளின் பொருளாதாரம் வீழ்ச்சியடையவில்லை. இவ்வாறு பொருளாதார சுனாமி ஏற்படவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளில் மாத்திரம், 1.5 டிரில்லியன் பணம் அச்சிடப்பட்டுள்ளது.

பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் வேகத்தை கற்பனை செய்து கொள்ள முடியும்" என்றும் பாராளுமன்ற உறுப்பினர் கூறினார். தவறு அரசின் பொருளாதார முகாமைத்துவத்தில்தான் உள்ளது. டொலரின் மதிப்பைச் சரியாக நிர்ணயித்திருந்தால், இந்த நிலை ஏற்பட்டிருக்காது"

## மக்கள் அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வை எதிர்பார்க்கிறார்கள்

**ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே. சி. அலவத்துவல**



“நாட்டின் தற்போதைய நிலையைப் புதிதாகச் சொல்லத் தேவையில்லை. முன்னர் ஒருபோதும் இல்லாதவாறு எரிபொருளுக்கான நீண்ட வரிசைகள் ஏற்பட்டுள்ளன. அது எப்போது குறுகியதாக மாறும்? வரிசையில் நிற்காமல் எவ்வாறு மக்கள் எரிபொருளை நிரப்பிக் கொள்வது என்ற கேள்வி எழுந்துள்ளது.

மக்கள் தங்கள் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வை எதிர்பார்க்கிறார்கள். இந்த நாட்டில் குடும்ப ஆட்சிக்கு எதிரான மக்கள் போராட்டம் வெடித்துள்ளது, கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறும் நிலைக்குச் சென்றது.

அதன் மூலம் தற்போது பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியை நியமிக்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

69 இலட்சம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இந்நாட்டு மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை வாழ முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். பொருட்களின் விலை விண்ணைத் தொடுமளவுக்கு உயர்ந்தது. பெட்ரோல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மக்கள் வீதிகளில் மரணிக்கும் நிலைக்கு உள்ளாகியுள்ளனர். தமது குழந்தைகளுக்கு மூன்று வேளை அல்ல, ஒரு வேளை கூட உணவு கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இன்று பாராளுமன்றத்தில் உள்ள 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அரசியலமைப்பின் படி மீதமுள்ள காலத்திற்கு ஒரு ஜனாதிபதியை நியமித்துக் கொள்ளும் வாய்ப்பே அதுவாகும்.

இங்கு, மக்கள் என்ன சொல்கிறார்கள், கோரிக்கைகள் என்ன, மக்களின் அன்றாட பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ளது. நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பது பாராளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பாகும்.

அமைச்சரவை கூடித்தான் உரங்களை தடை செய்ய முடிவு செய்தது. வரிச்சலுகை வழங்குவதற்கு அவர்கள் இணைந்து செயல்பட்டனர்.

## வெளிநாட்டுக் கடனாக ஒரு சதம் கூட இந்நாட்டிற்கு கிடைக்காது



**சர்வதேசம் எதிர்பார்க்கும் அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பை** மேற்கொள்ளும் வரைக்கும் வெளிநாட்டுக் கடனாக ஒரு சதம் கூட இந்நாட்டிற்கு கிடைக்காது.

சர்வதேச சமூகம் எதிர்பார்க்கும் அரசியல், பொருளாதார சீர்திருத்தங்களை நிறைவேற்றும் வரையில் வெளிநாட்டுக் கடனாக ஒரு சதம் கூட நாட்டுக்கு கிடைக்காது என எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரி எல்ல கொழும்பில் தெரிவித்தார்.

நாட்டை கட்டியெழுப்புவதற்கு தேவையான பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் சர்வதேச கடன் உதவிகள் தொடர்பில் கனவு காண்பதில் பயனில்லை எனவும் கிரியெல்ல குறிப்பிட்டார்.

## இலங்கைக்கு கடன் வழங்கல் ஐ.எம்.எப் பரிசீலிக்க வேண்டும்



**இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு சரியான** பொறிமுறை ஏற்படுத்தப்படாத நிலையில் கடன் வழங்குவது தொடர்பில் ஐ.எம். எப் பரிசீலனை செய்ய வேண்டும் என வடக்கு மாகாண சபை முன்னாள் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் கடந்த ஆண்டு இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சீனா தற்போது உலகில் குறைந்த பணத்தை கூடிய வட்டிக்கு கொடுக்கும் நாடாக மாறி வருகிறது.

இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளில் சீனாவே அதிக கடன்களை வழங்கியுள்ள நிலையில் தான் வழங்கிய கடனை எந்த வழியிலும் சீனா மீளப்பெறுவது நிச்சயம்.

சர்வதேச நாணய நிதியம் சீனா இலங்கைக்கு வழங்கிய கடன் தொடர்பில் சரியான பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துமாறு கூறி வரும் நிலையில் இதுவரை அவ்வாறு நடந்ததாக தெரியவில்லை. நாங்கள் ஒன்றை கூறுகிறோம், இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு சரியான பொறிமுறை ஏற்படுத்தப்படாத நிலையில் கடன் வழங்குவது தொடர்பில் ஐ எம் எப் பரிசீலனை செய்ய வேண்டும்.

**எம். எஸ். முஸப்பிர்**




# உழைக்கும் கரங்கள்



உலக நியதிகள் எத்தனை உண்டு
உயிர்கள் வாழ்வதற்கு
உழைப்பே அவசியம்
உண்மையாக உழைக்கும் கரங்கள்
உருப்படியான
சாதனைகளைச் செய்யும்

உள்ளன்போடு உழைக்கும் போது
உவகை தரும் வெற்றிகள் குவியும்
வெற்றிகள் குவிவதால்
வாழ்வும் உயரும்
வெல்வது மீண்டும்
வெற்றியைத் தரும்

உழைத்து உழைத்து உயர்ந்த
உள்ளங்கள் சில உண்டு
உழைத்து உழைத்து வாடிய
உன்னத மனிதர்கள் பலருண்டு

உண்மையான நேர்மையான
வாழ்வு எதுவெனில்
உழைப்பினால் உயர்ந்து நிற்கும்
வாடாத மனிதர் வாழ்வே

இன்றைய உலகிற்கு
இனிமை தருவது
இளைய தலைமுறையின்
இடைவிடாத உழைப்பன்றோ

துன்பங்கள் போக்கவும்
துயரங்கள் போக்கவும்
துணையாக இருப்பது
உழைக்கும் கரங்கள் அன்றோ

**குப்பிளான் குமரன்**

# ஊர்கள் மேய்ந்த வெள்ளைப் பசு!

அக்கணம் எங்கள் வெம்மைக்கு
பூச்செண்டு போலிரிந்தது....
பின்னரது ஒரு போர்வைக்குள்
இதமாய் தள்ளியது
பின்னந்தியின்
தூவானச் சிலிர்ப்பு
குளிர்வாசியாக்கி
இரவோடு இரவாக
முன் பந்தியில்
கையேந்த வைக்கும் கைங்கரியம்
கேள்வி கணக்கு இல்லாமலேயே
கேலிக் கணக்கானது.
அணிந்திருந்ததை தவிர
ஆடைகள், ஆவணங்கள் எங்கள்
ஆயுளுக்கும் போதுமான
சில்லறைச் சேமிப்புகள்
அனைத்தும் நனைத்து
துளித்துளியாக
துவட்டப்பட்டு
கை, கால் முளைக்க
கால்வாயில் கரையேறின....
குலம், கோத்திரம் கேட்டு
ஊர்ந்து ஊர்ந்து ஊருக்குள்
குதித்து பாய்ந்தது பேராறு
அக்கணமே
மழையடித்த பெருநகரம்
கிலி பிடித்த பெரும் நரகமானது
பாத்திரம் இல்லாததால்
பசி கண்களில் இறங்கி
களி நடனமாடியது.....,
பலதுளிகள் சில.. கணங்களில்
குதித்தல் கொப்பளித்தல்,
கொந்தளித்தலென
கூடுமாறி, மேடுதாவி
கால்வாய்களில் சுளித்து
நகர்கிறது நீர்ப் பாம்பு
பின்னரது வேறொரு கூட்டிற்கு
தாவுகிறது
கண்களை சமுத்திரத்துடன்
சமப்படுத்தியபடி
ஊரை மேய்ந்து விட்டு
கடலை அடையும்
வெள்ளப் பசுவாக!

**ரோஷான் ஏ.ஜிப்ரி**
வாங்காமம்

# என் இராக்காலம்

அல்லி மொட்டு
மலரும் நேரமிது
சந்திரனுக்கு
இத்தனை துணையா?
கணக்கிட்டு கணக்கிட்டு
கைவிரல்கள்கூட
சோர்ந்துவிட்டதே

கூட்டைத் தேடிய
ஆண் துணை
சிறகுகள் அணைப்பில்
துயில்கொள்ளும்
பெண் பறவைகள்
ஆஹா எத்தனை அழகு

இத்தனை அழகையும்
தனியே ஒருவனாக
சுவைப்பதுதான்
கொடுமை கிளியே!

என்அருகில் உன் நிழல்
இருந்தால் போதுமடி
என் பிதற்றலைக் கேட்டு
நீ திட்டித்தீர்க்கும்
வார்த்தைகளின்றி
கழியுது
என் இராக்காலம்

*பழனிவேலு அருந்ததி, கொழும்பு –13*

# அருட்கொடை

இறைவன் தந்த அருட்கொடை
நிறைவாய் வழங்கு மகிழ்வை
மனதும் நிறையும் உன்னால்
மாநிலம் செழிக்கும்
உன் பிறப்பால்

கேட்டால் தருவாய் முத்தம்
கேளாமல் போடுவாய் சத்தம்
விஞ்சும் உனது சேஷ்டைகள்
அஞ்சும் வீட்டுப் பிராணிகள்

அன்னநடையோ கால்கள்
பின்னலிடையோ கைகள்
கன்னமோ மாம்பழங்கள்
கடித்தால் வருமோ சுகங்கள்

கிள்ளை மொழியோ
கொள்ளை கிறுக்கும்
அழகோ தொல்லை
முல்லை மலரோ புதுமை
முகில் விடும் உன் பார்வை

நீயோ எனக்கு சொந்தம்
நிழல் தருவாய் நாளை ரதங்கள்
ஏனோ இறைவன் தந்தழகு
ஏற்றமாய் வாழ கல்வி கற்றிடு

**தோப்பூர்.எஸ் சிராஜுதீன்**
நற்பிட்டிமுனை



# வாழ்வின் வழித்துணையே...!

புன்முறுவல் தேசத்தின்
புன்னகைக்கும் மன்னவனாய்
பிள்ளையிவள் நெஞ்சமதில்
நிலைத்திருக்கும் தென்னவனாய்
அவதரிக்கும் என் தந்தையே !

ஈயெறும்பு தீண்டிடாமல்
கண் கறுப்பு பட்டிடாமல்
நானிலத்தார் போற்றும் படி
வழிகாட்டும் ஒளி விளக்காய்
அவதரிக்கும் என் தந்தையே !

படைத்தோனை மறவாமல்
பெரியோரை நோகாமல்
பெருமையுடன் நான் வாழ
சீராட்டும் ஆசானாய்
அவதரிக்கும் என் தந்தையே !

அன்பினால் அமுதூட்டி
அறிவினால் வலுவூட்டி
பரிவுடன் பண்பூட்டி
பாதுகாக்கும் காவலனாய்
அவதரிக்கும் என் தந்தையே !

உண்மையால் உணர்வூட்டி
உள்ளத்தால் களிப்பூட்டி
உதிரத்தால் உயிரூட்டி
உடன் தாங்கும் தாயாய்
அவதரிக்கும் என் தந்தையே !

என் அறிவின் பிறப்பிடமாய்
என் வெற்றியின் உரித்திடமாய்
என் திறமையின் ஊற்றிடமாய்
என் வாழ்வின் வழித்துணையாய்
அவதரிக்கும் என் தந்தையே !

நல்லவற்றை கற்றுத் தந்தீர்
நலவாய் நான் வாழ்வதற்கென்று
நல்ல வழி காட்டித் தந்தீர்
நடைபிறழா நான்
நடப்பதற்கென்று
தனக்கின்றி உம் வாழ்வை
நான் வாழ செப்பனிட்டீரே !

என் தந்தையே...!
மறைந்திடாப் புகழ் கொண்டு
மண்ணாளும் மன்னவனாய்
இம்மனை ஆளும் உம்வாழ்வு
ஈருலகிலும்
செழித்தோங்க
ஈடற்ற
இறையோனை நான்
இடைவிடாமல்
இறைஞ்சுகிறேன்
என்
நெஞ்சமதில் நிறைவாக!

**சஹீகா சாஜஹான்**
மருதமுனை



# மனிதரில் எத்தனை முகங்கள்



கலை நெஞ்சங்களின்
கலங்காத உறவுகள்...
நீங்காத நினைவுகள்...

குறுகிய வட்டத்திற்குள் ஏன்
குதிரை ஓட்டங்கள்....
பந்தயம் பிடித்து பாதியிலேயே
பிரிந்திடுவீர்...
பொறாமையும் வஞ்சகமும்
பொல்லாத போக்கப்பா....

காகிதப் பூக்களைப் போல
காற்றோடு பறந்திடாது அதோ!!
உயர்ந்து நிற்கும்
வளர்ந்த ஆல மரத்தைப் பார்
ஆயிரம் விழுதுகள்...
கிளைகள் விரித்து நிழல்கள் தர்
மமாய்
மானிட குலத்திற்கு சிந்தனை
மருந்து போல...
விருந்துபோல....

பரந்து விரிந்து கிடக்கும்
பூமி போல சிந்தனை செய்!!

நட்பு என்னும் வட்டத்துக்குள்
நயவஞ்சகாரர்களின் வலைவி
ரிப்பு...
இலக்கியம் பேசிடுவார்
இலக்கணம் பூசிடுவார்
நல்லவர் போல் நாடகம் ஆடி
சாத்தான் வேஷம் கொண்டு
சாட்சியம் கூறுவார்.

கலைவட்டத்திற்குள் வஞ்சனை
செய்யாதே..!
வார்த்தையால் கொல்லாதே..!
இலை மறை காயாய்
துளிர்விடும் ஒளி தனை
திரை போட்டு மூடாதே!
வழியில் விழி வைத்து மறிக்
காதே!!

**கவிதாயினி. மாஜிதா தவ்பீக்**
மருதமுனை

# அன்பு கொள்ளுங்கள்



பிடித்தங்கள் பிடிப்பாய் ஆகட்டும்
அந்தப் பிடிப்பு நீங்கள் கொடுக்கும்
அன்பாய் மட்டுமே இருந்துவிடட்டும்

அதற்காக மட்டுமே
அவ்வுறவுகள் உமை
பற்றிக் கொண்டதாய் இருக்கட்டும்

உறவுகளை கொண்டாட வேண்டும்
என்றில்லை
உணர்வுகளை கொன்று போடாமல்
இருந்தாலே போதும்

நீ என்னில் கலந்தாலும்
நான் உன்னில் கலந்தாலும்
இரண்டும் வேறில்லை

உப்பு கலந்திட அந்நீர்
உவர்நீர் மட்டுமே தானே
கரிக்கத்தானே செய்யும்

உறவுகளும் ஏனோ
அப்படி இருந்திடுவதில்லை

விட்டுக்கொடுப்பதில் அல்ல நிலைக்கும்
உறவுகள்
விட்டு விலகாது பிடித்து வைப்பதில்
நீடிக்கும் உறவுகள்

இன்றெல்லாம் விட்டுவிட
விலகி ஓடும் உறவு
களே மிகை

ஒருவரின் உணர்வை
உள்வாங்கத் தெரியாவிடத்து
சாத்தியமில்லை அங்கே உறவுகள்
அவ்வுறவுகள் பகட்டுக்காய்
யாவரையும் கவரும் உறவாய்
தம்மை காட்டிக்கொள்ளும் அவ்வளவே.

அது எவ்வுறவாயினும்
உணர்வை உயிராய் கொள்ளுங்கள்
அவ்வுறவோ உங்களை
உயிராய் கொள்ளும்

அன்பினால்
அன்புக்காக மட்டுமே
அன்பு கொள்ளு(டு)ங்கள்

(இமையி)

# மாற்றங்களை கடந்து போ...

உங்களுக்குள் நீங்கள்
உரையாடிக் கொண்டிருப்பதை
சற்று மாற்றி பேசிக்கொள்ளுங்கள்,
பிரச்சினைகளுக்கு அதற்கான
தீர்வுகள் இடம் மாறியிருக்கலாம்...
பறவைகளும் காற்றுவெளியில்
பறக்கும் போது,காற்றின்
அமுக்கம் சற்று கூடிக்கொண்டாலும்
அதன் இறகுகளை நிலைக்கேற்ப
விரித்து தன் பறத்தலை தொடரும்...
மாறாக பறவைகள் தரையில்
வீழ்ந்து இறந்து போவதில்லை ...
பிரச்சினைகளை தீர்ப்பதற்கு
அதற்கான வழிகள்
பிரச்சினைகள் நீடிப்பதல்ல...
பிரச்சினைகள் என்பது அவரவர்
பேசிக் கொண்டிருப்பதல்ல
அவை தீர்க்கப்படுதல்...
பிரச்சினைகள் என்பது
அழுக்குகள் ஒட்டிக்கொண்ட
கழற்றிப்போடும்
ஆடைகள் போன்றது ...
நீங்களும் பறவைகளின்
இறகின்பறத்தலை போன்று
வாழ பழகிக்கொள்ளுங்கள் ...
இங்கு எதையும்
மாற்றிவிடப் போவதில்லை
எவரும் மாறிவிடப்
போவதுமில்லை
நீ... நீயாகவே மாற்றங்களை
கடந்துப்போ...

*முஸம்மில் கமர்தீன் , கொழும்பு*



# பணவீக்கமாம்

ஸ்கூலில் ஏதோ
விழாவாம் அதில் பேச
பேச்சொன்று
எழுதித்தாங்கம்மா என்று
தன் உம்மாவிடம்
என் சின்ன மகன் நித்தம்
நச்சரிக்க........
வாப்பாவிடம் கேள்
மகனே அவர்தான்
நன்கதை எழுதிடுவார்
போய்க்கேளென
நழுவிட என் மனைவி
மாட்டிக் கொண்டேன் நான்.
என்ன மகனே
நிகழ்ச்சியென்று நானும் கேட்க
நான்
அதிர்ந்திட மகனும்
சொல்லிவிட்டான்
இங்லிஷ் பேச்சு
வாப்பா என்று...
சரி பாப்போம் என்றுவிட்டேன்
என்ன தலைப்பு என்றுகூட
கேட்கவில்லைநானும்
இங்கிலிஷ் என்றால்
என்ன தலைப்பில்தான்
நமக்கேலும்
என நினைத்து.....
நகர்ந்தாலுமவன்
மனப்பாடம்
பண்ணவேண்டுமே
என்றெண்ணி
போலும் விடுவானா
என்னை........
அழைத்து அவனை
சொல்லிப்பார்த்தேன்
மனப்பாடம் செய்ய வேணும்,
வெள்ளக்காரன் போல
பேச வேணும்
உனக்கது கஷ்டம்
மகனே தமிழ் நலமே
என்று பார்த்தால்.......
முடியும் என்னால்
நான் செய்வேன்.
தாங்க வாப்பா
எழுதி என்றான்.
போன வருஷம்
நானா பேசின
இங்லிஷ்லதானே,
அது எப்படி
முடிந்தது என்றான்....
நொந்துபோனேன்
சொல்லவா ஏலும்
மகனே அதை
எழுதியது
வாப்பாவல்ல
பக்கத்துவீட்டு டீச்சர்
மாமிதானென்று.....
விடமாட்டான் இனி
என்னை என்று
விளங்கி நானும் கேட்டேன்
என்ன விழா,
எதைப்பற்றி, எத்தனை
நிமிடம் பேசவேணும்
என்பதெல்லாம்.....
முயற்சி செய்வோம்
மனைவியும் உதவி
செய்வாள்தானே
என்று நினைத்து.......
ஆரம்பித்தேன்
நம்பிக்கையுடன்
பன்மொழிஆற்றல்
பெற்ற மனையிடமும்
பெற்றேன் மிக்க
உதவி அதை எழுத.....

மனனமிட எழுதி
இங்குலிஷில் போதாதே
அவனுக்கு
எழுதியும் கொடுத்தேன்
தங்குலிஷிலும்....
விழாவுக்கின்னும்
நெடுநாளில்லை
பாடமாக்கு உம்மாவுடன்
சேர்ந்து
என்று தாளைக் கொடுக்க......
கேட்டானே கேள்வியொன்று
ஆடிப்போக
நான் சற்று......
பாடமாக்கி நானிதை
நன்கு பேசிக்காட்டினால்
சைக்கிளொன்று
வாங்கி
தருவீங்களா என்று........

இப்போ அதன்
விலை, என்நிலை
எடுத்துச் சொல்லி
வெக்கத்துடனே
சொல்லிப்பார்த்தேன்
கொஞ்ச நாள்
போகட்டும் மகனே
வாங்குவோம் பொறு என்று
கண்டு பிடித்தான் நான்
மழுப்புகிறேன் என்று.......
பிழையில்லை
அவன் புரியாத வயது.....

இறைவன்தான் எனக்கொரு
வழி காட்டவேணும்

*ஹொரோவ்பொத்தான அகமட் இஸ்தியாஸ்*

# மறுத்திருப்பேன்...

இத்தனை
இன்பங்கள்
சுமந்தவள் நீயென
இறைவன்
அறிந்திருந்தால்
உன்னை
படைக்க அப்போது
மறந்திருப்பான்...

இத்தனை
துயர் என்னை
சூழுமென்று
அன்றே தெரித்திருந்தால்
உனை சந்திக்க
நானும் மறுத்திருப்பேன்...

*கவி பாரதி, வத்தளை*

# அதிசொகுசு வாழிட அனுபவத்தை வழங்கும் Prime Residencies



இலங்கையின் முன்னணி ரியல் எஸ்டேட் வடிவமைப்பாளரான Prime Lands Residencies PLC, தனது 'The Seasons Colombo Eight' திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

கொழும்பு 8 இன் பெருமைக்குரிய வதிவிடப் பகுதியில், அதி சொகுசு வாழிட அனுபவத்தை வழங்கும் வகையில் இந்த நவீன கட்டடக் கலை அம்சம் அமைந்துள்ளது.

கொழும்பு 08இன் சந்திரலேகா மாவத்தை மற்றும் ஃபெயார்ஃபீல்ட் கார்டன்ஸ் போன்ற மக்கள் செறிந்து வாழும் பகுதியில் அமைக்கப்பட உள்ளது. வதிவிடத் தொகுதியாக அமைந்துள்ள 'The Seasons Colombo Eight' இனூடாக, பிரத்தியேகமான, உள்ளக மற்றும் விருப்பத்திற்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ளத்தக்க சொகுசான வாழிட அனுபவங்கள் கொழும்பின் பிரதான பகுதியில் வழங்கப்படுவதுடன், மட்டுப்படுத்தப்பட்ட 44 வசிப்பிடப் பகுதிகளை மட்டும் வழங்குகின்றது.வதிவிடங்கள் அனைத்தும், 2000 சதுர அடிப்பரப்பில், மிகச் சிறந்த சௌகரியத்தை வழங்கக்கூடிய வகையில் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் புதிய நிர்மாணத் திட்டம் தொடர்பில் Prime Lands Residencies PLC பணிப்பாளர் ஷெஹானா ப்ராஹ்மனகே கருத்துத் தெரிவிக்கையில், "44 வசிப்பிடங்களை மட்டும் கொண்ட 'The Seasons Colombo Eight' எனும் அதிசொகுசு வசிப்பிடத் தொகுதியை அறிமுகம் செய்வதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம் என்றார்.

# "பஜாஜ் ஜெனுவின் புதையல்" அகழ்வதற்கல்ல சுரண்டுவதற்கே



இலங்கையின் முன்னணி மோட்டார் நிறுவனமான டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடட் நிறுவனத்தினால் பஜாஜின் வாடிக்கையாளர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட "பஜாஜின் ஜெனுவின் புதையல் அகழ்வதற்கல்ல சுரண்டுவதற்கு' மாபெரும் பரிசுப்போட்டியின் வெற்றியாளர்களுக்கு அண்மையில் பரிசுகள் வழங்கிவைக்கப்பட்டன.

நாடு முழுவதிலும் வியாபித்துள்ள 25 இலட்சத்துக்கும் அதிகமான பஜாஜ் வாடிக்கையாளர்களுக்காக டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடட் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த வருடாந்த மாபெரும் பரிசுப் போட்டி இம்முறை 2024 ஜனவரி மாதம் 26ஆம் திகதி முதல் மார்ச் 31ஆம் திகதி வரை செயற்படுத்தப்பட்டது.

நாடு முழுவதிலும் விஸ்தரிக்கப்பட்டுள்ள உதிரிப்பாக விற்பனை நிலையங்கள் மற்றும் டீலர்களிடம் பஜாஜ் ஜெனுவின் உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்த வாடிக்கையாளர்கள் பஜாஜ் ஜெனுவின் உதிரிப்பாக பொதிகளில் காணப்படும் யானைக் குட்டிச் சின்னத்துடன் கூடிய ஹொலோகிராம் ஸ்டிக்கரைச் சுரண்டி அதில் காணப்படும் இலக்கத்தை 0777665577 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு குறுஞ்செய்தியாக அனுப்பிய பின்னர் இந்தப் போட்டியில் பங்கெடுப்பதற்கான வாய்ப்புக் கிடைத்தது.

இம்முறை இந்தப் போட்டியில் நாடு முழுவதிலுமிருந்து 5 இலட்சத்துக்கும் அதிகமான பஜாஜ் வாடிக்கையாளர்கள் குறுஞ்செய்தியை அனுப்பி இணைந்துகொண்டனர். பஜாஜ் ஜெனுவின் புதையல் பரிசுப் போட்டியின் இறுதிச் சீட்டிழுப்பின் முதலாவது வெற்றியாளருக்கு 7.5 இலட்சம் பெறுமதியான புத்தம் புதிய பஜாஜ் டிஸ்கவர் 125 மோட்டார் சைக்கிள் பரிசளிக்கப்பட்டதுடன், யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையை வதிவிடமாகக் கொண்ட சற்குணராஜா தனுஜன் இந்த முதல் பரிசை வெற்றிகொண்டார்.

# நீண்ட காலக் கடன்களை SMEகளுக்கு வழங்கவுள்ள செலான் வங்கி



செலான் வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் இலங்கை அரசாங்கத்துடன் (GoSL) இணைந்து, சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையை (SME) மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு ADBயிலிருந்து செயற்பாட்டு மூலதனம் மற்றும் நீண்ட காலக் கடன்களை வழங்கவுள்ளது.

பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் உள்ளூர் வணிகங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் செலான் வங்கி, விவசாயம், மீன்பிடி, அலங்கார மீன் வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, சுற்றுலா மற்றும் ஏற்றுமதி சார்ந்த வணிகங்கள் உட்பட பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு இந் நிதி உதவியை வழங்கும். செலான் வங்கி, இலங்கையில் ADBயின் நிதியுதவியின் ஒரு நிலையான பங்காளியாக இருந்து வருகிறது. ADBயின் கடன் வரம்புகள் மூலம் வங்கியானது கடந்த காலங்களில் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்கள் மற்றும் சிறு தேயிலை உரிமையாளர்களுக்கு கடன்களை வழங்கியுள்ளது.

தங்கள் செயற்பாட்டு மூலதனத்தை அதிகரிக்க விரும்பும் SMEகள், மூன்று வருட காலத்திற்கு கவர்ச்சிகரமான வட்டி வீதம் ஊடாக பயனடைவர்.

மேலதிகமாக, கட்டடம் கட்டி முடிக்கும் பணி, நிலையான சொத்துக்களை வாங்குதல் அல்லது வணிக தேவைக்கான வாகனங்களை வாங்குதல் போன்ற பிற தேவைகளுக்காக, திருப்பிச் செலுத்த ஐந்து வருட கால அவகாசத்துடன் கூடிய கடன்கள் கிடைக்கும்.

# நாவலையில் புதிய கிளையை திறக்கிறது Street Burger

இலங்கையின் அசல் சுவையான பர்கர்களின் வீடான 'Street Burger' இப்போது நாவலையில், அதன் 4வது கிளையினை திறந்து வைத்துள்ளது. உணவகத்தின் உயர்ந்து வரும் பிரபலத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் வகையிலும், அதிகமான வாடிக்கையாளர்களை ஈர்க்கும் வகையிலும், நாடு முழுவதும் உள்ள உள்நாட்டு சங்கிலியின் தொடர்ச்சியான விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக இந்தக் கிளையின் திறப்புவிழா அமைகிறது .



'பிரத்தியேகமாக கையால் வடிவமைக்கப்பட்ட பர்கர்கள் மற்றும் அதன் தனித்துவம்மிக்க சுவைகளை மக்களுக்கு வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், மேலும் நாங்கள் இப்போது நாவலையில் உள்ள எங்களது புத்தம் புதிய விற்பனை நிலையத்திற்கு வாடிக்கையாளர்களையும் உள்ளூர்வாசிகளையும் வரவேற்பதற்கு ஆவலுடன் காத்திருக்கிறோம்,' என்று Street Burgerன் இணை ஸ்தாபகரும் பணிப்பாளருமான மசூன் சமூன் தெரிவித்தார். 'இலங்கையில் பர்கர் தயாரிப்பில் புரட்சியை ஏற்படுத்தியதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம், மேலும் சுவையுடன் கூடிய புதுமையான மெனுவை வழங்குவதன் மூலம் எம்மை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.' என்றும் மேலும் அவர் குறிப்பிட்டார்.

2016 ஆம் ஆண்டு மரைன் டிரைவில் எளிமையாக ஒரு பாப்அப் உணவு டிரக்கில் விற்பனையை ஆரம்பித்து, காலப்போக்கில் அது வளர்ச்சியடைந்து Street Burger இப்போது இலங்கையில் 'தி' பர்கர் உணவகம் என்ற நற்பெயரை உறுதிப்படுத்தியுள்ளது. பர்கர்கள் மட்டுமல்லாது, பிற சிற்றுண்டிகள் மற்றும் ஷேக்ஸ் என, நாவில் சுவையூறச்செய்யும் அதே நேரத்தில், தரம் மற்றும் சேவையின் உயர் தரத்தை தொடர்ந்து பேணி வருகிறது.

# ஓய்வூதியம் பெறுவோருக்கு ஸ்மார்ட் ஃபோன்கள்

SLTMOBITEL, ஓய்வூதியத் திணைக்களத்துடன் இணைந்து, உபஹார திட்டத்தின் 15 வருட பூர்த்தியை கொண்டாடுகிறது. அரச துறையைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுவோரின் ஒப்பற்ற அர்ப்பணிப்புடனான சேவைகளை கௌரவிக்கும் வகையில், விசேட மற்றும் கவர்ச்சிகரமான பெறுமதி சேர் சாதனங்களை பெற்றுக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளது. அதனூடாக அவர்களுக்கு மனநிம்மதியுடன் கூடிய வாழ்க்கையை எளிமைப்படுத்திக் கொள்ளவும் பங்களிப்பு வழங்குகின்றது.

உபஹார சாதனங்களுக்கான சலுகைக் கொடுப்பனவுகள், சிரேஷ்ட பிரஜைகளுக்கு அத்தியாவசிய தொடர்பாடல் மற்றும் இணைப்புத்திறன் தீர்வுகளை பெற்றுக் கொடுத்து SLTMOBITEL இன் ஆதரவையும் வெளிப்படுத்தியிருந்தது. இவை சௌகரியம் மற்றும் சகாயத்தன்மை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

4G ஸ்மார்ட்ஃபோன்கள், 4G மொபைல் ரவுட்டர்கள், மற்றும் 4G டொங்கிள்கள் ஆகியன இந்த




விசேட சலுகைத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதுடன், மாதாந்த கொடுப்பனவு முறையில் கொள்வனவு செய்ய முடியும். இதனூடான ஓய்வூதியம் பெறுவோருக்கு தமது பரந்தளவு தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு சிறந்த பெறுமதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# 10 ROSPA தங்க விருதுகளை வென்ற MAS KREEDA



உலகளாவிய ஆடைத் துறையில் தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றான MAS Holdingsஇன் துணை நிறுவனமான MAS KREEDA, அண்மையில் மேலும் பல தனித்துவமான சாதனைகளை அடைந்துள்ளது. 2023ஆம் ஆண்டுக்கான தமது சுகாதார மற்றும் பாதுகாப்பு செயல்திறன் கொண்ட விபத்துக்களை தடுப்பதற்கான சமூகத்தின் (The Royal Society for the Prevention of Accidents ROSPA) 10 தங்க விருதுகளை தனதாக்கிக் கொண்டது. துபாயில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வொன்றின் போது, MAS KREEDA ஆனது பின்வரும் பத்து மூலோபாய வணிக பிரிவுகளை (SUBs) உள்ளடக்கிய தங்க விருதுகளை வென்றது. இதன்படி Kreeda Balangoda Kreeda Methliya, Kreeda Shadeline, Kreeda Synergy, Kreeda Vaanavil, Kreeda Campus, Kreeda Al Safi Sahab, Kreeda Al Safi Dulayl, Kreeda Al Safi Madaba, Kreeda Arya 2 ஆகியன இந்த அங்கீகாரம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. தங்க விருதுகளைத் தவிர, MAS இன் மற்றொரு துணை நிறுவனமான Bodyline (Pvt) ROSPA விருது வழங்கும் நிகழ்வில் வெள்ளி விருதையும் வென்றது.

# விளையாட்டு வீரர்களை வலுப்படுத்தும் NDB வங்கி

NDB வங்கியானது 3 ஆவது தடவையாக ரோயல் கல்லூரியின் ரக்பி போட்டி நிகழ்வுக்கு நிகழ்ச்சி அனுசரணையாளராக ரோயல் ரக்பியுடன் கூட்டிணைவதன் மூலம் விளையாட்டுத்துறையின் அபிவிருத்தி மற்றும் அடுத்த தலைமுறையை வலுவூட்டுவதற்கான தனது செயன்முறைகளை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. இளைஞர்களின் திறமைகளை வளர்ப்பதற்கும் விளையாட்டுத்திறன் மற்றும் சிறந்த கலாசாரத்தை வளர்ப்பதற்கும் NDB இன் அர்ப்பணிப்பை இந்த பங்குடமையானது வெளிப்படுத்துகிறது .

ஜூன் 4, 2024 அன்று நடைபெற்ற 78வது பிராட்பி ஷீல்ட் என்கவுண்டர் தொடர்பான ஊடகவியலாளர் மாநாட்டில், ரோயல் கல்லூரியின் ரக்பி தொடர்பாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இந்நிகழ்வின் அனுசரணையாளராக, NDB வங்கியானது இளம் விளையாட்டு வீரர்கள் விளையாட்டுத்துறையில், தமது திறமை, ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை வெளிப்படுத்துவதற்கான தளத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

NDB வங்கி இலங்கையில் நான்காவது பாரிய பட்டியலிடப்பட்ட வணிக வங்கியாகும். ஆசிய வங்கியியல் மற்றும் நிதி சில்லறை வங்கியியல் விருதுகள் 2023 இல் ஆண்டின் சிறந்த சில்லறை வங்கி (இலங்கை) மற்றும் Asiamoney ஆல் சிறந்த கூட்டாண்மை வங்கி 2023 என பெயரிடப்பட்டது.




# சிவனொளிபாத மலையை பாதுகாக்க சியபத பினான்ஸின் கூட்டு முயற்சி



இலங்கையில் மிகவும் புகழ்பெற்ற யாத்திரைத் தலங்களில் ஒன்றாகப் போற்றப்படும் சிவனொளிபாத மலையானது, சிறிபாத, ஆதாமின் சிகரம் அல்லது சமனல கந்த என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. அது சிவபெருமான் அல்லது புத்தர் அல்லது ஆதாமின் புனிதத் தடம் இருப்பதாக நம்பப்படும் புராதன, புனிதத் தலமாகும். ஒவ்வொரு ஆண்டும், உலகம் முழுவதிலுமிருந்து பல்வேறு நம்பிக்கைகள் மற்றும் கலாசாரங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் அங்கு வருகை தருகின்றனர்.

அதன் குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் மற்றும் வரலாற்றுப் பின்னணி காரணமாகவும், வனவிலங்குகள் மற்றும் இயற்கையின் எழில் காரணமாகவும் யுனெஸ்கோ அமைப்பினால் உலக பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிவனொளிபாத மலை பல நூற்றாண்டுகளாக பல்லுயிர் மையமாக உலகளாவிய கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த பாரம்பரிய பிரதேசத்தில் ஏராளமான நீர்நிலைகள் உருவாகின்றன, மேலும் தற்போது அழிந்து போகும் அபாயம் உள்ளவையாகக் கருதப்படும் ஏராளமான விலங்கு மற்றும் தாவர இனங்கள் என்பனவும் அங்கு காணப்படுகின்றன.

தற்போது மில்லியன் கணக்கான யாத்திரிகர்கள் மற்றும் உல்லாசப் பயணிகள், யாத்திரை காலங்களில் வனப்பாதை வழியாகப் பயணிக்கின்றனர், இது அங்கிருக்கும் வன விலங்குகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளது. டன் கணக்கில் கொட்டப்படும் மக்காத பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களால் யாத்திரை தலத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

# Honda போலி உதிரிப்பாகங்கள் CCD இனால் மீட்பு; விதிமீறியோர் கைது

போலி உதிரி பாகங்களை சட்டவிரோதமாக விற்பனை செய்வதை தடுக்க, கொழும்பு குற்றப்பிரிவின் (CCD) ஆதரவுடன் Honda நிறுவனம் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துள்ளது.

குருணாகல், இரத்தினபுரி, ஹோமாகம, பஞ்சிகாவத்தை ஆகிய பகுதிகளில் அண்மையில் இவ்வாறான பல சோதனைகள் நடத்தப்பட்டு, Honda வர்த்தக நாமத்தின் போலி உதிரிப் பாகங்களை விநியோகித்த பல வியாபாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். வாடிக்கையாளரின் பாதுகாப்பிற்கு கடுமையான ஆபத்தை ஏற்படுத்துகின்ற வகையில், இந்த முகவர்கள் போலியான உதிரிப்பாகங்களை பொதியிட்டு விற்பனை செய்வதும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுத்து, அதன் விநியோகச் சங்கிலிகளை இல்லாதொழிக்கும் நோக்கில் தற்போது பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த போலி உதிரிப் பாகங்களின் மூலாதாரங்களை கண்டறிவதன் மூலம், போலி உதிரிபாகங்களுடன் தொடர்புடைய சாத்தியமான அபாயங்களிலிருந்து நுகர்வோரைப் பாதுகாக்க முடியுமென அதிகாரிகள் நம்புகிறார்கள்.

CCD இன் உதவியுடன் தொடர்ச்சியாக இது போன்ற சோதனைகள் முன்னெடுக்கப்படும் என,



Honda நிறுவன அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். இந்த சோதனைகள் முதன்மையாக போலி உதிரிப் பாகங்கள் விற்பனை தொடர்பில் வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. இது ஒரு பெரும் கவலைக்குரிய விடயம் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

போலியான உதிரிப் பாகங்களைப் பயன்படுத்துவது வாகனத்தின் தனித்துவத்தை சீர்குலைப்பதோடு மட்டுமல்லாமல், சாரதிகளுக்கும் பயணிகளுக்கும் கடுமையான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் அபாயங்களை ஏற்படுத்துகிறது.

# ஈழத்தின் நவீன தமிழ்க் கவிதை முன்னோடி இ. முருகையன்.

ஈழத்தின் நவீன கவிதை முன்னோடிகளில் முக்கியமானவரான கவிஞர் இ.முருகையன் மறைந்து 15 வருடங்கள், இம்மாதம் 27ம் திகதி நிறைவு பெறுகிறது. அவரின் நினைவாக இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.



புலமைத்துவக் கவிஞராக, கவிஞர்க் குக் கவிஞராக அடையாளம் பெற்றி ருந்த கவிஞர் இ.முருகையன் 27 .06.2009யில் இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து கொண்டார். மறைந்து 15 வருடங்கள் கடந்து விட்ட போதும் ஈழத்து இலக்கிய வானில் ஒளிரும் நட் சத்திரமாக மிளிர்பவர் அவர் ஈழத்தின் நவீன கவிதை இலக்கிய மூலவர்களில் (மஹாகவி, நீலாவணன் முருகையன்)

முற்போக்கு அணி சார்ந்து எழுதியவ ராக, மானுட மேம்பாடு குறித்த படைப் புக்களுக்கு முன்னுரிமை தந்தவராக, சமூக விஞ்ஞானக் கருத்துக்களை தம் படைப்புக்களில் விதைத்தவராக, மொழி பெயர்ப்புக் கவிதைகளிலும் தமிழ்க் கவிதையின் வடிவச் செழுமையைக் கொண்டு வந்தவராக, செய்யுள் இலக்கி யத்தில் பேச்சுத் தொனிக்கு இடம் வழங் கியவராக, விமர்சகராக, புதிய சொல்லாக் கங்களை விரும்பியவராக இலக்கிய உலகில் தடம்பதித்திருந்தவர் கவிஞர் இ. முருகையன் .

கவிதை, பாநாடகம், மேடை நாடகம், வானொலி நாடகம், திறனாய்வுக் கட்டுரை, மொழி பெயர்ப்புக் கவிதை, காவியம் என்று நிறையவே எழுதியிருப் பவர் அவர்.

'தனிமையில் நின்றேன் வயல்வெளி நடுவில்
என்னைச் சூழ எழுந்து வீசிய காற்றில்
நெல்மணம் கமழ்ந்து கொண்டிருந் தது.
வெங்காயத்தாள் அங்கு கிடந்தது
பச்சைத் தண்டு குழலாய் மலர்ந்தது
வெள்ளைப் பூவைத் தலையிலே சூடி

என்று அவர் எழுதும் கவிதைகளை கட்புலக் கலையாக நெறிக் கவிதைக ளாக, எடுத்துக் காட்டுவார் திறனாய்வா ளர் கவிஞர் சண்முகம் சிவலிங்கம்.

கவிதையின் உருவ, உள்ளடக்கங்க ளிலும் புதுமை செய்தவராக, கவிதை யில் பேச்சு மொழிக்கு இடமளித்தவராக, ஓசை வடிவத்தைப் பேணியவராக இலக் கிய உலகில் மதிக்கப்படுபவர் முருகை யன்.

'வேண்டும் கவிதை; விரைந்தனுப்பித் தாரும் என
'நாண்டு'கொண்டு 'நிண்டார்' நம் ஆசி ரியர்
ஆண்டவனே
என்ன கரைச்சல்? இயலாது பாட்டெ ழுதல்.
பன்னம் இழைத்தாலும் பாய், கூடை பின்னல்
கடகம், இவற்றுக்கும் காசு கிடைக்கும்.'

செய்நேர்த்திமிக்க அற்புதப் படைப்பா ளியாக அவரை அறிமுகப்புடுத்துவார் பேராசிரியர் சி. சிவசேகரம்.

'உணர்ச்சி வெள்ளத்தில் அடிபட்டுப் போகாமல், நிதானித்து விஷயங்களை ஆழமாக நோக்கிக் கவிபாடுபவர் முரு கையன்.

அவரது கவிதைகள் ஆய்வறிவுப் பண் புடையவை. கவிதை உயிர்த்துடிப்புள்ள இலக்கிய வடிவம் என்று நம்மவர்க்கு உணர்த்தியதில் முக்கியமானவர் முருகை யன். இதனாலேயே அவரைக் "கவிஞர்க் குக் கவிஞர்" "(A poet's Poet)

என்று பெருமையுடன் நான் கூறிக் கொள்வதுண்டு என்று குறிப்பிடுவார் பேராசிரியர் க.கைலாசபதி. புலமைத் துவக் கவிஞராக (intellectual poet) அவரை அடையாளப் படுத்துவார் பேரா சிரியர் கா. சிவத்தம்பி.

1950 ல் இருந்து எழுத்துலகில் தடம் பதித்த கவிஞரின் ஆக்கங்களில் பல நூலுருப் பெற்றவை.

**ஒருவரம் (கவிதைகள், 1964)**
**நெடும்பகல் (காவியம், 1967)**
**அது அவர்கள் நீண்ட கவிதை (1986)**
**மாடும் கயிறு அறுக்கும் (1990)**
**நாங்கள் மனிதர் (1992)**
**ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும் (2001)**
**ஆதிபகவன் (1978)**
**பா நாடக நூல்கள்**
**தரிசனம் (1965)**
**கோபுரவாசல் (1969)**
**வெறியாட்டு (1989)**
**மேற்பூச்சு (1995)**
**சங்கடங்கள் (2000)**
**உண்மை (மொழிபெயர்ப்பு,2002)**
**மேடை நாடகங்கள்**
**கடூழியம்**
**அப்பரும் சுப்பரும் (1971)**
**திறனாய்வு நூல்கள்**
**ஒருசில விதி செய்வோம்**
**இன்றைய உலகில் இலக்கியம்**
**கவிதை நயம் (பேரா. க. கைலாசபதியுடன் இணைந்து)**
**கட்டுரை நூல்கள்**
**இளநலம்**
**மொழிபெயர்ப்பு நுட்பம்**
**திருவெம்பாவையர் (உரைநடைச் சித்திரம்)**

என்பன அவற்றுள் அடங்குபவை.

தமிழ்க்கவிதையின் பல்வேறு வடிவங் களிலும் தனது ஆற்றலை வெளிப்படுத் திய அவரின் மெல்லிசைப் பாடல்களும் புகழ் பெற்றவை.

"கங்கையாளே... கங்கையாளே...
காடு கழுவி வரும் கங்கையாளே!
எங்குமோடி..... எங்குமோடி.....
ஈழம் குளிரவைக்கும் கங்கையாளே!
நுவரெலியா முதலான உயரமலை
பயிலும் கங்கையாளே...!
தவறாத வளமுடைய....
தன்மை பொழியும் எங்கள் கங்கை யாளே...!
கங்கையாளே... கங்கையாளே......
கந்தளாயும்....மூதூரும்....
காத்து வரவேற்கின்ற கங்கையாளே....
வந்து சேர்வாய் திருமலைக்கே..
மாகடலில் போயிறங்கும் கங்கை யாளே...!" என்ற பாடல் அவரின் பிரப லம் பெற்ற மெல்லிசைப் பாடலாகும்.

"நோக்கு" என்ற கவிதைச் சஞ்சிகை யின் இணை ஆசிரியராகவும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலை வராகவும் அதன் 'தாயகம் 'சஞ்சிகை யின் ஆசிரியர் குழு உறுப்பினராகவும் அவர் செயற்பட்டார். அரச கரும மொழித் திணைக்களத்தில் பணியாற்றிய காலத் தில் கலைச் சொல்லாக்க முயற்சிகளில் விருப்பத்தோடு ஈடுபட்டவர் அவர்.

ஆறு தசாப்தங்களாக தமிழ் இலக்கி யத்தின் பல் துறைகளிலும் இலங்கிய கவிஞர் முருகையன் விருதுகள் பலவற் றைப் பெற்றவர். எழுத்தாளர்களுக்கு அரசு வழங்கும் அதி உச்ச விருதான 'சாஹித்ய ரத்னா விருது' 2007இல் அவருக்கு கிடைத்தது.

கவிஞர் முருகையன் சாவகச்சேரி கல் வயல் கிராமத்தில் 23.04.1935இல் இராமுப்பிள்ளை செல்லம்மா தம்பதி யின் மகனாகப் பிறந்தவர். கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலை, சாவ கச்சேரி இந்துக் கல்லூரி, யாழ்ப்பாண இந்துக் கல்லூரி என்பவற்றில் கல்வி கற்றவர்.

இலண்டன் பல்கலைக் கழக B.A,பட் டமும், இலங்கைப் பல்கலைக் கழ கங்களில் BSc, M.A, மேலும் M.Sc பட்டங்களையும் பெற்றவர். யாழ்ப்பா ணப் பல்கலைக் கழகம் 'கௌரவக் கலாநிதி'ப் பட்டத்தினை வழங்கி அவரைக் கௌரவித்தது.

பாடசாலை ஆசிரியராக, பாடநூல் மொழி பெயர்ப்பாளராக, ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராக, கல்விப் பணிப்பாளராக, பல்கலைக்க ழக முது துணைப் பதிவாளராக பல உயர் பதவிகளை வகித்து 1995 இல் பணி ஓய்வு பெற்றவர் அவர்.

வாழ்க்கைத் துணையாக தவமணி தேவி என்பவரைப் பெற்றிருந்த முரு கையன் இரண்டு பிள்ளைகளின் தந்தை. நாடக வல்லுநராகவும் கவி ஞருமான இ.சிவானந்தன் அவரின் சகோதரர்.

மூத்த இலக்கிய ஆளுமை முரு கையன் 27.06.2009இல் தனது 74 வது வயதில் இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து கொண்டபோதும், இலக்கிய வானில் ஒளிரும் நட்சத்தி ரமாக இன்னும் மிளிர்கிறது அவர் நாமம்.

**பாவேந்தல் பாலமுனை பாறூக்**

# பேருவளை ஹாஜிகள் கஃபா திரைச்சீலை காட்சியகத்திற்கு நேரடி விஜயம்





*(மக்காவிலிருந்து அஜ்வாத் பாஸி)*

ஹஜ் கடமைக்காக இம்முறை மக்கா நகர் சென்ற இலங்கை ஹாஜிகள் ஹஜ் கடமையை நிறை வேற்றிய பின்னர் மக்கா நகரிலுள்ள வரலாற்று பிரசித்திபெற்ற இடங் களை, பார்வையிட்டு வருகின்ற னர்.

அந்த வகையில் பேருவளை நவ்பர் ஏசியன் டிரவல்ஸினால் ஹஜ் கடமையை நிறைவேற்ற சென்ற ஹாஜிகள், இறையில்ல மான புனித கஃபாவுக்கு பலகோடி ரூபா செலவில் தயாரிக்கப்பட்டு அணிவிக்கப்படுகின்ற "கிஸ்வதுல் கஃபா" திரை சீலை தயாரிக்கப்ப டுகின்ற நிறுவன காட்சியகத்திற்கு (20) விஜயம் செய்தனர்.

மேற்படி நிறுவன பணிப்பாளர் அல் உஸ்தாத் அஹமட் சுவைஹிரி யிடம், ஏற்பாட்டாளர் நவ்பர் விடுத்த வேண் டுகோளின் பேரில் மேற்படி அனுமதி பெறப்பட்டது.



ஹாஜிகள் இதனை மிகவும் மகிழ்ச்சியு டன் பார்வையிட்ட தோடு தேவையான விளக்கங்களும் வருகை தந்தோருக்கு அரபு மொழியில் வழங்கப்பட்டன.

இதனை ஹஜ் நிறுவனத்தில் பிரதம வழிகாட்டியாக சென்ற மவ்லவி அப்துல் ரஹ்மான் ஹாபிஸ் தமிழில் சிறப்பாக மொழிபெயர்த்து வழங்கினார். இம்முறை இலங்கையிலிருந்து சுமார் 3500 ஹாஜிகள் ஹஜ் கடமையை நிறைவேற்ற சென் றுள்ளனர். இவர்கள் நாட்டுக்காக பிரார்த்தனைகளில் ஈடுபட்டு வரு கின்றனர்.

மேற்படி விஜயத்துக்கு பூரண அனுமதியை பெற்றுத்தந்த மக்கா, மதீனா பகுதி ஆலோசகர் அஷ் ஷெய்க் அப்துல் வாஹித் அலி கத் தாபிக்கு டிரவல்ஸ் ஏற்பாட்டாளர் நன்றி தெரிவித்துள்ளார்.




# நவீன இலக்கியத்தின் பல்துறை முதல்வர் வரதர்

ஈழத்து தமிழ் நவீன இலக்கிய வரலாறு 1930களிலிருந்து படிப்படியாக வளர்ச்சி யுற்றபோதும் ஒரு கருத்துநிலையோடு ஓர் இ ல க் கிய இயக்கம் பரிணமித்தது 'தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்' தோன்றிய பின்னர்தான்.

எழுத்தாளர் சங்கம் ஒன்றை உருவாக்கவேண் டும் என்ற எண்ணத்துடன் தனது நண்பர்க ளுக்கு முதலில் அழைப்பு விடுத்தவர் வரதர். 13.06.1942 அன்று யாழ்நகரில் 20பேர் கூடி ஆரம்பிக்கப்பட்டதுதான் 'தமிழிலக்கிய மறுமலர்ச் சிச் சங்கம்'. இதுவே ஈழத்தின் முதலாவது தமிழ் எழுத்தாளர் சங்கமாகும்.

இந்தச் சங்கத்திலிருந்து 'மறுமலர்ச்சி' என்ற சஞ்சிகை 1946இல் வெளியிடப்பட்டது. இதன் ஆசிரியராக சங்க உறுப்பினர்களால் தேர்ந்தெடுக் கப்பட்டவர் வரதர். பழைய மரபுவழி காவியங்கள், கவிதைகள்தான் இலக்கியம் என்று நம்பிக் கொண் டிருந்தவர்களுக்கு மத்தியிலே புதிய சிறுகதைக ளும் நவீன கவிதைகளும்கூட இலக்கியம்தான் என்று எடுத்துக்காட்டிய முதலாவது நவீன இலக்கி யச் சிற்றிதழாக மறுமலர்ச்சி மலர்ந்தது.

இந்தியாவில் 'மணிக்கொடி காலம்| போன்று ஈழத்தில்; 'மறுமலர்ச்சிக் காலம்' விளங்கியது என ஆய்வாளர்கள் குறிப்பிடுவர்.


'மறுலர்ச்சி இயக்கம்தான் பிற்பட்ட காலத்தில் முற்போக்கு இலக்கிய இயக்கம் முளைவிடுவதற் குப் பசளையாக அமைந்தது" என்று குறிப்பிடுவார் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி.

வரதரின் இலக்கியத்தடம் விரிவானது. சிறுகதை யாளர், பத்திரிகையாளர், நாவலாசிரியர், கவிஞர், நூல் வெளியீட்டாளர் என அவரது பணிகள் பரந்து பட்டவை.

யாழ்ப்பாணம் பொன்னாலையில் தியாகர் சண் முகம் சின்னத்தங்கம் தம்பதிக்கு 01.07.1924இல் மகனாகப் பிறந்த வரதராசன் தனது ஆரம்பக் கல்வியை பொன்னாலை அமெரிக்கமிஷன் பாடசா லையிலும், அதன்பின் அயற் கிராமங்களிலுள்ள பாடசாலைகளிலும் பெற்றார். அச்சக முகாமை யாளராகவும் நூல்வெளியீட்டாளராகவும் தொழில் புரிந்தார்.

1940இல் ஈழகேசரி ஆண்டுமலரில் 'கல்யாணி யின் காதல்' என்ற சிறுகதையினை எழுதி 16 வயதில் இலக்கியப் பிரவேசம் செய்தவர் வரதர். சாதிக்கொடுமை, பெண்விடுதலைபற்றி





ஈழத்து எழுத்தாளர்கள் விரிவாகச் சிந்திப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே இவைபற்றித் தனது எழுத்துக்களில் ஓங்கிக் குரல் கொடுத்த புரட்சி எழுத் தாளர் இவர். இவரது 'கற்பு' என்ற சிறுகதை ஐம்பது வருடங்களுக்கு முன்னரே வெளிவந்த பெண்ணி யச் சிந்தனைகொண்ட சிறுகதையாகும்.


வரதர், கவிதைக்கென ஒரு மாத இதழை ' தேன்மொழி' என்ற பெயரில் வெளியிட்டுப் புதுமை செய்த வர்.



இதுவே ஈழத்தின் முதலாவது கவிதைச் சஞ்சிகையாகும்.

வரதரை நிர்வாக ஆசியராக வும் மஹாகவியை இணை ஆசி யராகவும் கொண்ட ஈழத்தின் முதல் கவிதை இதழான 'தேன் மொழி| 1955ஆம் ஆண்டு புரட் டாதி மாதம் வெளிவரத் தொடங் கியது. 'கவிதைகளை மாத்திரமே தாங்கிய ஒரு இதழை வெளிக் கொணரவேண்டும் என்பது ஒரு எண்ணம். நவாலியூர் சோமசுந்தரப் புலவருக்கு ஒரு நல்ல நினைவுச் சின்னம் உரு வாக்க வேண்டுமென்பது மற்ற எண்ணம். இந்த இரண்டு எண்ணங்களும் சேர்ந்து தேன்மொழியை உருவாக்கிவிட்டன." என்று முதலா வது இதழின் ஆசிரியர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். தேன்மொழி பதினாறு பக்கங்கள் கொண்ட சிறு சஞ்சிகையாக மாதந்தோறும் வெளிவந்தது. ஆறு இதழ்களே வெளிவந்தன. ஒவ்வொரு இதழின் அட் டையிலும் சோமசுந்தரப் புலவரின் ஒரு பாடல் இடம் பெற்றுள்ளது. ஒவ்வொரு பின் அட்டையிலும் சிறப் பாக ஒரு கவிஞர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார். ஈற் றடிகள் கெடுத்து வெண்பா பாடத் தூண்டும் முயற் சிகளும் தேன்மொழி மேற்கொண்டுள்ளது. சில மொழிபெயர்ப்புக் கவிதைகளும் தழுவல் கவிதை களும் தேன்மொழியில் வெளிவந்துள்ளன. குறிப் பாக சீன, ஸ்பானிய, பிரான்சிய, கவிதைகள் இவற்றுள் அடக்கம்.







தேன்மொழியில் அக்காலத் தில் புகழ்பெற்ற கவிஞர்கள் பலரும் கவிதைகள் எழுதினார் கள். வித்துவான் வேந்தனாரின் 'காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக் கட்டிக் கொஞ்சும் அம்மா| என்ற புகழ்பெற்ற கவிதை, தேன்மொழியிலேதான் வெளி வந்தது என்பது குறிப்பிடத்தக் கது.

ஈழத்தில் புதுக்கவிதை பற்றிப் பேசுவதற்கு முன்னரே அதற்குச் செயல் வடிவம் கொடுத்தவர் வரதர். 1943இல் ஈழகேசரியில் அவர் எழுதிய 'ஓர் இரவிலே' என்ற கவிதையே ஈழத்தின் முதலா வது நவீன கவிதை எனப் போற் றப்படுகிறது.

அதுபற்றி ஞானம் சஞ்சி கைக்கு அளித்த நேர்காணலில் வரதர் பின்வருமாறு கூறியுள் ளார்:

"அந்தக் காலத்தில் ந.பிச்ச மூர்த்தியும் வேறுசிலரும் வசனக விதை என்று சில கவிதைகளை எழுதியதை நான் பார்த்தேன். அதற்கு முன்பே பாரதியாரும் வசனகவிதை எழுதியிருந்தது எனக்குப் பின்னால்தான் தெரியும்.

பிச்சமூர்த்தியின் இலக்கிய வடிவம் என்னை மிகவும் கவர்ந்தது. எதையாவது புதுமையாகக் கண்டால் நானும் அந்த மாதிரி செய்து பார்க்க வேண்டுமென்று முயல்வது எனது இயல்பு. நானும் வசனகவிதை எழுத வேண்டுமென்று ஆசைப்பட் டேன்.

ஒரு சித்திரை மாதம் மூன்று நான்கு நாட்களாக ஒரே மழை. ஊரெல்லாம் பெருவெள்ளம் அவற்று டன் புயலும் சேர்ந்து ஊரை ஒரு ஆட்டு ஆட்டியது.

அதனையே வசன கவிதையாக 'ஓர் இரவிலே| என்ற தலைப்பில் எழுதினேன்.."

வரதர் எழுதிய வசன கவிதை பின்வருமாறு:

இருள்! இருள்! இருள்!
இரவினிலே, நடு ஜாமத்திலே,
என் கால்கள் தொடும் பூமிதொடங்கி,
கண்பார்வைக் கெட்டாத மேகமண்டலம் வரை
இருள் இருள்!
பார்த்தேன்.
பேச்சுமூச்சற்று
பிணம்போல் கிடந்தது பூமி
இது பூமிதானா?
மனித சந்ததியே யற்ற,
பயங்கரமான பேய்களின் புதிய உலகமோ?
'ஒவ் ஒவ்' என்றிரைவது
பேயா? காற்றா? பேய்க்காற்றா?
ஹா!
மனிதன் சக்தியற்றுக் கிடக்கும் இந்த வேளையில்,
அவனுடைய சின்னமே அற்றுப் போகும்படி
பூமியை ஹதம் செய்யவோ வந்தது இப்பேய்க்காற்று!
ஹா, ஹா, ஹா!
'பளிச்! பளிச்!"
அதன் ஒளியிலே இன்பம் வளைவிலே இன்பம். ஓ!
ஒளியிலே பயங்கரம்! வளைவிலே பயங்கரம்!
மேகத்தின் கோபம்.
அவன் கண்கள்...... கண்கள் ஏது?
உடம்பிலிருந்து பீறிட்டுக் கிளம்பும் கோபாக்கினி!
விளக்கில் விழுகின்ற விட்டிலைப்போல,மின்ன லின் அழகிலே கண்
கெட்டுப் போகாதே!
பத்திரம்! | கண்ணை மூடிக்கொள்.
'பளிச்! பளிச்! பளிச்!
பட், பட்...படாஹ்..........பட், படப.....
ஓ!......ஹோ !........
முழக்கம்!
இடி!
பேய்க்காற்றின் ஹுங்காரத்
தோடு, வேதாளமுழக்கம்!
முழக்கம்!
காது வெடித்துவிடும்!
உன் ஹிருதயத் துடிப்பு நின்று
விடும்!
காதைப்பொத்திக்கொள், வானம்
வெடித்து விடுகிறது!
"டபார்!"

வரதர் பலதரப்பட்ட சஞ்சி கைகளை காலத்துக்குக் காலம் வெளியிட்டுள்ளார். ஆனந்தன் (1952), வெள்ளி (1957), புதினம் (1961), அறி வுக்களஞ்சியம் (மாணவர்களுக்கான இதழ் 1992) போன்ற பல்வேறு சஞ்சிகைகளை வெளியிட்டு ஈழத்து இதழியல் வரலாற்றில் தனது சுவடுகளை ஆழமாகப் பதித்தவர்.

'வரதரின் பலகுறிப்பு' என்ற பெயரில் இவர் முதன் முதலில் தமிழ் டிரெக்டரியை வெளியிட்டவர். ஈழத்துத் தமிழிலக்கியத்தின் முக்கிய பிரசுரகர்த்தருள் வரதரும் ஒருவரா வார் 'வரதர் வெளியீடு| என்னும் அவரது பிரசுராலயம் மூலமாக பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் இலக்கியவழி என்ற நூல் முதலாக பல முக்கியமான நூல்களை வெளியிட்டுள்ளார்.

வரதரின் படைப்புகளாக நாவலர், வாழ்கநீ சங்கிலி மன்னா!, கயமைமயக்கம் (சிறுகதைத்தொகுதி), மலரும் நினைவுகள் (சுயவரலாறு), பாரதக்கதை, சிறுகதைப் பட் டறிவுக் குறிப்புகள் என்பன வெளிவந்துள் ளன.

இலங்கை அரசின் இலக்கியத்திற்கான அதியுயர் விருதான சாகித்திய ரத்தினா விருதினை 2002இல் முதன்முதலில் பெற்ற தமிழர் இவர்.

வரதர் 21.12.2006 அன்று தனது 82ஆவது வயதில் அமரரானார்.

# சவுதி அரேபியாவில் ஹஜ் யாத்திரிகர்களுக்கு உச்சகட்ட பாதுகாப்பு






2024 இல் உலகெங்கிலும் இருந்து புனித மக்காவுக்கு வருகை தந்த அல்லாஹ்வின் விருந்தாளிகளான ஹாஜிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய சவுதி அரேபியா பல அடுக்கு பாதுகாப்பு முறைகளை அமுல்படுத்தியது. இதற்காக நவீன தொழில்நுட்பத்தை ஆதாரமாகக் கொண்டு. பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டது. பாரம்பரிய முறைப்படி ஹஜ்ஜை நிறைவேற்றுவது சிறந்ததா? நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் ஹஜ்ஜை நிறைவேற்றுவது சிறந்ததா? போன்ற வாதப்பிரதிவாதங்கள் ஒரு புறம் இருக்க. அதிநவீன தொழில்நுட்ப வசதி



வாய்ப்புகளுக்கு பழக்கப்பட்ட மனிதனால் ஹஜ்ஜை எளிதாக நிறைவேற்றுவது சவால் மிக்கதாக மாறிவிட்டது இந்த நவீன யுகம். மக்களின் தேவையும் காலத்தின் அவசியத்தையும் கருத்தில் கொண்டு சவுதி அரசாங்கம் 2024 ஹாஜிகளுக்காக வழங்கிய பல்வேறுபட்ட அதி நவீன வசதி வாய்ப்புகளில் சிலதை நாம் இங்கே பார்ப்போம்.

**1. பறக்கும் டாக்ஸிகள்:**

இவ்வாண்டு ஹஜ் காலத்தில் புனித மக்காவில் பறக்கும் டக்ஸி சோதனைகள் நடத்தப்பட்டன.

கிங் அப்துல்அஸீஸ் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து மக்காவுக்கு இடையே ஹஜ் யாத்திரிகர்களை ஏற்றிச் செல்ல பறக்கும் டாக்ஸிகள் பயன்படுத்தப்படும் வாய்ப்பை ஆராயும் வகையில் வரையறுக்கப்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டன. இந்த சோதனைகளை சவுதி அரேபியாவின் தேசிய விமானப் போக்குவரத்து நிறுவனமான சவுதி அரேபியன் ஏர்லைன்ஸ் மற்றும் ஜெர்மனியின் வொலோகோப்டர் நிறுவனம் இணைந்து நடத்தின. சோதனையின் போது விமானம் 15 நிமிடங்கள் வரை பறந்து 600 மீட்டர் உயரத்தை எட்டியது. விமானத்தில் பைலட் மற்றும் இரண்டு பயணிகள் இருந்தார்கள்.

இந்த சோதனைகள் வெற்றிகரமாக நடந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**2. தானியங்கி (சுய ஓட்டுநர்) பேருந்துகள்:**

2024 ஹஜ் யாத்திரையின் போது, புனித தலங்களுக்கு இடையே ஹஜ் யாத்திரிகர்களை ஏற்றிச் செல்ல சுய ஓட்டுநர் பேருந்துகள் பயன்படுத்தப்பட்டன. இது ஹஜ் வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல் ஏனெனில் இது சுய ஓட்டுநர் தொழில்நுட்பம் பெருமளவில் பயன்படுத்தப்பட்ட முதல் முறையாகும்.

இந்த சுயஓட்டுநர் பேருந்துகள் சவுதி அரசாங்கத்தால் இயக்கப்பட்டன. மேலும் அவற்றில் லீடார், ரேடார் முதலிய கேமராக்கள் உள்ளிட்ட பல்வேறு சென்சார்களும் பொருத்தப்பட்டிருந்தன. இவை சுற்றுப்புற ஆபத்துகளை சுதாகரித்து பாதுகாப்பாக பயணிக்க அனுமதித்தன. பேருந்துகளால் மணிக்கு 40 கிமீ வேகத்தில் செல்ல முடிந்தது. மற்றும் ஒரே நேரத்தில் 40 பயணிகளை ஏற்றிச் செல்ல முடிந்தது.

**3. டிஜிட்டல் ஐடி பதிவு மற்றும் அடையாள சரிபார்ப்பு முறை.**

2024 ஹஜ் யாத்திரைக்கு டிஜிட்டல் ஐடி அறிமுகப்படுத்தப்பட்டதால், இது பதிவு மற்றும் அடையாள சரிபார்ப்பு செயல்முறையை எளிதாக்கியது.

இதன் மூலம் யாத்திரிகர்கள் ஆன்லைனில் பதிவு செய்யவும், தேவையான அனைத்து ஆவணங்களை எளிதாக சமர்ப்பிக்கவும் ஆரம்பித்தனர். டிஜிட்டல் ஐடி ஹஜ் அதிகாரிகளுக்கு யாத்திரிகர்களின் அடையாளத்தை விரைவாகவும் துல்லியமாகவும் சரிபார்க்க உதவியது.

திருட்டு வழிமுறைகளை தடுக்கவும் போலி யாத்திரிகர்களை அடையாளம் காணவும், ஹஜ் கோட்டாவை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் உதவியது.

டிஜிட்டல் ஐடி யாத்திரிகர்கள் தங்கள் அடையாளத்தை எளிதாகச் சுமந்து செல்லவும், தேவைப்படும்போது அதை எளிதாகக் காண்பிக்கவும் அனுமதித்தது.

**4. புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய ரயில் வலையமைப்பு விரிவாக்கம்:**

மக்கா புனிதஸ்தலங்களுக்கிடையில் ரயில் வலையமைப்பானது ஹஜ் யாத்திரிகர்களை ஏற்றிச் செல்லும் திறனை அதிகரிக்க 2024 ஹஜ் பயணத்திற்கு ஏற்ப விரிவாக்கம் செய்யப்பட்டது.

விரிவாக்கப்பட்ட ரயில் வலையமைப்பு பின்வரும் புதிய தொழில்நுட்பங்களை உள்ளடக்கியது:

★ ஹஜ் யாத்திரிகர்களுக்கு அதிக வசதியையும் பாதுகாப்பையும் வழங்கும் வகையில் புதிய ரயில்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

★ போக்குவரத்தை மேம்படுத்துவதற்கும் தாமதங்களை குறைப்பதற்கும் மேம்படுத்தப்பட்ட சமிக்ஞை அமைப்புகள் நிறுவப்பட்டன.

★ ரயில் போக்குவரத்தை திறம்பட நிர்வகிக்க தானியங்கு கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பு செயல்படுத்தப்பட்டது.

★ ரயில் நிலையங்களில் பயணிகளுக்கு மேம்படுத்தப்பட்ட வசதிகள் வழங்கப்பட்டன. இதில் வசதியான ஓய்வு அறைகள், உணவகங்கள் மற்றும் கடைகள் அடங்கும்.

**5. 2024 ஹஜ் யாத்திரீகர்களுக்கு நவீன ட்ரோன்கள்.**

முகாம்களில் தங்கி இருக்கும் ஹாஜிகளின் கூட்டத்தை கண்காணிக்கவும், போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தவும் ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டன. இது அதிகாரிகளுக்கு யாத்திரிகர்களின் நடமாட்டம் பற்றிய உண்மையான தகவல்களை வழங்கியது, இது அவர்களின் பாதுகாப்பை மேம்படுத்தவும், போக்குவரத்து நகர்வுகளை மேம்படுத்தவும் உதவியது. ட்ரோன்கள் தீ மற்றும் பிற அவசரநிலைகளை விரைவாகக் கண்டறியவும் பயன்படுத்தப்பட்டன. மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை யாத்திரிகர்களுக்கு வழங்க ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டன. இது தொலைதூர மற்றும் அணுக முடியாத பகுதிகளில் உள்ள யாத்திரிகர்களுக்கு சிகிச்சையை வழங்க உதவியது. ட்ரோன்கள் காயமடைந்த யாத்திரிகர்களை அடையாளம் காணவும், அவர்களை மீட்பதற்கு மீட்பு குழுக்களுக்கு வழிகாட்டவும் பயன்படுத்தப்பட்டன.

**6. ஒருங்கிணைந்த NSK கார்ட் சேவைகள்.**

NSK கார்டு என்பது ஹஜ் யாத்திரிகர்களுக்கு மின்னணு முறையில் பணம் செலுத்துதல் மற்றும் சேவைகளை முன்பதிவு செய்தல் உள்ளிட்ட ஒருங்கிணைந்த சேவைகளை வழங்க 2019ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 2024 ஹஜ்ஜுக்கான அதன் வெற்றிகரமான பயன்பாடு, யாத்திரிகர்களுக்கு எளிதான மற்றும் வசதியான அனுபவத்தை வழங்குவதில் NSK இன் தொழில்நுட்பத்தின் திறன் மீண்டும் நிரூபிக்கப்பட்டது.



**NSK கார்டின் முக்கிய அம்சங்கள்:**

மின்னணு பணம் செலுத்தல்: ஹஜ் சம்பந்தப்பட்ட அனைத்து கட்டணங்களுக்கும் NSK கார்டைப் பயன்படுத்தலாம். இதில் விமான டிக்கெட்டுகள், தங்குமிடம், போக்குவரத்து மற்றும் உணவு ஆகியவை அடங்கும். இது யாத்திரிகர்கள் பணம் எடுத்துச் செல்லும் தேவையைக் குறைக்கிறது மற்றும் பணம் தொலைந்து போகும் அபாயத்தைக் குறைக்கிறது.

**7. 2024 ஹஜ்ஜுக்கு வரம் சேர்த்த ஸ்மார்ட் பயன்பாடுகள்:**

ஹஜ் யாத்திரிகர்களுக்கு தங்கள் ஹஜ் அனுபவத்தை மேம்படுத்த உதவ 2024 ஹஜ்ஜில் பல ஸ்மார்ட் பயன்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இந்த பயன்பாடுகள் (இபாதத்) வழிபாடுகள், பிரார்த்தனை நேரங்கள், கிடைக்கக்கூடிய சேவைகள் மற்றும் பலவற்றைப் பற்றிய தகவல்களை வழங்கியது.

சில பிரபலமான ஹஜ் ஸ்மார்ட் பயன்பாடுகள் பின்வருமாறு:

★ ஹஜ் நாவிகேட்டர்: இந்த பயன்பாடு ஹஜ்ஜின் பல்வேறு தளங்களுக்கு வழிகாட்டுதல், (இபாதத்) வழிபாட்டு நேரங்களை நினைவூட்டுதல் மற்றும் ஹஜ் சடங்குகள் பற்றிய விரிவான தகவல்களை வழங்கியது.

★ மனா: இந்த பயன்பாடு ஹஜ்ஜின் போது யாத்திரிகர்களை ஒன்றாக இணைக்க உதவும் சமூக தளமாக செயல்பட்டது. பயனர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும் மற்றும் புதிய நண்பர்களை உருவாக்கவும் உதவியது.

★ ஹஜ் ஹெல்த்: இந்த பயன்பாடு ஹஜ்ஜின் போது ஆரோக்கியமாக இருக்க யாத்திரிகர்களுக்கு உதவியது.

இது உணவு மற்றும் பானம், உடற்பயிற்சி மற்றும் வெப்ப நோய்க்கான சிகிச்சை பற்றிய ஆலோசனைகளை வழங்கியது.

**8. ஒரே நேர மொழிபெயர்ப்பு தொழில்நுட்பம்:**

2024ம் ஆண்டு ஹஜ்ஜுக்காக, உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வந்த ஹஜ் யாத்திரிகர்களுக்கு ஒரே நேர மொழிபெயர்ப்பு சேவைகளை வழங்க புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது. இது ஹஜ் யாத்திரிகர்கள் தங்கள்

(19 ஆம் பக்கம் பார்க்க...)




டாக்டர். அப்துல் சத்தார்
விரிவுரையாளர்
காஸிமிய்யா அரபுக்கல்லூரி, புத்தளம்.

அறிவித்தல்

வ/ப பானம கிராமசபை பிரதேசத்தின் பலநோக்கு சேவை கூட்டுறவுச் சங்கத்திற்குரித்தான பொத்துவில் மொனராகலை பிரதான வீதியில் பொத்துவில் நகரத்திற்கு அண்மையில் அமைந்துள்ள தூய உறுதியுடன் மின்சாரம் மற்றும் நீர் வசதிகள் சகிதமான காணித்துண்டை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**வ/ப பானம கிராமசபை பிரதேசத்தின்**
**பலநோக்கு சேவை கூட்டுறவுச் சங்கம்,**
**இல. 03, பொத்துவில்.**
**விசாரணை: 0740442715 / 0711709637**




நினைவூட்டல் அறிவித்தல்

HONDA
The Power of Dreams

அனைத்து ஹொண்டா ஆட்டோமொபைல் பயனர்கள் / வாடிக்கையாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு

Stafford Motor Co. (Pvt) Ltd. இலங்கையில் ஹொண்டா (HONDA) ஆட்டோமொபைல்களுக்கான ஒரே அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தராகும். நமது செயற்பாட்டிலிருக்கும் SRS ஏர் பேக் மேம்படுத்தல் (Air Bag system up-grade) பின்வரும் மாடல்களை திரும்பப் பெறுவதாக எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்கள் / ஆதரவாளர்கள் / பொது மக்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

| | |
|---|---|
| Civic | : ES1 / ES3 / ES5 / ES8 / FD1 / FD2 / FD3 / FD4 / FB1 |
| CRV | : RD1/ RD4 / RD5 / RD7 / RE2 / RE3 / RE4 |
| Accord | : CM5 / CL5 / CL7 / CL9 / CF9 |
| Fit / Jazz | : GP1 / GP2 / GP3 / GP4 / GE6 / GD1 / GD8 |
| City | : GM 2 |
| Insight | : ZE2 / ZE3 |
| Stream | : RN3 |
| Odyssey | : RA3 |
| Integra | : DC2 |
| Crossroad | : RT1 |

மேலே குறிப்பிட்டுள்ள மாடல்களில் ஏதேனும் ஒன்றை நீங்கள் ஓட்டினால், தேவையை மதிப்பிடுவதற்கும், மாற்றீடு அவசியத்திற்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சேவை வசதிகளில் ஏதேனும் ஒன்றை அழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**Contact the project coordinator on**
**Dushantha 0772260818, Tharindu 0742256538, Dhanushaka 0778687634**
**Email : malaka@honda.lk**
**(Weekdays from 9.00am to 5.00pm)**

எமது HONDA MOTOR Co. ஜப்பான் நிறுவனத்தின் கோட்பாட்டு விழுமியங்களுக்கு அமைவாக மேற்கூறப்பட்டுள்ள மாற்றீடு செய்யப்படாவிட்டால் விபத்து ஏற்படும் சந்தர்ப்பத்தில முன்னாள் பயணிக்கும் சாரதி மற்றும் அவருடன் அருகில் பயணிக்கும் நபருக்கும் சேதம் ஏற்பட வாய்ப்பு உண்டு என தெரிவித்துக் கொள்கிறோம்.

பெரும்பாலான Stafford Motor நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட வாகனங்களில் மேம்படுத்தல் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது, எவ்வாறாயினும், Stafford Motor நிறுவனத்தின மூலம் வாங்கப்பட்ட / பராமரிக்கப்படும் வாகனங்களைப் மாத்திரம் பொருட்படுத்தாமல் அனைத்து ஹொண்டா பயனர்களின் நலனுக்காக இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

மேலே உள்ள மாடல்களை ஓட்டும் அனைத்து ஹொண்டா பயனர்களையும் உரிமையாளர்களையும் அழைத்து, தேவையான கூறுகள் உள்ளனவா என்பதைச் சரிபார்க்குமாறு நாங்கள் அழைக்கிறோம்

எங்களால் இறக்குமதி செய்யப்படாத அல்லது பராமரிக்கப்படாத வாகனங்களுக்கு கூட இந்த மேம்படுத்தல் முற்றிலும் இலவசமாக செய்யப்படுகிறது என்பதையும் நினைவில் கொள்ளவும்.

**முக்கிய குறிப்பு:** மாதிரிக் குறியீட்டைச் சரிபார்க்க மற்றும் உங்கள் வாகனத்தின் Chassis இலக்கத்தை சரி பார்க்கவும். - ஏதேனும் சந்தேகம் இருந்தால், உங்கள் வாகனத்திற்கு இந்த மேம்படுத்தல் தேவையா என்பதைத் தெரிந்து கொள்ள எங்களை அழைக்கவும்.

**இந்த அரிய வாய்ப்பை கூடிய சீக்கிரத்தில் நீங்கள் உரித்தாக்கிக் கொள்வதன் ஊடாக உங்களுடைய வாகனத்தின் பாதுகாப்பையும் பயணத்தின் சௌகரியத்தையும் உறுதி செய்ய முடியும்.**

ஸ்டாஃபோர்ட் மோட்டார் நிறுவனம் (பிரைவேட்) லிமிடெட் இன் நிர்வாகம்.

Sri Lanka's Sole Authorised Distributor
**Stafford Motor Co. (Pvt) Ltd.**
63, ஸ்டோர்க் பிளேஸ், மருதானை - 011 7607410 | 161, கொழும்பு வீதி, இரத்தினபிட்டிய, பொரலஸ்கமுவ, 0117607501 | 159/1, பழைய நீர்கொழும்பு வீதி, களுவான, ஜா-எல - 011 7607403.

லங்கா சதொச

# பெறுகை அறிவித்தல்

## லங்கா சதொச லிமிடெட்டுக்கு பொது காப்புறுதித் திட்டம் ஒன்றை வழங்கல்

விலைமனு இலக்கம் : LSL/PRO/05/95/General Insurance/2024
தேசிய போட்டிரீதியான விலைமனு

**லங்கா சதொச லிமிடெட்டுக்கு 2024.08.08 ஆம் திகதியில் இருந்து ஓர் ஆண்டு காலத்திற்காக** பொது காப்புறுதி திட்டத்தை பெற்றுத் தருவதற்கு விரும்பும், இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனங்களிடம் இருந்து **லங்கா சதொச லிமிடெட் பெறுகைக் குழு, தலைவரினால்** முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**விபரக்குறிப்புகள்:** விலைமனு ஆவணத்தில் குறிப்பீடப்பட்டவாறு.

**பின்வரும் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்:**

1. கையிருப்புப் பொருட்கள் (எடுத்துச் செல்லும்போது மற்றும் விற்பனையகம் மற்றும் களஞ்சியத்தில்)
2. பணம் (எடுத்துச் செல்லும்போது மற்றும் விற்பனையகத்தில்)
3. நுகர்வு மற்றும் உற்பத்தி பொறுப்பு காப்புறுதி
4. நிலையான சொத்துகள்/ விற்பனை நிலையங்கள்/ களஞ்சிய கிடங்குகள்/ பிராந்திய அலுவலகம்/ தலைமை அலுவலகம

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களிடம் இருந்து அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் குறித்த ஆங்கில மொழியிலான குறித்த முழுமையான விலைமனு ஆவணங்களை **5,000.00 ரூபா மீளளிக்கப்படாத கேள்விமனு கட்டணத்தை செலுத்தி 2024 ஜூன் மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் 2024 ஜூலை மாதம் 15 ஆம் திகதி** வரையான காலத்தில் பின்வரும் முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

**லங்கா சதொச தலைமை அலுவலகம், பெறுகைப் பிரிவு (3ஆவது மாடி),**
**இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம்,**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**

விலைமனுக்களுடன் தொடர்புபட்ட ஆவணங்களை வழங்குவது **காப்புறுதி நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களின் பணிக் குழு பிரதிநிதிகளுக்கு** மாத்திரமாகும். **(காப்புறுதி நிறுவன பிரதிநிதிகள் மற்றும் காப்புறுதி முகவர்கள் இதற்கு கருத்தில் கொள்ளப்படமாட்டாது.)** எனவே விலைமனு ஆவணங்களை பெறுவது தொடர்பில் காப்புறுதி நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தினால் வழக்கப்பட்ட அதிகாரம் வழங்கும் கடிதம் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2024 ஜூலை மாதம் 05 ஆம் திகதி மு.ப. 11.00க்கு** மேலுள்ள முகவரியில் இடம்பெறும். (பங்கேற்பது கட்டாயமாகும்)

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் **2024 ஜூலை மாதம் 15 ஆம் திகதி பி.ப. 12.00க்கு அல்லது அதற்கு முன்னர்**, மேலுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்பு பெட்டிக்கு இட வேண்டும். விலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"LSL/PRO/05/95/General Insurance/2024"** என்று குறிப்பிட வேண்டும்.

அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் இயங்கும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற **ரூபா 120,000.00 பெறுமதி கொண்ட விலைமனு பிணை ஒன்றை (மீளளிக்கப்படும்)** விலைமனுவுடன் சமர்பித்தல் வேண்டும். அவ்வாறில்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை ஏற்பது **2024 ஜூலை மாதம் 15 ஆம் திகதி** பி.ப. 12.00க்கு நிறைவடைவதோடு விலைமனுதாரர்களின் முன்னிலையில் அதன் பின் உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்க-

இந்த ஒப்பந்தம் தொடர்பிலான இறுதி முடிவு லங்கா சதொச லிமிடெட், திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் எடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு, கீழுள்ள இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்.
திலினி – 070 1560428

இந்த கேள்வி/ ஒப்பந்தம் தொடர்பில் இறுதி முடிவு **லங்கா சதொச லிமிடெட், திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால்** எடுக்கப்படும்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**லங்கா சதொச லிமிடட், இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02**

# மனித நேயம்



எனக்கு வயது முப்பத்திரெண்டு, நான் பன்னிரெண்டு வயதிலிருந்து ஒரு கூலித் தொழிலாளியாக வேலை செய்து வருகின்றேன். நான் மட்டுமல்ல, எனது பரம்பரையே கூலித்தொழிலாளர்கள்தான்.

எனது தந்தை தொடர்மாடிக் கட்டடமொன்றில் வேலை செய்யும் போது தவறிவிழுந்து மரணமடைந்து விட்டார். அப்பொழுது எனக்கு வயது பன்னிரண்டு. எனது தங்கை அம்மாவின் வயிற்றில் கருவுற்றிருதாள் அவளுக்குத் தந்தையைத் தெரியாது.

எனது தந்தை இறந்ததும் எங்கள் குடும்பத்திற்கு உதவி செய்ய எவரும் முன்வரவில்லை. இதனால் இளவயதிலே நான் ஒரு கூலித் தொழிலாளியாக மாறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

ஆரம்பத்தில் எனக்கு வழங்கிய சம்பளம் எனது குடும்பத்தைக் கொண்டுநடத்தப் போதுமானதாக இருக்கவில்லை. அதனால் எனது தாயும் ஒரு கூலித் தொழிலாளியாக மாறினாள். இருவரின் சம்பளத்துடன் எமது குடும்பமும் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தது.

என்னைப் போல எனது சகோதரியும் ஒரு கூலித்தொழிலாளியாக மாறுவதை நான் விரும்பவில்லை. அதனால் எப்பாடுபட்டாவது அவளைப் படிப்பித்து ஒரு அரச உத்தியோகத்தில் அமர்த்த வேண்டும் என்பது எனது ஆசை. அதனால், அவளின் படிப்பில் கண்ணும் கருத்துமாக இருந்தேன்.

அவளும் இளமையிலிருந்தே படிப்பில் ஆர்வமுடையவளாகக் காணப்பட்டாள். அவள் முதலாந் தரம் தொடக்கம் பதினோராந் தரம் வரை முதலாம் இடத்தைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொண்டாள். இறுதியாக அவள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றாள். அதனால் அவளுக்குப் பாராட்டுதல்களும், பரிசில்களும் குவிந்தன. இது எனக்குப் பெருமையாக இருந்தது. அதனால் அவளைத் தொடர்ந்து படிப்பிக்க வேண்டும் என்ற வெறி எனக்குள் ஏற்பட்டது.

அவளும் எப்பொழுதும் புத்தகமும் கையுமாகவே, காணப்பட்டாள். இதனால் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் மருத்துவப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தில் தெரிவு செய்யப்பட்டாள்.

மருத்துவத்துறையில் அவளைப் படிப்பிக்க வைப்பதாயின் பெருந்தொகைப் பணம் செலவிட வேண்டுமெனப் பலர் என்னிடம் கூறியிருக்கிறார்கள். எங்களுடைய வருமானமோ அதற்குப் போதாது. இருந்தாலும் அவளைத் தொடர்ந்தும் படிப்பித்து ஒரு டாக்டராக்க வேண்டும் என நினைத்தேன்.

அதனால் ஊரிலுள்ள பணக்காரர்களிடமும் அயலூரில் உள்ள கனவான்களிடமும் சென்று கடனாகப் பணம் கேட்டேன். எல்லோரும் கைவிரித்து விட்டார்கள்.

இந்நிலையில் என்ன செய்யலாம் என யோசித்தேன். அப்பொழுது என் தாய்மாமனின் நினைவு எனக்கு வந்தது.

எனது தாய்மாமன் எங்களோடு உறவு கொண்டாடுவதில்லை. அவர் பெரிய கட்டட ஒப்பந்தக்காரர். பணக்காரர் பட்டியலில் முதலாம் இடத்தை வகிப்பவர். அதனால் அவர் கைகளில் எப்பொழுதும் பெருந்தொகைப் பணம் புரண்டுகொண்டே இருக்கும்.

அவருடன் நாங்கள் தொடர்பு கொள்ளாமைக்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று நாங்கள் கூலித் தொழிலாளர்கள். எங்களுடைய நிலை அவரது அந்தஸ்த்துக்கு ஒப்பாக அமையாது. அடுத்த காரணம் நாங்கள் நாளாந்தக் கூலிகள் அதனால் மாதத்தில் சில நாட்களுக்கு எங்களுக்கு வேலை கிடைக்காது. இதனால் எமது குடும்பத்தைக் கொண்டு நடத்த முடியாத சூழ்நிலை ஏற்படும். இந்நிலையில் நாங்கள் அடிக்கடி அவரின் வீட்டுக்குச் சென்று அவரிடம் பணம் கேட்போம் என்ற நினைப்பு. இதனால் எங்கள் குடும்பத்தாருடன் நெருங்கிப் பழக அவர் விரும்பவில்லை.

எனினும் எனது சகோதரி மருத்துவப் பிரிவுக்குத் தெரிவு செய்யப்பட்டதை அவருக்குத் தெரிவித்து, அவளின் படிப்புச் செலவுக்கான பணத்தைக் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நப்பாசை எனக்கு ஏற்பட்டது. அதனால் அவரைச் சந்தித்துப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என எண்ணி அவரின் வீட்டுக்குச் சென்றேன்.

அவரது காவலாளி என்னை உச்சி முதல் உள்ளங்கால்வரை பார்த்து விட்டு "நீ யாரு? யாரைப் பார்க்க வந்தாய்?" என நக்கலாகக் கேட்டான். இவனே என்னைக் கிண்டலாகக் கேட்கும் போது, நான் எனது மாமாவைப் பார்க்க வந்துள்ளேன் எனக் கூறலாமா? என யோசித்தேன்.

பின்னர் என்னைச் சமாளித்துக் கொண்டு "ஐயா! ராசாவைப் பார்க்க வந்துள்ளேன்" எனக் கூறினேன்.

"ஐயா! ராசாவையா? உன்ன பாத்தா பிச்சக்காரனப் போலக் கிடக்கு? பிச்ச எடுக்கவா வந்த நீ?" என மீண்டும் கேள்விகளைக் கேட்டு என்னைத் துளைக்கத் தொடங்கினான்.

"சுவாமி வரம் தந்தாலும் பூசாரி வரம் தரமாட்டான்' என நினைத்துக் கொண்டு, "ஐயா! ராசாவத்தான் பாக்க வந்திரிக்கன். அவரிட்ட போய் சொல்லு" எனச் சற்றுக் கடுமையான குரலில் கூறினேன்.

அவன் என்னை முறைத்துப் பார்த்து விட்டு, "அதுசரி! உண்ட பேரென்ன? அத சொன்னா தானே நான் ஐயாட்ட சொல்லலாம்?" எனச் சற்று இறங்கிய குரலில் என்னிடம் கூறினான்.

மருமகன் மதன் என்று சொன்னால் அது சிலவேளை அவரின் கௌரவத்தைப் பாதிக்கும் என்பதால் 'மதன்' என்று மட்டுமே கூறினேன். என்னை கேற்று வாசலில் நிற்கும்படி கட்டளையிட்டு அவன் ஐயாவின் பங்களாவை நோக்கிச் சென்றான்.

அவன் பங்களாவின் வாசலை அடைந்ததும் "ஐயா! ஐயா!!" என அழைத்தான். காவற்காரனின் அழைப்பைக் கேட்டதும் ராஜாவின் மனைவி வேலம்மாள் வந்து கதவைத் திறந்து வெளியில் எட்டிப் பார்த்தாள்.

நான் கேற்றடியில் நிற்பதைக் கண்டதும் அவள் கண்களில் அனல் பறந்தது. முகத்தை மறுபுறம் திருப்பியபடி உள்ளே விறுவிறு என்று சென்றுவிட்டாள்.

அவள் உரத்த குரலில் "சனியனுகள் எங்கள வாழவுட மாட்டுதுகள். இதிகள்ர சவகாசம் வேண்டாமெண்டுதானே இருவது வரிசமாக நிம்மதியா வாழ்ந்து வந்தம். மறுபடியும் வந்து எங்கட வாழ்கை கெடுக்கப் போகுதுகள்" என ஆவேசமாகக் கத்தியபடி ராசாவின் அறைக்குள் நுழைந்தாள்.

"உண்ட மருமகன் உறவ புதுப்பிக்க வந்திரிக்கான். பிச்சக்காரப் பயல்! நல்ல துணிகூட இல்லாம கிழிஞ்ச சட்டையோட வந்து கேற்றடியில் நிக்கான். என்னெண்டு கேட்டு கெதியா தொலச்சிப் போட்டு வாங்க. சொந்தம் கிந்தம் எண்டு உள்ளே கூட்டு வந்தா எனக்கு பேய்தான் புடிக்கும்" என ஆவேசமாகக் கணவனைப் பார்த்துக் கத்தினாள்.

"என்ன நீ கத்திற? அவன நான் பார்த்துக்கிறன். அவன எப்பிடி துரத்துவதெண்டு எனக்கு தெரியும்? நீ போய் உண்ட வேலய பாரு?" எனக் கூறி தனது மனைவியை சமாளித்து விட்டு ராசா கதவடியில் வந்து எட்டிப் பார்த்தான்.

இதைக் கண்டதும் எனக்கு உடம்பெல்லாம் புல்லரிக்கத் தொடங்கியது. அவன் என் தாய் மாமனல்லவா? அவரைக் கண்டதும் பாசத்தால் என் கண்கள் பணித்தன. நான் சந்தோஷ மிகுதியால் துள்ளிக் குதித்தபடி அவரை நோக்கி விரைந்து கொண்டிருந்தேன்.

"நீ! ஏன் வாறாய்? அங்க நில்லு?" என என் தாய்மாமன் கூறியதைக் கேட்டதும், என் தலையில் ஆயிரம் சம்மட்டிகள் கொண்டு அடிப்பது போன்ற வேதனை ஏற்பட்டது.

இதனிடையில் மாமாவும் விறுவிறு எனநடந்து வந்து எனது அருகில் வந்து விட்டார். நான் என்னை ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு, "உங்களதான் பாக்க வந்தன்" எனக் கூறினேன்.

"என்ன பாக்க நீயேன் வந்தாய்? உங்களுக்கும் எங்களுக்கும் உறவில்லையே? இருவது வரிசமா இல்லாத பாசம் மறுபடியும் எப்பிடி வந்தது" எனக் கூறியபடி தனது முகத்தை மறு பக்கமாகத் திருப்பிக் கொண்டார்.

"ஒண்டுமில்ல? தங்கச்சி மருத்துவ பீடத்தில் எடுபட்டிட்டாள். அதபத்தி சொல்லலாமெண்டுதான் வந்தேன்" எனக் கூறி அவரை சமாளிக்க முயன்றான்.

"அதுதானே பாத்தேன்! சோழியன் குடுமி சும்மா ஆடுமா?" எனக் கூறி என்னை ஏளனமாகப் பார்த்தார்.

"இல்ல! மருத்துவ படிப்பு படிப்பதெண்டால் நெறயப் பணம் தேவப்படுமெண்டு பலரும் எனக்கிட்ட சொன்னாங்க. அதபத்தி பேசிட்டுப் போகலாமெண்டுதான் வந்தன்" என நான் வந்த நோக்கத்தை நாசூக்காக அவரிடம் கூறினேன்.

"உங்கட தொழிலுக்கு மருத்துவ படிப்ப படிப்பிக்க முடியுமா? விரலுக்கேத்த வீக்கம் என்டபடி நம்மட தகுதிக்கேற்ற ஒரு உத்தியோகத்தை எடுத்திட்டு காலத்தை ஒட்டுற வழிய பாருங்க" எனக் கூறினார்.

"என்னத் கதைக்கிறியள்? இதுகள ஆராச்சும் கண்டிட்டா எங்கள கவுரவம்தான் போகும். சீப் இஞ்சினியரும் வாரனெண்டு சொன்னவருதானே? அத துரத்தி போட்டு கெதியா வாங்க" ராசாவின் மனைவியின் குரல் அப்பொழுது குறுக்கிட்டது.

"நம்மட குடும்பத்தில் பெரிய படிப்பு படிக்க தங்கச்சிக்குத்தான் கிடைச்சிரிக்கு. அதனால் அவள எப்படியாவது படிப்பிச்சிப் போடுங்க எண்டு பலரும் சொன்னாங்க. அதனால் அவள படிப்பிக்க கொஞ்ச பணத்த கடனாகத் தாங்க. புறகு உழச்சி வட்டியோட தாறன். உங்களவுட்டா வேறெவரும் உதவ மாட்டாங்க. உங்கட வசதி வாய்ப்புப் பத்தி எனக்குத் தெரியுந்தானே? அதாலதான் கேட்கிறன்" எனக் கூறினேன்.

"நீ சொல்லுற மாதிரி காசி எதுவும் என்னிட்ட இல்ல. நானும் பெரு நஷ்டமடைஞ்சி கிடக்கன். இந்த நிலயில், எவருக்கும் உதவி செய்யிற நிலையில் நானில்ல. நீ வேறெவரிட்டையாவது உதவி கேட்டுப்பாரு" என மாமா என்னைப் பார்த்துக் கூறினார்.

"நான் உங்கட்ட உதவி கேட்டவரல்ல. கடனாகத்தான் வட்டிக்கி காசி கேட்டு வந்தன். நீங்க சொல்லுறதப் பாத்தா, நான் தான் பிச்சக்காரன் எண்டு நினைச்சன் ஆனா நீங்க என்ன விட பிச்சக்காரனாக இருக்கீங்க. நான் வாறன்" என ஆவேசமாகக் கூறியபடி கேற்றை நோக்கி விறு விறு என நடந்து சென்றேன்.

அப்பொழுது கேற்றடியில் ஆடம்பர மோட்டார் வாகனம் ஒன்று உள்ளே வருவதற்காக தரித்து நின்றது. யாரும் கௌரவமானவர்களாக இருக்கலாம், அவர்கள் என்னைப் பார்த்தால் அது மாமாவின் கௌரவத்திற்கு பாதகமாக அமைந்துவிடும் என நினைத்தபடி கேற்றின் ஓரமாக ஒதுங்கிக் கொண்டேன்.

அப்பொழுது காரில கோட்சூட்டோடு அமர்ந்திருக்க அந்தக் கனவான் என்னை உற்று நோக்கினார். அவரின் பார்வையில் நான் படக்கூடாது என்ற நிலையில் எனது முகத்தை மறு பக்கமாகத் திருப்பிக் கொண்டேன்.

அவர் காரிலிருந்து இறங்கி என்னை நோக்கி நடந்து வந்தார். இதனிடையில் எனது மாமாவும், அவரது மனைவியும் கேற்றடியை நோக்கி ஓட்டமும் நடையுமாக விரைந்து வந்து கொண்டிருந்தார்கள்.

அவர் என்னருகில் வந்து மீண்டும் என் முகத்தை உற்றுப் பார்க்கத் தொடங்கினார். இதனிடையில் மாமா அவரை உள்ளே வரும்படி அழைத்தார். அவரது மனைவியும் "உள்ளே வாருங்கள்" என புன் சிரிப்புடன் அழைத்தார்.

அப்பொழுது என் மாமா என்னை அவருக்கு அறிமுகம் செய்தார். "இவன் ஒரு பிச்சகாரப் பயல். அடிக்கடி பிச்ச கேட்டு வருவான். அதனால இண்டைக்கும் கொஞ்ச பணத்த கொடுத்து அனுப்பினம்" எனக் கூறினார்.

அப்பொழுது எனது மாமி வேலம்மாள், "இவன பாத்தா பாவமா கிடக்கு. கிழிஞ்ச சட்டையோடு வந்திட்டான். அதுக்கும் சேத்து கொஞ்ச காசிய கொடுத்திட்டம்" எனக் கூறியபடி என்மீது பாசத்தைப் பொழிந்தாள்.

காரிலிருந்து இறங்கிவந்த கனவான் தனது இரண்டு கைகளாலும் என் தோள்கள் இரண்டையும் பற்றிப் பிடித்துக் கொண்டே என் முகத்தை உற்று நோக்கினார்.

"டேய்! நீ குணாதானே! என்னோடு ஐந்தாம் தரத்தில் கொலசிப்பில் பாஸ் பண்ணி படிப்பையும் இடைநடுவில விட்டுவிட்டாய்? இப்ப என்னடா செய்கிறாய்?" என என்னைப் பார்த்துக் கேட்டார்.

இதைக் கேட்டதும் என் இரண்டு கண்களிலிருந்தும் சந்தோஷ மிகுதியால் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. எந்தவித உறவுமில்லாத இப்பெரியார் என்னுடன் பழகும் விதம் என்னை நட்பின் உச்சத்திற்கு கொண்டு சென்றுவிட்டது.

நான் என்னை இனங் காட்டிக் கொள்ளாதவனாக "ஐயா! நான் ஒங்கள ஒருநாளும் கண்டதில்லை. ஒங்கட அந்தஸ்தென்ன? எண்ட நில என்ன? என்னோட பழக ஒங்களுக்கு கூச்சமில்லையா? என்ன உட்டுடுங்க" எனக் கூறியபடி கேற்றைத் தாண்டுவதற்காக விரைவாக நடக்கத் தொடங்கினேன்.

அப்பொழுது அவர் என் தோள்களைப் பற்றிப் பிடித்து என்னைத் தடுத்து நிறுத்தினார். "டேய் குணம், நீ அன்றும் இப்படித்தான். எப்போதும் நீ உன்னைத் தாழ்த்தித்தான் பேசுவாய். உனது நெற்றியிலிருக்கும் தையல் அடையாளம் அன்று பார்த்த மாதிரி அப்படியே இன்றும் இருக்கிறது. இதனை எப்படியட உன்னால் மறைக்க முடியும்? என என்னைப் பார்த்துக் கேட்டார். இவரிடம் இன்று வகையாக மாட்டிக் கொண்டேன். எப்படியும் தப்ப முடியாது? உண்மையைச் சொல்லித்தான் ஆகவேண்டும் என் நினைத்தபடி "ஐயா! ஒங்கட பேரென்ன? ஒங்கள பத்தி எனக்கு ஞாபகமில்லையே?" என அவரைப் பார்த்துக் கேட்டேன்.

"என்னுடைய பெயர் உனக்குத் தெரியும்தானே? வேண்டும் என்றே பொய் சொல்லுகிறாய். நாம் இருவரும் சின்ன வயதிலே விளையாடும் பொழுது அடிபட்டு விழுந்ததால் எனது இடது கை இழுத்துக் கொண்டது. உனக்குத் தெரியும்தானே! இதோபார், இப்பொழுதும் என் கை அப்படித்தான் இருக்கிறது" எனக் கூறித் தனது இடது கையை எனக்குக் காட்டினார்.

இதனிடையில் எனது மாமாவும் மாமியும் ஆச்சரியத்தால் கண்களை அகல விரித்தபடி ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"உன்னுடைய தந்தை ஒரு கூலித் தொழிலாளிதான். அவர் கௌரவமானவர், பண்புள்ளவர், மற்றவர்களை மதிக்கும் சுபாவம் கொண்டவர். அவருக்கு பிறந்த உனக்கும் அத்தனை குணங்களும் இருக்கத்தானே செய்யும். தொழிலைக் கொண்டு ஒருவரை மட்டிட முடியாது. பணம் இன்று எம்மிடமிருக்கும் நாளை வேறொருவரிடம் இருக்கும். ஆனால் மனிதன் மனிதனாகவே வாழ வேண்டும்" என எனக்கு உபதேசஞ் செய்தார்.

இவரது உபதேசம் என்னை மேலும் உற்சாகப்படுத்தியது. "அதுசரி! உங்கள் குடும்பம் எங்கிருக்கிறது? நான் இருபது வருஷத்திற்குப் பிறகு இன்றுதான் உன்னைக் காண்கின்றேன். நீ திருமணஞ் செய்து பிள்ளைகளோடு வாழ்கின்றாயா? குடும்பம் சந்தோஷமாக இருக்கிறதா?" எனக் கேட்டார்.

"இல்ல! கலியாணம் முடிக்கல்ல. தங்கச்சி ஒருத்தி இருக்காள். அவள படிப்பிச்சி, கலியாணம் முடிச்வைச்சி புறகுதான் அத பத்தி யோசிக்க வேணும்" என என்னுடைய நிலைமை பற்றிச் சுருக்கமாகக் கூறினேன்.

"நீ இப்பொழுது என்ன தொழில் செய்து கொண்டிருக்கிறாய்?" எனக் கேட்டார். "எனக்கென்ன? எஞ்சினியர் தொழிலா கிடைக்கப் போகுது. அஞ்சாந் தரத்தோட படிப்ப முடிச்ச எனக்கு கூலித்தொழில விட வேறென்ன தொழில் கிடைக்கப் போகுது?" என எனது மன ஆதங்கத்தை கொட்டித் தீர்த்தேன்.

"அடேயப்பா! இப்பொழுது கூலித்தொழிலாளியுடைய சம்பளம் எஞ்சினியர் சம்பளத்தையும் விடக் கூட, அது உனக்குத் தெரியுமா?" எனக் கிண்டலாக என்னைப் பார்த்துக் கூறினார்.

"ஆமாம்! நீங்க சொல்லுறபடி கூடக் கெடச்சாலும் குடும்பத்தயும் பார்த்து தங்கச்சிட படிப்பையும் பார்க்க போதுமா?" என அவரிடம் கேட்டேன்.

"தங்கச்சி படிப்பதாகக் கூறினாயே? அவள் என்ன படித்துக் கொண்டிருக்கின்றாள்" எனக் கேட்டார்.

"அவள் மருத்துவ பீடத்துக்கு எடுபட்டிருக்கிறாள். அகில இலங்கை ரீதியில் முதலாவதாக இருக்கலாம் என்று சொல்லுறாங்க." எனக் கூறினேன்.

"அப்படியா? நீ கொடுத்து வைத்தவன். இனி உன்னை யாராலும் பிடிக்க முடியாது" எனக் கூறிக் கொண்டே தன் கையால் என் தோள் மீது தட்டினார்.

அவள படிக்க வைக்க வசதியில்லாம அலஞ்சி திரியிற இப்பரதேசிய குடுத்து வைச்சவன் எனப் புகழும் போது எனக்குள் ஒருவித சிரிப்பு முகிழ்ந்தது.

"உனது தங்கையின் படிப்புக்கு என்ன செய்யப்போகின்றாய். ஏதாவது பணத்தை சேமித்து வைத்திருக்கின்றாயா?" எனக் கேட்டார்.

"பணமா? சேமிப்பா? ஒரு காசி கூட என்னிட்ட இல்ல. யாரிட்டையாவது காசி கேட்டு போனா பிச்சக்காரப் பயலே உனக்கென்னடா கடன். கடன் குடுத்தாலும் நீ எப்பிடியடா குடுப்பாய். காசி ஒரு சதங்கூட உனக்கு தர ஏலாது. ஓடிப்போடா" என்று என்னைத் திட்டித் தீர்க்கிறாங்க எனக் கூறினேன்.


"அப்படியா? இப்ப பணத்திற்கு என்ன செய்யப் போகின்றாய்?" மீண்டும் என்னைப் பார்த்துக் கேட்டார். "எல்லாம் கடவுள்தான். அவரு ஏதாவது ஒரு வழிய காட்டுவாரு தானே?" எனக் கூறி ஒரு பெருமூச்சை விட்டேன்.' நீண்ட பெருமூச்சாக இருக்கிறது" எனக் கூறியபடி தனது பொக்கற்றுக்குள் இருந்த ஒரு விசிற்றிங்காட்டை எடுத்து என் கையில் திணித்தார். ஒன்றும் புரியாத நிலையில் நான் திருதிருவென விழித்தபடி வைத்தகண் வாங்காமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். "நீ நாளை காலை இதில் இருக்கும் இடத்துக்கு வா. ஆரம்பச் செலவுக்காக இரண்டு இலட்சம் ரூபா தருகிறேன்.

பின்னர் படிப்பு முடியும் வரை மாதாந்தம் பணம் தருகின்றேன். நீ போய் வா" எனக் கூறினார். இதைக் கேட்டதும் சந்தோஷ மிகுதியால் அவரைக் கட்டிப்பிடித்து அழுது கொண்டிருந்தேன் பின்னர் வணக்கத்தை செலுத்தி விட்டு உலகத்தில் மனிதநேயம் படைத்த மகான்களும் இருக்கத்தான் செய்கிறார்கள் என எண்ணியபடி வீட்டை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறேன்.

**(யாவும் கற்பனை)**

**அருள் அரசன் ...**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 126



**திரு/திருமதி.செல்வி** ........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
**முகவரி** ........................................
........................................
........................................

...................... ......................
**திகதி** **கையொப்பம்**

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
**போட்டி இல. 126**
**த.பெ.இல.834. கொழும்பு**

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 126

**இடமிருந்து வலம்**

1. இதனால் அந்நிய செலாவணி கிடைக்கின்றது.
5. ஒரு காட்டு விலங்கு
6. நூல்களைப் படைத்தவர்
8. வழி
10. தென்னிந்திய எழுத்தாளர் அமரர் தமிழ்வாணன் வெளியிட்ட வாரஇதழ்
12. மத்தியஸ்தர் குழம்பிவிட்டார்
14. கனி (குழம்பியுள்ளது)
16. அழகு (திரும்பியுள்ளது)
18. அன்புடன் கலந்த நேசம்
20. அலைகள் எழும் பெரும் நீர்ப்பரப்பு(குழம்பியுள்ளது)
21. மீன் பிடிக்கவும் பயன்படும்
23. சிறு பிள்ளைகளுக்கு இது கேட்பதில் விருப்பம்
24. பெறுமதி வாய்ந்த இரத்தினக்கல் உடைந்து விட்டது.

**மேலிருந்து கீழ்**

1. ஒரு நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன் மேற்கொள்ளப்படும் ஆயத்தம்
2. ஒரு நீர்நிலை (தலைகீழ்)
3. வாகனம் சரிவர இயங்காத நிலை
4. பயங்கரமான காட்சியைப் பார்க்கும் ஒருவரின் மனதில் ஏற்படும் கலக்க உணர்வு
5. சிநேகிதன் குழம்பிவிட்டான்.
7. அதிர்ஷ்டம்
9. வேதனைக்கு உள்ளாகும் வகையிலான துன்புறுத்தல்(தலைகீழ்)
11. முதியோரை சிலர் இப்படி கேலியாகச் சொல்வர்
13. கிண்டல் அல்லது பரிகாசம்
15. குண இயல்பு
16. திருப்பிச் செலுத்தும் வகையில் பெற்றுக்கொள்ளும் பணம் (தலைகீழ்)
17. பாடல்வகை (குழம்பியுள்ளது)
19. இராமாயணக் கதாபாத்திரங்களில் ஒன்று(குழம்பியுள்ளது)
22. உடம்பு (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 125

### விடைகள்

| இடமிருந்து வலம் | | மேலிருந்து கீழ் | |
|---|---|---|---|
| 1. சூட்சுமம் | 14. பல் | 1. சூறாவளி | 11. வலது |
| 4. வகை | 16. சபலம் | 2. சுனாமி | 13. கம்பளி |
| 6. கனா | 17.சாதுரியம் | 3. மகன் | 15. பரிசு |
| 7. பாரதி | 19. சுமை | 4. கலவரம் | 17. சாவடி |
| 8. மின்சாரம் | 20. கபடி | 5. திசை | 18. மையம் |
| 10. வளி | 22. ஆடி | 7. பாரதம் | 20. தாடி |
| 12. கதகளி | 23. தானியம் | 9. சாகசம் | 21. பனி |

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 125

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **எம். கோகிலாதேவி**<br>ஹல்கொல்லை<br>பரகாதுவ | **எம்.ஏ. அத்தாஸ்**<br>141/1 குமாரதுங்க மாவத்தை,<br>மாத்தறை | **எஸ் ஜனஹாசினி**<br>91/1, பிரதான வீதி<br>கொழும்பு 11 |

### பாராட்டு பெறுவோர்

**1. வி. பாலேந்திரா**
வெள்ளவத்தை

**2. எல்யாஸ் தாஸிம்**
பாணந்துறை

**3. எம்.எப்.பஸீஹா,**
கொச்சிக்கடை

**4, ரதி சிவசீலன்**
யாழ்ப்பாணம்

**5. எம்.எச்.எம். வபா**
குருநாகல்

**6. ஆர். இஷால் ஹன்னா**
கிண்ணியா

**7. எம்.ஏ. நஜிமுத்தீன்**
அக்கறைப்பற்று

**8. ரஜினி/ புண்ணியமூர்த்தி**
மட்டக்களப்பு

**9. எம்.எச்.எம். பாஸி**
ரஜவெல்ல

**10. சாஹிராபானு லியாவுத்தீன்**
புத்தளம்

## சவுதி அரேபியாவில் ஹஜ் யாத்திரிகர்களுக்கு உச்சகட்ட பாதுகாப்பு... (17ஆம் பக்கத் தொடர்)

சொந்த மொழியில் ஹஜ் வழிபாடுகளை புரிந்துகொள்ளவும், அதில் பங்கேற்கவும் உதவியது.

அதாவது ஹஜ் யாத்திரிகர்கள் தங்கள் சொந்த மொழியில் பேசும்போது, AI அமைப்புகள் அதை உடனடியாக அரபு மொழிக்கு மொழிபெயர்த்தன. அதேநேரத்தில் அரபு மொழியில் பேசப்படும் விஷயங்களை யாத்திரிகர்களின் வேறுபட்ட மொழிகளுக்கு

மொழிபெயர்த்தன. இதற்காக ஒவ்வொரு யாத்திரிகருக்கும் ஒரு சிறிய ஆடியோ ஹெட்செட் வழங்கப்பட்டது.

ஹெட்செட்டில் இருந்து வரும் ஸ்பீக்கர்கள் மூலம் மொழிபெயர்க்கப்பட்ட மொழிகளை யாத்திரிகர்கள் கேட்க முடிந்தது. அவ்வாரே யாத்திரிகர்கள் தங்கள் ஸ்மார்ட்போன்களில் ஒரு பயன்பாட்டை பதிவிறக்கம் செய்து, அதன் மூலம் மொழி பெயர்ப்பு சேவைகளை அணுகவும் முடிந்தது.

**9 குளிரூட்டப்பட்ட வீதிகள் தொழில்நுட்பம்:**

புனிதத் தலங்களில் வீதிகளின் வெப்பநிலையைக் குறைக்க புதிய "குளிரூட்டப்பட்ட நடைபாதை" தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது.

வெப்பமான கோடைகாலத்தில் ஹஜ்ஜை மேற்கொள்ளும் ஹஜ் யாத்திரிகர்களுக்கு இது ஒரு பெரிய நிவாரணம் அளித்தது. இதற்காக வீதிகளில் சிறப்பு வகையான தரை ஓடுகள் பொருத்தப்பட்டன. அவை குளிர்ச்சியான தண்ணீரைச் சுழற்றுவதன் மூலம் குளிர்ச்சியை உருவாக்கின. மேலும் தரை ஓடுகளுக்கு தேவையான சக்தியை வழங்க சூரிய பேனல்கள் பயன்படுத்தப்பட்டன.

அத்துடன் வீதிகளின் வெப்பநிலையை கண்காணிக்கவும் தேவைக்கேற்ப குளிர்ச்சியின் அளவை சரிசெய்யவும் ஒரு கணனி அமைப்பு பயன்படுத்தப்பட்டது.

**10 ரப்பர் நிலக்கீழ் தொழில்நுட்பம்:**

2024 ஹஜ்ஜின் போது பாதசாரி நடைபாதைகளில் பாதுகாப்பை மேம்படுத்த புதிய "ரப்பர் நிலக்கீழ்" தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது. லட்சக்கணக்கான யாத்திரிகர்கள் பங்கேற்கும் ஒரு பெரிய நிகழ்வில் இந்த தொழில்நுட்பம் முக்கிய பங்காற்றியது. இதற்காக பாதசாரிகள் நடைபாதைகளில் இன்டர்லாக் செய்யப்பட்ட ரப்பர் டைல்கள் பொருத்தப்பட்டன. இந்த டைல்கள் மென்மையான மற்றும் வழுக்காத மேற்பரப்பை கொண்டிருந்தன.

ரப்பர் டைல்கள் நடக்கும்போது ஏற்படும் அதிர்வுகளை உறிஞ்சும் திறன் கொண்டிருந்ததால்

யாத்திரிகர்களின் கால்களில் ஏற்படும் அழுத்தத்தைக் குறைத்து காயங்களைத் தடுக்க உதவியது. ரப்பர் டைல்கள் வெப்பத்தை உறிஞ்சாமல் கோடைகாலத்தில் நடைபாதைகளின் வெப்பநிலையைக் குறைக்க உதவியது.

இந்த தொழில்நுட்பம் எதிர்காலத்தில் மேலும் மேம்படுத்தப்பட்டு பிற பெரிய நிகழ்வுகளிலும் பயன்படுத்தப்படலாம்

**11 தகவல் தொடர்பு வலையமைப்புகள் மேம்பாடு.**

2024 ஹஜ்ஜில் பங்கேற்கும் லட்சக்கணக்கான யாத்திரிகர்களுக்கு சிறந்த தகவல் தொடர்பு சேவைகளை வழங்குவதற்காக சவுதி அரசாங்கம் தகவல் தொடர்பு வலையமைப்புகளை மேம்படுத்தியது.

ஹஜ் யாத்திரிகர்களின் கூட்டத்தின் தேவைக்கு ஏற்ப தகவல் தொடர்பு வலையமைப்புகள் அதிக தரவு மற்றும் குரல் அழைப்பு திறனை கொண்டிருக்க மேம்படுத்தப்பட்டன.

இதற்காக புனித தலங்களில் குறிப்பாக அதிக நெரிசல் கொண்ட பகுதிகளில் புதிய செல் ஃபோன் கோபுரங்கள் நிறுவப்பட்டன.

மேலும் தகவல் தொடர்பு வலையமைப்புகளின் திறனை மேம்படுத்த பைபர் ஆப்டிக் நெட்வொர்க் விரிவுபடுத்தப்பட்டது.

புனித தலங்களில் இலவச WiFi சேவைகள் வழங்கப்படும் பகுதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. மேம்படுத்தப்பட்ட தகவல் தொடர்பு வலையமைப்புகள் மூலம் ஹஜ் யாத்திரிகர்கள் தங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் எளிதாக தொடர்பு கொள்ள முடிந்தது.

**12 நடமாடும் கிளினிக்குகள்**

2024 ஹஜ்ஜில் பங்கேற்ற லட்சக்கணக்கான யாத்திரிகர்களுக்கு சிறந்த மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக சவுதி அரசாங்கம் புனித தலங்களில் நடமாடும் கிளினிக்குகளை அறிமுகப்படுத்தியது.

நடமாடும் கிளினிக்குகள் என்பவை மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் தேவையான மருத்துவ உபகரணங்களுடன் பொருத்தப்பட்ட வாகனங்கள் ஆகும். ஹஜ் போன்ற பெரிய கூட்டங்களில் யாத்திரிகர்களுக்கு எளிதில் அணுகக்கூடிய மருத்துவ சேவைகளை வழங்க அதி விசேடமுறையில் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. நடமாடும் கிளினிக்குகள் மாரடைப்பு, பக்கவாதம் மற்றும் காயங்கள் போன்ற அவசரகால மருத்துவ சிகிச்சைகளை வழங்கின. அத்துடன் சளி, இருமல் மற்றும் வயிற்றுப் போக்கு போன்ற பொதுவான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கவும் பயன்படுத்தப்பட்டன.

தேவைப்படும் போது யாத்திரிகர்களுக்கு மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளை வழங்கவும், மருத்துவ ஆலோசனைகளை வழங்கவும் நடமாடும் கிளினிக்குகள் பயன்படுத்தப்பட்டன.

**13 டெலிமெடிசின் சேவைகள்:**

2024 ஹஜ்ஜில் பங்கேற்ற லட்சக்கணக்கான யாத்திரிகர்களுக்கு சிறந்த மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக, சவுதி அரசாங்கம் டெலிமெடிசின் சேவைகளை அறிமுகப்படுத்தியது.

டெலிமெடிசின் என்பது மருத்துவர்கள் மற்றும் நோயாளிகளுக்கு இடையில் தொலைதூர தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மருத்துவ சேவைகளை வழங்குவதாகும். ஹஜ் போன்ற பெரிய கூட்டங்களில் யாத்திரிகர்களுக்கு எளிதில் அணுகக்கூடிய மருத்துவ சேவைகளை வழங்க இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஹஜ் யாத்திரிகர்கள் தங்கள் இருப்பிடங்களில் இருந்தே அல்லது விஜயம் செய்யும் இடங்களிலிருந்தே மருத்துவர்களுடன் தொலைதூர மருத்துவ ஆலோசனைகளை பெற்று

சில நோய்களுக்கு டெலிமெடிசின் மூலம் நோயறிதல் மற்றும் சிகிச்சை அளிக்க முடிந்தது.

யாத்திரிகர்களுக்கு மருந்து பரிந்துரைகளை வழங்கவும யாத்திரிகர்கள் தங்கள் மருத்துவ பதிவுகளை அணுகவும் முடிந்தது. இதனால் புனித தலங்களின் எல்லாப் பகுதிகளிலும் யாத்திரிகர்களுக்கு எளிதில் அணுகக்கூடிய மருத்துவ சேவைகளை டெலிமெடிசின் வழங்கியது.

**14 ஸ்மார்ட் கேமராக்கள்**

2024 ஹஜ்ஜில் பங்கேற்ற லட்சக்கணக்கான யாத்திரிகர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, சவுதி அரசாங்கம் புனித தலங்களில் ஸ்மார்ட் கேமராக்களை அறிமுகப்படுத்தியது.

## நிலைகுலைந்து நிற்கிறது கள்ளக்குறிச்சி மாவட்டம்!... (05ஆம் பக்கத் தொடர்)

*விஷ சாராய விற்பனையை கட்டுப்படுத்தாத அதிகாரிகளை கண்டித்து சங்கராபுரத்தில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்ககத்தினர் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.*

*கள்ள மதுபானம் குடித்து உயிரிழந்தோர் குடும்பத்திற்கு 25 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும். கள்ளச்சாராய விற்பனையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.*

*மரவள்ளிக்கிழங்கு உள்ளிட்ட பயிர்களை விவசாயம் செய்யும் மலை கிராம மக்கள், விளைச்சலில் போதிய அளவுக்கு வருவாய் இல்லாத காரணத்தால் இது போன்ற கள்ளச்சாராயம் காய்ச்சும் தொழிலில் ஈடுபட்டு வருவதாக தெரியவந்துள்ளது.*

*கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலையில் இருந்துதான் இந்த கள்ளச்சாராயம் கொண்டு வரப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.*

*அடர்ந்த காட்டுப் பகுதியான கல்வராயன் மலையில், ஆள் நடமாட்டமே இல்லாத மலைக் குன்றுகளில் தண்ணீர் பாய்ந்து ஓடக்கூடிய ஓடைகளில் ஓரமாக கள்ளச் சாராயம் காய்ச்சப்பட்டுள்ளது.*

*கள்ளச்சாராம் காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்பட்ட அடுப்புகளும், கள்ளச்சாராய பாக்கெட்டுகளும் அங்கே சிதறி கிடக்கின்றன. குற்றவாளிகள் தலைமறைவாகியுள்ளனர். கள்ளச்சாராயத்திற்கு பயன்படுத்தக்கூடிய கடுக்காய் உள்ளிட்டவையும் அங்கு கொட்டி கிடந்தன.*

*ஆள்நடமாட்டம் இல்லாத மலைக் குன்றுப் பகுதிகளில் இந்த கும்பல் கள்ளச் சாராயத்தை காய்ச்சி அந்தக் கிராமங்களில் மட்டுமல்லாமல் கள்ளக்குறிச்சி சேலம் உள்ளிட்ட வெளி மாவட்டங்களிலும் விற்பனை செய்து வருவதாக அங்குள்ளோர் தெரிவிக்கின்றனர்.*

*80 முதல் 100 ரூபாய் வரை கள்ளச் சாராய பக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளன. மலை கிராமங்களில் உள்ள சிலர் இதை பல ஆண்டுகளாக தொழிலாகவே செய்து வருவதாக அந்த பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.*

*"ஐயோ... என் குடும்பமே அழிஞ்சு போச்சு... ஊரே அழிஞ்சு போச்சு." எனக் கதறும் குரல்களே எங்கும் கேட்கின்றன. அநாதையாகி நிற்கும் குழந்தைகள் ஏராளம். மொத்தத்தில் நிலை குலைந்து போயிருக்கிறது கள்ளக்குறிச்சி மாவட்டம்!*

*கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை, சேலம் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருபவர்களின் உடல்நிலை மோசமாகி வருவது, பலி எண்ணிக்கையை உயர்த்திக்கொண்டே போகிறது.*

*இதேவேளை மது விலக்கை உடனே அமுல்படுத்தக் கோரி சென்னை மெரினா கடற்கரையில் நேற்று போராட்டம் நடத்த ஒன்று கூடுமாறு சமூகவலைதளங்கள் மூலம் அழைப்பு விடுத்ததாக தகவல் பரவியதை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்கு பொலிசார் குவிக்கப்பட்டனர்.*

*இச்சம்பவமானது தமிழகம் எங்கும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.*


ஒரு பாதுகாப்பான இறக்கையின் கீழ் வளருங்கள்

உலகளாவிய விருந்தோம்பல்
கல்வியில் உள்நாட்டு வர்த்தக நாமம்

### இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்

01. **பணிப்பாளர் - நிதி (HM 1-1 வகுதி) - கொழும்பு**

ஒரு ஆற்றல்மிக்க தனிநபருக்காக திறக்கப்பட்டுள்ளது.

- வரவு செலவுத்திட்ட நிர்வாகம், நிறுவனத்தின் நிதிக் கொள்கை மற்றும் அது தொடர்பான நடைமுறைகளை திறம்பட நிர்வகித்தல்
- பணப்புழக்க முகாமைத்துவம், கடன் கண்காணிப்பு, காசாளர் கடமைகள், வருமானக் கணக்காய்வு, கிரயம், சமுத்ரா ஹோட்டல் மற்றும் நிறுவனத்தின் அனைத்து கணக்குகளைக் கண்காணித்தல்.
- நிறுவனத்தின் நிதி முன்னறிவிப்பு மற்றும் பகுப்பாய்வுகளுக்கு பொறுப்பு கூறுதல்
- முகாமைத்துவச் சபையினால் பிரதான நிறைவேற்று அதிகாரியின் வகிபாகத்திற்கு உதவுவதற்காக நிதிப் பணிப்பாளர் பதவிக்கு விசேடமாக ஒப்படைக்கப்பட்டுள்ள முகாமைத்துவ வேலைகளை நிறைவேற்றுதல்.

**விண்ணப்பதாரரின் தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி / கணக்கியல் /வர்த்தகம் / நிதி முகாமைத்துவம் / வியாபார முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் தொடர்பான ஒரு இளமாணிப் பட்டம்

**அத்துடன்**

நிதி / கணக்கியல் / வர்த்தகம் / நிதி முகாமைத்துவம் / வியாபார முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் தொடர்பான பட்டப் பின்படிப்பு பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் (ICASL/ CIMA/ ACCA) அங்கத்துவம் அல்லது இயைபுடைய தொழில்சார் நிறுவனமொன்றின் வேறு ஏதாவது சமமான தகைமைகள்.

**மற்றும்**

கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை / நிறுவனமொன்றில் அல்லது கீர்த்தி வாய்ந்த தனியார்துறை நிறுவனமொன்றில் நிதித் துறைக்கு இயைபாக முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட கால அனுபவம்.

2. தொழில்சார் நிறுவனமொன்றின் (ICASL/ CIMA/ ACCA) முழுமையான அங்கத்துவம் அல்லது இயைபுடைய தொழில்சார் நிறுவனமொன்றின் வேறு ஏதாவது சமமான தகைமைகள்.

**அத்துடன்**

கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை / நிறுவனமொன்றில் அல்லது கீர்த்தி வாய்ந்த தனியார்துறை நிறுவனமொன்றில் நிதித் துறைக்கு இயைபாக முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட கால அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

01. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமை தேவைப்பாடுகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
02. பதவிக்கு இயைபான விடயத்துறையில் மத்திய முகாமைத்துவ மட்டத்தில் (MM) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகாலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:**

35 வயதிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

இதில் உங்களுக்கு என்ன கிடைக்கின்றது

**சம்பள அளவு:** HM 1-1 - 2016 ரூபா (80,295 – 15 x 2,270 – 114,345)

ஆரம்ப நிலை: ரூபா 80,925.00 + வாழ்க்கைச் செலவுப் படி + தொடர்புடைய மாதாந்தக் கொடுப்பனவு போனஸ் கொடுப்பனவு மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செயற்றிறன் அடிப்படையில் செலுத்தப்படும். மாதாந்த தொழில்சார் கொடுப்பனவு, வாகனம் / எரிபொருள் கொடுப்பனவு என்பன அரசாங்க சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் வழங்கப்படும்.

**ஏனைய தகவல்கள்**

01. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான (EPF மற்றும் ETF) பங்களிப்பு
    அ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியரின் ஒன்றிணைந்த சம்பளத்தில் 10%, தொழில் வழங்குநரினால் 15% பங்களிப்பு செய்யப்படும்.
    ஆ) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு தொழில் வழங்குநரினால் 3% பங்களிப்பு செய்யப்படும்.
02. ஊழியர் அல்லது அவரது குடும்பத்தினருக்கு கவர்ச்சிகரமான மருத்துவக் காப்புறுதித் திட்டம்.
03. போக்குவரத்துக் கொடுப்பனவு வழங்கப்படும்.
04. பின்வருவனவற்றைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
    ஒரு மணித்தியாலத்திற்குள் பணியாற்றும் இடத்திற்கு நாளாந்தம் வரக்கூடியவர்கள்
    உயர்ந்த கணனி ஆற்றல் கொண்டவர்கள்
    இரு மொழிகளில் ஆற்றலுடையவர்கள் (சிங்களம் / ஆங்கிலம்)

**அனைத்து விண்ணப்பதாரர்களும்:**

அ. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
ஆ. பதவியின் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
இ. இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு விருப்பமுடையவராக இருத்தல் வேண்டும்.
ஈ. சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

முழுமையான சுயதரவு விபரங்கள் சகிதமான விண்ணப்பங்களை, கல்வித் தகைமைகள், சேவை அனுபவம் போன்ற இயைபுடைய சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர் சகிதம் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு 2024-06-30ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**கவனிக்கவும்:** யாருடைய ஆதரவையும் பெற முயலுதல் தகைமையீனமாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

முழுமையற்ற, மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திராத மற்றும் முடிவுறுத்தல் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விருந்தோம்பல் கல்வியின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் எங்களுடன் இணையுங்கள்!**

**பணிப்பாளர் நாயகம்,
இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்,
இல. 78, காலி வீதி,
கொழும்பு - 03.**

**பொதுவான விசாரணை: 011 - 2208300 நீடிப்பு 303/372
மேலதிக விபரங்களுக்கு: www.slithm.edu.lk**



### இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

### உயர் கல்வியில் தலைவராக இணையுங்கள்

### விண்ணப்பங்களுக்கான அழைத்தல்
### துணைவேந்தர் பதவி

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 34(1) ஆம் பிரிவு மற்றும் அதற்குப் பின்னரான திருத்தங்கள் மற்றும் 03/2023 என்ற ஆணைக்குழு சுற்றறிக்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பேரவையானது இப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பங்களை அழைக்கின்றது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், துணைவேந்தரானவர் பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலரும் முதன்மை நிறைவேற்று அலுவலரும் முதன்மை கல்விசார் அலுவலரும் அத்துடன் முதன்மை கணக்கிடல் அலுவலருமாவார். அவர் (ஆண்/பெண்) ஒரு பதவி வழி அங்கத்தவரும், பேரவை மற்றும் மூதவையினதும் தலைவருமாவார்.

துணைவேந்தரானவர் தனது பதவியை 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரகாரம், அவர் தனது பதவியிலிருந்து குறித்த காலத்திற்கு முன்னராக விலகினால் அல்லது பதவியிலிருந்து நீக்கப்பட்டாலன்றி, மூன்று வருட காலத்திற்கு அல்லது தனது அறுபத்தைந்து அகவையை பூர்த்தி செய்யும் திகதி ஆகிய இரண்டில் எது முன்னால் நிகழுமோ அத்திகதி வரையும் துணைவேந்தர் பதவியினை வகித்தல் வேண்டும்.

துணைவேந்தர் கல்விசார் நடவடிக்கைகளுக்கு தலைமைத்துவம் வழங்கல், முகாமைத்துவ கொள்கைகளை வகுத்தல், நெறிப்படுத்தல், பேரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் பல்கலைக்கழக பொதுவான நிருவாகத்திற்கும் பதிலிறுக்கும் பொறுப்பையுமுடைய அலுவலராவார். எனவே அவர் கல்வி மேம்பாடு வெளிப்படைத்தன்மை, பொறுப்பு வகித்தல் சனநாயகரீதியான முகாமைத்துவம், வினைத்திறமைமிக்க பக்கச்சார்பற்ற தலைமைத்துவம் ஆகியவற்றிற்கான கொள்கைகளை போற்றிப் பாதுகாப்பவராகவுமிருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரியானவர் காத்திரமான ஆராய்ச்சித்தரவு, உறுதிப்படுத்தப்பட்ட தலைமைத்துவப் பண்புகள், பல்லினக் கருத்துக் குழுக்களுடன் குறிக்கோள்ரீதியில் ஒருவரோடு ஒருவர் பயனுள்ள வகையில் செயலாற்றுவதற்கான சமூகரீதியிலான திறமைகள், கொள்கை விடயங்களில் தெளிவாகப் புரிந்து கொள்ளும் தன்மை அத்துடன் தீர்மானங்களை பயன்தரும் வகையில் அமுல்நடாத்தும் கடப்பாடு ஆகியவை அடங்கலான கல்விசார் உயர்மட்ட சாதனைப் பதிவுடையவராகவுமிருத்தல் வேண்டும். பல்கலைக்கழகமொன்றின் தூரநோக்கு மற்றும் செயற்பணி தொடர்பான ஆழமான விளக்கத்தையும் உடையவராகவுமிருத்தல் வேண்டும். (எதிர்பார்க்கும் விண்ணப்பதாரிகள்/பெயர் குறிப்பிடப்படுபவர்கள் பின்வரும் பல்கலைக்கழக இணையதளத்தை பார்வையிடுமாறு அழைக்கப்படுகின்றனர்:

**http://www.rjt.ac.lk/news/?cat=2** for details)

துணைவேந்தரானவர் பல்கலைக்கழக அதியுயர் கல்விசார் சம்பளத்தை பல்கலைக்கழக திட்டத்தின் கீழ், அடிப்படைச் சம்பளத்தின் 15% விருந்துபசார பணக்கொடுப்பனவும் தொலைத்தொடர்பாடல் பணக்கொடுப்பனவு, எரிபொருள் பணக்கொடுப்பனவு ஆகியவற்றிற்கு உரித்தாவார். இதற்கு மேலாக துணைவேந்தரானவர் உத்தியோகபூர்வ வாகனம், சாரதி மற்றும் அனைத்து பொதுப்பயன்கள் மற்றும் சேவைகளுடனான துணைவேந்தரின் இல்ல தொகுதியில் வீடொன்றும் வழங்கப்படும்.

**விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.**

I) பிறந்ததினம் அடங்கலாக விண்ணப்பதாரியின் முழுமையான சுயதரவு (விண்ணப்பதாரியானவர் இலங்கைப் பிரஜையாகவும் மூடும் திகதியன்று 63 வயதிற்கு குறைவாகவுமிருத்தல் வேண்டும்)

II) துணைவேந்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டால், பல்கலைக்கழக அபிவிருத்திக்கான தூரநோக்கு தொடர்பான பிரத்தியேக அறிக்கையொன்றும், விண்ணப்பதாரி எதனை சாதிக்க விரும்புகின்றார் என்ற தொடர்பில் சுருக்கமான அறிக்கையொன்றும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

III) தற்போதுள்ள துணைவேந்தரானவர் விண்ணப்பதாரியொருவராகவிருப்பின் அல்லது இந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக ஏற்கனவே பதவி வகித்திருப்பின், அவரின் (ஆண்/பெண்) இதற்கு முன்னரான காலப்பகுதியில் நிறைவேற்றிய சாதனைகளை மேலேயுள்ள (II) ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களுக்கு மேலதிகமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

IV) இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தை தவிர்ந்த அரசாங்க சேவை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் அல்லது உயர் கல்வி நிறுவனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரியொருவர் (ஆண்/பெண்) இப்பதவிக்கு நியமிக்கப்பட்டால் விண்ணப்பதாரியானவர் விடுவிக்கப்படுவாரா என்பதை குறித்துரைக்கும் தொழில் வழங்குநரிடமிருந்து பெற்ற கடிதமொன்று.

2024.07.23 ஆம் திகதியன்று பி.ப. 3.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பதிவாளரின் அலுவலகத்தை வந்தடையும் தன்மையில் வேலை நாளொன்றில் பதிவாளர்/பேரவைக்கான செயலாளர், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Post of Vice-Chancellor"** என குறிப்பிடப்படல் வேண்டும்.

இதற்கு மேலாக, விண்ணப்பம் மற்றும் தொடர்புள்ள ஆவணங்களின் மென்பிரதியொன்று PDF வடிவத்தில் மேலே குறிப்பிட்டுள்ள திகதியன்று அல்லது அதற்கு முன்னராக **registrar@rjt.ac.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்களை மூடும் திகதியிலிருந்து பின்னர் இரு மாதங்களில் வேலை நாளொன்றில் பேரவையின் விஷேட கூட்டமொன்று கூட்டப்படுவதுடன் விண்ணப்பதாரிகள் மதிப்பீடொன்றிற்கும் நேர்முகப்பரீட்சையொன்றிற்குமாக விஷேட பேரவை கூட்டத்தின் முன்னிலையில் நேரடியாக அழைக்கப்படுவார். அனைத்து விண்ணப்பதாரிகளும் ஆகக்குறைந்தது பத்து (10) நிமிட காலப்பகுதிக்கு ஆனால் பதினைந்து நிமிடங்களுக்கு (15) மேற்படாத முன்னிலைப்படுத்துகையொன்றிற்காக அழைக்கப்படுவார். எந்தவொரு விண்ணப்பதாரியும் விஷேட பேரவை கூட்டத்திற்கு நோயொன்றின் காரணமாக அல்லது வெளிநாட்டில் இருப்பதனால் சமுகமளிக்க இயலாத பட்சத்தில் அவர் (ஆண்/பெண்) மெய்நிகராக்கல் முறையின் மூலமாக தோற்றுவதற்கு செயலாளரின் முன்னறிவித்தலுடன் அனுமதிக்கப்படுவார்.

2023.04.10 ஆம் திகதியிடப்பட்டதும் 03/**2023** என்ற இலக்கமுமுடைய பல்கலைக்கழக ஆணைக்குழுவின் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறான செயன்முறைதன்மையை பின்பற்றி தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படும். துணைவேந்தரின் தவிக்கான நியமனத்திற்கான நடைமுறை தொடர்பான மேலதிக விபரங்களுக்காக மேற்கூறப்பட்டுள்ள சுற்றறிக்கையை தயவு செய்து பார்வையிடவும்.

மூடும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட மாட்டாது.

**பேரவைக்கான பதிவாளர் மற்றும் செயலாளர்,
இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்.**
23.06.2024.

## எவ்வேளையிலும் பாரிய யுத்தம் மூளும் அபாயம்!...

(09ஆம் பக்கத் தொடர்)

அதிநவீன ரடார் கண்காணிப்பு கட்டமைப்பான Sky Dew radar balloon ஐ ஹிஸ்புல்லாஹ்வினர் கமிகஸ் ட்ரோன் மூலம் தாக்கி கடந்த மே 23 இல் சேதப்படுத்தினர்.

250 கிலோ மீற்றர் தூரம் வரையான இலக்குகளை துல்லியமாகக் கண்டறிந்து தகவல் வழங்கக்கூடிய இக்கட்டமைப்பு 230 மில்லியன் டொலர்கள் செலவில் 2022 முதல் இஸ்ரேலால் உருவாக்கப்பட்டாகும்.

இதேவேளை, ஹிஸ்புல்லாஹ்வின் தாக்குதலினால் லோவர் கலீலியிலுள்ள முக்கிய இராணுவ கட்டமைப்பும் பாரிய ஏவுகணைகளைக் கண்டறியவென இயக்கப்படும் வசதிகளைக் கொண்டிருந்த விமானப்படை தளமும் பாதிக்கப்பட்டுள்ளதை இஸ்ரேலிய ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. அத்தோடு இஸ்ரேலின் அதிநவீன ட்ரோனான Hermes 900 Kochav ஐ கடந்த முதலாம் திகதி லெபனான் வான்பரப்பில் சுட்டு வீழ்த்திய ஹிஸ்புல்லாஹ், 5 ஆம் திகதி இஸ்ரேலின் ரமொட் நப்டலியிலுள்ள அயன்டோம் பாதுகாப்பு கட்டமைப்பையும் தாக்கியதற்கான உரிமையும் கோரியுள்ளது.

தெற்கு லெபனானுக்கு அண்மித்த பிரதேசங்களில் இஸ்ரேல் அமைத்திருந்த பாதுகாப்பு கண்காணிப்பு கட்டமைப்புகள் பலவற்றை ஹிஸ்புல்லாஹ் ஏற்கனவே தாக்கி சேதப்படுத்தியுள்ளது. கடந்த தினங்களுக்கு முன்னர் ஹிஸ்புல்லாஹ் முன்னெடுத்த தாக்குதல்களால் வடக்கு இஸ்ரேலிலுள்ள காட்டுப் பிரதேசங்கள் உள்ளிட்ட சில பிரதேசங்களில் தீ பரவலும் ஏற்பட்டது.

அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இஸ்ரேலிய அதிகாரிகள் கடும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

இந்நிலையில் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கலண்ட், வடக்கு இஸ்ரேலில் ஹிஸ்புல்லாஹ் மேற்கொள்ளும் தாக்குதல்களால் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் தெற்கு லெபனான் எல்லைக்கு அருகிலுள்ள இஸ்ரேலிய நகரங்கள், பிரதேசங்களில் இருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மேலும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சூழலில் ஏற்கனவே மூன்று இலட்சம் ரிசர்வ் படையினரைத் திரட்டிய இஸ்ரேல் மேலும் 50 ஆயிரம் பேரைத் திரட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. அத்தோடு ஆயுதத் தளபாடங்களை வடபகுதி நோக்கி நகர்த்தும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

'எம்மை முழு அளவிலான யுத்தத்தை நோக்கி ஹிஸ்புல்லாஹ் தள்ளுகின்றது' எனக் குறிப்பிட்டுள்ள இஸ்ரேல் இராணுவ பேச்சாளர், காஸா மீதான யுத்தம் ஆரம்பித்தது முதல் 5000 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லாஹ் ஏவியுள்ளது' என்றுள்ளார்.

இதேநேரம் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, 'எமக்குத் தீங்கு செய்யலாம் என எவரும் நினைக்கலாம். ஆனால் நாம் சும்மா இருப்போம் என நினைப்பது அவர்களது பெரிய தவறு. வடக்கு பகுதியில் கடுமையான நடவடிக்கையை முன்னெடுக்கத் தயாராகியுள்ளோம்" என்றுள்ளார்.

இவ்வாறு இஸ்ரேல்-ஹிஸ்புல்லாவுக்கு இடையில் யுத்த பதற்றம் அதிகரித்துவரும் சூழலில், இதனைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளுக்கு பிரான்ஸ் அழைப்பு விடுத்தது. அதனை இஸ்ரேல் நிராகரித்தது. அதனால் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் உலகளாவிய உட்கட்டமைப்பு மற்றும் ஆற்றல் பாதுகாப்புக்கான விஷேட ஒருங்கிணைப்பாளர் Amos Hochstein கடந்த 17, 18 இல் இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் நேரில் சென்று இஸ்ரேல் ஹிஸ்புல்லாஹ் இற்கிடையில் பாரிய யுத்தம் ஆரம்பமாவதைத் தவிர்ப்பதற்கான பேச்சுக்களை மேற்கொண்டார்.

இஸ்ரேலில் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருடனும் லெபனானில் ஹிஸ்புல்லாஹ்வுடன் நெருங்கி செயற்படும் லெபனான் சபாநாயகர் நபி பெர்ரி ஊடாக நேரடியற்ற பேச்சுக்களை இவர் முன்னெடுத்தார். இச்சமயம் ஹிஸ்புல்லாஹ் காஸாவில் நிரந்தர யுத்தநிறுத்தம் ஏற்படும் வரை தாக்குதல் தொடரும் எனக் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் இஸ்ரேலின் வடக்கு பகுதியிலுள்ள இராணுவ தளங்கள், கட்டமைப்புகள், அயன்டோம் நிலையங்கள், ஏவுகணை கட்டமைப்பு, ஹைபா துறைமுகம், எண்ணெய்க் களஞ்சியங்கள், கப்பல்கள் தரித்து நிற்கும் இடங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்களை உள்ளடக்கிய 10 நிமிட ட்ரோன் வீடியோ காணொளியை ஹிஸ்புல்லா கடந்த செவ்வாய்க்கிழமை சமூக ஊடகங்களில் பகிர்ந்தது. இது இஸ்ரேலிய தரப்பில் அதிர்ச்சியையும் கடும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்தளவுக்கு எதிரியின் ஆளில்லா விமானம் இஸ்ரேலிய எல்லைக்குள் மிக ஆழமாக ஊடுருவி இவ்வாறு பதிவு செய்திருப்பதானது இஸ்ரேலிய இராணுவத்தின் ஒரு பெரிய பாதுகாப்பு குறைபாடு என சர்வதேச பாதுகாப்பு வல்லுனர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இக்காணொளி வெளியான சொற்ப நேரத்தில் இஸ்ரேலின் வடக்கு இராணுவ தளபதிகள் ஹிஸ்புல்லாஹ்வுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை திட்டத்திற்கு அங்கீகாரம் அளித்துள்ளதாக 'ரைம்ஸ் ஒப் இஸ்ரேல்' தெரிவித்துள்ளது.


## இலங்கை அரச மருந்தாக்கங்கள் கூட்டுத்தாபனம்

SPC

பின்வரும் அமைவிடங்களை சுற்றியுள்ள பிரதேசங்களில் வாடகைக்கு/குத்தகை அடிப்படையில் அரசாங்க நிறுவனமொன்றை தாபிப்பதற்காக (ஆகக்குறைந்தது 1500 ச.அடி) கட்டிடமொன்றை வழங்குவதற்கான அழைத்தல்.

01. மட்டக்களப்பு
02. கல்முனை

மேலதிக தெளிவுறுத்தல்களை 075-254 5744 என்ற இலக்கத்தினூடாக திரு. மலிக் என்பவரிடமிருந்தும் 071-807 0337 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக திரு. ஹரித் என்பவரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.



## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### ராகம, வெலிசர வர்த்தக வெடிபொருட்கள், சுடுகலன்கள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவிற்கு (CEFAP) வெடிமருந்துகளை வெடிக்கவைப்பதற்கு உதவும் மின்சாரசாதனம் (Electric Detonators)

1. பின்வரும் மின்சார வெடிமருந்துகளை வெடிக்கவைப்பதற்கு உதவும் மின்சாரசாதனங்களுக்காக (Electric Detonators) தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வர்த்தக வெடிபொருட்கள், சுடுகலன்கள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவின்(CEFAP) சார்பாக இலங்கை கடற்படையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| File No. | Description | Qty |
|---|---|---|
| CEFAP/PRT/15/2022 | Electric Detonators (6MTR) | 500,000 Nos. |

ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை CEFAP பிரிவின் பெறுகை அலுவலகரிடமிருந்து பெற்று கீழே 02 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

2. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

கவனத்திற்குரியவர்: பணிப்பாளர் CEFAP பிரிவு
முகவரி : வர்த்தக வெடிபொருட்கள், சுடுகலன்கள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவு, வெலிசர, ராகம
தொலைபேசி : 0112958227 – 0112955514
மின்னஞ்சல் : **director.cefap@gmail.com**

3 மீளளிக்கப்படாத கட்டணமான 12,500 ரூபாவை (பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா) செலுத்திய பின்னர், 02 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கிலமொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது இலங்கை வங்கியின் 7041344 என்ற கணக்கிலக்கத்திற்கு கடற்படைதளபதியின் பெயரில் (CEFAP) வழங்கப்பட்ட பணவைப்பு வங்கித் துண்டில் வரவு வைக்கப்பட்டதாகும்.

4. 2024 ஒகஸ்ட் 06 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கேள்வி மூடப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கடற்படை தலைமையலுவலகம்.**



### இலங்கைத் துறைமுக அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**ECT செயற்றிட்டத்திற்கு 40 எண்ணிக்கையான 12 மீற்றர் Lattice கோபுரங்கள், 40 எண்ணிக்கையான 04 மீற்றர் Lattice கோபுரங்கள், 40 எண்ணிக்கையான 04 மீற்றர் கம்பங்களை கட்டமைத்தல்**

**(Fabrication of 40 No's of 12m Lattice Tower, 40 No's of 04m Lattice Tower and 140 No's of 04m Pole for ECT Project)**

**கேள்வி இல: EW/6/PT/2024/MW/1**

1. ECT செயற்றிட்டத்திற்கு 40 எண்ணிக்கையான 12 மீற்றர் Lattice கோபுரங்கள், 40 எண்ணிக்கையான 04 மீற்றர் Lattice கோபுரங்கள், 140 எண்ணிக்கையான 04 மீற்றர் கம்பங்களை கட்டமைப்பதற்காக ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும் மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவை வியாபாரத்தில் ஆகக்குறைந்தது கடந்த ஐந்து வருடங்களுக்காவது இருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு - 01, லேடன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் இயந்திரவியல் வேலைகள் பொறியியல் பிரிவின் பிரதான பொறியியலாளர் (இயந்திரவியல் வேலைகள்) அவர்களிடமிருந்து மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணமான 27,500.00 (வரிகள் அடங்கலாக) ரூபாவை ரொக்கப்பணத்தில் செலுத்திய பின்னர், 2024-06-24ஆம் திகதியிலிருந்து 2024-07-12ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை பிரதான பொறியியலாளர் (இயந்திரவியல் வேலைகள்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-01, லேடன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் பொறியியல் வேலைகள் கிளையிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. 2024-07-15ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டவுடனேயே விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் சமுகத்தில் அதே முகவரியில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் 1,400,000.00 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-07-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு-01, லேடன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் தொழில்நுட்ப நூலகத்தில் இடம்பெறும்.

**பிரதான பொறியியலாளர் (இயந்திரவியல் வேலைகள்),**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு - 01**
**தொலைபேசி இல: 011 2482905, தொலைநகல் இல: 011 2451906**


## வேலைநிறுத்தங்கள், போராட்டங்களின்...

(09ஆம் பக்கத் தொடர்)

இவ்வாறான பின்னணியில் தொழிற்சங்கங்கள் மற்றும் மாணவர் செயற்பாடுகளில் இலங்கைக்கு புதிய சிந்தனை தேவை என்பது தெளிவாகிறது. மாற்றத்தை எதிர்க்கும் மற்றும் தேசிய முன்னேற்றத்தை விட அரசியல் ஆதாயங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் இவ்வாறான மனநிலைகளால் நாடு பின்வாங்க முடியாது.

இந்த இயக்கங்களை அரசியலற்றதாக்குவதற்கும், தொழிலாளர்கள் மற்றும் மாணவர்களின் உரிமைகளுக்கான உண்மையான போராட்டத்தில் கவனம் செலுத்துவதற்கும் ஒரு ஒருங்கிணைந்த முயற்சி இருக்க வேண்டும்.

முதலாவதாக, தொழிற்சங்கங்களுக்குள் அதிக பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை தேவை. தொழிற்சங்கத் தலைவர்கள் அவர்களின் செயல்களுக்குப் பொறுப்பேற்கப்படுவதையும், தொழிற்சங்க நிதிகள் பொறுப்புடன் நிர்வகிக்கப்படுவதையும் உறுதிசெய்யும் வழிமுறைகள் அமைக்கப்பட வேண்டும். இது இந்த நிறுவனங்களின் மீதான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப உதவுவதோடு, அவர்கள் தங்கள் உறுப்பினர்களின் நலன்களை உண்மையாக பிரதிநிதித்துவப்படுத்துவதை உறுதி செய்யும்.

இரண்டாவதாக, குறிப்பாக கல்வித் துறையில் சீர்திருத்தங்களைத் தழுவுவதற்கான விருப்பம் இருக்க வேண்டும். தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி சீர்திருத்தங்களுக்கு எதிரான எதிர்ப்பானது மாற்றம் குறித்த அச்சம் மற்றும் காலாவதியான சித்தாந்தங்களை கடைப்பிடிப்பதில் வேரூன்றியுள்ளது. தனியார் பல்கலைக்கழகங்கள் மாணவர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்க முடியும் என்பதை அங்கீகரிப்பது முக்கியம். தனியார் துறை ஈடுபாட்டின் பலன்களைத் தழுவும் அதே வேளையில் கல்விக்கான சமமான அணுகலை உறுதி செய்யும் ஒரு சமநிலையான அணுகுமுறை அவசியம்.

மேலும், தொழிற்சங்கங்கள் மற்றும் மாணவர் குழுக்களுடன் அரசாங்கம் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். மோதல் தந்திரங்களைக் கையாள்வதை விட, பேச்சுவார்த்தை மற்றும் ஒத்துழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இது தொழிலாளர்கள் மற்றும் மாணவர்களின் நியாயமான கவலைகளை நிவர்த்தி செய்ய உதவும் அதேவேளையில் அவர்களின் நடவடிக்கைகள் அத்தியாவசிய சேவைகளின் செயல்பாட்டை சீர்குலைக்காமல் இருப்பதை உறுதி செய்யும்.


## விலைமனுக்கோரல்

### இலங்கை விமானப்படை

**இலங்கை விமானப்படையில் AN-32B விமானத்தின் சேவை ஆயுள் காலத்தினை இரண்டு வருடங்களுக்கு நீடித்தல்**

**(02 YEARS TBO & LIFE EXTENSION)**

1. பாதுகாப்பு அமைச்சின் சார்பான அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழுவின் (DPC) தலைவரினால் ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே பாதுகாப்பு தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு விமானப்படையின் செயலாளருக்கு **"இலங்கை விமானப்படையில் AN-32B விமானத்தின் சேவை ஆயுள் காலத்தினை இரண்டு வருடங்களுக்கு நீடிப்பதற்காக (02 YEARS TBO & LIFE EXTENSION)"** இலங்கையில் அல்லது வெளிநாட்டில் வசிக்கும் தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ இல | கொள்முதல் அடையாளம் இலக்கம் | விபரம் | மனு பாதுகாப்பின் பெறுமதி மற்றும் காலம் | மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | மீளச் செலுத்தப்படாத கட்டணம் (ரூ.) | மனு முடிவடையும் / திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | AHQ/24/-FR/ANT/1002 | இலங்கை விமானப்படையில் AN-32B விமானத்திற்கான (02 Years TBO & Life Extension) of S/No SCM 860 (35-01) கொள்வனவு செய்தல் | 2024.11.12 ரூ.1,000,000.00 | 2024.07.15 | 24,000.00 | 2024.07.16 10.30 மணி |
| 02 | AHQ/24/-FR/ANT/1003 | இலங்கை விமானப்படையில் AN-32B விமானத்திற்கான (02 Years TBO & Life Extension) of S/No SCM 863 (35-01) கொள்வனவு செய்தல் | 2024.11.12 ரூ.1,000,000.00 | 2024.07.15 | 24,000.00 | 2024.07.16 10.30 மணி |

2. மனுக்கோரலானது **சர்வதேச மனுக்கோரல் போட்டி முறைக்கமைய (ICB)** இடம்பெறும்.
3. இது சம்பந்தமாக ஆர்வமுள்ள மனுதாரர்கள் முழுமையான மனு ஆவணங்களை இலங்கை விமானப்படை இணையத்தளமான www.airforce.lk மூலம் அல்லது **2024.06.24** ஆம் திகதி முதல் மனு ஆவணங்கள் வழங்கப்படும் கடைசி நாள் வரை (**0900 மணி தொடக்கம் 1500 மணித்தியாலம்**) வரை கீழே 07 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் எழுத்துப்பூர்வமான கோரிக்கை ஒன்றினை முன்வைப்பதன் மூலம் கட்டணமின்றி இலவசமாக ஆவணத்தொகுப்பை பரீட்சித்துக்கொள்ள முடியும். மனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதிக்கு முன் **LL2 மாடி, இல.594, ஸ்ரீமத் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டேயில் அமைந்துள்ள இலங்கை விமானப்படை நிலையத்தின் சிராப்பரிடம் (Shroff) மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை செலுத்தி 2024.06.24** ஆம் திகதி முதல் ஒவ்வொரு வேலை நாளிலும் 0900 மணி முதல் 1500 மணி வரை **கொள்முதல் பிரிவில்**, மனுக்களுக்கான பிரிவில் மனு ஆவணத் தொகுப்பை பெற்றுக்கொள்ள முடியும். மனு ஆவணங்களை வெளியிடுவதற்கான கடைசி திகதி மேலே பந்தி 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டின் முதற் பிரதியையும் இணைத்து முன்வைத்தல் வேண்டும். பற்றுச்சீட்டுகள் இல்லாமல் முன்வைக்கப்படும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாத மனுக்களாக கருதப்படும்.
4. முத்திரையிடப்பட்ட பிரதிகளுடன் கூடிய மனுக்கள் இறுதித் திகதிக்கு முன் கிடைக்கப்பெறுமாறு பதிவுத்தபால் மூலம் **"தலைவர், திணைக்கள வழங்கல் குழு, இலங்கை விமானப்படை"** க்கு அனுப்பிவைத்தல் அல்லது இறுதித்திகதிக்கு முன் **இலங்கை விமானப்படை தலைமை அலுவலகம் (மேற்கு வாயில்), இல.594, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே, இலங்கை விமானப்படை நிலையத்தின் பிரதான பாதுகாப்பு அறையில்** மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடல் வேண்டும். விலைமனுக்கள் இலத்திரனியல் முறையில் சமர்ப்பிக்க அனுமதிக்கப்படாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனேயே **LL2 மாடி, இலங்கை விமானப்படை தலைமையகம், இல.594, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டையில்** மனுக்கள் திறக்கும் அறையில் மனுக்கள் திறக்கப்படும்.
5. மனுதாரருக்கு அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிக்கு தேசிய அடையாள அட்டை மற்றும் அவர்களின் தொழில் வழங்குனரின் அனுமதிக் கடிதத்தை முன்வைப்பதன் மூலம் மனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்படும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடையும் நேரத்திற்குப் பிறகு, மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி மனு திறப்பில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
6. அனைத்து மனுதாரர்களும், மேலே பந்தி 01 இல் குறிப்பிடப்பட்ட மதிப்பு மற்றும் கால எல்லைக்கான முதல் எழுத்துப்பூர்வ கோரிக்கையின் படி மீளப்பெற முடியாத மற்றும் நிபந்தனையற்ற மனு பத்திரம் மூலம் பணப் பரிமாற்றம் செய்யக்கூடிய மனு பிணையினை சமர்ப்பிக்க வேண்டும். மனுப் பாதுகாப்பு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருத்தல் வேண்டும். வங்கி உத்தரவாதத்துடன் **"விமானப்படைத் தளபதி"** க்கு அனுப்பப்பட வேண்டும். மனுப் பாதுகாப்பு உத்தரவாதத்தின் மாதிரி நகல் அரசாங்க கொள்முதல் வழிகாட்டுதல் - 2006 இல் வெளியிடப்பட்டது.
7. இது தொடர்பில் ஆர்வமுள்ள மனுதாரர்களுக்கு தலைமை கொள்முதல் அதிகாரி **(தொலைபேசி - 011-2347694)** அல்லது **பணியாளர் அதிகாரி வழங்கல் (மனுக்கள்) (தொலைபேசி: 011-2495495, நீட்டிப்பு - 12915, பெக்ஸ் : 011- 2441553)** மூலம் அல்லது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் எழுத்து மூல விண்ணப்பத்தை முன்வைத்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

கொள்முதல் பிரிவு,
இலங்கை விமானப்படை தலைமையகம்,
இல.594, பாதுகாப்பு தலைமையக வளாகம்,
ஸ்ரீ ஜெயவர்தனபுர,
கோட்டே.

விமானப்படை தலைமையகம்,
இல.594, பாதுகாப்பு தலைமையக வளாகம்,
ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே.

விமானப்படை தளபதி




## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

அடுத்தவர் விடயங்களில் தலையிடும் போது கவனம் தேவை. அளவுக்கு மீறாமல் இருப்பது நல்லது. ஆடம்பர பொருட்கள் சேரும். குடும்பத்தில் திருப்தியான நிலை காணப்படும். வீட்டிற்கு தேவையான பொருள் வாங்குவதால் செலவு ஏற்படலாம். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும். பிள்ளைகளுடன் மனதுக்கு பிடித்த இடத்திற்கு சென்று பொழுதைக் கழிப்பீர்கள். வீடு, மனை போன்ற முதலீடுகளில் ஆர்வம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மெத்தனப்போக்கு நீங்கி வேகம் பிடிக்கும். தொழில் விஷயமாக வெளியூர் செல்ல நேரலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புதிய பொறுப்புகள் கிடைக்கப் பெற்று அதனால் நன்மை அடைவார்கள். பெண்களுக்கு எதிர்பார்த்த செல்வ சேர்க்கை உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியைப் பற்றிய மனக்கவலை உண்டாகும். பயணங்கள் மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம, ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம்)**

மனதில் நிம்மதி உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்கள் யோசனையை கேட்டு நடந்து கொள்வது மனதிற்கு திருப்தியை தரும். கணவன், மனைவிக்கிடையே இருக்கும் அன்பு நீடிக்கும். பிள்ளைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுத்து மகிழ்வீர்கள். விருந்தினர் வருகை இருக்கும். தந்தை வழியில் இருந்து வந்த கருத்து மோதல்கள் அகலும். பிதுரார்ஜித சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். தொழில் வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். எதிலும் ஒரு முறைக்கு மறுமுறை யோசித்து முடிவெடுப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. இல்லையெனில் பலரையும் விரோதித்துக் கொள்ள வேண்டி இருக்கும். பெண்களுக்கு ஆடை, ஆபரணம் வாங்குவதால் செலவுகள் உண்டாகும். மாணவர்கள் வீண் அலைச்சலை குறைத்துக் கொண்டு கல்வியில் கவனம் செலுத்துவது நன்மை தரும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும். எல்லா நன்மையும் உண்டாகி உடல் ஆரோக்கியம் பெறும். வாக்கு வன்மையால் எந்த காரியத்தையும் சுலபமாக செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குழந்தைகளின் எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர்கள் உறவினர்கள் மூலம் தேவையான உதவி கிடைக்கும். வழக்குகளில் சாதகமான நிலை காணப்படும். எதிர்ப்புகள் விலகும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் இலாபம் கிடைக்கப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலைப்பளு குறைந்து மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். பெண்கள் சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி காண்பர். மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பார்க்கும் வெற்றிகள் கிடைக்கும். எதிலும் முன்னேற்றம் உண்டாகும்.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

எந்தவொரு காரியத்தையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் திடீர் குழப்பங்கள் தலைதூக்கும். அமைதியாக இருக்க முயன்றாலும் கூட, மற்றவர்கள் வலுக்கட்டாயமாக பேசுவார்கள். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. அக்கம்பக்கத்தினரிடம் சில்லறை சண்டைகள் ஏற்படலாம். தொழில் வியாபாரம் தொடர்பாக அதிகம் உழைக்க வேண்டியிருக்கும். அதற்கேற்ற பலனும் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் நிர்வாகத் திறமை பளிச்சிடும். எதிர்ப்புகள் குறையும். காரியத்தடை அகலும். பெண்கள் எந்தவொரு வேலையையும் அடுத்தவரை நம்பி ஒப்படைக்காமல் நேரடியாக கவனிப்பது நன்மை தரும். மாணவர்களுக்கு முயற்சிகள் சாதகமான பலன் தரும். கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். திறமை வெளிப்படும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

உடல் ஆரோக்கியம் பெறும். வீண்செலவுகள் குறையும். எதிலும் ஒரு வேகத்தை உண்டாக்கும். நல்லதா? கெட்டதா? என்று யோசிக்க தோன்றாத மனநிலை உண்டாகும். குடும்பத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். திருமண முயற்சிகள் கைகூடும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும். பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பீர்கள். உறவினர்களுடன் இருந்த மன வருத்தம் நீங்கும். குடும்பத்தில் பொன்னான தருணங்கள் நிகழும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறி வேகம் பிடிக்கும். வியாபாரம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான பலன் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புத்தி சாதுர்யம் அதிகரிக்கும். பொருளாதார நிலை உயரும். பெண்களுக்கு மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கி நட்பு உண்டாகும். மாணவர்கள் கல்வி தொடர்பான பயணம் செல்ல நேரலாம். திறமை வெளிப்படும்.

## கன்னி

**(உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் சமூகத்தில் அந்தஸ்தும், மரியாதையும் கிடைக்கப் பெறுவீர்கள். தூர தேச பிரயாணங்கள் செல்வீர்கள். சுப நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடைபெறும். வழக்குகள் உங்களுக்கு சாதகமான நிலையில் இருக்கும். குடும்பத்தில் பிள்ளைகளால் நன்மை உண்டாகும். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு திறம்பட செயல்படுவர். உறவினர்கள் வருகை இருக்கும். வீடு, வாகனம் வாங்கும் முயற்சி சாதகமான பலன் தரும். வாகனங்கள் சேர்க்கை இருக்கும். தொழிலை விரிவுபடுத்துவது பற்றிய ஆலோசனை மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களின் செயல் திறமை அதிகரிக்கும். தொழில் நிமித்தமாக வெளியூர் அடிக்கடி செல்ல வேண்டி வரலாம். பெண்களுக்கு அனுபவப்பூர்வமான அறிவு திறன் கைகொடுக்கும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடக்கும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

எதிலும் தன்னம்பிக்கையுடன் ஈடுபட்டு காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். புதிய தொடர்புகள் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். முக்கிய நபர்களின் அறிமுகமும் நட்பும் கிடைக்க பெறுவீர்கள். எதிர்பார்த்தபடி எல்லாம் நடந்தாலும் மற்றவர்கள் தவறாக புரிந்து கொள்ள நேரலாம் கவனம் தேவை. குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டு கொடுத்து செல்வது நன்மை தரும். பிள்ளைகளிடம் கவனமாக இருப்பதும் அன்பாக பேசுவதும் நல்லது. தொழில் வியாபாரத்தில் வேகம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளிடம் அனுசரித்து செல்வது நல்லது. புதிய வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு தக்க பலன் கிடைக்கும். பெண்களுக்கு மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விஷயங்களில் திடீர் தடை, தாமதம் ஏற்படலாம்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

மறைமுக எதிர்ப்புகள் குறையும். எடுத்த காரியத்தில் ஏற்பட்ட தடை, தாமதம் நீங்கும். உடல் ஆரோக்கியம் பெறும். வழக்குகள், தகராறுகளில் சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் இருந்த சண்டை சச்சரவுகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையில் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். குழந்தைகளின் நலனில் அக்கறை காட்டுவதன் மூலம் அவர்களிடம் நன்மதிப்பை பெறுவீர்கள். மனநிம்மதி உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். தொழில் வியாபாரம் தொடர்பான போட்டிகள் நீங்கும். மனதில் உற்சாகம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உற்சாகமாக காணப்படுவர். சக ஊழியர்களின் உதவிகள் கிடைக்கும். பெண்கள் எந்த ஒரு செயலையும் மிகவும் அக்கறையுடன் செய்து முடிப்பார்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பதில் வேகம் காட்டுவர்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

எல்லா முயற்சிகளிலும் வெற்றி உண்டாகும். சுபச்செலவுகள் இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்களை ஏதாவது குறை கூறுவார்கள். அனுசரித்து செல்வது நன்மை தரும். கணவன் மனைவிக்கிடையே தேவையில்லாத விஷயத்தால் மன வருத்தம் ஏற்படலாம் கவனம் தேவை. குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். தொழில் வியாபாரம் மிதமாக இருக்கும். எதிர்பார்த்த பணவரத்து தாமதப்பட்டாலும் கைக்கு வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடினமான பணிகளை செய்ய வேண்டி இருக்கும். உங்களது பேச்சு திறமையால் மேலிடத்தில் இருப்பவர்களிடம் நல்ல பெயர் பெறுவீர்கள். சக ஊழியர்களிடம் கவனமாக இருப்பது நல்லது. பெண்களது செயல்களுக்கு பக்கபலமாக யாராவது இருப்பார்கள். மாணவர்கள் கல்வியில் வெற்றிபெற கடினமாக உழைக்க வேண்டி இருக்கும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

சுப காரியங்கள் திட்டமிட்டபடி நடக்கும். நெருக்கமானவர்களுடன் பேசி மகிழ்வீர்கள். வாகனங்களை பயன்படுத்தும்போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்க பெறுவீர்கள். மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் நிம்மதி காணப்படும். கணவன் மனைவிக்கிடையே சகஜநிலை நீடிக்கும். குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகளின் செயல்திறன் அதிகரிக்கும். உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் ஆக்கபூர்வமான செயல்களை மேற்கொண்டு முன்னேற்றம் காண்பார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கூறிய பணிகளை வெற்றிகரமாக செய்து முடிப்பர். பெண்களுக்கு மனதில் திடீர் கவலை ஏற்பட்டு நீங்கும். செயல்களில் வேகம் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் முன்னேற திட்டமிட்டு செயல்படுவீர்கள். எதிலும் முன்னெச்சரிக்கையுடன் இருப்பது நன்மை தரும்.

## கும்பம்

**(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)**

எல்லா காரியங்களும் சுமூகமாக நடந்து முடியும். செலவுகள் அதிகரிக்கும். தடை தாமதம் விலகும். மற்றவர்கள் விஷயத்தில் கவனம் செலுத்துவதை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும். குடும்ப உறுப்பினர்கள் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்க பெறலாம். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை காணப்படும். பிள்ளைகள் உங்கள் சொல்படி கேட்டு நடப்பது மன மகிழ்ச்சியை தரும். நினைத்ததை நடத்தி முடிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். சொத்துப் பிரச்சினைகள் தீர்வு பெறும். தொழில் வியாபாரத்தில் எதையும் சாதிக்கும் திறமை உண்டாகும். சரக்குகளை கையாளும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். பெண்களுக்கு மனத்துணிவு உண்டாகும். மாணவர்களுக்கு எதிர்கால கல்வி பற்றிய எண்ணம் மேலோங்கும்.

## மீனம்

**(புரட்டாதி 4ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

அறிவுத்திறன் அதிகரிக்கும். சாதூரியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்க பெறுவீர்கள். அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. வீண் ஆசைகள் தோன்றலாம். மனதை கட்டுப்படுத்திக் கொள்வது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுக்காக உழைக்க வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையே ஒற்றுமை ஏற்படும். குழந்தைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வீட்டில் உள்ளவர்களுடன் இருந்து வந்த மோதல்கள் குறையும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். வாக்கு வன்மையால் லாபம் கிடைக்க பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. அலுவலகத்தில் உங்களுக்கான அங்கீகாரம் அதிகரிக்கும். பெண்களுக்கு கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும்.

---

தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் 41

# மலையக மக்களுக்காக ஒலிக்கும் ஓயாத குரல் தமிழகனுடையது

மலையக மக்களின் புலம்பெயர்வு சந்தர்ப்பங்கள் பல அனுபவங்களை தந்திருக்கின்றன. இருநூறு வருடங்களுக்கு முன்னர் தென்னிந்தியாவில் இருந்தான புலம்பெயர்வால் இலங்கையின் அபிவிருத்தியில் முக்கிய அங்கமாக இம் மக்கள் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கை தேசியத்தில் 1947ஆம் ஆண்டு சோல்பறி யாப்பிற்கமைய இந்திய வம்சாவளி தமிழர்கள் சாதகமான நிலையினை பெற்றிருந்தார்கள். அதன் பின்னர், வாக்குரிமை பறிப்பு, பிரஜாவுரிமை பறிப்பு அவலங்கள் உட்பட்ட 1964ஆம் ஆண்டின் ஸ்ரீமா சாஸ்த்திரி ஒப்பந்தம் ஊடாக, உறவுகள் துண்டாடப்பட்ட துன்பியல் அவலங்களை தன்னகத்தே கொண்டதாக மலையகம் சமூகம் விளங்குகிறது. அவ்வாறே உள்ளக தூண்டல், கலவரங்கள் போன்ற இன்னோரன்ன பிரச்சினைகள் காரணமாக வாழ்ந்த நிலங்களில் இருந்து புலம்பெயர்தல் என்பதெல்லாம் மலையக மக்களின் பெரும் துயரத்திற்கான சம்பவங்களாகவே நிலைபெற்று வந்துள்ளன. 1983ஆம் ஆண்டு கலவரத்துக்கு முன்னரான, பின்னரான நகர்வுகள் அவதானத்திற்குரியனவாகும். 1987ஆம் ஆண்டின் பின்னரான துரித மகாவலி அபிவிருத்தி திட்டங்கள் பெருந்தோட்டங்களின் சிதைவுகளுக்கு அடிகோலும் மிக லாவகமான செயற்திட்டங்களாகவே அமுல்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். தேர்தலை முதன்மைப்படுத்திய ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளும் ஆங்காங்கே புலம்பெயர்வுகளுக்கு வழிகோலியதை அவதானிக்கலாம். புரட்சிகரம் என்ற மாற்று அரசியல் குறித்த கோசத்தில் பெரும்பான்மையின மத்திய வர்க்கத்தினரின் அடிப்படை வாதங்களும் மலையக மக்களின் அரசியலிலும் வாழ்வியலிலும் பெரிதும் தாக்கத்தை செலுத்தியுள்ளமையும் கவலைக்குரியதாகவே அமைகிறது. அவ்வாறே இரட்டை தேசியவாத முனைப்புகளும் மலையக மக்களில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமையும் கவனத்திற்குரியதாகும்.

1964ஆம் ஆண்டின் ஸ்ரீமா சாஸ்த்திரி ஒப்பந்தம் ஊடான புலம்பெயர்வு இலங்கையில் "இந்திய வம்சாவளி தமிழர்கள்" என்றதும் இந்தியாவில் "சிலோன் காலனியினர்" என்ற வகைப்படுத்தலுக்கும் உள்ளான தமிழர்கள் தங்களை "மலையகத் தமிழர்கள்" என அடையாளப்படுத்துவதில் முனைப்பு காட்டினார்கள். ஸ்ரீமா சாஸ்த்திரி ஒப்பந்தம் ஊடான உறவுகள் பிரியும் அவஸ்தைகளை மையமாக வைத்து உருவான கதையாக மு.சிவலிங்கத்தின் "ஒப்பாரிக் கோச்சி" சிறுகதை விளங்குகிறது. இக்கதையும் இணைந்த வகையில் மலையக மக்களின் வரலாறு, வாழ்வியல், அரசியல், தொழிற்சங்க, கல்வி, கலை அமசங்களை பேசுகின்ற பல கதைகள் இணைக்கப்பட்ட கதைகளின் தொகுப்பிற்கும் "ஒப்பாரிக் கோச்சி" எனப் பெயரிடப்பட்டுள்ள நிலையில் நாவலப்பிட்டி தமிழ்ச் சங்கத்தின் வெளியீடாகவே இத் தொகுப்பு வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. புனைகதைத் துறையில் ஆழ்ந்த ஈடுபாடுள்ள மு.சிவலிங்கத்திற்கு இத் தொகுப்பு இத் துறையில் மிகுந்த முக்கியத்துவத்தை பெற்றுத்தந்தது எனலாம். இத் தொகுப்பிற்கு அணிந்துரை எழுதிய கி.இராஜநாராயணனின் "பீஜித் தீவினிலே தமிழ்க் கூலிப் பெண்கள், சொல்லி அழும் ஒப்பாரியை காற்று வழியாக பாரதியின் காதில் விழுந்ததை "கரும்புத் தோட்டத்திலே" என்ற கவிதையில் படித்துக் கண் கலங்கினோம். புதுமைப் பித்தனின் "துன்பக் கேணி" யைப் படித்து மனம் கலங்கினோம். இப்போது மு.சிவலிங்கம் எழுதிய "ஒப்பாரிக் கோச்சி" யைப் படித்து உள்ளம் அதிர்ந்தோம். என்ற வரிகள் கவனிக்கத்தக்கதாகும். இத் தொகுப்பிற்கு கதைகளை தொகுத்தவன் என்ற வகையில் அதனூடாக பெற்ற அனுபவமும் முக்கியத்திற்குரியதாகும்.

"ஒப்பாரிக் கோச்சி" கதை தந்த மனநிலை கடந்த வாரம் திருநெல்வேலி மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் அமைந்துள்ள மாஞ்சோலை தேயிலைத் தோட்டத்தை பூர்வீகமாகக் கொண்டவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. நூறு வருடங்கள் ஐந்துக்கு மேற்பட்ட தலைமுறையினராக வாழ்ந்த நிலையில் அவர்கள் அப்புறப்படுத்தப்பட்டமை கவலைக்குரிய விடயமாகும். இலங்கையில் இந்திய வம்சாவளி தமிழர்களின் வாழ்வாதாரமும் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ள நிலையில் தாயகம் திரும்பியவர்கள் என்ற கோசத்திற்குரியவர்களுக்கும் இந்நிலை தோன்றியுள்ளது என்பது வேதனைக்குரியதாகவே அமைகிறது. மலையக மக்களின் நிலை பற்றி அறிந்த ஓர் சமூகத் தலைவரை பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் சந்தித்தேன், உரையாடினேன் என்பது என்னுள் மிகுந்த திருப்திக்குரியதாகவே அமைகிறது. அவரும் மு.சிவலிங்கத்தின் ஒப்பாரிக் கோச்சி தொகுப்பை ஏலவே வாசித்திருந்தவர் என்பதால், அவருடனான உரையாடல்கள் மிக சாதகமாகவே அமைந்தன. அவர் இலங்கையின் அரசியல் சூழலில் சிறுபான்மையினர் பற்றியும் குறிப்பாக மலையக மக்கள் பற்றியும் தெளிவான புரிதலை பெற்றிருந்தார் எனபதும் குறிப்பிடத்தக்கது. ஒப்பாரிக் கோச்சி தொகுப்பு பதிவு செய்த விடயங்கள் பற்றி நிறையவே பேசினோம். மாநாட்டில் சி.மகேந்திரன் என்ற சமூக போராளியுடனான உரையாடல்களே மிகுந்த திருப்தியை தந்தது. இவருடனான மாநாட்டு அனுபவத்தை பதிய முற்படும் தறுவாயில் மாஞ்சோலை தோட்டம் குறித்த செய்திகள் கவலையளிக்கிறது. அந்தத் தொழிலாளர்கள் வாழ்ந்த வீடு, வேலை பார்த்த நிலம், படித்த பள்ளி, முன்னோர்களின் கல்லறைகள், சக



தொழிலாளர்களுடனான உறவு, வழிபட்ட இடங்கள் மீதான ஏக்கங்கள் கண்ணீர் வடிவில் பிரஸ்தாபிக்கப்படுவதை அறிய முடிகிறது. "இப்படி ஒரு நாள் வந்திருக்கவே கூடாது. இன்னைக்கு மாஞ்சோலையே ஒரு இழவு வீட்டைப் போலவே இருக்கிறது. இப்படி ஒரு சூழல் வரும்னு நாங்கள் ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை. இனிமேல் என்ன செய்யப் போகிறோம்? என்று தெரியவில்லை என்ற அழுகுரல்கள் கேட்கின்றன. மாஞ்சோலை தோட்டம் தருகின்ற நினைவுகளோடு பொதுவுடமைவாதி, எழுத்தாளர், இதழாளர் என்ற ஆளுமை கொண்ட செயற்பாட்டாளர் சி.மகேந்திரன் தொடர்பான மாநாட்டு அனுபவத்தை பகிர்கிறேன்.

சி.மகேந்திரன் தஞ்சாவூர் மாவட்டம், கீழ் வன்னிப்பட்டு கிராமத்தை சேர்ந்த சிங்காரம், வேதாம்பாள் ஆகியோரின் புதல்வராவார். பொதுவுடமை கருத்துகளால் ஈர்க்கப்பட்ட சி.மகேந்திரன் கல்லூரிக் காலங்களிலேயே போராட்டங்கள் பலவற்றில் கலந்துகொண்டுள்ளார். ஆய்வொன்றில் தமிழகத்தின் இளம் அரசியல் தலைவர்கள் பத்து பேரில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டவர். உலகத் தமிழ் மாநாடுகள் உட்பட பல சர்வதேச அரங்குகளில் பங்கெடுத்தவர். இவரது படைப்பு ஒன்றிற்கு எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம் பரிதிமாற் கலைஞர் விருது கிடைக்கப்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இவரது படைப்புகளில் "ஒரு வண்ணத்துப் பூச்சியின் மரணசாசனம்" "தமிழக நதிகளின் மரணசாசனம்" "தீக்குள் விரலை வைத்தேன்" "வீழ்வேன் என நினைத்தாயே?" "தமிழகத்தை பாலைவனம் ஆக்காதே" "கொள்ளையனே வெளியேறு" ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவையாகும். 1971 இல் சி.மகேந்திரன் பொதுவுடமை கட்சியில் இணைகிறார். அனைத்திந்திய மாணவர் மன்றத்தின் தமிழக செயலாளர், தலைவர் போன்ற பதவி நிலைகளிலும் சிறப்பாக தொழிற்பட்டுள்ளார். அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற செயலாளர் என்ற பதவி நிலையிலும் மிகுந்த அவதானத்தை பெற்றவராக விளங்கியமை கவனிக்கத்தக்கது. இந்திய பொதுவுடமைக் கட்சியின் மாநில துணைச் செயலாளராக நீண்ட காலம் செயற்பட்டவர்.


இலங்கை முற்போக்கு இலக்கிய இயக்கங்களுடன் மிக நீண்ட காலம் தொடர்பினை கொண்டவர். இவருடனான அவ் அனுபவங்கள் குறித்து லெ.முருகபூபதியின் பதிவுகள் முக்கியத்துவம் பெற்றவையாகும். மலையக தமிழர்களின் வரலாறு குறித்த அவதானத்தை கொண்டவராக சி.மகேந்திரனை இனங்காண முடிகிறது. ஒப்பாரிக் கோச்சி சிறுகதைத் தொகுப்பு வெளிப்படுத்தும் விடயங்கள் தொடர்பான அவருடனான உரையாடல் மிகுந்த ஆரோக்கியத்தை தந்தது. பல நாடுகளுக்கு தமிழர்கள் புலம்பெயர்ந்துள்ளார்கள். ஆனால் எந்த நாட்டிலும் அனுபவிக்காத துன்பியல் அனுபவத்தை இருநூறு வருடத்திற்கு முன்னர் புலம்பெயந்த மலையக மக்கள் அனுபவித்திருக்கிறார்கள். சம காலத்திலும் அவர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளமை கவலைக்குரியதாகும். 3000 ஆண்டுகளுக்கு முன்னரான பாரம்பரியத்தை கொண்டவர்கள் என மார்தட்டிக் கொள்கிறோம். அப் பாரம்பரியத்தில் வந்தவர்கள் புலம்பெயர்ந்த காரணத்திற்காக அடக்குமுறைகளுக்குள் சிக்கித் தவித்த நிலையை பாராமல் இருந்திருக்கிறோம். இதற்காக வருத்தத்தை பதிவு செய்கிற அதேவேளை அதற்கான பிராயச்சித்த செயற்பாடுகளுக்கும் அழுத்தத்தை வழங்குதற்கு தயாராக இருக்கின்றோம். இந்தியாவின் அயலக உறவு நடவடிக்கையில் முக்கியமாக கவனிக்க வேண்டிய சமூகமாக மலையக மக்களே விளங்குகிறார்கள். மலையகம் 200 என்ற அவதானம் சகல மட்டங்களிலும் அவதானிக்கப்படுகிறது. இக் கோஷம் மலையக மக்களின் உரிமைப் போருக்கான அவதானத்தை செலுத்துவதாக அமைய வேண்டும். பாதிப்புகள் ஏற்பட்டுவிட்டன. அதே நிலையில் நாம் இருக்க முடியாது. அடுத்த கட்ட நகர்வுக்கான அடித்தளத்தை இடுவதற்காக மலையகம் 200 குறித்த அவதானம் இருக்க வேண்டும் என்பதாக அவரது வலியுறுத்தல் அமைந்திருந்தது.

தமிழ் இலக்கிய உலகில் "தாமரை" இதழின் வகிபங்கு மிக முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது. தாமரை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரபூர்வமான இதழாகவே அமைகிறது. இவ் இதழின் ஆசிரியர் என்ற வகையில் தாமரை சி. மகேந்திரன் என்றே அழைக்கப்படுகின்றார். இது 1958இல் ப. ஜீவானந்தத்தால் தொடங்கப்பட்ட இதழாகும். ஜீவானந்தத்தை தொடர்ந்து இணையாசிரியராக இருந்த மாஜினி இதழை நடத்தினார். தொடர்ந்து தி.க. சிவசங்கரன், ஆ.பழனியப்பன், கே.இராமசாமி ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு தாமரை வெளிவந்தது. தற்போது சி.மகேந்திரனுடன் பொன்னீலன், தேவ பேரின்பன் ஆகியோர் ஆசிரியர் குழுவில் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்திய எழுத்தாளர்களின் ஆளுமைகளை வளர்த்த இதழ் என்ற வகையில் இலக்கிய உலகில் தாமரை இதழுக்கு மிக முக்கிய இடம் காணப்படுகின்றது. மலையக மக்கள் தொடர்பில் அதீத அக்கறையையும் ஆதங்கத்தையும் சி. மகேந்திரனில் உணரமுடிகிறது. மாஞ்சோலை போன்ற பல தோட்டங்கள் தென்னிந்தியாவில் பிரச்சினைக்குரியதாக அமைகிறது. அவ்வாறான சமூக பிரச்சினைகளையும் இனங்கண்டு அதற்கு ஏற்ற நடவடிக்கைகளையும இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எடுக்க வேண்டும் என்பதும் எம் கோரிக்கையாகிறது.

1964ஆம் ஆண்டின் பின்னரான புலம்பெயர்வு வேதனைகள் பல துன்பியல் அனுபவங்களை தந்திருக்கின்றன. பல படைப்புகள் ஒப்பாரிக் கோச்சியைப் போல தாக்கத்தை செலுத்தி வந்துள்ளன. அவற்றுள் மு.சி. கந்தையா, பன்னீர் செல்வம், தவமுதல்வன் போன்றோரின் படைப்புகள் மிகக் கவனத்திற்குரியனவாக அமைகின்றன. அந்த வரிசையில் ஓயாத குரலாக தொழிற்படும் "தமிழகன்" என்ற ஆளுமையின் செயற்பாடுகள் முக்கியத்துவத்திற்குரியதாக விளங்குகிறது. அவ்வாறான தமிழகனின் எழுத்துக்களில் "களுகங்கை முதல் காவிரி வரை" என்ற நூலின் வெளிப்பாடு அவதானத்திகுரியதாக விளங்குகிறது. இந் நூலுக்கு அணிந்துரை வழங்கியவர் என்ற வகையில் சி.மகேந்திரனின் பார்வையும் குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறே மு.சி.கந்தையாவின் "குறுநதிக் கரையில்" நாவலும் 1964இன் பின்னரான புலம்பெயர்வு வேதனைகளை பதிவு செய்வதாகவே அமைகிறது. மலையகம் 200 குறித்த அவதானிப்பில் இலங்கை அரசாங்கம், இந்திய அரசாங்கம்; இரு வேறுபட்ட முத்திரைகளை வெளியிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. இம் முத்திரைகள் மரபு ரீதியாக தொழிற்துறையை அடையாளப்படுத்துவதாகவே அமைகின்றன. இந் நிலையில் மேற்குறித்த முத்திரைகள் வெளியிடுவதற்கு முன்னரே நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம் மலையக சமூக அசைவியக்க நகர்வை அடையாளப்படுத்தும் வகையில் இலங்கை தபால் திணைக்களத்துடன் இணைந்து தபால் முத்திரையை வெளியிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

பயணம் தொடரும்...





# படித்ததும் பகர்வதும் 196



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### பெற்றோரைப் பேணுவோம்!



கடந்த ஹஜ்ஜுப் பெருநாளைக்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர், எனது வாடிக்கையாளர் ஒருவரிடம் கதைத்துக் கொண்டிருந்த போது, அவரிடம் "நீங்கள் எங்கே சென்று விட்டு வருகிறீர்கள்?" என்று கேட்டேன் அதற்கு அவர் சொன்ன விடயம் என்னை அதிகமாக பாதித்ததோடு, ஆழமாக சிந்திக்கவும் வைத்தது.

அவர் ஒரு வயோதிபர் விடுதிக்கு சென்று, அங்கிருக்கும் அவரது நண்பரையும், நண்பரோடு இருந்த அவரது மனைவியையும் சந்தித்து, சுகம் விசாரித்துவிட்டு வந்ததாக கூறினார். கொழும்புக்கு வந்த வேளை, பெருநாள் ஓரிரு தினங்களில் வருவதனால் அவர்களை சந்தித்து சுகம் விசாரித்து சில அன்பளிப்புகளை வழங்கி விட்டு வந்ததாகவும் குறிப்பிட்டார்.

நான் அவரிடம் "உங்கள் நண்பர் ஏன் முதியோர் இல்லத்தில் இருக்கிறார்? அவர்களை பார்த்து, பராமரித்துக்கொள்ள அவர்களுக்கு பிள்ளைகள் இல்லையா?" என்று கேட்டேன். அதற்கு அவர் "இரு மகன்களும் ஒரு மகளும் இருக்கிறார்கள். அவர்களை எனது நண்பர் நன்றாக படிக்க வைத்து நல்ல இடங்களில் திருமணமும் செய்து வைத்தார். ஆனால் அவர்கள் அனைவரும் இப்போது இந்த நாட்டை விட்டு விட்டு வெளியேறி, வெளிநாடுகளில் வசிக்கிறார்கள். இங்கே எனது நண்பரும் அவரது மனைவியும் அவர்களது வீட்டில் தனியாக இருப்பது பொருத்தமல்ல என்று கருதி இந்த வயோதிபர் இல்லத்தில் அவர்களை சேர்த்துள்ளார்கள் என்று தெரிவித்தார்.

இந்த விடயத்தை நோக்கும் போது தமது அந்திம காலத்தில் வயோதிபர் விடுதியில் வாழும் அந்த தம்பதிகளை நினைத்து பெரிதும் பரிதாபமாக இருந்தது. தாம் பெற்று வளர்த்த பிள்ளைகளுடனும், அவர்கள் பெற்று வளர்க்கும் பேரப் பிள்ளைகளுடனும் சேர்ந்து, கொஞ்சி, குலாவி, விளையாடி, மகிழ்ந்து வாழ வேண்டிய காலத்தில் அவர்களைப் பிரிந்து, தனிமையாக வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருப்பது கவலைக்குரிய விடயமே என்பதை எவராலும் மறுக்க முடியாது.

இத்தகைய பிள்ளைகள் தமது செயலுக்கு எத்தகைய நியாயங்களை கற்பித்தாலும் அவை எந்த வகையிலும் பொருத்தமானவையாக இருக்கப் போவதில்லை. பெற்று, வளர்த்து, படிப்பூட்டி, பராமரித்து, அரவணைத்து, அவர்கள் நல்ல வாழ்க்கையை வாழும் நிலையை உருவாக்கித் தந்த பெற்றோர்களை, தம்முடனேயே வைத்து பராமரிக்க ஏற்பாடுகளை செய்து கொள்ள முடியாமல் இருப்பது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயமாகத் தெரியவில்லை.

வயோதிபர் விடுதியில் அவர்களுக்கு எத்தகைய வசதிகள் இருந்தாலும், அவர்களது அன்றாட தேவைகள் நிறைவேற்றப்பட்டாலும் உள ரீதியாக அவர்கள் தனிமை படுத்தப்பட்டவர்களாகவே இருப்பார்கள். பிள்ளைகளுடனும் பேரப்பிள்ளைகளுடனும் பேசி, பழகி, விளையாடி பொழுதுகளைக் குதூகலமாக களிக்க ஏங்குவார்கள் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் மட்டுமன்றி, உள்நாட்டிலேயே இருப்பவர்களில் சிலர் கூட தமது பெற்றோர்களை இவ்வாறு முதியோர் இல்லங்களில் தங்கியிருக்க வைத்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் தாம் செய்வது சரியா? தமது கடமைகளை சரியாக செய்கின்றார்களா? பெற்றோருக்கு வழங்க வேண்டிய கண்ணியத்தையும் கௌரவத்தையும் வழங்குகின்றார்களா? மொத்தத்தில் பெற்றோர் மீது தமக்குள்ள கடமைகளையும், பொறுப்புகளையும் நிறைவேற்றுகின்றார்களா? என்பதை அவர்கள் மனசாட்சியுடன் சிந்திக்க வேண்டும். இவ்வுலகில் எல்லா விதத்திலும் சிறந்தவர்கள் பெற்றோர்களே. அவர்களுக்கு உரிய கௌரவம், கண்ணியம் கட்டாயம் வழங்கப்பட வேண்டும். அவர்களிடம் அன்பு, பாசம் காட்டி ஆதரிப்பது பிள்ளைகளின் மீதுள்ள தவிர்க்க முடியாத பொறுப்புகளாகும். இவற்றை உணர்ந்து, புரிந்து, தெரிந்து செயற்படுவது இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவர் மீதுமுள்ள தார்மிகக் கடமையாகும்.

## பேசும் கவிதை

### தந்தை




அருகில் இருப்பவர் ஒளிபெற
உருக துணியும் மெழுகு
விலகப் போகும் அம்புக்கு
உடலை வளைக்கும் நெடுவில்!!
பயனைக் கருதி உழைக்காமல்
கடமை செய்யும் விவசாயி !!
சன்மானம் எண்ணி செய்யாமல்
தன்திறன் காட்டும் கலைச்சிற்பி!!
மக்கள் நாளும் உய்வுபெற
நித்தம் நினைக்கும் மாமன்னன் !!
தியாக சின்னம் இவைஎன்றார்
தன்னுடை படைப்பில் சிறந்த
தென்று இவற்றை எண்ணி
தெய்வம் என்னிடம் புகழ்பாட
நானும் எனக்குள் மெல்லச்சிரித்து
உயிர் கொடுத்த காரணத்தால்
உயிர் உள்ள வரையிலும்
உழைக்க துணிந்த உள்ளம்!!
என்னை பெற்றெடுத்து இது நாளும்
கண் போல் வளர்த்த முகத்தை
ஒரு தரம் காட்டி மறைத்தேன்
மறு நொடி இறைவன் விழியில்
சீறிப்பாயும் வெள்ளம் கண்டேன்
எனக்கு வாய்த்த பேறு கண்டு
தனக்குள் பொறாமை போலும் !!!

**கவிஞர் கார்த்தி கண்ணதாசன்**

## சிந்தனை செய் மனமே

*வாழ நினைத்தால் வாழலாம்*
*வழியா இல்லை பூமியில் ...!*



சீலன் இரும்பு சாமான்கள் செய்து விற்கும் கொல்லன். அவனுக்கு அன்பும் அழகும் நிறைந்த மனைவி இருந்தாள், அவன் வாழ்க்கை உழைப்பும், காதலும், ஊடலுமாக மகிழ்ச்சி வெள்ளமாய் ஓடிக் கொண்டிருந்தது.

அவனது வாழ்க்கையிலும் சோதனைக் காலம் வந்தது, நாகரிக காலத்தின் துவக்கத்தோடு கொல்லப் பட்டறை தொழில் நலிவுற்றது, வருமானம் நாளுக்குநாள் குறைந்து கொண்டே வந்தது அன்றாட உணவுக்கே வறுமை என்ற நிலை வந்துவிட்டது, சீலனுக்கோ ஊடலிலும், காதலிலுங்கூட நாட்டம் இல்லாமல் விரக்தி மனதில் குடிகொண்டது, ஒருநாள் மாலை வேளையில் மனைவியின் மடியில் தலைசாய்த்து வானத்து நட்சத்திரங்களை சோகத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான். மனதில் எதிர்காலம் குறித்த கவலைகள் எழுந்து கண்ணீர் துளிகளாய் கரைந்தோடியது, அதைக் கண்ட மனைவி ஆறுதலாய் பேசினாள்.

"ஐயா ஏன் சாமி எதுக்கு கலக்குறீங்க? இந்த தொழில் இல்லைன்னா என்ன, பக்கத்து காட்டுல போய் விறகு வெட்டி அதை அக்கம் பக்கத்து கிராமத்துல வித்தா நாலு காசு கிடைக்குமே. அதை வெச்சு ராசாவாட்டம் வாழலாமே" என்றாள்,

அவனது உள்ளத்தில் புது நம்பிக்கை, புது உற்சாகம் பிறந்தது. சீலன் விறகுவெட்டி ஆனான். அந்தத் தொழிலில் ஓரளவு வருமானம் கிடைத்தது. வீட்டில் தினமும் பொரியல், குழம்பு சமையல் கூடவே மனைவியின் சிரித்த முகமும் கனிவான கொஞ்சலும் அவனுக்கு ஓரளவு மகிழ்ச்சியை தந்தாலும், சற்றே சோகமும் இழையோடி இருந்தது,

ஒருநாள் மனைவி கேட்டாள், "அத்தான், இன்னும் ஒங்க மனசுல ஏதோ சோகம் இருப்பதுபோல் தெரியுதே? ஏன் அது?"

அதற்கு சீலன், "பட்டறைத் தொழில் நல்லாயிருந்த காலத்தில் நம்ம வீட்டில் தெனந்தெனம் பொரியலும் கறிக் கொழம்புமாய் இருக்கும், இப்போ இப்படி வயித்தக்கட்டி வாழுறோமே, அதுதான்டி குட்டிம்மா மனசுக்கு என்னவோ போல இருக்கு, இப்படி விறகு சுமந்துகிட்டு ஊர் ஊரா சுத்தினால் கிடைக்கிற வருமானம் நமக்கு நல்லபடியா வாழ பத்தலையே" என்று கூறியவன் கண்கலங்கினான். தவித்துப் போன அவள், "வேணாஞ் சாமி வேணாம், நீங்க வீணா கண்ணு கலங்காதீக. என்னோட நகை நட்ட வித்தா கொஞ்சம் காசு கிடைக்குமே, அதை மூலதனமா போட்டு நாம ஒரு விறகு கடை வச்சிரலாம், காட்டுல விறகு வெட்டுற ஜனங்களுக்கு கூலி கொடுத்து விறகு வாங்கிப் போடுவோம், கடைன்னு ஆயிட்டா எந்த நேரமும் ஜனங்க விறகு வாங்க வருவாக, நமக்கு நல்லபடியா வருமானம் கிடைக்குமே!" என்றாள்.

மீண்டும் புத்துணர்ச்சி சீலனின் உள்ளத்தில், விறகு வெட்டியானவன் விறகுக்கடை முதலாளியானான், வருமானம் பெருகியது, அப்புறமென்ன வீட்டில் சந்தோசம்தான்.

ஆனால் கெட்ட நேரம், விறகுக் கடையில் தீ விபத்து! அத்தனை மூலதனமும் கரிக்கட்டையாகி விட்டது. தலையில் அடித்துக் கொண்டு அழுதான் சீலன். பலரும் வந்து ஆறுதல் சொன்னார்கள். எதிர்காலத்தில் நல்லது நடக்கும் என்றார்கள்.

மனைவி வந்தாள். கண்ணீரை துடைத்தாள். அவன் தலையை நெஞ்சோடு கட்டியணைத்தாள். "இப்போ என்ன ஆயிடுச்சுன்னு சாமி அழுகுரீக? விறகு எரிஞ்சு வீணாவா ஆயிட்டுது. கரியாத்தானே ஆகியிருக்கு. நாளைலயிருந்து கரி வியாபாரம் பண்ணுவோம்" என்று சொன்னாள்.

தன் தலையை நிமிர்த்தி அவளின் முகம் பார்த்தவனுக்கு மீண்டும் வாழ்வில் ஒளி தெரிந்தது. உற்சாகத்தோடு எழுந்தான். கரி வியாபாரம் செய்வதற்கு.

## வாசித்ததில் வசீகரித்தது

*பலாப்பழம்: சொல்லும் செயலும்!*



உறவினர் ஒருவர் ஒரு பலாப்பழம் கொண்டு வந்து தந்தார்
அன்பின் வெளிப்பாடு
அதை நான் எட்டு துண்டுகளாக்கி எட்டு பேருக்கு பகிர்ந்தேன்.
பகிர்ந்துண்ணல்
ஒரு துண்டை அருகில் உள்ள வீட்டில் கொடுத்தேன். "பலாப்பழம் வாங்கினால் உறவு முறிந்து விடும்" என்று கூறி வாங்க மறுத்தார்.
மூடநம்பிக்கை
இன்னொரு வீட்டு சகோதரி. "அண்ணே உங்க வீட்டுல பலாப்பழ வாசனை வருது எனக்கு கொஞ்சம் கொடுத்து விடுங் கண்ணே..."
உரிமை
எதிர் வீட்டில் ஒரு அரச உயர் அதிகாரி. "இது எந்த ஊர் பழம்", புத்தளங்க.
கீழ் வீட்டுக்கு கொடுத்தேன் 'இறைவனுக்கு நன்றி' என்றார்.
இறை நம்பிக்கை.
வீட்டு பணிப் பெண்ணுக்கு கொடுத்தேன் "இந்த வருஷம் என் பேரப் புள்ளைங்க சாப்பிடப் போற முதல் பலாச்சுழை இது தான்" என்றாள்.
ஏழ்மை
நண்பர் ஒருவருக்கு கொடுத்தேன். "மச்சான் அடுத்த வருஷம் எனக்கு முழுப் பழமா கொடுக்கணும்" என்றான்.
நட்பு
துணைவியாருக்கு ஒரு துண்டு கொடுத்தேன்.
கடமை
என்னால் ஒரு சுழைகூட சாப்பிட முடியவில்லை.
நோய்
ஒரே ஒரு பலாப்பழம். அதன் மூலம் வாழ்க்கையின் எத்தனை படிமங்கள்? பாடங்கள்!!

## தகவல் களஞ்சியம்

### சுற்றுலாவில் இலங்கை முன்னணியில்!



உலகில் சுற்றுலா செல்வதற்கு சிறந்த முதல் மூன்று நாடுகளில் இலங்கை உள்ளடங்கியுள்ளது.

'ஃபோர்ப்ஸ்' இதழ் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி, 2024ஆம் ஆண்டு கோடை சீசனில் பயணம் செய்ய உலகின் சிறந்த மூன்று நாடுகளாக இலங்கை, கிரீஸ் மற்றும் மொரீஷியஸ் ஆகிய நாடுகள் பெயரிடப்பட்டுள்ளன.

இந்த ஆண்டின் முதல் காலாண்டில், சுமார் 285 மில்லியன் மக்கள் சர்வதேச அளவில் பயணம் செய்துள்ளனர், இது கடந்த ஆண்டை விட 20 சதவீதம் அதிகமாகும். அடுத்த சில மாதங்களில் அதிக எண்ணிக்கையிலான அமெரிக்கர்கள் சர்வதேச அளவில் பயணம் செய்ய உள்ளனர், மேலும் 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் மட்டும் 24 மில்லியன் வெளிநாட்டு பாஸ்போர்ட்களை அமெரிக்க வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ளதாக ஃபோர்ப்ஸ் இதழ் காட்டுகிறது.

இந்த கோடை காலத்தில் சுற்றுலா பயணிகள் ஐரோப்பிய நாடுகளில் இருந்து விலகி இருக்க வேண்டும் என்று ஃபோர்ப்ஸ் இதழ் சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கை, கிரீஸ் மற்றும் மொரிஷியஸ் ஆகிய நாடுகளை பயணத்திற்கு ஏற்ற இடங்களாக அறிமுகப்படுத்த முடியும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஃபோர்ப்ஸ் சஞ்சிகை, இலங்கை பசுமையான மேட்டு நிலங்கள் மற்றும் பிரமிக்க வைக்கும் கடற்கரைகள் கொண்ட ஒரு தீவு என்றும், பாலியைப் போலவே சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாகவும் உள்ளது என்று சுட்டிக்காட்டுகிறது. அறிக்கையின்படி, இலங்கையில் இயற்கை அழகை அனுபவிக்க 22 தேசிய பூங்காக்கள் உள்ளன. கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் அண்மைக்கால நிகழ்வுகளில் இருந்து மீண்டு, இந்த வருடத்தில் பார்வையிட சிறந்த இடங்களில் இலங்கை முன்னணியில் இருப்பதாக ஃபோர்ப்ஸ் சஞ்சிகை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**




ஜனரஞ்சக எழுத்தாளர்
மொழிவாணன்

# கொலைகாரன் கற்றவனா மாயாஜாலம் சொலமனையும் போட வைத்தானே ஓலம்!

"உனக்கு அந்த சத்தம் கேட்கிறதா?" என்று கேட்டுவிட்டு,

சொலமனின் ஆபிஸ் அறையையே பார்த்துக் கொண்டிருந்தார் சிரஞ்சீவி.

அடுத்து,

அந்த அறைக்குள் இருந்து

எவரோ அடித் தொண்டையால்,

அலறும் சத்தம் கேட்டது!

அடுத்து,

அந்த அறையை நோக்கி விரைந்து ஓடினார்.

"ஏய்! கதவைத்திறடா?" என்று கத்தியபடியே,

கதவில் பலமாகத் தட்டினார்!

ஆனாலும்,

கதவு திறந்து கொள்ளவில்லை!

உடனே,

இரண்டடி பின்னால் வந்து,

உடலில் உள்ள முழுபாரத்தையும் தோள்களுக்கு கொண்டுவந்து,

முன்னால் பாய்ந்து சென்று,

படாரென்று கதவில் மோதினார்.

அடுத்து,

அவரது தோளின் வலிமையைத் தாங்க முடியால்,

கதவின் தாழ்ப்பாள்,

திறந்து கொண்டது!

இப்போது,

கதவைத் தள்ளித் திறந்து உள்ளே எட்டிப்பார்த்த போது,

யாரோ ஒருவன்,

ஜன்னல் கதவைத் திறந்து கொண்டு,

வெளியே பாய்ந்தோடுவது தெரிந்தது!

ஒரு நாற்காலியின் மீது அமர்ந்திருந்த சொலமனின் முகம்,

பயங்கரமாக இருந்தது!

வெள்ளைக் கைக்குட்டை ஒன்று,

அவர் கழுத்தைச் சுற்றி கட்டப்பட்டிருந்தது!

அதேநேரம்,

தடியொன்றும் அந்தக் கைக்குட்டையில் சுற்றப்பட்டிருந்தது!

விழிகள் பிதுங்கி வெளியேதள்ளிக் கொண்டிந்த அதேநேரம்,

முகம் நீல நிறமாக மாறி,

நாக்கு வெளியே தள்ளிக் கொண்டிருந்தது.

விரைவில் செயலில் இறங்கிய சிரஞ்சீவி,

அந்த தடியில் சுற்றப்பட்டிருந்த கைக்குட்டையை அகற்றி,

முகத்தில் கொஞ்சம் தண்ணீரைத் தெளித்தார்.

அவரது அதிர்ஷ்டமோ என்னமோ சொலமன் உயிர் பிழைத்துக் கொண்டார்.

சோர்வுற்று சாய்ந்து போயிருந்த சொலமனை சிந்துஜனிடம் ஒப்படைத்து விட்டு,

கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டு,

கொலைகாரன் போன பக்கமாக விரைந்து ஓடினார்.

ஆனாலும்,

அவர் கையில் அவன் அகப்படவே இல்லை.

அவர் மீண்டும் அறைக்குள் வந்தபோது,

சொலமன் சுய நினைவிற்கு வந்திருந்தார்!

அந்த சமயத்தில்,

மேசை மீதிருந்த ஒரு சிறிய கடிதத் துண்டை மறைப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருப்பதைப் பார்த்துவிட்ட சிரஞ்சீவி,

மேசையின் அருகில் விரைந்து சென்று,

அந்த கடிதத்துண்டில் என்ன எழுதியிருக்கிறது என்று படித்துப் பார்த்தார்.

'துப்பாக்கி' என்ற ஐந்தெழுத்துக்கள் மட்டுமே பேனாவினால் எழுதப்பட்டிருந்தாலும் அதைப் பார்த்து நிறைய விஷயங்களைப் புரிந்து கொண்டார் சிரஞ்சீவி.

சொலமனின் இடது காலும் நாற்காலியின் காலோடு சேர்த்து கட்டப்பட்டிருந்ததை அப்போதுதான் பார்த்தார் சிரஞ்சீவி,

அவரது வலது கை மாத்திரமே சுதந்திரமாக இயங்கிக் கொண்டிருந்தது.

இப்போது,

சிரஞ்சீவியை மெல்ல நிமிர்ந்து பார்த்தார் சொலமன்.

அவர் ஏதோ சொல்லப் போகிறார் என்பதைப் புரிந்து கொண்ட சிரஞ்சீவி,

'என்ன' என்பதைப் போல் சைகை மூலம் கேட்டார்.

"நான் இங்கே அமர்ந்து கொண்டு அந்த துப்பாக்கி முனையைப் பற்றி நினைத்துக் கொண்டு இந்தத் தாளில் எழுதிக் கொண்டிருந்தேன். அப்போது திடீரென்று இந்த ஜன்னல் வழியாக உள்ளே வந்த கொலைகாரனான அந்த தோமஸ் துப்பாக்கி ஒன்றைக் கையில் வைத்துக் கொண்டு கைகளை மேலே தூக்கு என்று என்னை மிரட்டினான். நான் பயத்தினால் கைகளைத் தூக்கினேன். அதன்பிறகு இந்த கதிரையோடு சேர்த்து என்னைக் கட்டிப்போட்டுவிட்டு என் கழுத்தில் அந்த கைக்குட்டையைச் சுற்றினான்" மிகவும் சிரமப்பட்டு பேசினார் சொலமன்.

"அது சரி உங்கள் வலது கையை மட்டும் விட்டு விட்டு ஏன் உங்களைக் கட்டிப் போட்டான்?" வியப்புடன் கேட்டார் சிரஞ்சீவி.

"அதை அவனிடமே போய் கேட்டுக்கொள்!" என்று கத்தியபடியே,

தனது இரு கைகளுக்குள்,

முகத்தைப் புதைத்துக் கொண்டார் சொலமன்.

"ம் நீங்கள் எதற்கும் ஆத்திரப்படாமல் கொஞ்சம் ஓய்வெடுங்கள் சொலமன். நான் அப்புறமாக வந்து உங்களை சந்திக்கிறேன்!" சொல்லிவிட்டு,

சிந்துஜனையும் அழைத்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறினார்.

கொழும்புக்கு அனுப்பி வைத்த வேலனிடமிருந்து ஏதாவது தகவல் கிடைத்ததா என்று அறிவதற்காக சிந்துஜனை கிராமக பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பி வைத்து விட்டு,

பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு,

சொலமனின் ஆபிஸ் அறைக்குள் நுழைந்தார் சிரஞ்சீவி!

உடைந்து போயிருந்த கதவின் சாவியை ஆராய்ந்து கொண்டிருந்த சொலமன்,

"ம் நேரில் பார்ப்பதை விட செயலில் நீங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவராகத்தான் இருக்கிறீர்கள்!" என்றார்.

"ஆனாலும் அந்த அளவுக்கு செயல்பட முடியவில்லை அதனால்தான் தோமஸுக்கு ஒரு பாடம் கற்றுக் கொடுக்க முடியாமல் போய்விட்டது!" சிரித்தபடியே சொன்னார் சிரஞ்சீவி,

"அவர்கள் என்னையும் விட்டு வைக்க மாட்டார்கள் போல் தெரிகிறது" என்றார் சொலமன் வேதனையுடன்.

"அவர்களா ! யாரு அது அவர்கள்?" பரபரப்புடன் கேட்டார் சிரஞ்சீவி.

"தோமஸும் அவருடைய கொலை காரர்களும் இன்னும் சொல்லப் போனால் துர்காவை கடத்திச் சென்றவர்கள் நீங்கள் இதுவரையில் சந்தித்த வழக்குகளில் இதுதான் மர்மம் நிறைந்ததாக இருக்குமென்று நினைக்கிறேன்!"

"ஆமாம், அதுவும் புதுமையான ஒரு மர்மமாக அல்லவா இருக்கிறது!" என்று சொன்ன சிரஞ்சீவி,

"அது ஒரு மர்மமா அல்லது மர்மங்களா என்று கண்டுபிடிக்க முடியுமானால் அதேபோல் இது சதியா அல்லது சதிக்குள் சதியா இல்லையென்று நம்ப முடியுமானால் எனக்கு அதுவே பெரிய நிம்மதியாக இருக்கும்" என்றார்.

அவர் இப்படிச் சொன்னதும்,

கலவரத்துடன் அவரைப் பார்த்தார் சொலமன்!

பிறகு,

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்பது உண்மையில் எனக்குப் புரியவில்லை சிரஞ்சீவி!" என்றார்.

"வெகுவிரைவில் அதை உங்களுக்கு புரிய வைக்கிறேன் சொலமன்" என்று புன்னகைத்தபடியே சொன்ன சிரஞ்சீவி,

"அதில் ஒரு சிறிய குறைபாடு இருக்கிறது அதாவது அந்த கஜ் மரத்தில் ஏற்பட்டிருக்கும் மர்மத்தையும் துர்கா கடத்திச் செல்லப்பட்ட சம்பவத்தையும் ஒன்றாக இணைக்கும் சங்கிலித் தொடரை இன்னமும் என்னால் கண்டு பிடிக்க முடியாமல் உள்ளது தான்!" என்று சொல்லி விட்டு,

சொலமனை நிமிர்ந்து பார்த்தார் சிரஞ்சீவி!

"துர்காவை கடத்திக் கொண்டு தான் போனார்கள் என்று எப்படி சொல்வது?"

"அதில் எனக்கு எந்த விதமான சந்தேகமும் இல்லை நேற்று இரவு அவளை பலவந்தமாக கடத்திச் சென்றிருக்கிறார்கள்!"

"பைத்தியமா! அவள் போனது முந்தாநாள் அல்லவா?"

"இல்லை அவள் நேற்றுவரை இங்கு தான் இருந்திருக்கிறாள் என்று நான் மீண்டும் சொல்லுகிறேன்.



நாங்கள்தான் முட்டாள்களைப் போல் கொழும்பில் அவளைத் தேடி அலைந்திருக்கிறோம்! அவள் ஒரு கைதியாக இங்கேயே இருந்திருக்கிறாள். உங்களுக்கு தெரிந்த விதத்தில் ஒரு மின்னஞ்சல் மூலம் எங்கள் மூவரையும் ஏமாற்றியிருப்பது இங்கிருந்து எங்களை வெளியேற்றுவதற்காகத்தான்!"

"அப்படியானால் அனுராதபுரத்தில் இருந்து வந்த தொலைபேசி அப்படிப்பட்ட ஒன்றாகத் தான் இருக்க வேண்டும். சரி அப்படி எங்குதான் துர்கா மறைந்திருந்தாள்?"

"அதை நாங்கள் இப்போது தேடிப் பார்ப்போம்! துப்பு ஏதாவது கிடைக்கலாம். ம் முதலில் இந்த அறையில் இருந்தே அதை ஆரம்பிப்போம்!"

"இந்த அறையில் இருந்தா?"

"ஆமாம்" என்பதைப் போல் தலையை ஆட்டினார் சிரஞ்சீவி.

பிறகு,

கொஞ்சம் முன்னால் நகர்ந்தார்.

"இந்தக் கதவு நூல் நிலையத்திற்குள் செல்லும் கதவுதானே?"

"இடது பக்கமாக இருக்கும் அந்தக் கதவு எங்கே போகிறது?"

"அது எனது தனிப்பட்ட குளியல் அறைக்குள் நுழையும் கதவு"

அதை திறந்து காட்டினார் சொலமன்.

"ஆனாலும் நான் இப்போது அதை பயன்படுத்துவதில்லை!" சிரஞ்சீவி அதை எட்டிப் பார்த்தார்.

உள்ளே,

ஏதோ பாத்திரங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன,

அவர் சொன்னது உண்மைதான் என்பதை சிரஞ்சீவி உணர்ந்து கொண்டார்!

அந்த அறைக்குள் ஜன்னல்கள் எதுவும் இருக்கவில்லை.

அங்கே இருந்து முற்றத்திற்கு செல்லக்கூடிய விதத்தில் உள்ளே கதவொன்றும் பெரிய கபேர்ட் ஒன்றும் இருந்தது!

மெல்ல நடந்து சென்று,

அந்த கபேர்ட்டை திறந்தார் சிரஞ்சீவி

"நான் குளிப்பதற்குத் தேவையான உபகரணங்கள் தான் அதற்குள் இருக்கின்றன!"

சொலமன்தான் சொன்னார்.

அதற்குள் நாற்காலி ஒன்று இருந்தது.

"இதற்குள் ஏன் நாற்காலி ஒன்றை வைத்திருக்கிறீர்களா?" சொலமனின் முகத்தைக் கூர்ந்து பார்த்தபடியே கேட்டார் சிரஞ்சீவி.

அதைக் கேட்டதும்,

தலையைச் சொறிந்த படியே,

"ம் இதற்குள் நாற்காலி ஒன்று இருப்பதை நானும் இப்போதுதான் பார்த்தேன்!" என்றார்.

"இந்த வீட்டுக்கு மேலதிகமான சாவிகள் ஏதாவது இருக்கிறதா?"

"ஆமாம் முனியாண்டியிடமும் எல்லா சாவிகளும் இருக்கின்றன!" எவ்விதத் தயக்கமும் இன்றி சொன்னார் சொலமன்!

இருவரும் மீண்டும் ஆபிஸ் அறைக்குள் வந்தார்கள். ஆபிஸ் அறைக்குள் வந்த சிரஞ்சீவி,

சிந்தனையுள் மூழ்கினார்.

மெல்ல அவர் அருகில் வந்த சொலமன்,

"ம் இப்போது நீங்க என்ன முடிவிற்கு வந்திருக்கிறீர்கள் சிரஞ்சீவி!" என்று கேட்டார்.

அவர் சொன்னபதில்,

சொலமனை வியப்பினுள் விழ வைத்தது!

**(தொடரும்.)**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 119

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | | 07 | | 08 | 09 |
| 10 | | 11 | 12 | 13 | |
| | 14 | | 15 | | 16 |
| 17 | 18 | 19 | | 20 | 21 |
| 22 | | 23 | 24 | 25 | |

பெயர் ........................................

வகுப்பு ........................................

தொலைபேசி இல ........................................

பாடசாலை பெயர் ........................................

வதிவிட முகவரி ........................................

........................................

.............................. ........................................

மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) ஒளி ஊடுருவக் கூடியதும், வன்மைத்தன்மை உள்ளதும், நொருங்கக் கூடியதுமான திண்மப் பதார்த்தம். நாம் பயன்படுத்துகின்ற ஏராளமான பொருட்கள் இதனால் ஆக்கப்பட்டுள்ளன.
(8) அந்திப்பொழுதைக் குறிக்கும் சொல்.
(11) எமது பிரதான உணவான சோறு சமைப்பதற்குத் தேவையானது.
(17) மாடு உட்பட பல பிராணிகளின் இளமைப் பருவத்துக்குரிய மரபுச் சொல்.
(20) பாலூட்டும் உயிரினங்கள் தமது இளந்தைகளுக்கு வழங்கும் ஊட்டச்சத்துப் பானம்.
(23) இரவில் உணவு தேடும் பறவை. இரவில் மரங்களில் அமர்ந்தவாறு இப்பறவை எழுப்பும் சத்தம் அச்சம் தருவது. இதன் கண்களும், பார்வையும் கூட அச்சம் தருவதுண்டு.

**மேலிருந்து கீழ்**

(1) இலங்கையில் விளைகின்ற வாசனைத்திரவியங்களில் இதுவும் ஒன்று.
(3) மூத்த சகோதரனான அண்ணனை இவ்வாறும் அழைக்கலாம். (தலைகீழான சொல்)
(5) மீன்பிடி உபகரணங்களில் ஒன்று இது.
(8) மீன்களை அவித்துக் காயவைத்துப் பெறப்படுகின்ற வன்மைத்தன்மையான உலர்ந்த உணவு இது. எமது உணவுகளில் பயன்படுத்தப்படுகின்றது.
(12) தொடர்மழை பெய்கின்ற காலப்பகுதியை இவ்வாறு குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)
(14) சாதுவான இயல்பு கொண்ட காட்டு மிருகம் இது. எமது நாட்டில் வாழ்கின்ற இனத்தில் உடலில் வெண்புள்ளிகள் உள்ளன.
(16) மாடு, குதிரை, நாய், குரங்கு போன்ற பல்வேறு பிராணிகளின் உடலின் பின்பகுதியில் காணப்படுகின்ற நீளமான உடலங்கம்.
(17) பொருட்கள் விற்பனை செய்யப்படும் இடம்.
(19) நீர்நிலைகளில் ஒன்று. (தலைகீழான சொல்)
(20) வீதியைக் குறிக்கும் சொல்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 118

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தேயிலை 06. தடிமன் 10. கமுகு
14. மறி 16. மதம் 21. கலை 23. விம்பம்

**மேலிருந்து கீழ்**

01. தேனீ 03. முதலை 04. மதி 07. மகுடி
09. கம்பன் 10. கறி 14. மனை 17. தலைவி
20. பல்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 117

### பாராட்டு பெறுவோர்

**1. த. அபிஜித்**
தரம் 06, விபுலானந்த மத்திய கல்லூரி,
உடையார் வீதி, காரைதீவு 02

**2. எம். ஜெஹான் இர்பான்**
தரம் 05B, கைரியா பெண்கள் பாடசாலை,
இல. 155/3, மொஹிதீன் மஸ்ஜித் வீதி,
கொழும்பு - 10

**3. எம். பாத்திமா**
தரம் 05, முஹரம் கல்லூரி,
இல. 10, போதிராஜ மாவத்தை, கொழும்பு -10.

**4. எம்.ஏ. ஆக்கிபா ஸைனப்**
தரம் 08, அலிப் சர்வதேச பாடசாலை,
இல. 41, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.


**5. எம்.எம். ஆஹில்**
தரம் 01A, ஒக்ஸ்போர்ட் கல்லூரி,
இல. 366, நாங்கல்ல, துல்ஹிரிய.

**6. எம்.ஆர். முஹம்மது இஸ்ஹாக்**
தரம் 04C, ரோயல் கல்லூரி,
இல. 44/40, இந்திரஜோதி வீதி, இரத்மலானை.

**7. ஹானீஸ் ஜின்னா**
தரம் 06, எஹட்டுமுல்ல மு.ம. வித்தியாலயம்,
நாகொல்லாகொட.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 119
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.


தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**புகழ்: ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல**
**தூதிய மில்லை உயிர்க்கு**

**தெளிவுரை :**
*வறியவர்க்கு ஈதல் வேண்டும் அதனால் புகழ் உண்டாக வாழ வேண்டும், அப் புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை.*

## சிறார்களுக்கு காலநிலை மாற்றத்தை உணர்த்தும் பத்திரிகை




காலநிலை மாற்றம் குறித்துக் கவலையும் சூழலியல் குறித்து அக்கறையும் கொண்ட சிறார்கள் உலகம் முழுவதும் உருவாகிக்கொண்டே இருக்கிறார்கள்.

அவர்களில் சந்தோஷி வெங்கட்டும் ஒருவர். 'எர்த் ஹீரோஸ் ஆக்‌ஷன்' என்கிற அமைப்பை ஆரம்பித்துப் பல்வேறு செயற்பாடுகளைச் செய்துவருகிறார். அவற்றில் ஒன்று. 'தி எர்த் ஹீரோஸ் ஜர்னல்' என்கிற பத்திரிகை. காலநிலை மாற்றம் என்றால் என்ன, நம் பூமியைக் காப்பாற்றுவது எப்படி என்பதை எல்லாம் புதிர்கள், துணுக்குகள், கேள்வி பதில்கள், படப்புதிர்கள் வழியாகக் கொடுத்திருக்கிறார். தினமும் ஒரு குறிப்பிட்ட மணி நேரத்துக்குத் திறன்பேசி, கணினி, தொலைக்காட்சி போன்றவை இல்லாமல் இருந்தால், மனநலத்துக்கு நல்லது என்பது சிறார்களுக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் அவசியமானது.

ஓர் இளம் சூழலியலாளரால் உருவாக்கப்பட்ட இப் பத்திரிகை, சூழலியலை மிக எளிமையாகவும் சுவாரசியமாகவும் விளக்கி, சிறார்களுக்குப் புரிதலையும் விழிப்புணர்வையும் கொடுக்கும்.

## இவ்வார மழலை



இக்ராம் இஸ்மத்
உலஹிடிவெல - மல்வானை

## இந்திய பெருஞ்சுவர்



ராஜஸ்தானில் 15ஆம் நூற்றாண்டில் ராணா கும்பாவால் உதய்பூர் அருகே கட்டப்பட்டது தான் கும்பல்கர் எனும் இந்த கோட்டைப் பெருஞ்சுவர்.

சுமார் 33 கி.மீ நீளமான சுவர் என்பதால் உலகின் நீண்ட சுவர்களில் ஒன்றாக இதுவும் கருதப்படுகிறது. யுனெஸ்கோ பாதுகாக்கப்பட்ட கலாசார குறியீடாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கோட்டையில் பிறந்தவர் தான் மகாராணா பிரதாப் சிங். அதனால் ராஜஸ்தான் வரலாற்றில் முக்கிய இடம் பிடிக்கிறது. இதன் அகலம் 15 மீற்றர். எட்டுக் குதிரைகள் அருகருகே நடக்க முடியும்.

கி.பி 1535இல் சித்தூர் முற்றுகையிடப்பட்ட போது, அதன் இளவரசன் உதய் இங்கே தான் கொண்டு வரப்பட்டார். சுமார் ஐம்பது ஆண்டுகள் இந்த கோட்டை மேல் பல தாக்குதல்கள் நடந்தும், இதை வீழத்தவே முடியவில்லை. ஆனால் கி.பி 1578ம் ஆண்டு, கோட்டைக்கு நீர் வரும் பகுதி அக்பரின் தளபதி ஷபாச்கானால் கண்டுபிடிக்கப்பட்டு, நீர் வரத்து அடைக்கப்பட்டு கோட்டை வீழ்ந்தது. ஆனால் சில ஆண்டுகளிலேயே ராணா பிரதாப் சிங் இதை மீண்டும் மீட்டுவிட்டார். அதன்பின் பெரியதாக இங்கே போர் நடை பெறவில்லை. இந்த கோட்டையை பிடிக்க முடியாது என கருதியே விட்டு இருக்கலாம்.


பிரித்தானியர் ஆட்சியில் 1818இல் சில சாதுக்கள் கோட்டையை பிடித்து புரட்சி செய்தார்கள். ஆனால், பிரித்தானியர் பேசி அவர்களை சரணடைய செய்துவிட்டார்கள்.

## சிறுவர் சித்திரங்கள்



**ஆலீப் சாஹிர்**
தரம் 08C, ரோயல் கல்லூரி, கொழும்பு - 07

## படித்ததில் சிந்தித்த சந்தர்ப்பங்கள்...



சாதனையாளர்கள் பலரது வாழ்விலும் வறுமையின் கோரத் தாண்டவம் ஒருமுறையாவது நிகழ்ந்திருக்கும். அப்படிதான் இந்திய குடியரசு முன்னாள் தலைவர் அப்துல் கலாமின் வாழ்விலும் நிகழ்ந்தது.

சென்னை தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் அவர் படித்துக் கொண்டிருந்த போது, சொந்த ஊரான ராமேஸ்வரத்துக்கு திடீரென செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால், பயணச்சீட்டு வாங்குவதற்குப் போதிய பணமில்லை. உடனே அப்துல் கலாம் மூர்மார்க்கெட் சந்தைக்கு சென்றார். தாம் அடிக்கடி சென்று புத்தகங்களை வாங்கும் கடை உரிமையாளரைச் சந்தித்தார். தமது நிதி நெருக்கடியைச் சொல்லி, தனது சொந்தப் புத்தகத்தை விற்பனைக்கு ஏற்குமாறு கூறினார். கடைக்காரரோ கலாமை பரிதாபத்தோடும், வருத்தத்தோடும் பார்த்தார். பிறகு ஒரு யோசனையைத் தெரிவித்தார்.

"பணத்தைக் கடனாகக் கொடுக்கிறேன். உங்களிடம் எப்போது பணம் கிடைக்கிறதோ, அப்போது கொண்டு வந்து கொடுங்கள். உங்கள் புத்தகத்தை எடுத்துச்செல்லுங்கள்" என்றார் கடைக்காரர்.

இப்படி கடைக்காரர் சொன்னதும் கலாமின் முகத்தில் புன்னகை, அதே நேரத்தில் தனக்கு ஏற்பட்ட உணர்வுகளை அப்துல் கலாம் தனது சொற்களால் பிற்காலத்தில் கூறியிருந்ததாவது: என் அதிர்ஷ்டத்தில் ஏற்பட்டஇந்தத் திடீர் மாற்றத்தைக் கண்டு நான் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனேன். என் புத்தகத்தை இழக்காமல் என்னால் ஊருக்குப் போக முடிந்தது. புத்தகங்களை நேசித்த எனது கடைக்கார நண்பர், தனது வாக்கைக் காப்பாற்றினார்.

அந்தப் புத்தகம் பல ஆண்டுகளாக என்னுடனே இருந்தது. அது ஒரு நினைவுச் சின்னம் என்று நெகிழ்ந்துரைத்தார் அப்துல் கலாம்.

## பறவைகளும் கூடும்



முட்டை இடவும் குஞ்சுகளை வளர்க்கவும் பறவைகளுக்குப் பாதுகாப்பான இடம் தேவை. அதற்காகவே கூடுகளைக் கட்டுகின்றன. சில பறவைகள் நேர்த்தியாகக் கூடுகளைக் கட்டுகின்றன. சில எதிரியின் கண்களுக்கு எளிதாகப் புலப்படாத வண்ணம் எளிய கூடுகளை உருவாக்குகின்றன. மேலும் சில பறவைகள் மரப் பொந்து, கட்டடங்களின் விரிசல் போன்றவற்றை முட்டையிடவும் குஞ்சுகளை வளர்க்கவும் பயன்படுத்துகின்றன.

சில பறவைகள் ஆண்டுக்கு 4, 5 கூடுகளை உருவாக்குவது உண்டு.

இன்னும் சில பறவைகள் பிற பறவைகள் கைவிட்ட பழைய கூடுகளைப் பயன்படுத்திக்கொள்கின்றன. குயில்கள் காகத்தின் கூடுகளில் முட்டைகளை இட்டுவிடுகின்றன. சில பட்சிகள் கூடு கட்டிய பறவைகளை விரட்டிவிட்டு, அந்தக் கூடுகளைப் பயன்படுத்திக்கொள்வதும் உண்டு. மற்ற பறவைகள் தரையிலோ உயரமான தட்டையான பரப்பிலோ முட்டைகளை இடுகின்றன.

## கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த உயிரினம்



டைனோசர் எனும் உயிரினம் வாழ்ந்தது என்பதை தொல்லெச்சங்கள் மூலமே அறிந்து கொண்டோம். இந்த டைனோசர்களுக்கு 4 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த உயிரினம் ஒன்றின் தொல்லெச்சத்தை, தற்போது கனடாவைச் சேர்ந்த டொரண்டோ பல்கலை ஆய்வாளர்கள் அமெரிக்காவின் ஓக்லஹோமா மாநிலத்தில் உள்ள ஒரு குகையில் கண்டுபிடித்துள்ளனர். இது 28.6 - 28.9 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டது.

தொல்லெச்சங்களில் நமக்கு எலும்புகள் தான் பெரும்பாலும் கிடைக்கும். ஏனென்றால் அவை தான் சுலபத்தில் மக்காது. ஆனால், தற்போது கிடைத்துள்ளது தோல். இந்தத் தோல் செதில்கள் நிறைந்து காணப்படுகிறது. இதனால் இது பாம்பின் தோலாகவோ, முற்காலத்தில் வாழ்ந்த முதலையின் தோலாகவோ இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

விலங்கு இறக்கும்போது தோல் மண்ணில் புதையும். அது அழுகுவதற்குள், அந்த மண் இறுகிய நிலையில் கல்லாக மாறிவிட வேண்டும். அப்போது தான் தோல் தொல்லெச்சமாகக் கிடைக்கும். தற்போது கிடைத்துள்ளதும் அப்படித்தான். இது களிமண்ணில் புதைந்திருந்தது. இது கிடந்த குகைக்கு அருகே இயற்கையாக ஹைட்ரோகார்பன் நிறைந்திருப்பதால் தோல் இவ்வளவு காலம் கெடாமல் இருந்துள்ளது என்கின்றனர் விஞ்ஞானிகள்.

## வைரஸ்களுக்கு உயிர் உண்டா?

நாம் அஞ்சும் கண்ணுக்குப் புலப்படாத விஷயங்களில் ஒன்று வைரஸ். வைரஸ்கள் ஏராளமான நோய்களைப் பரப்புகின்றன. அவற்றால் மனிதர்களுக்கு மட்டுமல்ல, விலங்குகள், தாவரங்கள் ஏன் மற்றொரு நோய் பரப்பும் நுண்ணுயிராகக் கருதப்படும் பாக்டீரியாக்களுக்குக்கூட பாதிப்புதான். வைரஸ்களைக் கொல்வதற்கு நாம் ஏராளமான மருந்துகளைப் பயன்படுத்துகிறோம். இருப்பினும் அவை எல்லாவற்றிலும் தப்பித்து, வளர்ந்து கொண்டே இருக்கின்றன. வைரஸ்களை நாம் நுண்ணுயிராகக் கருதிக்கொண்டு இருக்கிறோம். ஆனால், அவை உயிரினமே இல்லை என்கின்றனர் விஞ்ஞானிகள்.

## அறிந்து கொள்வோம்

*வரலாற்றில் மிகவும் குறுகிய போர் 38 நிமிடங்கள் மட்டுமே நீடித்தது: 1896 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆங்கிலோஜன்சிபார் போர் வரலாற்றில் மிகவும் குறுகிய போராக பதிவாகியுள்ளது.*

*சுல்தான் காளித் பின் பர்காஷ், பிரிட்டிஷ் ஆதரவாளராக இருந்த சுல்தான் ஹமத் பின் துவெய்னியின் இறப்பிற்குப் பிறகு, பதவியிலிருந்து விலக மறுத்தபோது, பிரிட்டிஷ் பல்லக்குகளுக்கு கோட்டை மீது தாக்குதல் நடத்தினர், 38 நிமிடங்களில் காளித் பின் பர்காஷ் சரணடைந்தார். அதே சமயம் போரின் முடிவைக் குறித்தது.*

## பாதையில் அவதானம் தேவை

பாதையில் செல்கின்ற நாம்
பாதை ஓரமாக வலப்பக்கமாய்
நடந்து செல்லும் வேளையில்
நன்கு கவனமாய்ச் செல்ல வேண்டும்

பாதை வலப்பக்கமாய் நடந்து செல்கையில்
புதிதாய் வந்து நுழைவோரும் உள்ளனரே
மறுபக்கமிருந்து வாகனமும் குறுக்கிடும்
குறுக்கால் செல்வோரும் அவதியைத் தந்திடுவர்

நாம் பாதையில் நடந்து செல்கையில்
நம்மை மீறி ஓரத்தால் வாகனம் வந்திடலாம்
வேகமாக வரும் வாகனம் முன்னாலே வரலாம்
வேறு வாகனத்துக்கு இடம் கொடுப்பதற்கென இவ்வாறமையுமே!

சிந்தனையை வேறு திசையில் செலுத்தி நடந்தால்
சேதம் விளையும் விளைவுகள் நமக்கு நடந்திடலாம்
அவதானம் கவனிப்புடன் பாதையில் செல்தல்
அத்தியாவசியம் என்ற நிலை உறுதியாயுள்ளதே!

வெலிப்பன்னை அத்தாஸ்...



# விளையாட்டு



# அடுத்து என்ன?

டி20 உலகக் கிண்ணத்தில் இருந்து வெளியேறி புறப்படுவதற்கு முன்னர் நெதர்லாந்தை எதிர்கொண்ட இலங்கை எதிரணியை விளாசித் தள்ளியது. துடுப்பாட்டம், பந்துவீச்சு எல்லாவற்றிலும் அநாயாசமாக செயற்பட்டு இலகு வெற்றியீட்டினர்.

என்றாலும், இந்தப் போட்டி முடிவு எந்த மாற்றத்தையும் தரப்போவதில்லை. ஏதோ, ஆரம்பப் போட்டிகளில் தோற்றதற்கு ஆறுதலை மாத்திரம்தான் தரும். நெதர்லாந்தை வீழ்த்தியதற்காக அணியில் இருக்கும் குறைகள் சரி செய்யப்பட்டதாக எடுத்துக் கொள்ள முடியாது.

ஓரிரு மாதங்களுக்கு முன்னர் ஒருநாள் கிரிக்கெட்டில் படுதோல்வி அடைந்து வெளியேறிய பின்னர் அணியில் செய்த சீர்திருத்தங்களை மீளாய்வு செய்ய வேண்டிய தருணம் வந்திருப்பதாகவே தெரிகிறது. பயிற்சியாளர்கள், தேர்வுக் குழுவை விடவும் அணியின் கட்டமைப்பில் சில அதிரடி மாற்றங்கள் செய்ய வேண்டி இருப்பது அனைவரும் உணரும் ஒரு விடயம்.

இலங்கை அணியில் நிரந்த இடம் பிடித்திருக்கும் குசல் மெண்டிஸ் பற்றியே முதலில் அவதானம் செலுத்த வேண்டி உள்ளது. கிட்டத்தட்ட கடந்த ஒரு தசாப்தமாக இலங்கை அணியில் இடம் பிடித்து வரும் குசல் மெண்டிஸ், இப்போதைய தருணத்தில் அணியில் இருக்கும் அனுபவம் மிக்க துடுப்பாட்ட வீரர்.

இலங்கை டெஸ்ட் அணித் தலைவர் தனஞ்சய டி சில்வாவை அணியில் சேர்த்து வேகமாக ஆடும் பானுக்க ராஜபக்ஷ, குசல் ஜனித் பெரேரா போன்ற வீரர்களை வெளியே வைத்ததற்கு தேர்வாளர்கள் காரணங்கள் சொன்னாலும் அதனை ஏற்பது சற்று கடினமாகவே இருந்தது.

டி20 கிரிக்கெட்டில் 115 ஓட்ட வேகத்தைப் பெற்றிருக்கும் தனஞ்சய டி சில்வா போன்ற வீரர்கள் 20 ஓவர் போட்டியில் மத்திய வரிசையில் கடைசி நேரத்தில் துடுப்பெடுத்தாட களமிறங்கி பெரிதாக என்ன செய்ய முடியும்?

சதீர சமரவிக்ரம ஒருநாள் சர்வதேச போட்டிகளில் அதிக நம்பிக்கை தரும் வீரராக இருந்த போதும் டி20 கிரிக்கெட்டில் அவரது ஆட்டம் இன்னும் மேம்பட வேண்டும். எனவே, குறுகிய ஓவர் போட்டிகளில் எதிர்காலத்தில் அவரது இடம் என்பது கேள்விக்குரியது. என்றாலும் அவரது திறமையை குறைத்து மதிப்பிட முடியாது.

37 வயதான அஞ்சலோ மத்தியூஸ் இன்னும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்டில் தனது ஓய்வை அறிவிக்கவில்லை. தொடர்ந்து ஆடுவது பற்றி கடைசியாக நடந்த ஊடக சந்திப்பில் சூசகமாக கூறி இருந்தார். என்றாலும் எஞ்சி இருக்கும் அவரது கிரிக்கெட் வாழ்வில் டெஸ்ட் கிரிக்கெட்டில் அவதானம் செலுத்துவது தான் நல்லது.

முன்னாள் அணித் தலைவர் தசுன் ஷானக்கவின் ஆட்டத்தில் தொடர்ச்சித் தன்மை



அவர் விக்கெட் காப்பாளராக அணியில் செயற்பட்டாலும், அதனை ஓர் உதிரி வேலையாகவே பார்க்க முடிகிறது. மற்றபடி அவரை ஒரு தேர்ந்த விக்கெட் காப்பாளராக பார்க்க முடியாது.

இம்முறை டி20 உலகக் கிண்ணத்திற்கு தேர்வு செய்யப்பட்ட துடுப்பாட்ட வரிசை குசல் மெண்டிஸை சுற்றியே கட்டமைக்கப்பட்டது. என்றாலும் அவர் வழக்கம் போல முக்கிய கிரிக்கெட் தொடர்களில் ஏமாற்றி விட்டார். முக்கியமான போட்டிகளிலும் சோபிப்பதில்லை, பின்னர் பலவீனமான அணிகள் மற்றும் பெரிதாக முக்கியமற்ற தொடர்களில் சோபித்து அணியில் தனது இடத்தை உறுதி செய்வதுமே குசல் மெண்டிஸ் இத்தனை காலமும் ஆடிவரும் ஆட்டத்தின் சுருக்கம்.

29 வயதாகும் குசல் மெண்டிஸ் 250க்கு மேல் சர்வதேச போட்டிகளில் பங்கேற்றிருக்கிறார். ஆனால் அணியில் அவரின் பங்களிப்பு என்பது அவரது அனுபவம், திறமைக்கு போதுமானதாக இல்லை.

எனவே முன் வரிசையில் புதிய திறமைகளுக்கு இடம் அளிப்பது எதிர்கால கிரிக்கெட்டுக்கு முக்கியம். ஷெவோன் டானியல், லசித் குரொஸ்புள்ளே போன்றவர்களுக்கு அதிக வாய்ப்பு வழங்குவது பற்றி தேர்வாளர்கள் ஏற்கனவே ஆலோசித்து வருகிறார்கள். என்றாலும் டி20 கிரிக்கெட்டில் அதிரடியாக ஆடக் கூடிய தனுக்க தாபரே போன்ற வீரர்கள் மீது அவதானம் செலுத்துவது முக்கியம். 25 வயதான தாபரே கழக மட்ட டி20 கிரிக்கெட்டில் 140 ஓட்ட வேகத்தில் துடுப்பாடக் கூடியவர்.

இம்முறை டி20 உலகக் கிண்ணத்தில் அமெரிக்காவில் நடந்த போட்டிகளில் ஆடுகளத்தின் பிரச்சினை மற்றும் மேலும் பல காரணங்களால் குறைந்த ஓட்ட வேகமே பதிவாகி இருந்தது. என்றாலும் பொதுப்படையாக டி20 என்பது அதிரடி துடுப்பாட்ட வீரர்களுக்கு முக்கிய இடம் உண்டு.

ஆனால் இலங்கை அணித் தேர்வில் அது வெளிப்படவில்லை என்பது ஆரம்பத்தில் இருந்தே விமர்சிக்கப்பட்ட ஒன்று. குறிப்பாக இல்லாதபோதும் இன்னும் அவர் அணியில் தவிர்க்க முடியாத வீரராகவே இருந்து வருகிறார். எனவே, அவர் தொடர்ந்தும் அணியில் நீடிப்பது நல்லது.

ஒட்டுமொத்தத்தில் இலங்கை துடுப்பாட்ட வரிசையில் முக்கிய மாற்றங்களை செய்ய வேண்டியது கட்டாயமாக உள்ளது. கடந்த இந்திய பிரீமியர் லீக் போட்டியை பார்த்தோம் என்றால் இலங்கை துடுப்பாட்ட வீரர்களுக்கு வாய்ப்பு கிடைக்காதது என்பது, அந்த மட்டத்தில் இலங்கை துடுப்பாட்ட வீரர்கள் இல்லை என்றே அர்த்தம் கொள்ள வேண்டும்.

இலங்கை அணியின் பந்துவீச்சு பலமாகவே உள்ளது. வனிந்து ஹசரங்க, மஹீஷ் தீக்ஷன, டில்ஷான் மதுசங்க, துஷ்மந்த சமீர போன்ற வீரர்கள் அணியில் தொடர்ந்து நீடிக்கக் கூடியவர்கள். மாலிங்க பாணியில் பந்து வீசுபவர்களின் போக்கு மிதமிஞ்சிய அளவுக்கு இருப்பது எந்த அளவுக்கு ஆரோக்கியமானது என்று புரியவில்லை.

மதீஷ பதிரண ஐ.பி.எல். இல் சோபித்து இலங்கை அணியில் இடம்பெற்றபோதும் அவரது பந்துவீச்சு ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளது. புதிய பந்தில் ஆரம்ப ஓவர்களை வீச தடுமாறும் அவர் பந்தை கட்டுப்பாட்டோடு வீசுவதற்கு சற்று சிரமப்படுகிறார். நுவன் துஷாரவின் பந்துவீச்சு ஆட்டத்தை திசை திருப்பும் அளவுக்கு இருந்தபோதும், சம்பிரதாயமான வேகப்பந்து வீச்சாளர்கள் மீது அதிக அவதானம் செலுத்துவது ஆரோக்கியமானதாக உள்ளது.

இப்போதைக்கு அணித் தலைமைகளில் மாற்றம் செய்ய வாய்ப்பு குறைவாகவே உள்ளது. வனிந்து ஹசரங்கவின் தலைமையில் குறைபாடுகள் இருந்தாலும் திருத்திக் கொள்வதற்கு அவகாசம் இருக்கிறது. அர்ஜுன ரணதுங்க, மஹேல ஜயவர்தன, குமார் சங்கக்கார வழி வந்த இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைத்து மரபை அவர் புரிந்து கொண்டாலே போதுமானது.

**எஸ்.பிர்தௌஸ்...**

# அமெரிக்காவும் கிரிக்கெட்டும்



அமெரிக்காவின் கிரிக்கெட் வரலாறு நூற்றாண்டுக்கு மேல் பழையது. என்றாலும் அதற்கு கிரிக்கெட் மரபு ஒன்று இல்லை. பேஸ்போல், அமெரிக்க புட்போல் என்று அதன் விளையாட்டுகள் தனித்துவம் கொண்டவை. பெரும்பாலும் அமெரிக்காவுக்கு அப்பால் விளையாடப்படுவதில்லை.

இதனாலேயே அமெரிக்காவில் டி20 உலகக் கிண்ணம் நடத்தப்பட்டு அந்த அணியும் உலகக் கிண்ணத்தில் ஆடி முதல் போட்டியில் கனடாவை ஏழு விக்கெட்டால் வீழ்த்தும்போது கூட கிரிக்கெட் உலகம் அலட்டிக்கொள்ளவில்லை.



என்றாலும் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டி சுப்பர் ஓவர் வரை சென்று சுப்பர் ஓவரில் பாகிஸ்தானை அமெரிக்கா வீழ்த்தியபோது உண்மையிலேயே அது வரலாற்று முக்கியம் வாய்ந்த வெற்றிதான். இந்த வெற்றி அமெரிக்காவை சுப்பர் 8 வரை அழைத்துச் சென்றது. இலங்கை, பாகிஸ்தான், நியூசிலாந்து போன்ற பலம்மிக்க அணிகள் ஆரம்ப சுற்றுடன் வெளியேறியபோது அமெரிக்கா அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

அமெரிக்காவின் ஆட்டப் போக்கும் எந்த அணிக்கும் சளைத்ததாக தெரியவில்லை. அது ஆரம்ப சுற்றில் பலம்மிக்க இந்தியாவை எதிர்கொண்டபோதும் சுப்பர் 8 இன் முதல் போட்டியில் தென்னாபிரிக்காவை எதிர்கொண்டபோதும் எதற்கும் பயப்பட்டதாகவோ, தடுமாறியதாகவே தெரியவில்லை.

அமெரிக்காவால் இது எப்படி சாத்தியமானது?

சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் இணை அங்கத்துவ நாடுகளுக்கு ஒருநாள் சர்வதேச அந்தஸ்த்து வழங்கும் காலம் ஐந்தில் இருந்து மூன்று ஆண்டுகளாக குறைக்கப்பட்டபோது, 2019 ஆம் ஆண்டு அமெரிக்க கிரிக்கெட்டுக்கு அந்த அந்தஸ்த்து கிடைத்தது.

அப்போதே அமெரிக்க கிரிக்கெட் திறமையான வீரர்களை தேட ஆரம்பித்தது. உள்நாட்டில் முறையான கிரிக்கெட் கட்டமைப்பு இல்லாதபோது அது வீரர்களை உலகெங்கும் தேடியது. அதிர்ஷ்டவசமாக அண்டைய கரீபியன் தீவுகள், இந்தியா, பாகிஸ்தான் போன்ற கிரிக்கெட் மரபு கொண்ட நாடுகளைச் சேர்ந்த புலம்பெயர் மக்கள் அமெரிக்காவில் ஏகத்துக்கு இருக்கிறார்கள். அவர்களே அமெரிக்க கிரிக்கெட்டின் உயிர் நாடிகள்.

இப்படியக பல வீரர்கள் தேசிய அணிக்காகவே அழைக்கப்பட்டார்கள். மேலும் சிலர் நாட்டுக்குள் நடக்கும் உள்ளூர் போட்டிகளில் காட்டும் திறமை அடிப்படையில் சேர்க்கப்பட்டார்கள்.

குறிப்பாக நியூசிலாந்து அணியின் முன்னாள் வீரர் கொரி அன்டர்ஸர் அமெரிக்க அணியில் ஆடுவதற்கான தகுதியை 2023 ஆம் ஆண்டு பெற்றார். அவரை பற்றி பிரத்தியேகமாக குறிப்பிட வேண்டியதில்லை. அதிரடியாக துடுப்பெடுத்தாடுவார். பயனுள்ள பந்துவீச்சாளரும் கூட. சர்வதேச மற்றும் லீக் கிரிக்கெட்டில் அனுபம் பெற்றவர்.

இதே ஆண்டில் தான் ஹார்மீத் சிங்கும் அமெரிக்க அணியில் சேர்ந்தார். மும்பையில் பிறந்து வளர்ந்த சகலதுறை வீரரான ஹார்மீத் இந்தியாவுக்காக 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ணத்தில் ஆடியவர். தொடர்ந்து இந்திய பிரீமியர் லீக்கிலும் இடம்பெற்றார். என்றாலும் ஆட்டநிர்ணய குற்றச்சாட்டில் சிக்கி பின்னர் விடுதலை பெற்றார். அது



அவரது கிரிக்கெட் வாழ்வை ஸ்தம்பிக்கச் செய்தது. பின்னர் கொவிட் பெருந்தொற்று காலத்தில் அமெரிக்காவுக்குச் சென்றார்.

ஷயான் ஜஹங்கீர் காராச்சியில் வளர்ந்த பெரும் நம்பிக்கை தந்த இளம் துடுப்பாட்ட வீரராக இருந்தவர். அவர் 19 வயதுக்கு உட்பட்ட பாகிஸ்தான் அணிக்கு ஆடியவர். பாகிஸ்தானின் உள்ளூர் கிரிக்கெட் இல்லாத காலத்தில் அமெரிக்கா போய் கழக மட்ட கிரிக்கெட்டில் ஆடினார். கடைசியில் 2018 ஆம் ஆண்டு நிரந்தரமாக அமெரிக்காவின் ஹுஸ்டனுக்கு குடிபெயர்ந்தார்.

அமெரிக்க அணியில் இடம்பெற்றிருக்கும் மற்றொரு திறமையான வீரரான சான்ட்லி வான் செல்க்விக் தென்னாபிரிக்காவில் உள்ளூர் கிரிக்கெட் ஆடியவர். கிட்டத்தட்ட 500 விக்கெட்டுகள் மற்றும் 4,000 ஓட்டங்களை பெற்றபோதும் தென்னாபிரிக்க அணியில் இடம்பெறத் தவறினார். விரக்தியில் அமெரிக்க அணியில் சேர்ந்துவிட்டார்.

அமெரிக்க நட்சத்திர வீரர் ஆரோன் ஜோன்ஸ் துடுப்பாட்டத்தில் பந்துகளை பறக்கவிட்டு வருபவர். அவர் பார்படோஸ் பெற்றோருக்கு அமெரிக்காவில் பிறந்தவர். சில ஆண்டுகளுக்கு முன்னர் வரை பார்படோஸ் அணியை பிரதிநிதித்துவம் செய்து ஆடி வந்தார். மேற்கிந்திய தீவுகளின் கிரிக்கெட் அவரது இரத்தத்தில் இருப்பது அவரது ஆட்டத்தை பார்த்தாலேயே புரிந்துவிடும்.

புளோரிடாவைச் சேர்ந்த ஸ்டீவன் டெய்லர் 2019 தொடக்கம் அமெரிக்க அணியின் முக்கிய வீரர். ஆனால் ஒரு காலத்தில் அவர் ஜமைக்கா அணியில் அடியவர். எனவே அவருக்கு கிரிக்கெட் பற்றி புதிதாக எதுவும் சொல்லிக்கொடுக்க வேண்டிய தேவை இருக்கவில்லை.

அமெரிக்க அணியின் முதுகெலும்பாக இருப்பவர் சவுராப் நட்ராவால்கர். இவர்தான் பாகிஸ்தானுக்கு எதிராக சுப்பர் ஓவரில் அமெரிக்காவின் 18 ஓட்டங்களை காத்து பந்து வீசியவர். மும்பையில் பிறந்த இடது கை வேகப்பந்து வீச்சாளரான நட்ராவால்கர் தொழில்நுட்ப நிறுவனமான ஒரேகலில் முதன்மை பொறியியலாளர் ஒருவராக வேலை பார்ப்பவர். பொறியியல் வேலைக்கு அப்பால் ஒரே இரவில் கிரிக்கெட் உலகில் ஹீரோ ஆகிவிட்டார்.



நட்ராவால்கர் 2010 இல் நடந்த 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ணத்தில் ஹாமீத் சிங்குடன் சேர்ந்து இந்திய அணிக்காக ஆடியவர். அந்தத் தொடரில் அவர்தான் இந்திய அணிக்காக அதிக விக்கெட் வீழ்த்தியவராவார். அந்தத் தொடரில் அதிக விக்கெட் வீழ்த்திய அவுஸ்திரேலியாவின் மிச்சல் மார்ஷ், ஜோஷ் ஹேசல்வூட் மற்றும் அடம் சம்பா, அதேபோன்று இங்கிலாந்தின் பென் ஸ்டொக்ஸ் உடன் நட்ராவால்கரும் இருந்தார்.

என்றாலும் நட்ராவால்கரால் இந்திய கிரிக்கெட்டின் உச்சத்தை தொட முடியாது என்றபோது மேற்படிப்புக்காக 2015 இல் அமெரிக்கா புறப்பட்டார். படிப்பு, வேலைக்கு மத்தியில் கிரிக்கெட்டும் ஆடிய அவருக்கு அமெரிக்க தேசிய அணியில் இடம்பிடிப்பது அவ்வளவு கடினமான காரியமாக இருக்கவில்லை.

அமெரிக்க அணி கட்டமைக்கப்பட்ட பின்னர் அந்த அணிக்கு சர்வதேச தரத்திலான பயிற்சியாளர் ஒருவர் உலகக் கிண்ணம் ஆரம்பிப்பதற்கு இரு வாரங்களுக்கு முன்னர் சேர்க்கப்பட்டார். அவர் வேறு யாருமல்ல அஸ்திரேலிய முன்னாள் வீரர் ஸ்டுவட் லோ.

திறமை படைத்த ஆனால் சர்வதேச கிரிக்கெட் அனுபவம் அற்ற இந்த அணியை அவர் கச்சிதமாக கட்டமைத்தார்.

'இந்த வீரர்கள் வேறு நாடுகளில் இருந்த சிறந்த வாழ்க்கையைத் தேடி அமெரிக்கா வந்தவர்கள். இவர்கள் கிரிக்கெட் ஆடுவதற்கு அன்றி தமது குழந்தைகள் அல்லது தமது கல்விக்காக இங்கு வந்தவர்கள். கிரிக்கெட்டை அமெரிக்க மயப்படுத்துவதற்கு நாம் முயன்று வருகிறோம்' என்கிறார் ஸ்டுவட் லோ.

அமெரிக்காவில் கிரிக்கெட் பிரபலம் அடைவது மற்றும் வளர்வது கிரிக்கெட்டின் வீச்சை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதாக இருக்கும். இப்போது ஆடும் அமெரிக்க அணி இதற்கான ஆரம்பப் புள்ளியாகக் கூட இருக்கலாம். என்றாலும் இதற்கு அமெரிக்கா திறமைகளை நாட்டுக்கு வெளியில் தேடுவதை விட உள்நாட்டில் தேடும் நிலைக்கு முன்னேறுவது எல்லாவற்றையும் விட முக்கியமானது.

# மர்கன்டைல் கால்பந்து சம்மேளன லீக் தொடர் நாளை ஆரம்பம்



மர்கன்டைல் கால்பந்து சம்மேளன (ஆகுய) லீக் தொடர் மூன்று பிரிவுகளின் கீழ் கொழும்பு 2, சிட்டி லீக் கால்பந்து வளாகத்தில் நாளை (24) ஆரம்பமாகவுள்ளது.

இலங்கையின் முன்னணி நிறுவனங்கள் பங்கேற்கும் இந்தத் தொடரில் முதலாம் பிரிவில் முதல் பிரிவில் ஐந்து அணிகளும், இரண்டாம் பிரிவில் ஆறு அணிகளும் மூன்றாவது பிரிவில் மொத்தம் 12 அணிகளும் போட்டியிடவுள்ளன.

முதலாம் பிரிவு: எக்ஸ்போ லங்கா, சம்பத் வங்கி, அக்பர் பிரதர்ஸ், திடிரவலர் கிளோபல், மற்றும் எச்.என்.பி. அசூரன்ஸ்.

இரண்டாம் பிரிவு: செலிங்கோ ஜெனரல் இன்சூரன்ஸ், ஸ்கை மார்கட் டிரவல்ஸ், ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ், ஹட்டன் நெஷனல் வங்கி, எல்.ஓ.எல்.சி. பினான்ஸ், அமானா வங்கி.

மூன்றாவது பிரிவு: டபிள்யூ.என்.எஸ். கிளோபல் சர்விசஸ், நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, கொமர்ஷல் வங்கி, ஸ்டான்டர்ட் சார்டர்ட் வங்கி, எச்.எஸ்.பி.சி., டீஜே லங்கா, சி.டபிள்யூ. மக்கீ, லாஃப்ஸ் ஹோல்டிங்ஸ், சீலைன் ஹோல்டிங்ஸ், சேலான் வங்கி, லங்கா அசொக் லீலான்ட்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூன் மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.




திருமண பந்தத்தில் இணைந்த
தர்ஜினி சிவலிங்கம்



# சீன பெருஞ்சுவரில் நடந்து முடிக்க 17 மாதங்கள்

1984 மே மாத கோடை காலத்தில் டொங் யோ ஹுய் மற்றும் அவரது நண்பர்களான வூ டி யூ மற்றும் சங் யுவாங் யூ ஒரு நீண்ட பயணத்திற்கு புறப்பட்டார்கள். அவர்களின் பயணம் சீனாவின் லோலொங்டுவில் இருந்து ஆரம்பமானது. பொஹாய் கடலை அடையும் இங்கிருந்து தான் சீன பெருஞ்சுவர் ஆரம்பிக்கிறது.

சீன பெருஞ்சுவரை முழுமையாக நடந்து கடப்பது தான் இவர்களின் திட்டம். ஆனால் அது இலகுவனாதாக இல்லை. எத்தனை படிகளை ஏறி இறங்க வேண்டும். அந்தப் பெருஞ்சுவரின் முனை என்று நம்பப்படும் கிழக்கு முனையில் இருந்து அவர்கள் மேற்கை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

அவர்களது பயணத்தின் முதல் நாளில் கணிசமான தூரம் நடந்தார்கள். இரவானதும் அங்குள்ள கோட்டை ஒன்றில் தங்கினார்கள். நூற்றாண்டுகளுக்கு முன்னர் அந்தப் கோட்டையில் வடக்கில் இருந்து வரும் ஆக்கிரமிப்பாளர்களை தடுப்பதற்கு காவலர்கள் நின்றிருப்பார்கள். ஆனால் அப்போது அந்தக் கோட்டை வெறிச்சோடி இருந்தது.

பயணம் தொடர்ந்தது. ஆனால் இலகுவாக இருக்கவில்லை. சீனப் பெருஞ்சுவரை அவர்கள் 8,850 கிலோமீற்றர்கள் தூரம் நடந்து பூர்த்தி செய்தார்கள்.

அதற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட காலம் 17 மாதங்கள்.

அதாவது முதல் முறையாக சீன பெருஞ்சுவரை நடந்து கடந்தவார்களாக இவர்கள் வரலாற்றில் இடம்பெற்றார்கள்.

சீன பெருஞ்சுவரை கட்டும் பணி 2,500 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. காலத்துக்குக் காலம் அரச வம்சங்கள் அந்த சுவரை தொடர்ந்து கட்டினார்கள். இந்தப் பணிகள் கடைசியாக 17 ஆம் நூற்றாண்டில் தான் நிறைவடைந்தது. இன்று அந்தச் சுவர் 21,000 கிலோமீற்றருக்கு மேல் நீளம் கொண்டது.

# யூடியூபில் முதல் வீடியோ



'மீ அட் தி சூ' என்ற வீடியோ 19 விநாடிகள் ஓடக்கூடியது. மிருகக்காட்சி சாலையில் யானைக்கு முன்னால் இருந்து எடுக்கப்பட்ட அந்த வீடியோவில் யானையின் தும்பிக்கை அளவு பற்றி சுவாரஸ்யம் இன்றி பேசுகிறார் வீடியோவில் தோன்றும் ஜாவிட் கரீம்.

2005 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் திகதி யூடியூபில் தரவேற்றம் செய்யப்பட்ட இந்த வீடியோ தான் யூடியூபில் பதிவான முதல் வீடியோ. இதனை பதிவு செய்த ஜாவிட் கரீம், யூடியூபின் இணை நிறுவனம். இன்று எதனை பார்க்க வேண்டும் என்றாலும் யூடியூபை திறப்பதற்கு ஜாவிட் கரீம் தான் புள்ளி போட்டார். பின்னர் யூடியூபை கூகுள் வாங்கியதை அடுத்து அது உச்சத்தை தொட்டது.




2002ஆம் ஆண்டு உலக கனிஷ்ட சம்பியன்சிப் போட்டியில் பங்கேற்ற 15 வயதான உசைன் போல்ட் அரங்கில் இருக்கும் கூட்டத்தை பார்த்து பரபரப்படைந்தார். ஜமைக்காவில் தனது மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டிய பயம்தான் அது. அந்த பயத்தில் இடது காலுக்கு போட வேண்டிய பாதணியை வலது காலுக்கும் வலது காலுக்கு போட வேண்டிய பாதணியை இடது காலுக்கும் போட்டிருந்தார். என்றபோதும் அவர் அந்த போட்டியில் வெற்றி பெற்று உலகின் மிக இளம் வயதில் தங்கப் பதக்கம் வென்ற கனிஷ்ட வீரராக புதிய சாதனை கூட படைத்தார்.

# பயந்துபோன போல்ட்!

# இப்படியும் ஒரு சுரங்கம்



தென்னாபிரிக்காவின் ஜொஹன்னஸ்பேர்க் நகரில் இருந்து தென் மேற்காக இருக்கும் ம்போனன்ங் தங்கச் சுரங்கம் உலகின் மிக ஆழமான தங்கச் சுரங்கம் என்று பெயர் பெற்றது.

இது பூமியின் மேற்பரப்பில் இருந்து 4 கிலோமீற்றர் ஆழம் கொண்டது. இந்த சுரங்கத்தின் அடியை தொடும் பயணத்திற்கு கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் எடுத்துக் கொள்ளும்.

இதன் ஆழமான பகுதியில் சட்டவிரோத சுரங்கத் தொழிலாளர்கள் பல மாதங்கள் தங்கி இருந்து தங்கம் தோண்டுவார்கள்.

போதிய சூரிய வெளிச்சம் இல்லாததால் இவர்களது தோல் சாம்பல் நிறமாக மாறுகிறது.

இவர்களை அங்குள்ள மக்கள் பேய்கள் என்றே அழைப்பார்கள்.

# ஆபாசப் படம் பார்த்த பூனை



அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தைச் சேர்ந்த 49 வயதான கீத் கிரிபீன், தனது கணினியில் சிறுவர் ஆபாசப் படங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பாரதூரமானவை.

சிறுவர் ஆபாசப் படங்களை வைத்திருந்ததாக பத்து குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதோடு, பின்னர் மேலும் 90 குற்றச்சாட்டுகள் அரச வழக்கறிஞரினால் பதிவு செய்யப்பட்டது.

ஆனால் கிரிபீத் தப்பிக்கச் சொன்ன காரணம் தான் விசித்திரமானது. அதாவது தனது வீட்டுப் புனை தானாம் அந்தப் படங்களை தனது கணினியில் தரவிறக்கம் செய்தது.

'சில நேரங்களில் அவர் கணினியை திறந்து விட்டுச் செல்வதாகவும் அவரது பூனை விசைப்பலகையில் துள்ளிக் குதித்து விளையாடுவதாகவும் அவர் வீடு திரும்பி கணினியை பார்த்தால் அதில் விசித்திரமானவை இருப்பதாகவும் குறிப்பிட்டார்' என்று விசாரணை அறிக்கை தெரிவித்தது.

என்றாலும் நீதிமன்றம் அவரது கூற்றை பொருட்படுத்தவில்லை. அவருக்கு 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.



டொக்டர் சார், இவன் ஸ்கூல்ல எல்லாரும் இவன் மண்டையில மூளை இல்லன்னு சொல்லுறாங்க? எதுக்கும் தலையில ஒப்பரேஷன் செஞ்சி பாக்கி றீங்களா?



என்ன செருப்பு காலை கடிச்சதுக்கு பல் டொக்டர்கிட்ட போனியா? ஏன்?
கடிக்கிற செருப்போட பல்லை பிடுங்கத்தான்.



நடிகர் விஜயை வைத்து புறக்கோட்டை ஐந்து லாம்பு சந்தயில் கதை படத்தோட பேரு
நெரிசல்



கூட்டலுக்கும் பெருக்கலுக்கும் என்ன வித்தியாசம் மாலா?
ரெண்டும் ஒண்ணுதான்
எப்படி சொல்ற?
எங்க பாட்டி வீட்டை கூட்டைச் சொல்லு வாங்க,
எங்க அம்மா பெருக்கச் சொல்லுவாங்க.




தினசரி பத்திரிகைகளை மன்னர் அரசவையில் படிப்பார்.
எதிரி அனுப்பும் ஓலையை ரெஸ்ட் ரூம்ல படிப்பார்.



பாடத்தை கவனிக்காம என்னடா செய்ற?
நீங்க என்ன கவனிக்கிறீங்களான்னு பார்த்தேன்.



வாயைத் திறந்து ஆ காட்டுங்க..
என்ன டொக்டர் கிண்டல் பண்ணுறீங்க...
வாயைத் திறந்தால் பல்லுதானே தெரியும்..
ஆ .... தெரியுமா?



நம்ம தலைவருக்கு விபரம் பத்தல்ல?
ஏன்?
வீட்டுக்கு சி.பிஐ வரப்பேறாங்கள் என்றேன்.
நல்லா விருந்து வைச்சு அனுப்பிவிடுவோம் என்று சொல்லுறாரு.



உண்மை என்ற சொல்லுக்கு எதிர்சொல் என்ன?
சொல்லு பார்ப்போம்.... நான் கேட்டுக்கிட்டே நின்னுக்குறேன் நீ ஏன் பேசாம இருக்குற...
எங்க அப்பா பொய் சொல்ல வேணானு சொல்லியிருக்காரு....
அதுதான் டீச்சர்...



உன் மாமியார் சாகும் போது கூட உன் மேல பாசத்த காட்டினாங்களா?
ஆமா! உயிர் போகப் போகும் நேரத்தில கிட்ட அழைத்து நீ எப்ப வருவன்னு கேட்டாங்க



டிவி பாத்துகிட்டு இருக்கிறப்ப விசில் சத்தம் சரியா கேட்க மாட்டேங்குது!
அதான் டபுள் விசில் செட் பண்ணி வைச்சிருக்கன்



தங்க நகைகளை ஏன் திருடினாய்?
அந்த மந்திரவாதி தான் சொன்னார் நகைகள திருடினால் கோடீஸ்வரன் ஆகலாம் என்று.



ஞாயிற்றுக்கிழமை மட்டும் அந்தப் பிச்சைக்காரன் உங்க வீட்டில சோறு வாங்கிட்டு போறானே ஏன்?
அண்டைக்கு மட்டும் தான் நாங்க ஹோட்டல்ல வாங்குவோம்.



மன்னரின் பேஸ்புக்கில இவ்வளவு லைக்ஸ்ஸா?
எப்படி?
லைக்ஸ் போட்டால்தான் சம்பளம்ன்னு படை வீரர்களை மிரட்டி வைச்சிருக்கிறாரு



நம்ம வாத்தியார் சின்ன வயசில இறைச்சிக் கடையில வேலை செஞ்சிருப்பார்ன்னு எப்படி சொல்ற?
இல்ல எதுக்கெடுத்தாலும் தோலுரிச்சி தொங்க போடுவேன்னு சொல்லுறாரு....

# இலங்கையின் நாமத்தை சர்வதேசம் வரை கொண்டு சென்ற

# சிங்கப் பெண்







இலங்கையின் வலைப்பந்து நாமத்தை சர்வதேசம் வரை கொண்டு செல்வதற்கு முக்கிய காரணமாக அமைந்தவர், ஆசியாவின் உயரமான வலைப்பந்து வீராங்கனை (208 CM) என்ற பெருமைக்குரிய யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண்மணி தர்ஜினி சிவலிங்கம் (45 வயது). இவர், அண்மையில் திருமண பந்தத்தில் இணைந்துகொண்டார்.

தர்ஜினி சிவலிங்கத்துக்கு நேற்று சென்னை நியூ ஐலண்ட்ஸ் ஹோட்டலில் திருமணம் நடைபெற்றது. இவர், தமிழகத்தின் தென்திருப்பேரையில் வசிக்கும் தொழிலதிபர் ஆர்.பிரசாத்தை காதலித்து திருமணம் செய்து கொண்டுள்ளார்.

சாதாரண பெண்களுக்கு மத்தியில், தனது அசாதாரணமான உயரத்தினைக் கண்டு மனம் உடைத்திருந்த தர்ஜினி, இன்று அதே உயரத்தின் மூலமாக சர்வதேசத்தால் பேசப்படும் ஒரு வீராங்கனையாக மாறியுள்ளமையானது அவரது முயற்சியையும், உழைப்பையும், தியாகங்களையும் எமது கண்முன் கொண்டுவந்து நிற்க வைத்தவர் தர்ஜினி. சிவலிங்கம் (1979.12.30). இவர், யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவனில் 1979.12.30 ஆம் திகதி பிறந்தவர். இவரது தந்தை சிவலிங்கம்; ஆரம்ப கல்வியை ஈவினை தமிழ் கலவன் பாடசாலையிலும், உயர் கல்வியை வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றுள்ளார்.

தர்ஜினி கிழக்கு பல்கலைக் கழத்தில் கலைமானி பட்டதாரியாவார். வலைப்பந்தாட்ட போட்டிகளில் விளையாடும் வீரர்கள் தமது விளையாட்டை பாடசாலை நாட்களிலேயே ஆரம்பிப்பது வழக்கம். ஆனால், தர்ஜினி சிவலிங்கம் தனது 23ஆவது வயதிலேயே வலைப்பந்தாட்ட விளையாட்டுக்கான பிரவேசத்தை பெற்றுள்ளார். தர்ஜினி சிவலிங்கத்தின் உயரம் 6 அடி 10 அங்குலம். அது வலைப்பந்தாட்ட போட்டிகளில் அவரை மேலோங்கி செல்ல உதவியது.

தர்ஜினி சிவலிங்கம் வலைப்பந்தாட்ட அணிக்குள் பிரவேசித்த விதம் 2004ஆம் ஆண்டு வவுனியாவில் நடைபெற்ற வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணியை பிரதிநிதித்துவப்படுத்தி தர்ஜினி சிவலிங்கம் விளையாடியுள்ளார். அன்றைய தினம் தர்ஜினியின் திறமைகளை நேரில் கண்ட அனைவரும், அவரின் திறமையை கண்டு வியப்படைந்துள்ளனர். அன்றைய போட்டிக்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட அப்போதைய ஜனாதிபதி தர்ஜினி சிவலிங்கத்தை தேசிய அணியில் இணையுமாறு வலியுறுத்தியுள்ளார்.

எனினும், மொழிப் பிரச்சினை காரணமாக சற்று தயக்கம் காட்டிய தர்ஜினி, சில மாதங்களின் பின்னர் தனியார் வங்கியொன்றில் பணிபுரிய ஆரம்பித்துள்ளார். இந்த நிலையிலேயே தர்ஜினி சிவலிங்கம், இலங்கை தேசிய அணிக்குள் ஈர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன்படி, சிங்கப்பூரில் 2011ஆம் ஆண்டு நடைபெற்ற வலைப்பந்தாட்ட உலகக் கோப்பைத் தொடரில் இலங்கை அணி சரியாக பிரகாசிக்காத போதிலும், தர்ஜினி சிவலிங்கம் மாத்திரம் தொடரில் 290 கோல்களை போட்டு உலக வலைப்பந்தாட்ட ரசிகர்களையே ஆச்சரியப்படுத்தினார்.

அதன் பின்னரான காலப் பகுதியில் தான் பணியாற்றிய வங்கி அணியை பிரதிநிதித்துவப்படுத்திய தர்ஜினி சிவலிங்கம், 2017ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற விக்டோரியா லீக் போட்டிகளில் தொழில்சார் வலைப்பந்தாட்ட வீராங்கனையாக இணைந்து கொண்டார். இலங்கை தேசிய அணியில் புறக்கணிக்கப்பட்ட தர்ஜினி சிவலிங்கம், தொழில்சார் வலைப்பந்தாட்ட அணியை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாட ஆரம்பித்தார். தொழில்சார் வலைப்பந்தாட்ட அணியை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய முதலாவது இலங்கையர் என்ற பெருமை தர்ஜினி சிவலிங்கத்திற்கு இந்த போட்டிகளின் ஊடாகக் கிடைத்தது. தேசிய அணியில் புறக்கணிக்கப்பட்ட தர்ஜினி சிவலிங்கம், அவுஸ்திரேலியாவில் மிகச் சிறந்த திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

இதன்பின்னர் தர்ஜினி சிவலிங்கம் இலங்கை தேசிய அணிக்கு மீண்டும் தேர்வு செய்யப்பட்டார். இவர், தேசிய வலைப்பந்தாட்ட அணியின் துணைத் தலைவியாக இருந்தார். இதன் பின்னர் கடந்த ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய வலைப்பந்தாட்டப் போட்டிகளில் இலங்கை அணி சம்பியன் பட்டத்தை பெற தர்ஜினி சிவலிங்கம் பாரிய பங்களிப்பை வழங்கினார்.

நான்கு தடவைகள் ஆசிய வலைப்பந்தாட்ட அணியின் சம்பியன்ஷிப் போட்டிகளில் இலங்கை அணியை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடினார். உலகிலேயே மிக உயரமான வலைபந்தாட்ட வீராங்கனையாகவும், கோல் போடும் (சூட்டர்) வீராங்கனையாகவும் தர்ஜினி சிவலிங்கம் விளங்குகிறார். அவுஸ்திரேலிய கழகங்களுக்கு இடையில் விளையாடிய ஒரே இலங்கைப் பெண் என்ற பெருமையையும் கொண்டவர் தர்ஜினி.இவர், தொடர்ந்து 12 வருடங்களாக இலங்கை அணியில் விளையாடியவர்.

இவர் 2011ஆம் ஆண்டு உலகின் சிறந்த வலைபந்தாட்ட Shooter 2009, 2012 ஆம் ஆண்டு உலகின் சிறந்த வலைபந்தாட்ட Shooter போன்ற விருதுகளையும் பெற்றுள்ளார்.





# Blossom Lanka Golden விருது வழங்கும் விழா







*Blossom Lanka Golden விருது வழங்கும் விழா கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார்.*



# ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் "கீத்ராத் 6"








தினகரன்

தினகரன் வாரமஞ்சரி

**தினகரன் , தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் " கீத்ராத் 61 " எதிர்வரும் ஜூலை மாதம் 07 ஆம் திகதி மாலை 7 மணிக்கு கொழும்பு 7 ஜே.ஆர். ஜெயவர்தன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரபல இசைக் கலைஞர்கள் பஸால் ஜின்னாஹ் , அயாஸ் சவாஹிர் , ஹாரிஸ் மாஸ்டர் , சுப்பர் டியூனர்ஸ் பௌமி , அஸார் கௌஸ் இசையில் கலைக்கமலுடன் சிறப்புப் பாடகராக சிங்கப்பூர் பிரபல கலைஞர் , சுங்கத் திணைக்கள அதிகாரி ஹாஜி ஃபரிஹுல்லாஹ், பிரபல பாடகி மொறின் ஜெனற் இணைந்துபாடவுள்ளனர். தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் தலைமையில் பிரபல தொழிலதிபர், சமூகசேவையாளர் ALLIED TRADING INTERNATIONAL (PVT ) LTD இப்திகார் அஹ்மத் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் இந்நிகழ்வு பிரதான அனுசரணை வழங்கும் Level 09 , Orion Towers, 752 , Dr .Danister De Silva Mawatha , Baseline Road , Colombo 09 RANAR MIGRATION CENTER இயக்குநர் முஹம்மத் நஸீர் முன்னிலையில் நடைபெறவுள்ளது. இறை ஞானக் கவிமணி ரமீஸ்ஹாஜி , பிரபல சமூகசேவகி ஸீனியா விஷேட அதிதிகளாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். பிரபல வானொலி அறிவிப்பாளர் கவிதாயினி கலையழகி வரதராணி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குவார். இசையபிமானிகள் இலவசமாக பார்த்து ரசிக்கலாம்.**

# தமிழின் மீது தீராத தாகம் கொண்ட தாமரைச்செல்வி



தமிழ் மொழியின் மீது தீராத தாகம் கொண்ட ஒருவர் கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி. இவர் தனியார் நிறுவனமொன்றில் கணக்காளராக கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். இவரது தொழில் கணக்கு மீது படிந்திருந்தாலும் தமிழின் மீது இவருக்கு தீராத பற்று இருப்பதால் கவி



தைகள் எழுதுவதிலும் கவிதைகள் பாடுவதிலும் வல்லமை மிக்கவராக திகழ்கிறார். இவர் சர்வதேச இணையத் தொலைக்காட்சிகளில் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவதிலும் திறமை மிக்கவராக திகழ்கிறார். இதனால் இவரது நாமம் உலகெங்கிலுமுள்ள பட்டி தொட்டி எங்கும் பரவ இவரது புகழ் பாரெங்கும் பரவத் தொடங்கியுள்ளது. தமிழில் கவிதைகளை புனையக்கக்கூடிய ஆற்றல் மிக்கவராக இருந்தாலும் தமிழிலே இன்னும் என்னென்ன கற்றுக் கொள்ள வேண்டுமோ அதில் தீவிர கவனம் செலுத்துவராக உள்ளார். அதனால் தமிழ் மொழியில் என்னென்ன இருக்கின்றதோ அத்தனை விசயங்களையும் கற்றுக் கொள்வதில் ஆர்வமாக உள்ளார்.

இவர் அந்த இணைய தொலைக்காட்சி சேவை மூலம் நேர்காணல்களையும் பேட்டிகளையும் தொகுத்து வழங்குபவராக விளங்கினார். இவர், அந்த தொலைக்காட்சி செவ்வி மூலம் தொழில் அதிபர்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகள், கவிஞர்கள் என பல தரப்பட்டவர்களையும் பேட்டி கண்டுள்ளார். இவர் பட்டிமன்றங்களிலும் விவாத மேடைகளிலும் தமிழ் முழக்கம் செய்த ஒருவர். கவிதைகள் மட்டுமல்ல சிறுகதைகள் எழுதுவதிலும் இவர் வல்லவராக திகழ்கிறார். இவர் இதுவரை 80 சிறுகதைகளை எழுதியுள்ளார்.



தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையுடன் இலவச இணைப்பிதழாக வெளிவரும் செந்துாரம் இதழில் வாராந்தம் வெளிவரும் பெண்கள் பகுதிக்கும் இவர் ஆக்கங்களை எழுதி வருகிறார். பெண்களின் பெருமை, கையடக்கத் தொலைபேசி பாவனை, பிள்ளைகள் வளர்ப்பு, பொருளாதார நிலைமைகளை உணர்த்தி பிள்ளைகள் வளர்த்தல் போன்ற பல பயனுள்ள ஆக்கங்களை எழுதி வெளியிட்டு வருகிறார்.

இதுவரை 80க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். தமது வாதத் திறமையை வெளிப்படுத்தி 5 பட்டிமன்றங்களில் கலந்து கொண்டு தமது கருத்துக்களை ஆணித்தரமாக முன்வைத்துள்ளார். 100 க்கு மேற்பட்ட கவிதை போட்டிகள், கவிதை அரங்குகள் ஆகியவற்றுக்கு நடுவராக கடமையாற்றியுள்ளார்.

சமூக சேவகி

நூல் விமர்சகராகவும் தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளினியாகவும் விளங்கும் இவர், அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவையில் ஏணிப்படிகள் என்கிற நேர்காணல் நிகழ்ச்சிகளை நடத்தி பலரையும் பேட்டிகண்டுள்ளார். இவ்வாறு 35 நிகழ்வுகளை நடத்தியுள்ளார். 74 பொய்கை என்கிற குறுங்கவிதை நிகழ்ச்சிகளையும் இணைய வழி தொலைக்காட்சி ஊடாக நடத்தியுள்ளார்.

கவிதை துவானத்தின் பாடும் வானம் பாடிகள் என்ற நிகழ்வை 25 வாரங்களாக தொகுத்து வழங்கி நடத்தியுள்ளார்.

இவர், ஒத்திகை என்ற கவிதை தொகுப்பு நூலொன்றையும் வெளியிட்டுள்ளார்.

வருடம் தோறும் வறிய பிள்ளைகளுக்கான அப்பியாச கொப்பிகள் மற்றும் பாடசாலை உபகரணங்களை சிறு அளவில் வழங்கி வருகிறார்.

நல்ல நிலையில் உள்ள ஆடைகளை அவரது நட்பு வட்டத்தினுள் இருந்து சேகரித்து வறிய மக்களுக்கு கொடுத்து உதவி வருகிறார்.

ஆணோ பெண்ணோ இருவருக்குமான பிரச்சினைகளை நடுநிலையாக எழுதுவது ம் சமூகத்தில் காலத்தின் தேவையறிந்து கட்டுரையாக கவிதையாக வடித்து கொடுப்பதும் இவருக்கு பிடிக்கும் என அடிக்கடி கூறி வருகிறார்.



எப்போதும் பெண்ணியம் பேசுபளாகவோ அல்லது ஆண்களுக்கு பக்க சார்பாக நடப்பதோ இல்லாமல் சமத்துவவாதியாக செயற்பட்டு வருகிறார்.

வருடம் ஒருமுறை ஒரு அநாதை விடுதிக்கு உணவு வழங்கி வருகிறார். அவரது சொந்த பணத்தில் செய்ய முடிந்தளவு உதவிகளை மட்டும் அவர் செய்து வருகிறார்.



**வாங்கிய விருதுகள்**

***01.பாரதி கண்ணா பாவலர் பூஞ்சோலை குழுமத்தில் 2022 (இந்தியா திருச்சி )***

***02.கவிதை துவானத்தின் மாமன்னன் பண்டார வன்னியன் விருது 2022(இந்தியா)***

***03.வீரமங்கை வேலு நாச்சியார் விருது 2022***

***04.அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவையில் ஏணிப்படிகள் நிகழ்ச்சிக்கான தொலைக் காட்சி விருது (இரு முறை பெற்றுள்ளேன் )***

***05.இலங்கையில் கலைஞர்களுக்கான கலாரத்னவிபூஷண விருது 2023***


***06.இந்தியா தமிழ் நாடு கேப்டன் டிவியில் பட்டிமன்றத்திற்கான மகாகவி பாரதி விருது 2022***

***06.இலங்கை அறம் வழி அறக்கட்டளை வழங்கிய சாதனைப் பெண்விருது***


***07. சிறுகதைகள் (50) நடுவராக பயணித்தமைக்கான ஜெயகாந்தன் விருது 8. கனடா விழித்தெழுப் பெண்ணே அமைப்பின் சர்வதேச சாதனை பெண்களுக்கான விருது (2024)***




P.Suthanthiran
pragash Kriya
Wattala


கௌஷிகா
ராஜலெட்சுமி - சோமசுந்தரம்


ராஹித்யா நாயர்
திவாகரன் - தர்ஷிகா


ராஜி
சகோதரிகள்

# "ஹைக்கூ பேரொளி விருது" பெற்றார் ஏறாவூர் கவிதாயினி டாக்டர் ஜலீலா முஸம்மில்

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூரைச் சேர்ந்த எழுத்தாளரும் நூலாசிரியருமான கவிதாயினி டாக்டர் ஜலீலா முஸம்மில், "தூரிகை வரையும் மின்மினிகள்" எனும் ஹைக்கூ நூலுக்காக, தமிழகத்தில் "ஹைக்கூ பேரொளி விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டார். மதுரை உலகத் தமிழ்ச் சங்கம், தமிழ் ஹைக்கூ கவிதையாளர்கள் இயக்கம், "இனிய நந்தவனம்" மாத இதழ் ஆகியன இணைந்து, சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மாநகரில், மருத்துவர் தங்கராசு சாலையில்அமைந்துள்ள பிரமாண்ட உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தின் "மித்ரா" அரங்கில், கடந்த (09.ஜூன்.2024) ஞாயிற்றுக்கிழமையன்று நடாத்திய "தமிழ் ஹைக்கூ : மூன்றாவது உலக மாநாடு" நிகழ்வின்போதே, இவ்வாறு கவிதாயினி டாக்டர் ஜலீலா முஸம்மில் "ஹைக்கூ பேரொளி விருது" வழங்கி பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.




ஜப்பானியக் கவிதை வடிவமான"ஹைக்கூ கவிதைகள்" பற்றிய புரிதலையும் தெளிவையும் ஏற்படுத்துவதற்காக, கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழ் ஹைக்கூ: உலக மாநாட்டு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருவது, தமிழ் ஹைக்கூவின் வளர்ச்சிக்குச் சான்றாக அமைகின்றன. தமிழகத்திலிருந்தும் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா என பல்வேறு நாடுகளிலிருந்தும் மாநாட்டின் பிரதிநிதிகளாகவும், சிறப்பு அழைப்பாளர்களாகவும் 200 இற்கும் மேற்பட்ட "ஹைக்கூ கவிஞர்கள்" ஆர்வத்தோடு, இச்சிறப்பு மாநாட்டில் கலந்து கொண்டனர். இலங்கையிலிருந்து சிறப்பு விருந்தினராகவும், விருதாளராகவும் கவிதாயினி வைத்தியர் ஜலீலா முஸம்மில் இம்மாநாட்டில் கலந்து கொண்டமையும் சிறப்பம்சமாகும்.










"மாநாட்டு தொடக்க விழா, ஹைக்கூ கண்காட்சி, தூண்டில் மாநாட்டுச்சிறப்பு மலர் வெளியீடு, ஹைக்கூ வாசிப்பரங்கங்கள், ஹைக்கூ அனுபவப் பகிர்வரங்கங்கள், ஹைக்கூ நூல்கள் வெளியீடு, ஹைக்கூ கவிதைப்போட்டி பரிசளிப்பு, அயலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்களுக்கு விருதுகள் வழங்கல், மாநாட்டு நிறைவு விழா" என, பல்வேறுபட்ட நிகழ்வுகளோடு, இவ்வினிய மாநாடு தொய்வின்றி விறுவிறுப்பாக நடந்தேறியிருப்பதும் பாராட்டத்தக்கது. இலங்கையிலிருந்து பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர், திருவள்ளுவர் சிலைக்கு மாலையிட்டு, இவ்வினிய விழாவை ஆரம்பித்து வைத்த நிகழ்வும் வரவேற்கத்தக்கது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நிகழ்வில், "கவி முதுசமான ஓவியக் கவிஞர்" அமுத பாரதியோடு, விழா ஆலோசகரும் ஒருங்கிணைப்பாளருமான கவிஞர் மு. முருகேஷ், "இனிய நந்தவனம்" மாத இதழ் சந்திர சேகரன், "இனிய நந்தவனம்" மாத இதழ் ஆலோசகர் "ரொட்டோரியன் மேஜர் டோனர்" டாக்டர் கே. சீனிவாசன், கவிஞர் அமரன், கவிஞர் தங்கமூர்த்தி,பாரதியாரின் கொள்ளுப்பேத்தி உமா பாரதி, எழுத்தாளர் உமர் பாரூக், கவிஞர் பச்சை பாலன், கவிஞர் இமாஜான் போன்ற பல்வேறு இலக்கியப் பிரபலங்கள் கலந்து சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

(ஐ. ஏ. காதிர் கான்)

## உங்களுக்கு இது கேம், எங்களுக்கு லை.ஃ.ப்: விஜய் சேதுபதி மகன்





மக்கள் செல்வன் விஜய் சேதுபதி நடித்த 'மகாராஜா' திரைப்படம் ஒரு பக்கம் வெற்றிகரமாக திரையரங்கில் ஓடிக் கொண்டிருக்கும் நிலையில் அவரது மகன் சூர்யா ஹீரோவாக அறிமுகம் ஆகும் 'பீனிக்ஸ்' என்ற படத்தின் டீசர் வெளியாகி இணையத்தில் வைரல் ஆகி வருகிறது.

சூர்யா ஹீரோவாக அறிமுகம் ஆகி உள்ள இந்த படத்தில் வரலட்சுமி, சம்பத், தேவதர்ஷினி, முத்துக்குமார், திலீபன், ஹரிஷ் உத்தமன் உள்பட பலர் நடித்துள்ளனர். பிரபல ஸ்டண்ட் இயக்குனர் அனல் அரசு இயக்கத்தில் உருவாகியுள்ள இந்த படத்திற்கு சாம் சி எஸ் இசையமைத்துள்ளார். இந்த படம் ஒரு அதிரடி ஆக்சன் படம் என்பது டீசரில் இருந்து தெரிய வருகிறது. சிறையில் இருக்கும் ஒருவனை போட்டுதள்ள அரசியல் பிரபலம் ஒருவர் அடியாட்களை அனுப்ப அதே சிறையில் இருக்கும் சூர்யா அந்த நபரை எப்படி காப்பாற்றுகிறார் என்பது தான் இந்த படத்தின் கதை என டீசரில் இருந்து தெரிய வருகிறது.அதிரடி ஆக்சன் காட்சிகளில் துள்ளி விளையாடும் சூர்யாவுக்கு முதல் படமே வெற்றி படமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த படத்தின் டீசரை நடிகர் சிவகார்த்திகேயன் தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள நிலையில் இந்த டீசர் வீடியோ வைரலாகி வருகிறது.

## விஜய் எடுத்த அதிரடி முடிவு



தளபதி விஜய் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தமிழக வெற்றிக் கழகம் என்ற அரசியல் கட்சியை தொடங்கிய நிலையில் அவர் தற்போது நடித்துக் கொண்டிருக்கும் 'கோட்' மற்றும் அடுத்து நடிக்க இருக்கும் 'தளபதி 69' ஆகிய இரண்டு படங்களை முடித்துவிட்டு முழு நேர அரசியலில் களமிறங்க இருப்பதாக ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் 'கோட்' படத்தை அடுத்து 'தளபதி 69' படம் அவருடைய கடைசி படம் என்பதால் அந்த படம் மிகப்பெரிய வரவேற்பை பெறும் என்றும் வசூல் சாதனை செய்யும் என்றும் கூறப்பட்டது. அது மட்டும் இன்றி முதல் முதலாக விஜய் மற்றும் எச் வினோத் இணைய இருப்பதால் இந்த படம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்தது.

இந்த நிலையில் தற்போது வந்து கொண்டிருக்கும் தகவலின்படி விஜய் 'தளபதி 69' படத்தை டிராப் செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் இதனால் 'கோட்' படம் தான் அவருடைய கடைசி படமாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சட்டமன்ற தேர்தல் நடைபெறும் என்பதால் இன்னும் முழுமையாக இரண்டு வருடம் கூட தேர்தலுக்கு கால அவகாசம் இல்லை. இந்த நிலையில் 'தளபதி 69' படத்திற்காக ஒரு வருடம் செலவு செய்து விட்டு அதன் பின் அரசியல் பணிகளை ஆரம்பிக்க கால அவகாசம் இருக்காது என்றும் எனவே தற்போதே அரசியல் பணியை ஆரம்பித்தால் தான் 2026 தேர்தலுக்கு தயாராக முடியும் என்று விஜய் முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது.

இந்த தகவல் உறுதி செய்யப்பட்டால் 'கோட்' படம் தான் விஜய்யின் கடைசி படம் என்ற நிலையில் அந்த படத்திற்கு மிகப்பெரிய வசூல் இருக்கும் என்றும் அந்த படத்தின் தயாரிப்பாளருக்கு ஜாக்பாட் அடித்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இருப்பினும் 'தளபதி 69' படம் டிராப் என்பது இதுவரை அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது



## குடிபோதையில் ரகளை செய்ததாக வதந்தி..

கமல்ஹாசன் படத்தில் நடித்த நடிகை குடிபோதையில் நடுரோட்டில் ரகளை செய்ததாக பத்திரிகையாளர் என்று கூறிக்கொண்ட ஒருவர் தவறான தகவலை பரப்பிய நிலையில் அவரிடம் 100 கோடி இழப்பீடு கேட்டு நடிகையின் தரப்பில் வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பி இருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

உண்மையில் ரவீனா டண்டன் கார் எந்த விபத்தையும் ஏற்படுத்தவில்லை என்றும் பணம் பறிக்கும் நோக்கத்துடன் சிலர் வேண்டுமென்றே ரகளையில் ஈடுபட்டது சிசிடிவி காட்சிகள் மூலம் தெரிய வந்தது. இது குறித்து யாரும் போலீசில் புகார் அளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இந்த சம்பவத்தை அடிப்படையாக வைத்து பத்திரிகையாளர் என்று கூறிக்கொண்ட ஒருவர் தனது சமூக வலைத்தளத்தில் வீடியோ ஒன்றை பதிவு செய்துள்ளார். அதில் ரவீனா டண்டன் குடிபோதையில் ரகளை செய்ததாக தவறான தகவலை தெரிவித்துள்ளார்.

கமல்ஹாசன் நடித்த 'ஆளவந்தான்' உட்பட சில தமிழ் படங்களிலும் பல ஹிந்தி படங்களிலும் நடித்தவர் நடிகை ரவீனா டண்டன். இவர் சமீபத்தில் காரில் சென்று கொண்டிருந்த போது அவருடைய கார் விபத்தை ஏற்படுத்தியதாகவும் இதையடுத்து அவரிடம் அந்த பகுதி மக்கள் ரகளை செய்ததாகவும் கூறப்பட்டது. இதையடுத்து நடிகை ரவீனா டண்டன் அந்த நபருக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பி உள்ளார். அதில் தன்னுடைய புகழுக்கு இழுக்கு நேரிடும் வகையில் வதந்தி பரப்பிய அந்த நபர் தனக்கு 100 கோடி ரூபாய் இழப்பீடு தர வேண்டும் என்று கூறியுள்ளார். இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



## குழந்தைகளுடன் குழந்தையாய் மாறி விட்ட விக்கி

உலக தந்தையர் தினம் உலகம் முழுவதும் அண்மையில் கொண்டாடப்பட்டு வந்த நிலையில், பல திரையுலக பிரபலங்கள் தங்கள் தந்தையுடன் எடுத்த புகைப்படங்களை சமூக வலைதளங்களில் பதிவு செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. சினேகா உட்பட பல நடிகைகளின் (இன்ஸ்டாவில் தந்தையுடன் இருக்கும்) புகைப்படங்கள் வைரலாகி வருகின்றன.

அந்த வகையில் தமிழ்த் திரையுலகின் முன்னணி இயக்குனர்களில் ஒருவரான விக்னேஷ் சிவன் தனது இரண்டு குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடும் வீடியோவை நயன்தாரா தனது சமூக வலைத்தளத்தில் பதிவு செய்துள்ளார். அந்த வீடியோவில் உள்ள காட்சிகளை பார்க்கும்போது அவரும் குழந்தையாக மாறி உயிர் மற்றும் உலகம் குழந்தைகளை கொஞ்சும் காட்சிகள் உள்ளன.

ஒரு அன்பான தந்தை தனது குழந்தைகளிடம் எப்படி நடந்து கொள்வார் என்பதை இந்த வீடியோவை பார்க்கும் போது தெரிகிறது என நெட்டிசன்கள் கமெண்ட்களை பதிவு செய்து வருகின்றனர்.

இந்த வீடியோ குறித்து இயக்குனர் விக்னேஷ் சிவன், 'என்னுடைய வாழ்க்கையில் உள்ள மொத்த மகிழ்ச்சிக்கும் காரணம் இந்த உயிர் மாற்றும் உலகம் ஆகிய இரண்டு குழந்தைகள் என்றும் அவர்களை நான் மிகவும் நேசிக்கிறேன் என்றும் விக்னேஷ் சிவன் அதில் பதிவு செய்துள்ளார். மேலும் அவர் நயன்தாராவையும் கேப்ஷன் செய்துள்ள நிலையில் இந்த வீடியோ இணையத்தில் வைரல் ஆகி வருகிறது

இந்நிலையில் இயக்குனர் விக்னேஷ் தற்போது 'எல்ஐசி' என்ற திரைப்படத்தை இயக்கி வருகிறார் என்பதும் பிரதீப் அந்தோணி, எஸ் ஜே சூர்யா உட்பட பலர் நடித்து வரும் இந்த படத்தின் படப்பிடிப்பு கிட்டத்தட்ட முடிவடைந்து தொழில்நுட்ப பணிகள் தொடங்கி விட்டதாகவும் செய்திகள் வெளியாகி உள்ளன.



## க்யூட் குழந்தையுடன் போட்டோஷூட் எடுத்த நடிகை ஸ்ரீதேவி அசோக்



சீரியல் நடிகை ஸ்ரீதேவி அசோக் அவர்களுக்கு கடந்த 20 நாட்களுக்கு முன் பெண் குழந்தை பிறந்த நிலையில் அந்த குழந்தையுடன் அவர் எடுத்துள்ள க்யூட் போட்டோஷூட் புகைப்படம் அவரது இன்ஸ்டாகிராமில் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அதற்கு லைக், கமெண்ட் குவிந்து வருகிறது.

செல்லமடி நீ எனக்கு' 'கஸ்தூரி' 'இளவரசி' 'தங்கம் 'உள்பட பல சீரியல்களிலும் ஒரு சில திரைப் படங்களிலும் நடித்தவர் நடிகை ஸ்ரீதேவி அசோக். இவர் அசோக் என்பவரை கடந்த சில ஆண்டுகளுக்கு முன் திருமணம் செய்த நிலையில் ஏற்கனவே ஒரு பெண் குழந்தை இந்த தம்பதிக்கு உள்ளது.இந்த நிலையில் மீண்டும் கடந்த சில மாதங்களுக்கு முன் ஸ்ரீதேவி அசோக் கர்ப்பமான நிலையில் கடந்த மே மாதம் 27ஆம் தேதி பெண் குழந்தை பிறந்தது. பெண் குழந்தை பிறந்த சந்தோஷத்தை ஸ்ரீதேவி அசோக் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் நெகிழ்ச்சியுடன் பகிர்ந்து இருந்தார் என்பதை ஏற்கனவே பார்த்தோம்.இந்த நிலையில் குழந்தை பிறந்து 20 நாட்கள் மட்டுமே ஆகியுள்ள நிலையில் அந்த குழந்தையுடன் எடுத்த க்யூட் போட்டோஷூட் புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஸ்ரீதேவி அசோக் பகிர்ந்துள்ளார்.இந்த குழந்தை பிறந்தவுடன் முதன் முதலில் பார்த்த போது தனக்கு ஆனந்த கண்ணீர் வந்ததாகவும், அடுத்தடுத்த நாட்களில் குழந்தையை பார்க்கும் போது ஒவ்வொரு நாளும் புதிதாக இருப்பதாகவும், குறிப்பாக குழந்தை தூங்கிக் கொண்டிருக்கும் போது அவ்வளவு அழகாக இருப்பதாகவும், அதை நாங்கள் ரசிக்கிறோம் என்றும் கேப்ஷனாக ஸ்ரீதேவி அசோக் பதிவு செய்துள்ளார்.

## நயனை மிஞ்சிய ராஷ்மி

தென்னிந்திய திரை உலகில் நயன்தாரா தான் அதிக சம்பளம் வாங்கும் நடிகை என்று கூறப்பட்டு வரும் நிலையில் ஒரே ஒரு பாலிவுட் படத்தின் வெற்றி காரணமாக நடிகை ராஷ்மிகா மந்தனா அதிக சம்பளம் வாங்கும் நடிகையாக மாறி உள்ளதாக கூறப்படுகிறது.

தமிழ் தெலுங்கு திரை உலகில் முன்னணி நடிகையாக இருக்கும் ராஷ்மிகா மந்தனா, மாஸ் நடிகர்களுடன் இணைந்து படங்கள் நடித்து வருகிறார் என்பதும் குறிப்பாக அவர் அல்லு அர்ஜுன் உடன் இணைந்து நடித்த 'புஷ்பா 2' திரைப்படத்திற்கு மிகப்பெரிய எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது என்பது தெரிந்தது.

இந்த நிலையில் ரன்பீர் கபூருடன் ராஷ்மிகா மந்தனா நடித்த 'அனிமல்' திரைப்படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது என்பதும் வசூலிலும் இந்த படம் சாதனை செய்த நிலையில் இந்த படத்தின் வெற்றி காரணமாக ராஷ்மிகா மந்தனாவுக்கு மார்க்கெட் உயர்ந்து உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் பிரபல பாலிவுட் நடிகர் சல்மான் கான் நடிப்பில், ஏ ஆர் முருகதாஸ் இயக்கத்தில் உருவாக இருக்கும் 'சிக்கந்தர்' படத்தின் நாயகியாக நடிக்க ராஷ்மிகா ஒப்பந்தம் செய்திருப்பதாக கூறப்படும் நிலையில் இந்த படத்தில் நடிக்க அவருக்கு மிகப்பெரிய சம்பளம் பேசப்பட்டு இருப்பதாகவும் அதாவது 13 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

தென்னிந்திய நடிகைகளில் நயன்தாரா ஒரு படத்திற்கு 10 முதல் 12 கோடி ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருப்பதாக கூறப்படும் நிலையில் அவரை விட அதிகமாக ராஷ்மிகா மந்தனாவுக்கு சம்பளம் கிடைத்துள்ளது என்ற தகவல் திரையுலகில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

'அனிமல்' என்ற ஒரே ஒரு வெற்றிப்படம் காரணமாக ராஷ்மிகா மந்தனா மார்க்கெட் உச்சத்துக்கு சென்றது மட்டுமின்றி நயன்தாராவை தென்னிந்திய அளவில் பின்னுக்கு தள்ளியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

# பொருட்களின் பெறுமதியை பிள்ளைகளுக்கு உணர்த்தி வளர்ப்போம்



**தம்பொருள் என்ப தம்மக்கள் அவர்பொருள் தம்தம் வினையான் வரும்.**

விளக்கம்:

நம்முடைய சொத்து என்று போற்றுவதற்கு உரியவர் நமது குழந்தைகளே ஆவர். மக்களாகிய அவரர்களுடைய சொத்துக்கள், செல்வங்கள், அவரவர் வினைப்பயனால் வந்தடையும்.

"என்னோட பிள்ளைக்கு எந்தப் பொருள் வாங்கிக் கொடுந்தாலும் கொஞ்சம் நேரம் தான் விளையாடுவான். பிறகு பார்த்தா உடைச்சி மூலையில கிடக்கும் "

"என் மகனுக்கு தினமும் ஒரு பென்சில் கொடுத்தனுப்பனும், தினமும் காணாமல் செய்திடுவான்" "என் மகள் சாதாரண பொருட்கள் வாங்கினா பாவிக்க மாட்டாங்க", இந்த சின்ன வயசுலேயே யாரும் தரமில்லா பொருட்கள் கொடுத்தா அதமகள் தொட்டு கூட பார்க்க மாட்டாள்", "எப்படித்தான் பார்த்து பார்த்து உடுப்பு வாங்கிக் கொடுத்தாலும் பீரோவில அப்படியே கிடக்கு. ஐந்து வயசுதான் ஆனா என்ன வாங்கி கொடுத்தாலும் தொட்டும் பாக்கிறதில்லை. அவங்களுவுக்கு பிடிச்சா தான் உடுத்து வாங்க "

வருத்தத்துடன் பேசும் பெற்றோரை விட பெருமையாய் பேசும் பெற்றோரை தான் இன்று அதிகமாக காணலாம்.

பிள்ளைகள் நினைத்தப் பொருளை பெற்றோரிடம் கேட்கப் பயந்து எப்போதாவது ஒருமுறை வீட்டில் வாங்கிக் கொடுக்கும் பொருளை பூதம் காக்கும் புதையல் போல் காத்த பிள்ளைகள் இன்றில்லை.

இன்று தங்களுக்கு என்ன தேவை என்பதை ஒன்லைன் ஊடாக வாங்க கூடிய அளவுக்கு பிள்ளைகளை காலம் வளர்த்து விட்டுள்ளது எனலாம். அத்துடன் பிள்ளைகள் கேட்காமலே இன்றையப் பெற்றோர்கள் வாங்கிக்கொடுக்கும் மனநிலையில் இருக்கிறார்கள்.

தங்கள் வருமானம் என்ன, இப்போதைய நிலையில் இது பிள்ளைக்கு அத்தியாவசிய தேவையா! என்பதைப் பற்றி சிந்திக்க மறந்து தங்கள் குழந்தை மற்றக் குழந்தைகளை விட சிறப்பாக குறையின்றி வளர வேண்டும் என்பதே பெற்றோரின் சிந்தனையாக இருப்பதால் பிள்ளைகள் உடைத்தால் என்ன வைத்திருந்தால் என்ன என் பிள்ளைக்கு குறையே இல்லாமல் நான் வளர்க்கிறேன் என்பதை சுற்றியுள்ளவர்களுக்கு சொல்லாமல் சொல்ல வாங்கி கொடுக்கிறார்கள்.

ஆழமாக சிந்தித்தால் பெற்றோர் தங்கள் கௌரவத்தை நிலை நாட்டும் ஒரு விடயமாக இருப்பதால் தேவைக்கு அதிகமான பொருட்களை பிள்ளைகளுக்கு வாங்கி கொடுப்பது நடைபெறுகிறது.

பிள்ளைகளுக்கும் நினைத்ததிற்கு அதிகமாகவே கைக்கூடுவதால் அவர்களுக்கு பொருட்களின் பெறுமதியை தெரிவதில்லை.

அதனால் கிடைக்கும் பொருட்களை பத்திரப் படுத்தாமல் போட்டு உடைத்தல், வீணடித்தால் என்பவற்றை மிக இலகுவாக செய்கிறார்கள். அதைப் பற்றிய குற்ற உணர்ச்சி சிறிதும் இல்லை.

பிள்ளைகள் இப்படி வளர்வது சரியா! பிள்ளைகளை நாம் இப்படி வளர்ப்பது முறையா!

உங்களிடம் பிள்ளைகள் கேட்கும் போது வாங்கிக் கொடுக்கும் வசதி இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். எந்த ஒரு பொருளையும் பாதுகாக்கும் முறையை கட்டாயம் கற்றுக் கொடுங்கள்.

அதன் பெறுமதி, அதை வாங்க எப்படி உழைக்க வேண்டும் என்பதை சொல்லி புரிய வையுங்கள்.

ஒரு பொருளின் பெறுமதி தெரியாமல், பாதுகாப்பது எப்படியெனத் தெரியாமல் வளரும் குழந்தைகள் நாளை உங்களையும் உங்கள் சொத்துக்களையும் எப்படி பாதுகாப்பார்கள்.

அவர்கள் தங்கள் பொருட்களை பெறுமதி அறிந்து பாதுகாப்பாக வைத்திருப்பார்களா என்பது தெரியாது!.

அதனால் அவர்களின் எதிர்கால வாழ்க்கை கேள்விக்குறியாக ஏனோ தானோவென அமைந்து விடும். அதற்கு பொறுப்பு கூற வேண்டியக் கடமை பெற்றோருக்கே உள்ளது.

பிள்ளைகளுக்கு சிறு வயதிலேயே புரியுமா புரியாதா என்பதைக் கடந்து ஒரு பொருளை எப்படி பாதுகாக்க வேண்டும், ஏன் பாதுகாப்பாக பயன்படுத்த வேண்டும். அதன் பெறுமதி என்ன, ஏன் அதை வாங்கி கொடுத்தோம் என்பதை அன்பாக, விளையாட்டுடன் இணைந்து அவர்களுக்கு எடுத்து சொல்ல நாளைடைவில் அவர்களாகவே அதை உணர்ந்து செயற்பட ஆரம்பித்து விடுவார்கள்.முக்கியமாக தாய் பிள்ளைக்கு சொல்லும் போது தந்தை அக்கருத்தை மறுத்து பேசவோ தந்தை பிள்ளைக்கு சொல்லும் போது தாய் அந்தக் கூற்றை மறுத்து சொல்லவோ கூடாது.

பெற்றோர்கள் இருவருமே ஒரே கருத்தை பிள்ளைக்கு முன் வைக்க வேண்டும் என்பது கட்டாயமாகும்.

இல்லாவிட்டால் தாய் ஒரு கருத்தும் தந்தை இன்னொரு கருத்தும் சொல்ல பிள்ளைகள் குழம்பி விடுவார்கள்.

பெற்றோர்கள் அதற்கான பொறுப்பை இன்றே பிள்ளைகளுக்கு உணர்த்தி வளர்ப்போம்.

எந்தப் பிள்ளையும் நல்ல பிள்ளை தான் மண்ணில் பிறக்கையிலே. அவர் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் பெற்றோர் வளர்ப்பினிலே!



கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...

# தாய்ப்பாலில் அழகு குறிப்புகள்



பெண் என்றாலே ஒரு அற்புத ஜீவராசி. தன்னுடைய உயிரையே பணயம் வைத்து இன்னொரு உயிரை உருவாக்கும் தன்னலமற்ற உயிரினம். அதிலும் தாய்மை என்றாலே ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் மட்டற்ற மகிழ்ச்சி எப்போதும் இருக்கும். தாய்மை பருவத்தில் குழந்தையை பராமரிப்பது மிகவும் அழகான மற்றும் கொஞ்சம் கடினமான விஷயமே. இதில் தாய்மையான ஒன்று தாய்ப்பாலை குழந்தைக்கு ஊட்டுவதே. தாய்ப்பாலில் எண்ணற்ற ஊட்டச்சத்துக்கள் உள்ளது. ஒரு குழந்தையின் வளர்ச்சி, ஆரோக்கியம் எல்லாமே இதனை சார்ந்துதான் இருக்கிறது. இவ்வளவு மகத்துவமான தாய்ப்பாலில் பல அழகு குறிப்புகள் ரகசியம்போல ஒளிந்திருகிறது. இத்தனை நாள் இந்த ரகசியத்தை தெரியாமலையே இருந்து வருகின்றோம். என்னது, தாய்ப்பாலில் அழகு குறிப்பா..? உங்களின் ஆச்சரியமான கேள்விகளுக்கு பதில் உள்ளது. தாய்ப்பாலில் ஒளிந்திருக்கும் அழகு குறிப்புகள் என்னென்ன என்பதை இனி தெரிந்துகொள்வோம். வீக்கத்தை குறைக்க இரவில் அதிகம் கண் விழித்ததால் கண்கள் வீங்கிவிட்டதா..? உடனே சரி செய்ய வழி இருக்கே. குழந்தை தாய்ப்பால் குடிக்காத நேரத்தில் பால் கட்டி கொள்ளாமல் அதனை முகத்திற்கு பயன்படுத்தலாம். தாய்ப்பாலில் இயற்கையாகவே முகத்தில் ஏற்பட்ட வீக்கத்தை போக்கும் தன்மை உள்ளது. அத்துடன் சேர்த்து கருவளையங்களையும் காணாமல் போக செய்யும். தாய்ப்பாலை காட்டன் துணியால் வீக்கம் உள்ள இடத்தில் தடவினால் விரைவில் வீக்கம் குறையும்.

2 ஃபேஸ் வாஷ் தாய்ப்பாலில் ஃபேஸ் வாஷா..? இது என்னபா புதுசா இருக்கேனு யோசிக்கிறீர்களா..? உண்மைதாங்க. தாய்ப்பாலில் ஃபேஸ் வாஷ் செய்தால் உங்கள் முகத்தில் உள்ள பருக்கள், கீறல்கள் குணமடையும். தாய்ப்பாலில் அதிகம் லாரிக் அமிலம் உள்ளதால் சருமத்தில் உள்ள பாக்டீரியா மற்றும் பூஞ்சைகளை எதிர்த்து போராடும். தினமும் தாய்ப்பாலில் முகத்தை கழுவினால் மங்கிப்போன உங்கள் முகம் மிகவும் பொலிவுடன் மாறிவிடும். ஒரு சிறிய காட்டன் துண்டை தாய்ப்பாலில் நனைத்து கொண்டு அதனை முகத்தில் 10 நிமிடம் ஒத்தடம் கொடுத்து பின்பு வெதுவெதுப்பான நீரில் முகத்தை கழுவுங்கள். கண்டிப்பாக உங்கள் கலை இழந்த முகம் வெண்மையாக மாறும்.

3 மென்மையான உதடு குளிர் காலம் என்றாலே உதடுகள் ஈரப்பதமின்றி காய்ந்து விடும். அத்துடன் சேர்த்து உதடுகளில் வெடிப்புகள் வர கூடும். அதிக ஆன்டி செப்டிக்,ஆன்டி பாக்டீரியல் தன்மையுடைய தாய்ப்பால், சருமம் சார்ந்த பல பிரச்சினைகளுக்கு தீர்வை தரும். அதில் ஒன்றுதான் பனி வெடிப்பு. வறண்டு போன உங்கள் உதடுகளில் தாய் பாலால் ஒத்தடம் கொடுத்தால் ஈரப்பதுடன் எப்போதும் இருக்கும். மேலும் உதடுகள் வெடிப்பு வந்து புண் ஆவதை தடுக்கும்.

4 லோஷன் உங்கள் தோல் மிகவும் சொரசொரப்பாக இருக்கிறதா..? முகம் மிகவும் வறட்சியாக உள்ளதா..? இதனை சரி செய்ய வழி இருக்கிறது. தாய்ப்பாலில் உள்ள அதிக மென்மை தன்மை முகத்திற்கு பளபளப்பை தந்து வறட்சியை நீக்குகிறது. 1 டீஸ்பூன் ஓட்ஸ் மாவு, சிறிது தேன் மற்றும் சிறிதளவு தாய்ப்பால் ஆகியவற்றை எடுத்து நன்கு கலக்கவும்.சிறிது நேரம் குளிர வைத்து பின்பு முகத்தில் 15 நிமிடம் பூசி, காட்டன் துணியால் நீரில் நனைத்து துடைத்து விடவும். இவ்வாறு வாரத்திற்கு 1 முறை செய்தால் சொரசொரப்பான வறண்ட சருமம் மொழுமொழுவென மாறும்.

5 மாஸ்க் சிறிது முல்தானி மட்டியை எடுத்து கொன்டு அதனுடன் தாய்ப்பாலை சேர்த்து கலக்கவும். பிறகு இந்த ஃபேஸ் மாஸ்க்கை முஅத்தின் 15 நிமிடம் போட்டு கழுவவும். இது முகத்திற்கு அதிக மினுமினுப்பை தந்து அழுக்கு அழகூட்டும். அரிப்புகள் கொண்ட சருமம் இதனால் குணமடையும். அத்துடன் எப்போதும் குளுமையாக இருக்கவும் செய்யும்.

6 சுத்தம் செய்தல் உங்கள் முகத்தில் அதிகம் கரும்புள்ளிகள் இருந்தால் அதனை சரி செய்ய வழி இதோ இருக்கிறது. தாய்ப்பாலை சிறிது தேனுடன் கலந்து 10 நிமிடம் ஊற வைக்கவும். அதன்பிறகு 15 நிமிடம் முகத்தில் பூசி மசாஜ் செய்யவும். இதனை வாரத்திற்கு 2 முறை செய்து வந்தால் சருமம் சுத்தமடைந்து கரும்புள்ளிகள் நீங்கும். மேலும் கருமையான முகம் வெண்மையாக காட்சியளிக்கும்.

7 சூடு கட்டி முகம் மற்றும் தோள்களில் சூடு கட்டிகள் அதிகம் வந்துள்ளதா..? இதை குணப்படுத்த தாய்ப்பாலே போதும். தாய்ப்பாலில் உள்ள ஆன்டி பாக்டீரியல் தன்மை சருமத்தில் ஏற்பட்டுள்ள எந்தவிதமான கட்டிகளையும் குணப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. தாய்ப்பாலை சிறிது எடுத்து முகத்தில் பூசினால் கட்டுகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.

# முல்லைத்தீவு மாவட்ட திறந்த மட்ட பூப்பந்தாட்டப் போட்டி














முல்லைத்தீவு மாவட்ட பூப்பந்து விளையாட்டரங்கில் 2024 ஜுன் 16 அன்று நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட திறந்த நிலை பூப்பந்துப் போட்டியானது குறிப்பிடத்தக்க வரவேற்பைப் பெற்றுள்ளது. கனடியத் தமிழர் பேரவையின் (CTC) அனுசரணையுடன் நடைபெற்ற இந்நிகழ்வில், மாவட்டம் முழுவதிலும் உள்ள இளம் விளையாட்டு வீரர்கள் ஒன்றிணைந்து, சிறப்பான திறமை மற்றும் விளையாட்டுத்திறனை வெளிப்படுத்தினர்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த போது, இளைஞர்களுக்கு நேர்மறையான கவனச்சிதறல்களை வழங்குவதற்கும், தீங்கு விளைவிக்கும் நடவடிக்கைகளில் இருந்து அவர்களை விலக்குவதற்குமான விளையாட்டு முயற்சிகளுக்கு ஆதரவளிக்குமாறு CTC பிரதிநிதிகளிடம் கோரப்பட்டது. இந்த அழைப்பிற்கு பதிலளித்த CTC, போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆரோக்கியமான வாழ்க்கை முறை மற்றும் இளைஞர்களின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான எங்கள் உறுதிப்பாட்டின் முதல் படியாக ஆரம்ப ஆண்டு போட்டிக்கு நிதியுதவி வழங்கியிருந்தது.

ஆர்வமுள்ள பங்கேற்பாளர்களாலும் பார்வையாளர்களால் இந்தப் போட்டி மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றிருந்தது. CTC இன் இந்த பங்களிப்பானது விளையாட்டுகளில் இளைஞர்களின் ஈடுபாட்டை வளர்ப்பதற்கும் சமூகத்தின் நல்வாழ்வுக்கு பங்களிப்பதற்கும் செய்த அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.




# அருண் மாணிக்கவாசகம் இந்துக்கல்லூரி பெற்றோர்கள் ஒன்றிணைந்து நடத்திய மாபெரும் மென்பந்து கிரிக்கெட்







தந்தையர் தினத்தை முன்னிட்டு அருண் விளையாட்டுக்கழகம் இரண்டாவது தடவையாக ஏற்பாடு செய்த வத்தளை அருண் மாணிக்கவாசகம் இந்துக்கல்லூரியின் பெற்றோர்கள் ஒன்றினைந்து நடத்திய மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி 16.06.2024ம் திகதி வெலிசரை நவலோக மைதானததில் நடைபெற்றது. இந்த இறுதி சுற்றுப்போட்டியில் ரப் ஸ்டார் யுனைடி கழகம் கிண்ணத்தை சுவிகரித்தது. இந்த அணி தலைவர் சாந்தன் தலைமையிலும் நமக்காக நாம் அமைப்பின் செயலாளருமான எஸ்.மகேந்திரனின் ஜேபி வழிகாட்டலிலும் விளையாடியது.





# கல்விச் சமூகத்தை கட்டி எழுப்ப எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி இறைவனுக்காக வேண்டி என்றும் முடியுமான உதவிகளை வழங்குவேன்

## KJM சர்வதேச பாடசாலை நிகழ்வில் கலாநிதி ஜனகன் தெரிவிப்பு..!

















கொழும்பு வெல்லம்பிட்டி கோகிலாவத்தையில் அமைந்துள்ள KJM சர்வதேச பாடசாலையின் ஏற்பாட்டில், அப் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 250க்கும் மேற்பட்ட மாணவர்களின் குடும்பங்களுக்கு உலர் உணவு பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு கொத்தோட்டுவ நாஸ் கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது. இன் நிகழ்வுக்கு KJM சர்வதேச பாடசாலையின் பணிப்பாளர் குழாமின் அழைப்பின் பேரில் ஐ டி எம் ன் சி (IDMNC) சர்வதேச கல்வி நிறுவனத்தின் தவிசாளரும், ஜனனம் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி.வி.ஜனகன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்து, உலர் உணவுப் பொருட்களையும் வழங்கி வைத்தார். அப் பாடசாலையின் நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், மாணவர்களோடு கலந்துரையாடிய அவர். தானும், தனது ஜனனம் அறக்கட்டளையும் கல்விச் சமூகத்தை கட்டி எழுப்ப எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி இறைவனுக்காக வேண்டி என்றும் முடியுமான உதவிகளை வழங்குவோம் என தெரிவித்தார். இப் பாடசாலையானது வெல்லம்பிட்டி, கொலன்னாவ ஆகிய பிரதேசங்களில் குறைந்த வருமானங்களை பெறும் குடும்பங்களைச் சேர்ந்த சர்வதேச பாடசாலைகளில் கல்வி கற்க முடியாத வசதி வாய்ப்பற்ற நிலையில் உள்ள மாணவர்களுக்கு கை கொடுக்கும் ஒரு சர்வதேச பாடசாலையாக செயற்பட்டு வருகின்றது. இதில் 450க்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்போது கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கூமுன வனவிலங்குகள் பறவைகள் சரணாலயம்





வெளிநாட்டு உள்ளூர் உல்லாசப்பிரயாணிகளால் நிரம்பி வழியும் கூமுன வனவிலங்குகள் பறவைகள் சரணாலயம் விலங்குகளையும் பறவைகளையும் இயற்கையோடுகண்டு கழிக்கும் வாய்ப்பு இங்கு மாத்திரமே உண்டு.

கிழக்கின் பிரசித்திபெற்ற வனவிலங்குகள் பறவைகள் சரணாலயமாக விளங்கும் கூமுன பிரதேசம் வெளிநாட்டு உல்லாசப்பயணிகளாலும் உள்ளூர்ப் பிரயாணிகளாலும் தற்போது நிரம்பிவழிந்துகொண்டிருக்கின்றது.

உலகிலே கடல் நீரலைச்சறுக்கலுக்கு மிகவும் பிரசித்தி பெற்ற உல்லாச புரியாகக்கருதப்படும் அறுகம்பே உல்லே பிரதேசத்துக்கு தமது கடல் நீரலைச்சறுக்கள் மட்டைகளுடன் வருகை தருவோர் தமது கடல் நீரலைச் சறுக்கலையடுத்து இங்கு ஒருபோதும் வருகை தராமல் போவதில்லை.

பொத்துவில் பிரதேச செயலக பிரிலுள்ள அறுகம்பே உல்லே பிரதேசத்தையடுத்துள்ள பாணம ; பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஒரு பிரதேசத்திலேயே கூமுன வன விலங்குகள் பறவைகள் சரணாலயம் அமைந்துள்ளது.

35,664 ஹெக்டயர் பரப்பளவைக்கொண்ட கூமுன பிரதேசம். விலங்குகள் பறவைகள் உல்லாசமாக சுதந்திரமாக பறந்தும் நடமாடியும் திரிவதால் அவைகளை இயற்கையோடு பார்த்து ரசிக்கக்கக்கூடிய ஒரேயொரு சரணாலயம் இதுவாக கருதப்படுகின்றது. இது வேறு எந்த நாடுகளிளுமோ இல்லாத ஒரு விசேடஅம்சமாகும். இதற்கு உதாரணமாக மான்குட்டிகளை சிறுத்தையொன்று மிகவும் அருகிலே நின்று அன்பாகப்பேசிக் கொண்டிருப் பதை போன்ற காட்சிகளையும் இங்கு காணலாம். இது ஒரு அபூர்வ காட்சியாகும். இந்தக் காட்சியை இங்கு மாத்திரமே காணலாம். கூமுன சரணாலயத்துக்குள் பிரவேசிப்போர். நடையாகவோ, மோட்டார் சைக்கிள் வண்டிகளிலோ அல்லது தமது சொந்த சொகுசு வாகனங்களிலோ செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. நாம் இங்கு சுற்றிப்பர்வையிடுவதற்கு சபாரி வாகனங்கள் தயார் நிலையில் உள்ளன. இவைகளை நாம் வாடகைக்கு அமர்த்தலாம். பாணமையிலோ அல்லது கூமுனயிலோ திறந்த ஜீப் வண்டிகள் உள்ளன. கூமுனை பிரதேசத்திற்கு உட்செல்வோர் வாகனங்ககளில் இருந்து இறங்கி மிருகங்களையோ அல்லது பறவைகளையோ பார்வையிட முடியாது. ஏனெனில் இங்கு உட்செல்வோரின் நடமாட்டத்தால் இங்கு சுதந்திரமாக உலாவி வரும் பிராணிகளுக்கு எவ்வித அச்சமோ அல்லது அசௌகரியங்களோ ஏற்படக்கூடாது என்பதற்காக. இதனால் மான்களும் மரைகளும் மிகவும் சுதந்திரமாக உலாவித்திரிகின்றன. யானைகளை சாதரணமாகவே இங்கு காணலாம். பாரிய உடலமைப்பு களைக் கொண்ட கொம்பன்காட்டு மாடுகள் குளக்கரைகளில் மேய்ந்து திரிவதையும் முதளைகள் குளக்கரைகளில் இருந்து தமது வாயை அகலத்திறந்து அமர்ந்து கொண்டிருப் பதையும்சாதாரணமாக்



எப்போதுமே காணக்கூடிய காட்சியாகும். கூமன பறவைகளுக்கு மிகவும் பிரசித்திபெற்ற ஓர் பிரதேசமாகும் இங்கு இருநூற்று முப்பெத்திஎட்டு (238) வகையான பறவைகள் மிகவும் சுதந்திரமாக பறந்து திரிவதாக அறிவிக்கப்படுகின்றது அவைகளுள் 130 வகையான பறவைகள் வெளிநாடுகளில் இருந்து வருகை தரும் அபூர்வ பறவைகளாகும் என இங்கு பணிபரியும் அதிகாரியொருவர் தெரிவித்தார். அவைகளுள் சதேர்ன் கிரே ஸ்ரைக் (Sothern Grey shrike) என்ற அழகிய அபூர்வமான பறவை ஒன்று எல்லோரினது கவனத்தையும் ஈர்க்கின்ற ஒன்றாக விசேடமாக காணப்படுகின்றது. கூமுன வில்லு என்று அழைக்க க்கப்படும் பிரதேசமே அவைகளுக்கான ஓர் உல்லாசபுரியாகும். இங்கு நாம் என்றுமே காணாத வெளிநாட்டு அதாவது அவுஸ்த்திரேலியா, இந்தியா போன்ற நாடுகளைச்சேர்ந்த பல அரிய பறவைகளை கூமுனவில், வாகுறவாவி இந்திரகல்ல ஆகிய நீர் சார்ந்த இடங்களிலேயே காணலாம்.


**(கலாபூஷணம் எம்.ஏ.பகுர்டீன்
அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)**

# எழுத்துலகில் சுடர் விட்டெரிந்த இலக்கிய தீபம் சுலைமாசமி இக்பால்



2015 கள் என நினைக்கிறேன் அவசரமாக மாவனல்லை செல்ல வேண்டிய ஒருபயணத்தில் எனக்கு நன்கு அறிமுகமான சுலைமா சமி தாத்தாவுக்கு கோல் பாண்ணுகிறேன் . மாவனல்லை வருவதென்றால் தமது வீட்டுக்கு வந்து பகலுணவை அருந்தி விட்டே செல்லவேண்டும் என்ற அன்புக்கட்டளை, அத்தோடு அவரது கணவர் இக்பால் மௌலவி பர்வீன் கட்டாயம் எங்கள் வீட்டுக்கு பகல் சாப்பாட்டுக்கு வரவேண்டும் என்று உறுதி பட கூறினார். சாப்பாடு எல்லாம் தேவையில்லை வீட்டுக்கு வருகிறேன் என்றேன் பி.ப 3.00 மணியிருக்கும் மாவனல்லை பேருந்து நிலையத்தில் இறங்கியவுடன் தொலைபேசியில் அழைக்கிறேன் அடுத்த நொடியே பதில் வருகிறது. அடுத்த சில நிமிடங்களில் இக்பால் மௌலவி பேருந்து நிலையத்திற்கு வந்து என்னை வீட்டுக்கு கூட்டி சென்று பகலுணவை தந்து அன்பாக உபசரித்து அனுப்பி வைத்தனர். அந்த நிகழ்வு இக்பால் மௌலவி மீதும் சுலைமா சமி அவர்கள் மீதும் அளப்பெரிய மதிப்பையும் அன்பையும் விதைத்தது. அதன் பின்னர் தொலைபேசியோடு அந்த நட்பும் உறவும் சுருங்கிப்போனது . அந்த சுலைமா தாத்தாவின் மரணச்செய்தி மனசை வலிக்கச்செய்தது உண்மையில் இவர்கள் ஒரு ஆதர்ச தம்பதிகள் ஆவார்கள்.

குடும்பம், இலக்கியம் என்ற இரண்டு தளங்களையும் சமாந்திரமாக பக்குவத்துடன், அதிகபட்ச விட்டுக்கொடுப்புடனும் கொண்டு நடாத்தும் பல பெண்கள் இருக்கிறார்கள். அதற்கான காரணம் அவர்களுக்கு புரிந்துணர்வுள்ள குடும்பமும், அவர்களின் உணர்வுகளை புரிந்து,அவர்களின் ஆற்றல்களை உணர்ந்து தட்டிக்கொடுக்கின்ற சரியான துணை அமைந்தமையே எனலாம் அந்த வகையில் அண்மையில் எம்மைவிட்டுப்பிரிந்த சுலைமாசமி இக்பால் அவர்களின் தொடரான இலக்கிய இருப்புக்கும் வெற்றிக்கும் மிக முக்கிய காரணங்களில் ஒன்று அவரது கணவர் இக்பால் மௌலவி என்பதை அவர் பல இடங்களில் நன்றியுடன் கூறியுள்ளார்.




சுலைமாசமி இக்பாலின் எழுத்துலக பயணமானது மிகவும் அவதானத்திற்குரியதாகும். அவ்வாறே அவரது இலக்கியப் படைப்புக்களும் நீண்ட ஆய்வுக்குட்படுத்த வேண்டியவைகளாகும். தர்கா நகரில் பிறந்து கடந்த 30 வருட காலமாக மாவனல்லையில் வசித்து வந்தவர் எழுத்தாளர் சுலைமாசமி இக்பால். எழுத்துலகில் தனித்துவமான போக்கை கடைப்பிடித்து மிளிர்ந்தவர்

இலக்கியப்பரப்பில் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், பத்தியெழுத்து, சிறுவர் இலக்கியம் என எல்லா தலங்களிலும் பயணித்தவர்.பல இலக்கியப்போட்டிகளில் கலந்து கொண்டு பரிசில்களையும், தங்கப்பதக்கத்தையும், வென்றவர்.

சுலைமாசமியின் எழுத்துக்கள் வீரியமிக்கவை சமூக அவலங்களை அடையாளப்படுத்தி அதற்கான தீர்வுகளை காத்திரமாக முன்வைப்பவை இதனால் இவரது எழுத்துக்களுக்கு நிலையான வாசகர் வட்டமொன்று எப்போதுமே இருந்து வருகிறது. ஜனரஞ்சகமிக்க எழுத்தாளுமை என்பதனால் இவரது எழுத்துக்கள் எல்லாத்தரப்பினராலும் ஆராதிக்கப்படுகின்றன. இவரது கணவர் இக்பால் மௌலவி மற்றும் மூத்த மகள் இன்சிரா இக்பால் ஆகியோரும் எழுத்தாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.இவரது எழுத்தாளுமைக்கு சான்றாக இலங்கை அரசு கலாபூசணம் விருதை வழங்கி இவரை கௌரவித்தது.

எழுத்தாளர் கலாபூஷணம் சுலைமா சமி இக்பால், கடந்த 45 வருடங்களுக்கு மேலாக இலக்கியம் படைத்து வந்தவர். சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம் என 6 நூல்களை வெளியிட்டுள்ளார்.. சர்வதேச ரீதியிலும் சிறுகதை, நாவல், கவிதை ஆகிய போட்டிகளில் பரிசுகளும் வென்றுள்ள சுலைமாசமி இக்பால் . திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்தில் சிலகாலம் பார்வையிழந்தவர்களுக்குக் கற்பித்துள்ளார். இவரது புத்தகங்களை குரல் வடிவில் பதிவு செய்து அவர்களுக்கு வழங்குவதைப் பழக்கமாக்கிக் கொண்டுள்ளார்.

1997ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடளாவிய ரீதியில் ஒரு சிறுகதைப் போட்டியை நடத்தியது. அதற்கு இவர் எழுதிய 'திசை மாறிய தீர்மானங்கள் ' என்ற சிறுகதை முதலிடம் பெற்றதோடு. அன்றைய முஸ்லிம் காங்கிரசின் தலைவரான எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களின் கரங்களினால் சான்றிதழையும் தங்கப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டார். அன்று பெற்றுக்கொண்ட தங்கப்பதக்கமானது உண்மையான தங்கம் என்று அவரது குறிப்பொன்றில் காணக்கிடைத்தது.

இந்த சிறுகதைக்கான கருவை தனது துணைவர் இக்பால் மௌலவியே தனக்கு தந்ததாகவும் அது ஒரு உண்மை சம்பவத்தை மையமாக வைத்து எழுதப்பட்டது என்றும் அவரது குறிப்பில் பதிந்துள்ளார்.



இதுவரைக்கும் ஆறு நூல்களை இலக்கிய உலகிற்கு தந்துள்ள இவர் இவரது கணவரின் அனுசரணையில் இவரது நூல்களை வெளியிட வேண்டுமென்ற நோக்கத்தில் எக்மி பதிப்பகத்தை உருவாக்கி இவரின் நூல்களையும், இவரது மகள் இன்ஷிறாவின் 2 நூல்களையும், பிரபல நாவலாசிரியை ஜரீனா முஸ்தபாவின் பல நூல்களையும், கலாபூசணம் ஸக்கியா சித்தீக்கின் முதலாவது நூலையும், இன்னும் சில எழுத்தாளர்களது நூல்களையும், இஸ்லாமிய, அரபு நூல்களையும் எக்மி பதிப்பகத்தின் மூலம் வெளியிடபட்டுள்ளனர் என்பதும் இந்நேரத்தில் பதியவேண்டிய செய்தியாகும்.

**இவர் இலக்கிய உலகிற்கு தந்த நூல்கள்**

**வைகறைப்பூக்கள் (சிறுகதை) 1988**

**மனச்சுமைகள் (சிறுகதை) 1989**

**திசை மாறிய தீர்மானங்கள்(சிறுகதை) 2007**

**ஊற்றை மறந்த நதிகள் (நாவல்) 2009**

**நந்தவனப்பூக்கள் (சிறுவர் இலக்கியம்) 2015**

**உண்டியல் (சிறுகதை) 2018**

என்பனவாகும்.

தனது எழுத்திற்காக பல பட்டங்களையும் கௌரவங்களையும் இவர் பெற்றுள்ளார்.

2002ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் இஸ்லாமிய இலக்கியப் பங்களிப்புக்காக விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார்.அவ்வாறே அகில இன நல்லுறவு ஒன்றியம் நடத்திய 2008 ஆம் ஆண்டிற்கான சாமஸ்ரீ பாராட்டு விழாவில் சாமஸ்ரீ கலா ஜோதிப் பட்டமும் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



அகில இலங்கை தேசிய கவி சம்மேளனம் 2013 ஆம் ஆண்டு நடத்திய விருது விழாவில் காவிய பிரதீப (கவிச்சுடர்) பட்டம் வழங்கி இவரை கௌரவித்தது

2016 ஆம் ஆண்டுக்கான தடாகம் விருது விழாவில் தமிழ் மாமணி விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார்.

2018 ஆம் ஆண்டு சப்ரகமுவ மாகாணத்தில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் பணப்பரிசும், விருதும் வழங்கப்பட்டது.2020ஆம் ஆண்டிற்கான அரச கலாபூசணம் விருதும் பணமும் வழங்கி கௌரவிக்கப் பட்டார்.

ஏலவே சுட்டியது போல இவரது சிறுகதைகள் அனைத்தும் கற்பனைக் கதைகள் அல்ல. உண்மைச் சம்பவங்களை வைத்தே அதிகமான கதைகளை எழுதியுள்ளார் என்பதை இவரது கதைகளை ஒருசேர வாசிக்கும் போது வாசகர்களால் உணர்ந்து கொள்ளமுடியும் .

இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் என்பவற்றில் தமது தமிழ்ச் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தைப் பூர்த்தி செய்வதற்காக இவரதும்,இவரது மகள் இன்ஷிரா இக்பாலினதும் சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம் என்பவற்றை ஐந்து மாணவர்கள் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவே இவரது எழுத்துத. துறையில் இவரது அடைவுகளை அடையாளப்படுத்த போதுமான சான்றாகும்.

எல்லாம் வல்ல இறைவன் அவரை சமூக எழுத்துப்பணியை பொருந்தி அவருக்கு ஈடேற்றத்தை தருவானாக.

**நாச்சியாதீவு பர்வீன்**

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

Whatsap: 0714901181

# 'மகரந்தச் சிறகு' கவிதை விருது

கவிக்கோ அப்துல் ரகுமான் நிறுவிய 'மகரந்தச் சிறகு 'கவிதை விருது கம்பன் விழாவிலே கவிதைத் துறையை தன் ஆளுமையால் நிரப்பம் செய்த ஈழத்துக் கவிதைக்காரருக்கு வழங்கப் படுகிறது. அந்தத் தொடரில் இவ் ஆண்டுக்கான மகரந்தச் சிறகை அணிகிறார் மேமன் கவி.


அரை நூற்றாண்டுகளாக தமிழ் இலக்கியப்பரப்பில் ஓர் இயக்கமாகத் திகழும் மேமன் கவி கவிதை மற்றும் கட்டுரை நூல்களைத் தந்தவர்; மல்லிகையோடு பந்தலாக வளர்ந்தவர்; முற்போக்குப் பண்ணையில் தன்னைப்புடம் போட்டவர்; தமிழ் சிங்கள இலக்கிய ஒருமைப்பாட்டு இயக்கமாக அமைபவர்; மற்றுமைச் சிந்தனை



யாளர்; தலைமுறை தாண்டிய இலக்கிய பிணைப்பாளர்; ஈழத்து இலக்கியப் போக்கை இனங்கண்டுரையாட வல்ல ஆளுமை; கொடகே மற்றும் துரைவியோடும் இணைந்து தமிழ்ப்படைப்பாளர்களை விருதுக்குரியவராக உருவமைப்பவர்; வானொலி, தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்கள் வழியே இலக்கியம் பேசும் இனியவர். மகரந்தச் சிறகுக்கு உரியவர். வெள்ளாப்புவெளி மற்றும் மறுசொல்லின் வாழ்த்துக்கள்

மேமன்கவிக்கு தங்கள் இலக்கியவானம் மேலும் விரியட்டும்.

# என் மனசின் வரைபடம் 'பத்தியெழுத்துப் பனுவல்




முல்லை முஸ்ரிபாவின் 'என்மனசின் வரைபடம் 'பத்தியெழுத்துப் பனுவல் பற்றிய கதையாடலும், கையளிப்பும் எதிர்வரும் 25ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு தெமடகொட வீதி மருதானை கொழும்பு 10இல் 77ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள தாருல் ஈமான் கேட்போர்கூடத்தில் நிகழ்வுறும்.

அதே அரங்கில் தமிழகம் நன்னூல் பதிப்பாசிரியர், வெளியீட்டாளர் மணலி அப்துல்காதர் உடனான இலக்கியச்சந்திப்பும் அன்றையதினம் நடைபெறவுள்ளது.

வெள்ளாப்பு வெளி ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வுகளில், எழுத்தாளர்கள் இலக்கிய அபிமானிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டுக்குழிவினர் அழைப்பு விடுத்துள்ளனர். தற்போது கொழும்பு வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தில் மூன்று தினங்களாக நடைபெற்றுவரும் வாசிப்பு பரவலாக்கம் புத்தகக் கண்காட்சி அரங்கில் நன்னூல் பதிப்பகம் என்மனசின் வரைபடத்தை வெளியிட்டு வைக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.





# மோகனத்திலெழும் கவிதைகள்

ஈழத்துக் கவிதைப் புலத்தில் மேலெழும் கவிதைக் காரர் மருதூர் கொத்தன் வி.என்.இஸ்மாயீல்.

சிறுகதைக்காரராக பெரிதும் இயங்கிய மருதூர் கொத்தன் பன்முக ஆளுமை.

கவிதைஇநெடுங்கவிதைஇகாவியம் என் கவிதைகள் சார்ந்தும் செயற்பட்டவர். காவியத்தலைவன், மருதூர்க்கொத்தன் கவிதைகள்? என்பன ஏலவே வெளிவந்த இவரது எழுத்துக்கள்.




ஏராளமான கையெழுத்துப் பிரதிகளை வசங் கொண்டுள்ளவற்றிலிருந்து தேர்ந்த கவிதைகளின் திரட்டு மருதூர் கொத்தன் அறக்கட்டளையின் வெளியீடாக 2023இல் வந்துள்ளது.பதிப்பாசிரியர் ஆரிப் இஸ்மாயில் தன்தந்தைக்கான கடனிறுப்பாக அறக் கட்டளையை முன்னிறுத்துகிறார்.

ஓய்வு நிலைப் பேராசிரியர், அமரர் செ.யோகராசா மோகன அணிந்துரையை எழுதுகிறார்.

ஐம்பதுகளில் கவிதைகளில் இயங்கத் தொடங்கிய நிலவுக்கவிதைக்காரர் அவர்.பரட்சிக்கமால் அண்ணல், யுவன் தொடர்ச்சியாக மருதூர்க் கொத்தனை நிறுவுகிறார். பேராசான் செ.யோகராசா.

சமூக விடுதலையும் எளிய மக்கள் வாழ்விய லும் கிராமிய மணமும் கொத்தனிடம் நிரம்பியுள் ளன.

ஈழத்துக் கவிதை வளர்ச்சியின் அடையாளமாக மருதூர்க் கொத்தன் கவிதைகளைக் காணும் ஜெஸ்மி எம் மூஸா விபரித்தெழுதியுள்ள பகுதிகள் அவதானத்துக்குரியன.

நெடியதும் சிறியதுமான் ஒரு தொகைக் கவிதைகளினாலான மோகனம் மருதூர்க்கொத்தனின் வபாஅத்துக்குப் பின்னால் வருவது காலதாமதமே எனினும் ஆரிப் இஸ்மாயில் முயற்சி மேலுமான காலதாமதத்தை தன் தவிர்த்திருக்கிறது .அவரது கவிதை குறித்த மீந்து ஆய்வைக் கோரியும் நிற்கிறது.

தமிழ்பற்றின் மொழியை அவர் பெய்தலில் அழகு மட்டுமல்ல தமிழ்காதலும் வீறாப்புமிருக்கிறது. 'நானொரு பச்சைத் தமிழன் இதை உலகம் ஒலிக்க உரைத்து மகிழ்வேன் சீனத்துக்கவிதைகள் செய்வேன்அவை செய்யும் விதிமுறை சீராய் விதிப்பேன் ஹைகூவை அழகாய் அமைப்பேன்அதன் ஆழம் அகலம் ஆய்ந்தும் உரைப்பேன்'

எனத்தொடரும் கவிதையின் காதலன் மருதூர்க் கொத்தனின் மோகனம். மோகனத்திலெழும் கவிதைகள்

நான்காம் பக்க அடிக்குறிப்பு
(உ)
பெற்றோர்களாலானது பாடசாலை
எனும் தர்மச்சாலை
தம் வீடு போல் பாடசாலையை
நேசிக்கும் பெற்றோர்களால் மேன்
மையுறுகிறது
கல்வி வீடு
பெற்றோர் என்போர்
தினமும் மாணாக்கரை பள்ளியின்
வாசல் படியில் ஏற்றிவிடும்
ஏணிகள் தானே
ஏற்றியபின்
ஏறெடுத்தும் பார்க்காவிடின்
என்னவாகும்
வெறுமனே காலடி தேய்ந்து
வாசலில் கருகியதாயாகும் வரலாறு
பெற்றோர்
பாடசாலையின் பங்காளிகள்
கட்டடத்தின் தூண்கள்வர்கள்
வகுப்பறைகளின் மெய்ச் சுவர்கள
வர்கள்
சுற்றாடலின்
சுத்தக் காற்றுமவர்கள்
சுற்றிவர பாதுகாக்கும் மதிற்கற்களு
மவர்கள்
எனின் வளங்கொண்டு பாடசா
லைக்கு வெள்ளையடிக்கும்
வெள்ளைமனசுக்காரர் பெற்றோரெ
னும் பங்காளிகள்
சிரமதானமெனின் சிரமேற்கொள்
வர்
வளங்குறையெனில் வளமீட்டித்




தருவர்
ஒழுக்கம் சீர் பெற
தம் சுய ஒழுங்கும் பேணுவர்
மதிப்பெனும் பண்பாட்டுச் சொல்லை
விதைத்தே பாடசாலையெனும்
விருட்சத்தை வளர்ப்பர்
தம்பிள்ளை மீதான அக்கறையை
அனுதினம் போற்றுவர்
வீட்டொழுக்கத்தில்
வீணின்றி வழியொழுக வகை
பேணுவர்
கற்றலென்பது புத்தகத்தைப் படிப்ப
தல்ல புத்தாக்க சிந்தைமிகு மனித
ரையும் படிப்பதுதான்
முன்மாதிரிப் பெற்றோரால் முன்னே
றிய பாடசாலை தோற்பதில்லை
பெற்றோர் பிள்ளையுறவு
பெற்றோராசானுறவு
ஆசான் பிள்ளையுறவில் நெருக்
கமே தரும்
கருணை மனிதராதல்
மாண்பு மேல் வாழ்ந்து காட்டல்
மதிப்பு மிகு உன்னதங்கள் உருவா
கும் பெற்றோரெனும் பெரு மனிதர்
கூடுவதால்
பாடசாலை களிப்புறும்
பாடசாலை மீது வெள்ளையடிக்கும்
பெற்றோரிடை கால்த்தூசும் வாசல்
படியிலும் படா பெற்றோரால்
பாடசாலை உறவு
மேம்படாதழியும்
தம் பிள்ளைகாள் கற்க வழி காட்டி
யாகி வீடும் கல்வி வாசம் பெருகச்
செய்தல் கடனே
ஆசையுடன் பற்றுறுதி கொள் சமூ
கமொன்றில் கல்வி ஒளி மேவிப்
பரவும் கல்விச்சாலை உயிரூட்டி
உணர்வெழுப்பும்
பெற்றோரே வாருங்கள் பாடசாலை
வாசலில் தூயவெண் பாதம்பதிப்
போம்
நம் மாணாக்கருயர் பெறுமானம
டைய
ஏணிகளாய்
தோணிகளாய்
ஏற்றமுற முன்மாதிரியாய்
வாழ்வொழுங்கு பேணநான்காம்
பக்க அடிக்குறிப்பு

# அல் மானார் சர்வதேச பாடசாலையின் விருது வழங்கும் நிகழ்ச்சி







கொழும்பு அல் மானார் சர்வதேச பாடசாலையின் திறமையானவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சி மருதானை எல்பின்ஷ்டன் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜபாரி துலபந்தன், சிரேஷ்ட சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள், பரிசளிப்பு, விருது வழங்கல், அதிதிகள் உரை என்பன சிறப்பான அம்சங்களாக நடைபெற்றன.

# பழம்பெரும் நடிகர், பாடகர் டி. ஆர். மகாலிங்கத்தின் 100 வது ஜனன தினம்

தென்கரை ராமகிருஷ்ணன் மகாலிங்கம் அல்லது பொதுவாக டி. ஆர். மகாலிங்கம் (பிறப்பு:16 ஜுன் 1924 ........மறைவு:21 ஏப்ரல் 1978)...!

டி.ஆர்.மகாலிங்கம் 1940 – 1950களில் பிரபலமாயிருந்த ஒரு தமிழ்த் திரைப்பட நடிகர், பாடகர், திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் இசையமைப்பாளர் ஆவார்.

நிலச்சுவான்தார் ராமகிருஷ்ணனின் மூன்றாவது மனைவிக்கு முத்தாய் உதித்தவர்தான் டி.ஆர் மகாலிங்கம். வேத பாடசாலைக்கு அனுப்பப்பட்ட மகாலிங்கத்துக்கு பாடம் பதியவே இல்லை. மனசு முழுக்க பாட்டுதான் பரவிக்கிடந்தது. திண்ணை பள்ளிக்கூடத்தில் 4ம் வகுப்பு வரை ஒரு வழியாய் நகர்ந்தபின், செல்லூர் சேஷ அய்யங்கார் கோஷ்டியுடன் பாட்டோடு இணைந்த மகாலிங்கம், பஜனை மடங்களிலும், கோயில்களிலும் தன் உரத்த குரலால் பாடி, உள்ளூர்வாசிகளை ஆனந்தம் அடையச் செய்தார்.

12 வயதில், ஒரு நாடகத்தில் பாடி நடித்தபோது, மகாலிங்கத்தின் பாட்டில் மனம் லயித்த, அப்போதைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் சத்யமூர்த்தி, மகாலிங்கத்திற்கு தங்க மோதிரம் பரிசளித்தார். மோதிரக் கையில் குட்டுப்பட்டதாலோ என்னவோ, சினிமா மோகத்துடன் அலைந்துகொண்டிருந்த டி.ஆர். மகாலிங்கத்திற்கு, ஏ.வி.மெய்யப்பச் செட்டியாரின் 'நந்தகுமார்' படத்தில் கிருஷ்ணர் வேடம் கிடைத்தது. 1938ம் ஆண்டு வெளியான



இந்தப் படத்தில், 'யுக தர்ம முறையே' என்ற பாடலைப் பாடி, அறிமுகமான மகாலிங்கத்திற்கு, 'நந்தகுமார்' நல்ல அறிமுகமாக இருந்தது.'நந்தகுமார்' தந்த அறிமுகத்தால், 'பக்த பிரகலாதா', 'சதிமுரளி', 'பரசுராமர்', 'பூலோக ரம்பை' எனத் தொடர்ச்சியான படங்களில் நடித்தார்.

ஆனால், சொல்லிக் கொள்ளும்படியாக வேடங்கள் கிடைக்கவில்லை. 1945ம் ஆண்டு டி.ஆர். மகாலிங்கத்திற்கு திருப்புமுனையாய் அமைந்தது. ஏ.வி. மெய்யப்பச் செட்டியார், 'ஸ்ரீ வள்ளி' என்ற ஜனரஞ்சகமான படத்தை எடுத்தார். படத்தின் நாயகி குமாரி ருக்மணி (நடிகை லட்சுமியின் தாயார்). நல்ல குரல் வளத்துடன் ஒருவரை கதாநாயகனாகத் தேடினார் மெய்யப்பச் செட்டியார்.

கிட்டப்பா போல் பாடி நடிக்கும் பாடகர் ஒருவரைத் தேடினார். நந்தகுமாரில் நடித்த பிறகு, பிரிந்து சென்று விட்ட மகாலிங்கத்தை நாடினார்.

கிட்டப்பாவின் உச்சஸ்தாயியும், பிருகாவும், அசைவுகளும்,

***(தொடரும்)***



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை




# TMS பாடிய பாடல் திருப்தி இல்லாததால் S P பாடிய

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் படத்தில் டி.எம். சௌந்தரராஜன் பாடிய ஒரு பாடல் இசையமைப்பாளருக்கு திருப்தி இல்லாததால் மீண்டும் அதே பாடலை எஸ்.பி.பால சுப்பிரமணியம் பாடிய சம்பவமொன்று நடைபெற்றுள்ளது.

1974 இல் ஹிந்தியில் அமிதாப்பச்சன், பர்வீன் பாபி, பிரான் நடித்து அமோக வெற்றி பெற்ற "மஜ்பூர்"என்ற படத்தைத் தமிழில் புன்னகையரசி கே.ஆர்.விஜயா தயாரிப்பில் தாசரி யோகானந்த் இயக்கத்தில், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ரஜினிகாந்த், கே.ஆர்.விஜயா நடிப்பில் இளையராஜா இசையில் 1979 இல் "நான் வாழவைப்பேன்" என மறு வடிவம் பெற்று வெற்றி பெற்றது.

இப்படத்தில் இடம்பெற்ற "என்னோடு பாடுங்கள் நல் வாழ்த்து பாடல்கள்" என்ற பாடலை ஆரம்பத்தில் டி.எம். சௌந்தரராஜன் பாடினார். இசையமைப்பாளர் இளையராஜாவிற்கு திருப்தியில்லாததால் பின் மீண்டும் இதே பாடலை எஸ்.பி. பால சுப்பிரமணியத்தை வைத்து பதிவு செய்து படத்தில் இடம் பெறச் செய்தார்.

இதனால் டி.எம்.சௌந்த ரராஜனுக்கும் இளையராஜாவிற்கும் சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. இதே படத்தில் இடம் பெற்ற மற்றொரு பாடலான "எந்தன் பொன்வண்ணமே அன்புப் பூவண்ணமே" என்ற பாடலை சௌந்தரராஜன் பாடினார்.



# Most Photogenic Face of the year 2024











கண்டியில் வசிக்கும் திருமதி காயத்ரி மனோஜ் உமாகாந்த் நடராஜபிள்ளை இந்தாண்டின் சிறந்த முக அழகைக் கொண்ட பெண்மணியாக *(Most Photogenic Face of the year 2024)* தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்தப் போட்டியை இந்தியாவில் இயங்கும் *Dazzling Diva International Beauty Pageant* நிறுவனம் அண்மையில் பிசொப் கல்லூரியில் நடத்தியது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூன் மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.